# ஹோமியோ கீ நோட்ஸ்

## (HOMEO KEY NOTES)

421
44

என்ற

சுருக்கமான

## 'மெட்டீரியா மெடிகா'

By

டாக்டர் S. சீனிவாசன்,
ஹோமியோ பிஸிஷியன் & ஸர்ஜன்,
திருவாரூர்.

( All rights reserved )

ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட், திருவாரூர்.

விலை ] 1961 [ ரூ. 7-50.

மூன்றாம் பதிப்பு

TAMIL ... 101600

*References:-*

| | |
|---|---|
| Allen's | 'KEY NOTES' |
| Nash | 'LEADERS' |
| Farrington's | 'MATERIA MEDICA' |
| Hering | " " |

PUBLISHED BY :-

HAHNEMANN HOMEO INSTITUTE.

Printed At

SARADA VILASA PRESS, KUMBAKONAM.

# HOMEO KEY NOTES.

## ஹோமியோ ‘கீ நோட்ஸ்’

என்ற சுருக்கமான

## ‘மெட்டீரியா மெடிகா’

ஹோமியோபதி வைத்தியத்தின் அஸ்திவாரக்கல் மருந்துகளின் குணங்குறிகள்தான். மருந்துகளின் விசேஷக் குறிகளையும் வியாதியஸ்தரின் விசேஷக்குறிகளையும் ஒத்துப்பார்த்து ஒற்றுமை அதிகமுள்ள மருந்தைக் கொடுப்பதுதான் ஹோமியோபதியின் தத்துவம். அதற்கு முக்கிய சாதனம் மருந்தின் விசேஷக்குறியை அறியும் “கீ நோட்ஸ்தான்.” மருந்திற்கென்று ஏற்பட்ட பிரத்தியேகமான, விசேஷமான, சிறப்புற்ற குணம் குறிதான் ஒற்றுமையை அறியும் வழிகோல். ஒவ்வொரு மருந்திற்கும் அநேக குறிகளும் சாதாரணமாகவும் விசேஷமாகவும் இருக்கும். அதேபோல் பல மருந்துகளுக்கு அனேக குறிகள் ஒத்தாப்போலுமிருக்கும். உதாரணமாக “அசைந்தால் அதிகரித்தலும்–அசையாமலிருந்தால் தணிந்தும்”–இது பிரியோனியாவின் சிறப்புக் குறி–அதாவது விசேஷக்குறி. அதேபோல் ரஸ்டாக்ஸுக்கு–“அசைவதினால் தணிவும்”; பெல்லடோனாவிற்கு “ரொம்ப பயங்கரமான ஜன்னி”; சிங்கத்திற்கு “கால்கள் தானாகவே ஆடிக்கொண்டிருத்தலும்” — விசேஷக்குறிகளாம். இம்மாதிரி ஒவ்வொரு மருந்தின் விசேஷக்குறி நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தால்மட்டுமே வைத்தியம் செய்வது மிக மிக சுலபமாகிவிடும். அநேகம் சாதாரணமான குறிகள் இருக்கலாம். அவைகளின் எண்ணிக்கை சற்றேனும் உபயோகமில்லை.

ஆகவே நம் தமிழ் மொழியில் இம்மாதிரி ஒரு அவசியமான புத்தகத்தின் அவசியத்தை உணர்ந்தே இது எழுதப்பட்டுள்ளது. நம் ஹோமியோபதி வைத்தியத்தின் மருந்தின் குணங்குறிகளை பக்கம் பக்கமாக வரைந்து அநேக மொழிகளில் வெளியிட்டிருக்கிறார்கள். அடிக்கடி ஓயாத பிராக்டிஸ் இருக்கும் ஒரு டாக்டருக்கு அம்மாதிரியான அநாவசியமான பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருக்கும் புஸ்தகத்தைப் புரட்டி மருந்துகளின் குண விசேஷங்களைத் தெரிந்து கொள்வதென்பது மிகக்கஷ்டம். தவிர விசேஷக்குறிகளைக் கண்டுபிடிப்பதில் சிரமமேற்படும். ஆதலால் இம்மாதிரி புஸ்தகத்தின் தேவை எம்மாதிரி என்பது இதை அனுபவித்துப் பார்த்தவர்களுக்கே புரியும்.

இதன் உபயோகம், அதிகப் பிராக்டிஸ் உள்ள வைத்தியர்களும், மாணவர்களும், சுலபமாகப் புரிந்து கொள்ளவும், ஆவலுடன் படிப்பதற்கு சாதனமாகவும், மறந்து போகாமல் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கும் உகந்தது. இம்மாதிரி சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருப்பதனால் இதை அனுபவத்தில் கொண்டுவருவது புத்திசாலியான ஒவ்வொருவருக்கும் சுலபமேயாம்.

பல ஆண்டுகளின் உழைப்பின் பலனாகவும், ஆயிரக்கணக்கான நோயாளிகளின் சிகிச்சை அனுபவத்தின் பயனாகவும், அநேகம் மாணாக்கர்களுக்கு தெளிவுபடச் சொல்லிக்கொடுத்ததின் பயனாகவும் இப்புத்தகம் வரையப்பட்டுள்ளது.

இதன் பயனை சகலரும் அடைந்து இச்சிறந்த முறையை உலகில் பரப்பவேண்டுமென்பதே நம் நோக்கம்.

**Dr. S. சீனிவாசன்.**

# மருந்துகளின் அட்டவணை.

| | | |
|---|---|---|
| Abrotanum | ... | அப்ரோடானம் |
| Acid Acetic | ... | ஆஸிட் அசிடிக் |
| ,, Benzoic | ... | ,, பென்சாயிக் |
| ,, Carbolic | ... | ,, கார்பாலிக் |
| ,, Fluoric | ... | ,, ப்ளூரிக் |
| ,, Hydrocyanic | ... | ,, ஹைட்ரோசயனிக் |
| ,, Muriatic | ... | ,, மூரியாடிக் |
| ,, Nitric | ... | ,, நைட்ரிக் |
| ,, Phosphoric | ... | ,, பாஸ்பாரிக் |
| ,, Picric | ... | ,, பிக்ரிக் |
| ,, Sulphuric | ... | ,, ஸல்ப்யூரிக் |
| Aconite Napellus | ... | அகோனைட் நெபல்லஸ் |
| Aesculus Hippocastanum | ... | ஈஸ்குலஸ் இப்போகாஸ்டானம் |
| Aethusa Cynapium | ... | இதூஸா சைனாபியம் |
| Agaricus Muscarius | ... | அகாரிகஸ் மஸ்காரியஸ் |
| Agnus Castus | ... | ஆக்னஸ் காஸ்டஸ் |
| Allium Cepa | ... | அல்லியம் சீபா |
| Aloe Socotrina | ... | அலோ ஸோகாட்ரினா |
| Alumina | ... | அலுமினா |
| Ambra Grisea | ... | ஆம்பரா க்ரிஸியா |
| Ammonium Carbonicum | ... | அம்மோனியம் கார்பானிகம் |
| Ammonium Muriaticum | ... | அம்மோனியம் மூரியாடிகம் |
| Amylenum Nitrosum | ... | அமிலினம் நைட்ரோசம் |
| Anacardium Orientale | ... | அனகார்டியம் ஓரியண்டேல் |
| Anthracinum | ... | ஆந்த்ராசினம் |

| | | |
|---|---|---|
| Antimonium Crudum | ... | ஆண்டிமனியம் க்ருடம் |
| ,, Tartaricum | ... | ,, டார்டாரிகம் |
| Apis Mellifica | ... | ஏபிஸ் மெல்லிபிகா |
| Apocynum cannabinum | ... | அபோசைனம் கானபினம் |
| Argentum Metallicum | ... | அர்ஜண்டம் மெட்டாலிக்கம் |
| ,, Nitricum | ... | அர்ஜெண்டம் நைட்ரிகம் |
| Arnica Montana | ... | ஆர்னிகா மொண்டானு |
| Arsenicum Album | ... | ஆர்ஸனிகம் ஆல்பம் |
| ,, Iodatum | ... | ,, ஐயோடாடம் |
| Arum Triphyllum | ... | ஆரம் ட்ரைபில்லம் |
| Asafoetida | ... | அஸபீடிடா |
| Asarum Europeum | ... | அஸாரம் யூரோபியம் |
| Asterias Rubens | ... | ஆஸ்டீரியஸ் ரூபென்ஸ் |
| Aurum Metallicum | ... | ஆரம் மெடாலிகம் |
| Baptisia Tinctoria | ... | பாப்டிஷியா டின்க்டோரியா |
| Baryta Carbonica | ... | பரைடா கார்பானிகா |
| Belladonna | ... | பெல்லடோனு |
| Bellis Perennis | ... | பெல்லிஸ் பெரன்னிஸ் |
| Berberis Vulgaris | ... | பெர்பெரிஸ் வல்காரிஸ் |
| Bismuth | ... | பிஸ்மத் |
| Borax | ... | பொராக்ஸ் |
| Bovista | ... | பொவிஸ்டா |
| Bromium | ... | புரோமியம் |
| Bryonia Alba | ... | பிரியோனியா ஆல்பா |
| Cactus Grandi Florus | ... | காக்டஸ் கிராண்டி ப்ளோரஸ் |
| Caladium | ... | கலாடியம் |



| | | |
|---|---|---|
| Calcarea Arsenicum | ... | கால்கேரியா ஆர்சனிகம் |
| ,, Carbonicum | ... | ,, கார்பானிகம் |
| ,, Phosphorica | ... | ,, பாஸ்பாரிகா |
| Calendula | ... | காலெண்டுலா |
| Camphora | ... | காம்போரா |
| Cannabis Indica | ... | கானபிஸ் இண்டிகா |
| ,, Sativa | ... | கானபிஸ் ஸடைவா |
| Cantharides | ... | காந்தரைடிஸ் |
| Capsicum | ... | காப்ஸிகம் |
| Carbo Animalis | ... | கார்போ அனிமாலிஸ் |
| ,, Vegetabilis | ... | ,, வெஜிடபிலிஸ் |
| Caulophyllum | ... | காலோபில்லம் |
| Causticum | ... | காஸ்டிகம் |
| Cedron | ... | செட்ரான் |
| Chamomilla | ... | காமோமில்லா |
| Chelidonium | ... | செலிடோனியம் |
| Chininum Sulphuricum | ... | சைனினம் ஸல்பூரிகம் |
| Cicuta Virosa | ... | சிகூடா விரோஸா |
| Cina Anthelmintica | ... | சீனு ஆந்தெல்மிண்டிகா |
| Cinchona | ... | சின்கோனு |
| Coca | ... | கோகா |
| Cocculus Indicus | ... | காக்குலஸ் இண்டிகஸ் |
| Coffea Cruda | ... | காபியா க்ரூடா |
| Colchicum Autumnale | ... | கால்சிகம் ஆடம்னேல் |
| Collinsonia Canadensis | ... | காலின் ஸோனியா கானடென்சிஸ் |
| Colocynthis | ... | கோலோசிந்திஸ் |
| Conium Maculatum | ... | கோனியம் மாகுலேடம் |

| | |
|---|---|
| Corallium Rubrum ... | கோராலியம் ரூப்ரம் |
| Crocus Sativus ... | க்ரோகஸ் ஸடைவஸ் |
| Crotalus Horridus ... | க்ரோடாலஸ் ஹாரிடஸ் |
| Croton Tiglium ... | க்ரோடான் டிக்லியம் |
| Cuprum Metallicum ... | குப்ரம் மெட்டாலிகம் |
| Cyclamen Europeum ... | சைக்லாமன் யூரோபியம் |
| Digitalis ... | டிஜிடாலிஸ் |
| Dioscorea ... | டயாஸ்கோரியா |
| Diptherinum ... | டிப்திரினம் |
| Drosera Rotundifola ... | டிராசிரா ரோடன்டிபோலா |
| Dulcamara ... | டல்காமரா |
| Echinacea ... | எக்கினேஷியா |
| Equisteum Hyemale ... | ஈக்விஸ்டியம் ஹைமேல் |
| Eupatorium Perfoliatum ... | யூபடோரியம் பெர்போலியாடம் |
| Euphorbia ... | யூபார்பியா |
| Euphrasia ... | யூப்ரேஷியா |
| Ferrum Metallicum ... | பெர்ரம் மெடாலிக்கம் |
| ,, Phosphoricum ... | பெர்ரம் பாஸ்பாரிகம் |
| Gelsemium ... | ஜெல்சமியம் |
| Glonoine ... | க்ளானுயின் |
| Graphites ... | க்ராபைடிஸ் |
| Grindelia ... | க்ரைன்டிலியா |
| Cuaiacum ... | குயாகம் |
| Hamamelis Virginica ... | ஹாமமலிஸ் வர்ஜினிகா |
| Helleborus Niger ... | ஹெல்லபோரஸ் நைகர் |
| Helonias Dioica ... | ஹெலோனியஸ் டயோயிகா |



| | |
|---|---|
| Hepar Sulphur Calcareum... | ஹீபர் ஸல்பர் கால்காரியம் |
| Hydrastis Canadensis ... | ஹைட்ராஸ்டிஸ் கானடென்சிஸ் |
| Hyoscyamus Niger ... | ஹயாசயாமஸ் நைகர் |
| Hypericum Perforatum ... | ஹைபரிகம் பெர்பரேடம் |
| Ignatia Amara ... | இக்னேஷியா அமரா |
| Iodium ... | அயோடியம் |
| Ipecacuanha ... | இபிகாகுவானு |
| Iris vers ... | ஐரிஸ் வெர்சிகோலார் |
| Kali Bichromicum ... | கேலி பைக்ரோமிகம் |
| ,, Bromatum ... | ,, ப்ரோமாடம் |
| ,, Carbonicum ... | ,, கார்பானிகம் |
| ,, Iodatum ... | ,, அயோடாடம் |
| ,, Muriaticum ... | ,, மூரியாடிகம் |
| Kalmia L ... | கால்மியா |
| Kreosotum ... | கிரியோசோடம் |
| Lac Caninum ... | லாக் கானினம் |
| ,, Defloratum ... | ,, டிப்ளோராடம் |
| Lachesis ... | லாசெசிஸ் |
| Ledum Plaustre ... | லிடம் பாலஸ்டிரி |
| Lilium Tigrinum ... | லிலியம் டைக்ரினம் |
| Lobelia Inflata ... | லொபீலியா இன்ப்ளேடா |
| Lycopodium Clavatum ... | லைகோபோடியம் க்ளாவேடம் |
| Lyssin ... | லிஸ்ஸின் |
| Magnesia Carbonica ... | மாக்னீஷியா கார்பானிகா |
| ,, Muriatica ... | ,, மூரியாடிகா |
| ,, Phosphorica ... | ,, பாஸ்பாரிகா |
| Medorrhinum ... | மெடாரினம் |


| | |
|---|---|
| Melilotus Alba | ... மெலிலோடஸ் ஆல்பா |
| Menyanthes Trifoliata | ... மெனியாந்தீஸ் ட்ரைபோலியாடா |
| Mercurius Solubilis | ... மெர்குரியஸ் ஸால்யுபிலிஸ் |
| ,, Biniodide | ... ,, பைஐயோடைட் |
| ,, Corrosivus | ... ,, கரோசிவஸ் |
| ,, Cyanide | ... ,, சைஆனட் |
| ,, Dulcis | ... ,, டல்சிஸ் |
| ,, Proto Iodide | ... ,, புரோடோ அயோடைட் |
| ,, Sulphuricus | ... ,, ஸல்பியூரிகஸ் |
| Mezereum | ... மெஜீரியம் |
| Millefolium | ... மில்லிபோலியம் |
| Moschus | ... மாஸ்சஸ் |
| Murex Purpurea | ... முரக்ஸ் பர்புரியா |
| Naja Tripudians | ... நாஜா ட்ரிபுடியன்ஸ் |
| Natrum Carbonicum | ... நேட்ரம் கார்பானிகம் |
| ,, Muriaticum | ... ,, முரியாடிகம் |
| ,, Sulphuricum | ... ,, ஸல்பூரிகம் |
| Nux Moschata | ... நக்ஸ் மாஸ்சடா |
| ,, Vomica | ... ,, வாமிகா |
| Opium | ... ஓபியம் |
| Petroleum | ... பெட்ரோலியம் |
| Petroselinum | ... பெட்ரோசெலினம் |
| Phosphorus | ... பாஸ்பரஸ் |
| Physostigma | ... பைஸோஸ்டிக்மா |
| Phytolacca Decandra | ... பைடோலாக்கா டிகான்ட்ரா |
| Plantago Major | ... ப்ளான்டாகோ மேஜர் |
| Platina | ... ப்ளாடினா |
| Plumbum | ... ப்ளம்பம் |
| Podophyllum | ... போடோபில்லம் |



| | |
|---|---|
| Psorinum | ... ஸோரினம் |
| Pulsatilla | ... பல்ஸாடில்லா |
| Pyrogen | ... பைரோஜன் |
| Ranunculus Bulbosus | ... ரானன்குலஸ் பல்போசஸ் |
| Ratanhia | ... ராடான்ஹியா |
| Rheum | ... ரியூம் |
| Rhododendron | ... ரோடொடென்ட்ரான் |
| Rhustoxicodendron | ... ரஸ்டாக்சிகோடென்ட்ரான் |
| Rumex Crispus | ... ருமெக்ஸ் கிரிஸ்பஸ் |
| Ruta Graveolans | ... ருடா க்ராவியோலென்ஸ் |
| Sabadilla | ... ஸாபடில்லா |
| Sabina | ... ஸாபீனு |
| Sambucus Nigra | ... ஸாம்புகஸ் நைக்ரா |
| Sanguinaria | ... ஸாங்குனேரியா |
| Sanicula | ... ஸானிகுலா |
| Sarasaparilla | ... ஸரஸாபரில்லா |
| Scilla | ... ஸில்லா |
| Secale Cornutum | ... சீகேல் கார்நுடம் |
| Selenium | ... ஸெலினியம் |
| Sepia | ... ஸெபியா |
| Silicea | ... ஸிலிசியா |
| Spigelia | ... ஸ்பைஜிலியா |
| Spongia | ... ஸ்பான்ஜியா |
| Stannum | ... ஸ்டானம் |
| Staphisagria | ... ஸ்டாபிசேகிரியா |
| Sticta Pulmonaria | ... ஸ்டிக்டா பல்மனோரியா |
| Stramonium | ... ஸ்டிராமோனியம் |
| Sulphur | ... ஸல்பர் |
| Symphytum Officinale | ... ஸிம்பிடம் அபிசினேல் |
| Syphilinum | ... ஸிபிலினம் |
| Tabacum | ... டபாகம் |

| | | |
|---|---|---|
| Tarantula Cubensis | ... | டாரன்டுல்லா க்யூபென்ஸிஸ் |
| Taraxacum | ... | டாராக்சகம் |
| Terebinthina | ... | டெரிபிந்தினா |
| Theridion Curassavicum | ... | தெரிடியான் குராஸ்ஸவிகம் |
| Thlapsi B. P. | ... | த்லாப்சி |
| Thuja Occidentalis | ... | தூஜா ஆக்ஸிடென்டாலிஸ் |
| Trillium Pendulum | ... | ட்ரிலியம் பெண்டுலம் |
| Tuberculinum | ... | டியூபர்குலினம் |
| Ustilago | ... | அஸ்டிலேகோ |
| Valeriana | ... | வெலரியானா |
| Variolinum | ... | வாரியோலினம் |
| Veratrum Album | ... | விராட்ரம் ஆல்பம் |
| ,, Viride | | ,, விரைட் |
| Zincum | ... | சின்கம் |

முக்கியமான மருந்துகளின்
காலவரை, சத்துரு, மித்துரு முதலியன



# ஹோமியோ மருந்துகளின் விசேஷக் குறிகளென்ற "கீ நோட்ஸ்"

## (1) Abrotanum - அப்ரோடானம்

கால்கள் சிறுத்தல்; சதை இளைப்பினால் மடிப்பு மடிப்பாய் தொங்குதல்.

இளைப்பில் தலை பலஹீனம். தலை தொங்கும்.

வாய்வு– கடுமையான ஜுரத்துடன் தாங்கமுடியாத வலி, திடீரென நிறுத்தப்பட்ட பேதிக்கு பிறகு மூலம். சீதபேதியுடன் மாறி வரும்.

வயிற்றில் பல இடங்களில் சிறு கட்டிகள், அகோரப் பசி, சாப்பிடச்சாப்பிட உடம்பு இளைத்தல்.

ஆகாரம் ஜீர்ணம் ஆகாமல் போக்கு- மலச்சிக்கலும் போக்கும் மாறி மாறி வரும்.

கவுட்– மூட்டுகள் வீங்கி குத்தலுடன் பிடிப்பாய் இருக்கும்.

முதுகுப்புறமும் உடம்பு முழுவதும் திடீரென வரும் அடித்துப்போட்ட வலி.

அதிக பலஹீனம், அஸ்தி ஜுரம், இன்புளுயன்ஸா, ஜுரத்துக்கு பிறகு அதி பலஹீனம்.

குழந்தை-பிடிவாதமும் முரட்டுக்குணமும் சிடுசிடுப்பும் ஏதாவது கெடுதல் பண்ணவேண்டுமென்ற எண்ணமும் உடைத்தாய் இருக்கும்.

முகம் வெளுத்தும் முதிர்ந்தும் மரப்பு விழுந்தும் இருக்கும்.

---

## (2) ஆஸிட் அஸிடிக்.

குழந்தைகளுக்கு ஏற்படும் இளைப்பு - வெளுத்து தசைகள் தளர்ந்து இளைத்தவர்களுக்கு உகந்தது.

வயிறு, குடல், கர்ப்பப்பை, தொண்டை, நுரையீரல், மூக்கு முதலிய இடங்களிலிருந்து இரத்தப்பெருக்கு, பெரும்பாடு.

ரொம்ப அசதி, காயம்பட்ட பிறகு, ஆபரேஷனுக்குப் பிறகு, மயக்க மருந்துகளுக்குப் பிறகு ஏற்படுவது.

போக்கு, மஹோதரம், டைபஸ், டி.பி. முதலியவைகளில் பெருந்தாகத்துடன் ரொம்ப பலஹீனத்துடனும் ஏற்படும்.

மஹோதரத்தில், மதுமேகத்தில், நாள்பட்ட பேதியில், பெருந்தாகம்-ஜுரத்தில் தாகம் கிடையாது.

புளிச்ச ஏப்பம்-ஏராளமான உமிழ் நீர்.

மல்லாந்து படுத்தால் மூச்சு திணறல்-தூங்கமுடியாது. குப்புறப்படுத்தால் சௌகரியம்.

---

## (3) பென்ஸாயிக் ஆஸிட்.

கிரந்தி, வெட்டை சம்பந்தமுள்ளவர்களுக்கு ஏற்படும் வாயுக்கள்.

சிறுநீர் அதிக நாற்றத்துடன் சிவந்தும் இருக்கும்.



வெட்டையினால் கவுட். சிறுநீர்ப்பையில் கல். கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்.

வாயு ஜுரத்திற்குப்பிறகு ஆஸ்த்மா - வெட்டையினால் நாள்பட்ட இருமல், பச்சையான கோழை, ரொம்ப அசதி.

இடம்விட்டு மாறும் குறிகள் - இடதிலிருந்து வலது பக்கம் அல்லது கீழிருந்து மேலே.

பல் முளைக்கும்போது ரொம்பவும் நாற்றமுள்ள குழம்பலான பேதி.

சிறு குழந்தைகள் இரவில் தானறியாமல் மூத்திரம் பெய்தல் நாற்றம் சகிக்காது – கிழவர்களுக்கும் மூத்திரம் தானாக சொட்டுதல்.

---

## (4) ஆஸிட் கார்பாலிக்.

திடீரென வரும்: திடீரென மறையும்; கடுமையான வலி.

ரொம்ப பலஹீனம், சரீரம் வெளுத்து ஏராளமான சில்லென்ற வியர்வை.

அதிகமாக நடந்தால் ஏதாவது ஒரு இடத்தில் சிரங்கு ஏற்படும். நெருப்புப்பட்ட காயங்கள் புண்ணாகி துர்நாற்றம் வீசும். மேலுக்கும் போடலாம்.

வயதானவர்களுக்கு நெஞ்சில் எரிச்சலுடன் வயிற்றுப் பொருமல்-அஜீரணம்.

குடிகாரன், கர்ப்ப கால வாந்தி, கடல் வாந்தி, புற்று நோயில் கரும்பச்சையான வாந்தி.

சாராயமும் புகையிலையும் விருப்பம்.

மலச்சிக்கல் — சகிக்க முடியாத துர்நாற்றத்துடன் சுவாசம்.

வாய், தொண்டை, மூக்கு, குடல், யோனி முதலிய வற்றிலிருந்து துர்நாற்றமான பெருக்கு.

பனையேறி அம்மை.

மொட்டையான ஆயுதங்களினால் கிழித்த புண், எலும்பு நொறுங்கி மிருதுவான பாகங்களும் சீழ் பிடிக்கும்.

குடலிலிருந்து சதைத் துணுக்குகள்போல் அதிகக் கடுப்புடன் ரத்த சீதபேதி—தானறியாமல் போகும் மிக துர்க்கந்தமான கருப்பு பேதி.

---

## (5) ஃப்ளூரிக் ஆஸிட்.

தன்னிடத்தில் அதிக திருப்தியும் குஷியும்—எவ்வளவு வேலை செய்தாலும் உடம்பு தளர்வில்லாமை. சீதோஷ்ணமும் பாதிக்காது.

பல் சொத்தை — கிரந்தியினால் பெரும் எலும்புகள் சொத்தை. அதிக ரஸம் சாப்பிட்டதினால்.

வயதானவர்களுக்கும் துரிதமாய் முதிர்பவர்களுக்கும் ஏற்படும் வியாதி.

நாள்பட்ட அசுத்த இரத்தகுழாய் சுருட்டல். அசுத்த இரத்த குழாய் புண்—இது அநேகம் பிள்ளை பெற்ற ஸ்திரீகளுக்கு உண்டாவது.

பழம் வடுக்கள் புண்ணாகும்; படுக்கைப்புண்கள்-நிறைய சீழ்; சூட்டினால் சாதகமும் குளிர்ச்சியினால் பாதகமும்; தாங்கமுடியாத மின்னல் வெட்டு வலி; ஒரே சிறு இடத்தில்.

ஏராளமான நாற்ற வியர்வை.

---



## (6) ஹைட்ரோஸயனிக் ஆஸிட்.

ஹிஸ்டீரியா, காக்கை வலிப்பு, முகம் நீலம் பூத்து உடம்பு விறைத்து முதுகுப்புறம் வில் மாதிரி வளைந்து, மூச்சு திணறி தாடை இறுகி, வாயில் நுரை தப்பி இருக்கும்.

மார்பில் வலி; படபடப்பு; மெதுவான நாடி.

வயிற்றில் ஒன்றுமில்லாதிருந்தால் வலி; எது கொடுத்தாலும் தொண்டைக்குள் களகள என்று செல்லுதல்.

காலரா கடைசிநிலை; ஆஸ்த்மா, கக்குவான். சரீரம் முழுவதும் நீலம் பூத்து உள்ளும் புறமும் ஜில்லிட்டு அதிக தளர்வு.

---

## (7) ஆஸிட் மூரியாடிக்.

டைபாய்டு முதலியவற்றில் ரொம்ப தளர்வு. அடித்தாடை தளர்ந்து தொங்குதல். படுக்கையில் தானாக நழுவுதல். உட்கார்ந்தவுடன் தானாக கண்மூடிக்கொள்ளுதல்.

நாக்கு-ஆஸனவாய்-வாதம்-நீர் பிரிக்கும்போது மலம் தானாக வெளிப்படுதல்.

பிரக்ஞையின்மை - முழித்துக் கொண்டிருக்கும்போதே பிரக்ஞையின்மை; கடுமையான முனகல், நாக்கு வறண்டு தோல்மாதிரி சுருங்கியிருத்தல். மலம் தானாகப் பிரிதல்.

மூலம் - தொடமுடியாது - கர்ப்பகாலத்தில்: சூடாகி நீலமாய் குத்துவலியுடன் இருக்கும்.

மாமிசத்தில் வெறுப்பு, வாய் குடல் - கடும்புண்கள், ஸ்கார்லட் ஜுரம், புற்று, டிப்தீரியா, கடுமையான இரத்த சோகை.

சிடுசிடுப்பும் ஆத்திரமும், கோபமும், வருத்தமும், மயக்கத்துடன் அமைதியின்மையும் உண்டு.

---

## (8) நைட்ரிக் ஆஸிட்.

சுருக் சுருக் என்று குத்தும்; குச்சிபோல் குத்தும்; திடீரென்று வந்து மறையும் வலிகள்.

சீதோஷ்ண ஸ்திதி மாறுதலினால் தூக்கத்தில் புண் மாதிரி வலி.

கிரந்தி நீர், நாள்பட்ட வியாதியினாலும் வலியினாலும் தளர்ந்தவர்கள், இரத்த சோகை இவைகளுடன் கூடினவர்கள், எப்பொழுதும் குளிர். அடிக்கடி ஜலதோஷம். குளிர் காற்றினாலும் குளிரினாலும் குறிகள் அதிகப்படுதல், பெரும்பாலும் பேதி.

ரொம்ப பலஹீனம், மருந்து சட்டென்று பிடிக்காமை, அதிக உணர்ச்சி, நரம்புத்தளர்ச்சி.

நாள்பட்ட கவலைகள், மனதிற்கும் சரீரத்திற்கும் அதிக உழைப்பு, வெகு நாள் தூக்கமில்லாமை, அத்யந்த சிநேகிதரின் மறைவினால் துக்கம், மாதவிடாய்க்கு முந்தி வாயில் அலுப்பு.

தன் வியாதியைப்பற்றி, பழைய வியாதிகளைப்பற்றி சிந்தனை, மாலை நேரத்தில் கவலையும் மனத்தளர்ச்சியும்.

ஆத்திரம், பிடிவாதம், பொறாமை, கெட்ட எண்ணம், தயையின்மை.

வண்டிகளில் சவாரிசெய்யும்போது வியாதிகள் சமனம்.

தலையைச்சுற்றி கட்டு கட்டினமாதிரி, வலி; எலும்புகளைச் சுற்றி-புண்களில், மூலத்தில், தொண்டையில் சிராய் ஏறிய மாதிரி வலி, துளி தொட்டாலும் அதிகம்.

ஆசனவாயில் வெடிப்பு, தளர்ந்த மலத்திற்குப்பிறகும் கிழிக்கும் வலி, மலம் போனபிறகும் தாளாத வலி.

பேதியில் முக்கினாலும் கொஞ்சம்தான் போகும். ஆஸனவாயில் தங்கியிருக்கும்மாதிரி உணர்ச்சி. ரத்தப் பெருக்கு. டைபாய்டில் குடலிலிருந்து; கர்ப்ப சிதைவிற்கு



அல்லது பிரஸவத்திற்குப் பிறகு அல்லது மிகுந்த தேக சிரமத்திற்குப்பிறகும், புண்கள் கோணலாகவும்-ஆழமாகவும் கடவாயிலும். தாராளமாக இரத்தம் பெருக்கிக்கொண்டும். குச்சி வைத்துக்குத்தும் வலியுடனும் நாற்றமான கருஞ் சிவப்போ அல்லது பச்சை மஞ்சளான திரவப்பெருக்கு. சீழ் அதிகமிராது.

வெட்டை கிரந்தியினால் பெரிதாய் தொங்கும் பாலுண்ணி முதலியன. சுலபமாய் ரத்தம் கசியும். சதா நைப்புடன் கூடியிருக்கும்.

க்ஷயத்தில் நீடித்த ஜுரம், ரத்த வாந்தி, துர்நாற்றமான கோழை.

மூத்திரம், கருஞ்சிவப்பு, அதிக நாற்றம் (குதிரை மூத்திரம் மாதிரி) பிரியும்போது சில்லென்றும்; பிரியும் போது கடுப்பு, வலி, ரத்தம் கலந்த சிறுநீர்.

சாயந்திரம், இரவு, பின் ராத்திரியில் சீதோஷ்ண ஸ்திதி மாறுதலினால், வியர்வையின்போது, முழித்தவுடன், நடக்கும்போது, உட்கார்ந்து எழுந்திருக்கும்போது, கோடையில் குறிகள் அதிகப்படும்.

---

## (9) ஆஸிட் பாஸ்பாரிக்.

ஒரே மயக்கமான தூக்கம் — தன்னைச்சுற்றி நடப்ப தொன்றும் தெரியாது. ஆனால் எழுப்பினால் நினைவு வரும்.

தூக்கத்தினால் ஏற்படும் நாள்பட்ட சீக்குகள். மயிர் நரைத்துவிடும்—தன்னம்பிக்கையில்லாமை. கவலைதோய்ந்த பார்வை.

விடுவிடென்று உயரமாகவும் வளருவர்—எலும்பிற்குள் வலிகள்-சிறுவர்கள்.

அதிக சம்போகத்தினாலும், சினைப்பைகளின் பல ஹீனத்தாலும் ஏற்படும் உடம்பு பலஹீனம், மனத்தளர்ச்சி.

பேதி—வெள்ளையாக, நீர்த்து, வலியில்லாமல், சத்தத்துடன்-குடலில் காற்று; ஆனால் எதிர்பார்க்கும் அளவிற்கு உடம்பு பலஹீனமில்லை.

பால்போல், அல்லது தண்ணீர் போன்ற சிறு நீர்—அதிக அளவு.

கெட்ட சமாசாரங்கள், மன அதிர்ச்சிகள், ஹஸ்தப் பிரயோகம்; மிதமிஞ்சின போகம், குளிர் வாடைக்காற்று பனிக்காற்று இவைகளினால் அதிகமாகும். குறிகள். சிறிது தூக்கத்திற்குப் பிறகு கொஞ்சம் சமனமடையும்.

அதிகமாகக் கண்களை சிரமப்படுத்துவதால், பின் பிடரிப்பக்கம் வலி—பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பெண்களின் தலைவலி. இருமலினாலும், பேசுவதினாலும் மார்பு வலி—இருமல்; சீழ் கலந்த கோழை மார்பில் வலி.

---

## (10) ஆஸிட் பிக்ரிக்.

எவ்வளவு சக்தி இதற்கு வெடிப்பதற்கு உண்டோ அவ்வளவு வியாதியை குணப்படுத்துவதிலுமுடையது.

ரொம்ப அசதி — மனதிலும் அசதி - பற்றில்லாமை; படுத்துக்கொண்டால் தேவலை—என்ற எண்ணம்.

மூளைக்குழப்பம்; சிறிது சிந்தித்தாலும் தலைவலி.

நரம்பு பலஹீனத்தினால் தலைவலி — பிடரிப்புறம் தலைவலி—சிறிது மனது வேலைசெய்தாலும் அதிகப்படும்.

மிக்க காமவேட்கை — ஆண்குறி விறைப்பு — ஆனால் பலஹீனமும், முழு சக்தியில்லாமையும், அதிக சம்போகத்தினால் ஏற்படும் நரம்பு, மூளைத்தளர்ச்சி.

---



## (11) ஆஸிட் ஸல்பூரிக்.

செம்பட்டை மயிருடைய, வயதானவர்களுக்கு, அதிகப்படியாக ஸ்திரீகளுக்கு—மாதவிடாய் நிற்கும் சமயத்தில் சரீரத்தில் அடிக்கடி எரிச்சல்.

போர்த்துக்கொள்ளாமலிருந்தால் தணியும்.

ரொம்ப பலவீனம் — உள்ளூர நடுக்கல். வெளிப் பார்வைக்குத் தெரியாது.

சரீரத்தில் ஒவ்வொரு பாகத்தினின்றும் ரத்தப் பெருக்கு-தோலுக்கு அடியில் ரத்தக்கட்டுகள்.

ரொம்ப பரிசுத்தமாக வைத்திருந்தபோதிலும் குழந்தை உடல் முழுவதும் புளிப்பு நாற்றமடிக்கும். புளிச்ச வாந்தி — வாயெல்லாம் புண்.

அடிபட்ட, காயம்பட்ட இடம் கருத்து அழுகுதல் — ரத்தம் கருப்பு, நீர்த்து இருக்கும்.

---

## (12) அகோனைட்.

பயம், சாவை நினைத்து; கூட்டங்களைக்கண்டு; வெளியே புறப்பட, எதைப்பற்றியும் எப்பொழுதும் பயந்து கொண்டு.

வீக்கங்கள், கடுமையான அக்யூட் வியாதிகளின் ஆரம்பத்தில் - கவலை, சூடு, அமைதியின்மை; தொந்திரவினால் சதா புரளல்; போர்வையை விலக்குவர் - சுரம்.

இரவில் அதிகப்படும் தாளமுடியாத வலி, மாலையில் அதிகம், நரம்பைப்பற்றினது.

முகம் ரொம்பச் சிவப்பு, ரத்தமேறி சிவந்து, ஆனால் எழுந்தால் வெளுத்துவிடும்.

வரண்ட குளிரினால், குளிர் காற்றினால் ஏற்படும் ஜல தோஷம், நிமோனியா, வாயு முதலியன.

மாலையில், இடதுபுறம் படுத்தால், உஷ்ணமான அறைகளில், போர்த்திக்கொண்டால்-அதிகப்படும்.

போர்த்திக்கொள்ளாமலிருந்தால் தணியும்.

---

## (13) ஈஸ்குலஸ்.

மூலத்திற்குச் சிறந்தது.

மலம் கழிந்தபிறகு மலாசிக்கணக்கில் வலி. ஆசனக் கடுப்பு.

ஆசனவாய் சிறு குச்சிகளால் நிறைந்திருப்பது போல் வலி - எரிச்சல் அரிப்பு.

ஆசனம் வரட்சி, உஷ்ணம்; கத்தி வெட்டுவதுபோல் பாயும் வலி; மூலம் - வலியுடன் ரத்தம் அதிகமாய் பெருகாது. கருஞ்சிவப்பாக இருக்கும்.

மூலத்தினால் ஹிருதயம் தாக்கப்பட்டால்.

இடுப்புப்பக்கம் வலி-இடுப்பு எலும்பின் பக்கம் சதா வலி.

இடுப்பு விட்டுவிடுதல்போன்ற உணர்ச்சி; இது கர்ப்பத்தில் அதிகப்படுதல்; நடக்கும்போதும், குனியும்போதும் அதிகரிக்கும்; உட்கார்ந்து படுத்துக்கொண்டால் சௌகரியம். உடம்பு முழுவதும் ஓடும் வலிகள், நரம்பின் வழியாகச்செல்லும் வலி, தலைவலி, வலது கண்புறம் நரம்பு வலி.

கடும் வாந்தி, குமட்டல், கல்போட்ட மாதிரி வயிறு.

மலச்சிக்கலுடன் ஈரல் வியாதி - மலம் கழியும்போது கடும்இடுப்பு வலி.



வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் பாயும் நரம்பு வலிகள்.

தொண்டை எரிச்சல், புண்ணாகிவிட்டமாதிரி வரட்சி, அடிக்கடி விழுங்க முயற்சி, குத்தல், கொட்டும் வலி—தொண்டை குறுகின மாதிரி.

சளி, தண்ணீர் மாதிரி, எரிச்சல், குளிர்காற்று படுவதால் அதிக நோய்.

மனத்தளர்ச்சி, அடிக்கடி ஆத்திரம், சட்டென்று அடக்கிக்கொள்ளுவர், ரொம்ப கோபக்காரர்.

உஷ்ண காலத்தில் சௌகரியம், மழை காலத்தில் அதிகரிக்கும்.

---

## (14) இதூஸா ஸைனபியம்.

பால் ஒத்துக்கொள்ளாது. பெரிய தயிர் கட்டிகளாக உடனே வாந்தி எடுத்தல்; பிறகு பலஹீனத்தினால் மயக்கம். குழந்தைகளுக்கு பல் முளைக்கும்போது அஜீரணம், திடீரென (வெய்யிற் காலத்தில்) பால் மாதிரி அல்லது மஞ்சளாக அல்லது தயிர்கட்டிகளாக வாந்தி.

சாப்பிட்டவுடன் அல்லது ஒரு மணி நேரம் கழித்து ஆகாரம் வெளிப்பட்டுவிடும். பச்சையாய் வாந்தி.

வாந்தி, மலம், வலிப்பிற்குப் பிறகு அசதி-தூக்கம்.

காக்கை வலிப்பு, சாதாரண வலிப்பு—முகம் சிவந்து, கண்கள் மேல்நோக்கி, பாப்பா விரிந்து, நிலைகுத்தி, வாயில் நுரை, தாடை இறுகி, நாடி மிருதுவாகவும், படபடப்புடனும் இருக்கும். வாய் கோணலாக இழுத்து-வலி, பயம்.

இளம்பிள்ளை வாதம்.

குழந்தையின் காலரா.

குழந்தை-மடமை, யோசனை சக்தி குறைவு, மூளைக் குழப்பம், குழந்தைகள் நிற்கமுடியாது. பலவீனம், தலையை நிமிர்த்திக்கொள்ளமுடியாது; அசதி தூக்கம்.

தாகமின்மை.

---

## (15) அகாரிகஸ்.

துடிப்பு:—நடுக்கல்-ஊறும் உணர்ச்சி.

உடம்புத்தளர்வு — நடுக்கல் — தள்ளாடுதல், அடிபட்ட மாதிரி வலி.

ஐஸ் ஊசி குத்துவதுமாதிரி தோலில் உணர்ச்சி, அல்லது சூடான ஊசி குத்துவது மாதிரி.

முள்ளந்தண்டு காலையில் தொட்டால் கூசும். உடம்பு அசைவு வலியுண்டாக்கும்.

எரிச்சல் — அரிப்பு அநேக இடங்களில் சிவப்பு — தடிப்பு — வீக்கம்.

வலி, இடுப்புப்பக்கம், உட்கார்ந்துகொள்ளும்போது, பகலில், தேகச்சிரமத்தாலும் இருக்கும்.

அதிக சம்போகத்தால் வியாதி, நரம்புத் தளர்ச்சி.

குடிகாரன் தலைவலி—அமிதக் குடிக்குப்பிறகு தலைவலி.

சுரத்தில் அதிக ஜன்னியுடன் தலைவலி, தசைகள் அடித்தல், வலித்தல், கர்ப்பப்பை தள்ளுதல், கீழமுக்கும் வலி-தாங்கமுடியாது.

இடது கால், வலது கை, வலது கால், இடது கை இம்மாதிரி மாறி மாறித் தாக்கும் வியாதிகள்.

---



## (16) ஆக்னஸ் காஸ்டஸ்.

அதிக நரம்புத்தளர்ச்சி, அசதி — நாள்பட கல்யாணம் செய்துகொள்ளாதவர்கள் அல்லது அதிக துர்நடத்தை யுடையவர்கள்.

### பிஞ்சில் பழுத்தவர்கள்.

வாழ்வில் அதிருப்தி, மனச்சோர்வு, தன்னிடத்திலேயே வெறுப்பு, ஹஸ்தப்பிரயோகத்தினல்—அமித போகத்தினல், சாவு நிச்சயம்; வாழ்வில் நாம் ஒரு உபயோகமான காரியமும் செய்யமுடியாது என்று அலுப்பு.

### ஆண்தன்மைக் குறைவு.

ஆண் குறி தளர்ந்து, வதங்கி — சில்லென்றிருக்கும் சம்போகத்தில் இச்சையோ, சக்தியோ கிடையாது. அடிக்கடி வெட்டை வருவதினல் நபும்ஸகத்துவம்.

பெண்களுக்கு வெள்ளை ஒழுக்கு — தண்ணீர் மாதிரி— ஆனல் துணியில் மஞ்சள் கறை ஏற்படுத்தும். ஜனனேந்திரியம் தளர்ந்து தொங்குவதுபோலிருக்கும்; தானறியாமலே வெள்ளை.

பால் கொடுக்கும் தாயாருக்கு பால் குறைவு—ரொம்ப மனத்தளர்ச்சி.

கஸ்தூரி மாதிரி கடுமையான வாசனை தோணும். மூக்கின் அருகில் ஏதோ வாசனை.

ஞாபக மறதி—ஒரு வரியை இரண்டு தடவை படித்தால் தான் புரியும். புரிந்துகொள்ளும் சக்தி குறைவு.

சுளுக்கு முதலியவற்றிற்கு சிறந்தது.

---

## (17) அல்லியம் சேபா.

கண்களிலிருந்து—காரிப்புடன் எரிச்சலுடன் அரிப்புடன் கண்ணீர், கண்ணை அடிக்கடி துடைத்துக்கொள்ளவேண்டும். அதிகக் கண்ணீர்.

ஜலதோஷம், ஏராளமான நீர் நாசியிலிருந்து சொட்டும். ஜலதோஷம் நாசியையும் மேலுதட்டையும் புண்ணாக்கும்.

ஒவ்வொரு வருஷமும் பனிகாலத்தில் ஊதல் காற்று அடிக்கும்போது ஜலதோஷம், ஹே சுரம், கடும் தும்மல்.

நாசியில் சதை வளருதல்.

தொண்டை கரகரப்பு, வரட்டிருமல், தொண்டையை கிழிப்பதுபோலிருத்தல். தொண்டையை அமுக்கிப்பிடிக்க வேண்டும்.

அடிபட்டதினால், கால் கைகளை வெட்டிவிடுவதினால் நரம்புகளில் எரிச்சலுடன் கூடின கடுப்பு வலி-நாள்பட்டது.

இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் பரவும் வலி.

வயிற்று வலி வயிற்றில் இரைச்சல், அதிகச் சாப்பாடு, வெள்ளரிக்காய் இவற்றால் காற்றுப்பிரசம்.

ஈரத்தினால் அதிகரிக்கும்.

வயதான காலத்தில் சதை அழுகல்.

விரற்சுற்றி, கைகளில் மேல்நோக்கி தாங்கமுடியாத வலி.

---

## (18) அலோஸ்.

ஒரு வேலையிலும் விருப்பமில்லாத சோம்பேறி-அலுப்பு.

கடும் மலச்சிக்கல், நெற்றியில் வலி—கண்களும் கனக்கும், குமட்டல்.



தலைவலி: சூட்டினால் அதிகரிக்கும்; குளிர்ந்த ஒற்றடத்தினால் சாதகம். இடுப்பு வலியுடன் மாறும்.

பேதி:- உடனே கக்கூசுக்கு ஓடவேண்டும். சாப்பிட்டவுடன் அல்லது குடித்தவுடன் உடனே பேதி. காலையில் எழுந்தவுடன் உடனே ஓடவேண்டும்.

குசு வெளிப்படும்போது மலமும் தானாகவே வெளிப்படும்.

வயிற்று வலி:- வலதுபுற வயிற்றில் பிசையும் வலி; மலம் போவதற்கு முன்னும், போகும்போதும் தாங்க முடியாத வலி — மலம் போனபிறகு வலி அடங்கிவிடும் — ரொம்ப பலவீனமும், வியர்வையும் ஏற்படும். கடும் மலச்சிக்கலும் முந்தி உண்டாகும்.

மலம் போகும் முன், வயிற்றில் சங்கடம், காற்றிரைச்சல், ஆசனத்தில் கனம், மலம் பிரியும்போது கடுப்பு, அதிகக் குசு, மலத்திற்குப் பிறகு பலவீனம்.

மூலம், நீலம், திராக்ஷைக்குலைமாதிரி—அடிக்கடி வெளித்தள்ளுவது மாதிரி உணர்ச்சி; ரத்தம் பெருகும்; வலி, உஷ்ணம் மாதிரி, அதிக அரிப்பு, குளிர்ந்த தண்ணீர்பட சௌகரியம்.

அரிப்பும் எரிச்சலும் தூக்கத்தைக் கலைக்கும்.

ஒவ்வொரு பனி காலத்திலும் வரும் சொறி சிறங்கு.

கர்ப்பப் பையிலிருந்து ரத்தப்பெருக்கு — நீடித்தது. பலவீனப்படுத்தும்.

---

## (19) அலுமினா

பெருங்குடல் சரியானபடி வேலை செய்யாது பிருதுவான மலத்தை வெளித்தள்ளக்கூட அதிகமாக முக்க வேண்டியிருக்கும்.

சிறு சிசுவிற்கும், வயதானவர்களுக்கும் ஏற்படும் மலச்சிக்கல்.

கரி, கிராம்பு, சாக்குக்கட்டி, விபூதி, கந்தை முதலியவற்றைத் தின்ன இச்சை.

இரத்த சோகை, பெண்களுக்கு.

ஏராளமாக குதியங்கால்வரை வழியும் பட்ட இடம் புண்ணாக்கும் வெள்ளை.

உருளைக்கிழங்கு ஒத்துக்கொள்ளாது.

குடலிலிருந்து டைபாயிட் முதலிய சுரங்களில் ரத்தப்பெருக்குகட்டி தட்டி வெளிப்படும்.

நாட்பட்ட தொண்டை கரகரப்பு, தொண்டை வரட்சி, சூடான பானத்திலும், ஆகாரத்திலும் சாதகம். விழுங்கும்போது உறுத்தல்.

கால்களில் கனம், பலவீனம், அடிக்கடி உட்கார வேண்டும். குதிகால் மரமரப்பு, ரொம்ப மயக்கம்.

முதுகுத் தண்டில் பழுத்த இரும்பை சொருகின மாதிரி வலி.

---

## (20) ஆம்ப்ரா

அடிக்கடி ஏப்பத்துடன் கடும் இருமல்.

ரொம்ப சங்கோசம் உள்ள ஸ்திரீ. மற்றவர்களுக்கெதிரில் மலஜலம் கழிக்க சங்கோசம்.



மாதவிடாய்க்கு இடையே ரத்தப்பெருக்கு. கொஞ்சம் தேக சிரமம் ஏற்பட்டாலும், மலம் கழிக்கும்போது முக்கினாலும், அதிகரிக்கும்.

ஹிஸ்டிரியா.

நாட்கணக்கில் அழுதுகொண்டே வருத்தப்படுவர்.

---

## (21) அம்மோனியம் கார்ப்.

விரற் சுற்றி.

உடம்பு பெருத்தவர்கள் — பலவீனமுடையவர்கள், ரத்த சோகை.

அடிக்கடி 'ஸ்மெல்லிங் ஸால்ட்' முகரும் ஸ்திரீகள்.

காலையில் முகத்தைக்கழுவும்போது மூக்கிலிருந்து ரத்தம் வடிதல்.

க்ளாண்டுகள் வீங்கி அழுக ஆரம்பிக்கும்.

மாதவிடாய் ஆரம்பத்தில் காலராமாதிரி போக்கு.

---

## (22) அம்மோனியம் மூர்.

தோள்பட்டைகளுக்கு நடுவில் சில்லிப்பு.

ஆட்டுப்புழுக்கைபோல் தீய்ந்த மலம்—கெட்டியாகவும், வரண்டுமிருக்கும் மலம்—வெளிப்படுத்த சிரமம்.

தசைகள் சுருங்கி இழுப்பதுபோன்ற உணர்ச்சி.

மாதவிடாய் இரவில் அதிகப்படும்.— பேதி, வாந்தி உண்டாகும்.

---

## (23) அமில் நைட்.

க்ளோரோபாரம் முதலிய மயக்க மருந்துகள் அதிகப்பட்டு ஹிருதயம் சரியானபடி வேலை செய்யாமல் பலவீன

மடைந்துவிட்டால் உடனே முகரச்செய்யவும். காக்கை வலிப்பின்போது முகரவும்.

கொஞ்சம் பரிச்ரமம், அதிர்ச்சி ஏற்பட்டாலும் முகம் சிவத்தல்.

சாகும் தருணத்தில் சற்று சௌகரியம் காட்டும்.

---

## (21) அனகார்டியம்.

சரீரத்தில் கொக்கி போட்டதுபோன்ற அல்லது கட்டினது போன்ற உணர்ச்சி அல்லது வலி.

ரொம்ப பலவீனம்—மறதி, பேரையும், சாமானையும் நினைக்கமுடியாத தன்மை — ஒரே மனச்சோர்வு (மலச் சிக்கல், மூலம் இவைகளில்)

திடீரென ஞாபக மறதி — ஒரே குழப்பம்.

இரண்டு மனது இருக்கிறதுபோல் ஒன்று சொல்வதை மற்றொன்று தடுப்பதுபோல.

ஒவ்வொருவரிடமும் சந்தேகம் — நடக்கும்போதும் தன்னை ஏதோ பின்பற்றுவதுபோன்ற பயம். எல்லா இந்திரியங்களும் பலவீனம்-துக்கம்-ஒன்றிலும் பற்றில்லாமை.

சாப்பிடும்போது குறிகள் மறையும் — இரண்டு மணிக்குப்பிறகு அதிகரிக்கும்-வயிற்று வலி.

மலம் போக அவசரமான உணர்ச்சி-ஆனால் வெளிப்படாது - குடல் பலமிழந்ததுபோல் — அடைபோட்டது போல் உணர்ச்சி.

ரொம்ப அரிப்புடன் கூடிய அக்கிமாதிரி கொப்புளம்.

---



## (25) ஆந்ராசினம்.

சதை அதிக எரிச்சலுடன் அழுகல் — சதை நீலமாகி கருத்தல், ராஜப்பிளவை, எரிசிபிலஸ், விரற்சுத்தி முதலியவை.

ஸெப்டிக் வியாதி, சுரம்-மியூகஸ் சதையெல்லாம் ஒரே புண்.

பேதி - ஒரே கருப்பாகவும், துர்நாற்றம் சகிக்க முடியாது.

---

## (26) ஆண்டிம் க்ரூட்.

வாழ்வு சகிக்காது, குழந்தைக்கு ஆத்திரம் — தொட்டாலும், பார்த்தாலும் ஆத்திரப்படும்.—பிடிவாதம்.

ரொம்ப துக்கம்—கவலே.—அழுகை.

ஆற்றில் குளித்தலால், ஜலதோஷத்தினுல், குடியினுல், அஜீரணத்தினுல் புளிப்பு, கொழுப்பு, பழம் முதலியவற்ருல் தலேவலி. ஆகாரம் பிடிக்காது-கால்கள் அசதி.

தடித்த வெள்ளே மாசுடைய நாக்கு.

கனமான ஆகாரம், ரொட்டி முதலியவற்றினுல் வயிற்றுக்கோளாறு-குமட்டல், வலி.

பித்தவாந்தி — குடித்தாலும் சாப்பிட்டாலும் அதிகரிக்கும்.

உஷ்ணம் அதிகமானதால் பேதி - வயதானவர்களுக்கு மலச்சிக்கலும் பேதியும் மாறிவரும்.

ஆசனவாயில் கசிவு-துணியில் பட்டால் மஞ்சள் கறை. மூலம்.

நாசி வெடித்து பொருக்கு தட்டி, வாயின் ஓரமும் வெடித்திருக்கும்.

நசுக்கப்பட்ட கை நகம் இரண்டு மூன்று துண்டமாக வளருதல்.

உள்ளங்காலில் ஆணி—தடிப்பு—நடக்க வலி அதிகம்.

பகலில் தூக்கம்.

சூரிய உஷ்ணம் தாங்காது.

இரவில் சுரம்—வியர்வை—பலவீனம்.

பல்வலி—சொத்தைப்பல், குளிர்ந்த தண்ணீர்பட்டால் அதிகரிக்கும் — குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதால் வியாதி அதிகரிக்கும்.

---

## (27) ஆண்டிம் டார்ட்.

ஏராளமான கபம்—களகளவென்ற சத்தம்—கோழையைத் துப்பமுடியாது; நுரையீரல் சக்தியிழக்கும்—இருமலினால் நோயாளி உட்காரவேண்டியிருக்கும்.

முகம் — வெளுத்து, நீலித்து, அல்லது உப்பி. மயக்கம், நீலம் பூத்திருக்கும், சில்லிட்ட வியர்வை.

சதா மயக்கம் அல்லது தூக்கம்.

வாந்தி—பிறகு சோர்வு, குளிர்ந்த தண்ணீருக்குத் தாகம். (பேதியில்)



கடும் ஒக்காளம் — உடம்பு சில்லிப்பு — சில்லென்ற வியர்வை.

தலை, கைகள் நடுக்கல்.

வாயுப் பல்வலி—முகம் முழுவதும் தாளாத வலி.

சீழுடன் அல்லது தண்ணீர் போன்ற நீருடன் கூடிய பெரும் கொப்பளங்கள்—அரிப்பு.

குழந்தை — தூக்கிச்செல்லப்பட விரும்பும் — யாராவது தொட்டால் அழும் — நாடிகூட பார்க்கமுடியாது.

நொப்பம் வெளிக் காணுவிட்டால் இசிவு ஏற்படும். (அம்மையில்)

---

## (28) ஏபிஸ்.

எரிச்சல், தேனீ கொட்டினதுமாதிரி வலி—அரிப்பு—பிளவை, மூலம், விரல்சுத்தி, தொண்டை, கண்ணிமை, சினைப்பை ; ஸ்தனம் முதலிய இடங்களில் வலி.

புற்று—கிளாண்டு வீக்கம்.

நீர் சுரப்பு—நீரண்டம், டிப்திரீயா, அர்டிகேரியா, எரிசிபிலஸ், டிகோதரம் முதலியனவற்றில்—வலியிருக்கலாம்.

தோல் பளபளவென்றும், வெளுத்துமிருக்கும்.

ஸ்கார்லடினு—ரொம்ப சிவந்த நொப்பம்.

தோல் வியாதிகள் (ஸ்கார்லடினு, அர்டிகேரியா, அம்மை) முதலியன அமுங்கிவிட்டால் மூளை தாக்கப்படும்—மெனிங்கைடிஸ்.

திடீரென்று கிரீச்சென்ற சத்தம்—மயக்கம்—ஜன்னியில் ஓரக்கண், பல் கடித்தல், தலையை உருட்டல், ஒரு பாரிசம் வலிப்பு, தலையில் வியர்வை முதலியன.

பொருமை (ஸ்திரீகள்)—ஞாபக மறதி—அழமாட்டாக் குறையாக கண்ணீர் வடித்தல்.

மலேரியாவில், மகோதரத்தில் தாகமின்மை.

பேதி — தண்ணீராக, அடிக்கடி, ஆசனம் திறந்திருப்பதுமாதிரி ஏராளமாக தானறியாமலே.

வியாதி முற்றினாலும் வலியில்லாமலிருப்பது.

தோல் வரண்டும், வியர்த்துக்கொண்டுமிருத்தல்.

சுரத்தில் இடது பக்கம் படுத்தாலும் சாய்ந்தாலும் மூச்சு விட சிரமம் — ஒவ்வொரு மூச்சும் கடைசிபோல தோற்றம்.

தூக்கத்திற்குப் பிறகு தொட்டால், உஷ்ணமான அறையினால் குறிகள் அதிகரிக்கும் — குளிர்ந்த ஓற்றடம் சமனப்படுத்தும்.

வலியுள்ள பாகத்தை மாற்றிப்போட்டால் சாதகம்.

---

## (29) அபோசைனம்.

அதிக தாகம், ஆனால் தண்ணீர் ஒவ்வாது, வயிற்றில் வலி, உடனே வாந்தியெடுத்துவிடும், (நீர்சுரப்பு, மகோதரம்).

ஒரு கால்; ஒரு கை மட்டும் ஆட்டம்—மெனிங்கைடி சுரத்தில்.



வேர்வை, மூத்திரம் அதிகக் குறைவு.

பிரசவ இசிவு — இன்ஜெக்ஷனாக கொடுப்பதுதான் சிறந்தது.

---

## (30) அர்ஜெண்டம் மெட்.

ஹஸ்தப்பிரயோகத்தினால் ஏற்படும் கெடுதல்கள்.

குடிகாரன்மாதிரி தலைச்சுற்றல்.

இருமல் — தொண்டையில் கரகரப்பு, சுலமாக கோழை வரும், வெள்ளை, தடிப்பாகவும், சிரித்தால் அதிகமாகும்.

நெஞ்சு ரொம்ப பலவீனம், இடது பக்கத்தில் அதிகம்.

இருமும்போதும், விழுங்கும்போதும் தொண்டை வரண்டு புண்ணான மாதிரி, தொண்டையில் நொங்குமாதிரி சளி.

விரை வீக்கம், இழுத்துப்பிடிக்கும் வலி, தொடமுடியாத வலி ;—நீரிழிவு.

தொண்டைக்கம்மல்—பாடகர்கள், பேச்சாளர்கள் முதலியவர்களுக்கு.

வலியுடன் சோர்வு, அசதி.

எலும்பு உள்ளுக்குள் வலி,—அதிக ரசம் கலந்த மருந்து சாப்பிட்டதினால்.

உயரமான மெலிந்த சரீரிகள்.

---

## (31) அர்ஜெண்டம் நைட்.

மறந்துவிடுவர்—என்ன வார்த்தை சொல்லவேண்டும் என்று தடுமாறுதல். வேகமாக நடக்கவேண்டும்—மணி மெதுவாகக் கழியும் அடிக்கடி கவலை.

கோவிலுக்கு, பரீக்ஷைக்கு, கூட்டத்திற்கு போகும்போது பயத்தினால் பேதி.

மயக்கம்—கிறுகிறுப்பு—காதுகளில் ஞொய் என்ற சப்தம்—பலவீனம்—நடுக்கல்.

சிவந்த சதைமாதிரி கண் ஓரம் சிவந்து துருத்திக் கொண்டிருக்கும்—ரத்தம்மாதிரி சிவப்பு.

கண்ணிமை வீங்கி, சீழ்கொண்டு ஒட்டிக்கொள்ளும்.

முகம் கிழடுதட்டி, மஞ்சளாக வாடி வதங்கி காணும்.

தொண்டையில் குச்சி மாட்டிக்கொண்டமாதிரி விழுங்கும்போதும், கழுத்தை அசக்கினாலும், மூச்சு விட்டாலும் உணர்ச்சி.

சர்க்கரையில் அதிகப் பிரியம்.

பசியின்மை, சாப்பிட்ட பிறகு ஏப்பம்.

ஐஸ்க்ரீம் முதலியன சாப்பிட்ட பிறகு வயிற்று வலி—நாலாபக்கமும் பரவும்.

மலம் பச்சையாக, நறுக்கின கீரைத்தண்டுமாதிரி—ரொம்ப படபடவென்ற சத்தத்துடன் போகும்-குடித்தவுடன் பேதி.

வயிறு வெடித்துவிடும்போல வாயு உப்பிசம்.

அதிகமான மனக்கவலையினால் ஏற்படும் அக்யூட் அல்லது க்ரானிக் வியாதிகள்.



கைகால்களில் அசதி-நடுக்கல்-வாதம்-பாரிச வாயு.

சிறு எலும்புகள் அழுகல்.

தலை ரொம்ப பெருத்துவிட்ட மாதிரி உணர்ச்சி அமுக்கிக் கட்டினால் சாதகம்-ஒற்றைத்தலைவலி.

---

## (32) ஆர்னிகா

அடித்துப்போட்ட மாதிரி கைகால் வலி—உடம்பெல்லாம் வலி—படுக்கை ரொம்ப கடினமாகத் தோற்றம்.

பதில் சொல்லும்போதே தூக்கத்தில் ஆழ்ந்துவிடுவர்-ஓரே பலவீனம்—ஜன்னி.

தலை அல்லது தலையும் முகமும் சுடும்; உடம்பு சில்லென்றிருக்கும்.

பொட்டில் ஆணி அடித்த மாதிரி தலைவலி.

ஏப்பம்—அழுகின முட்டை மாதிரி நாற்றம் — கருப்பு ரத்தக்கட்டியாக வாந்தி.

அடிபட்டதினால் ஏற்படும் வியாதிகள், நீரண்டம், ரத்தப்பெருக்கு, கர்ப்பச் சிதைவு, ப்ளூரசி, ஹிருதய வீக்கம் முதலியன.

சீழ் பிடிப்பதைத் தடுக்கும்—ஸெப்டிக் வியாதி—டைபாயிட், டைபஸ் முதலியன.

கவுட், வாயு,—எலும்பு முறிவு.

சிறு சிறு கட்டிகள்—ரொம்ப வலியுடன்.

ரத்தக்கட்டு மாதிரி தோலிற்கு அடியில் புள்ளிகள்.

## (33) ஆர்சனிக்

மன அமைதியின்மை — பயம் — இடம்விட்டு இடம் மாறிக்கொண்டேயிருப்பர்.

துரிதமாக பலவீனம்—சோர்வு, சில்லென்ற வியர்வை.

எரிச்சல்—உள்ளும் வெளியும்-சூட்டினால் சாதகமாகும்.

ஏராளமான தாகம் — ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக குளிர்ந்த தண்ணீர் குடிப்பர்—குடித்தவுடன் வாந்தி—பேதி. சாப்பிட்டவுடனும் வாந்தி—பேதி.

சாப்பாட்டின் வாசனைகூட பிடிக்காது.

ஐஸ்க்ரீம் பழங்கள், சாராயம், புகையிலை முதலியவற்றினால் வயிற்றுக்கோளாறுகள்.

விக்கல் அடிக்கடி.

மூத்திரத்தில் அல்புமன்—மகோதரம், உடம்பு பூராவும் சுரப்பு—தோல் மெழுகு மாதிரி பளபளப்பு.

அடிக்கடி மயக்கம்-மலை முதலிய உயரமான இடங்களில் ஏறுவதால் படபடப்பு, மூச்சுத்திணறல்-ஆஸ்த்மா-நடந்தாலும் அதிகமாகும்.

தூங்கினதும் வியர்வை-கொஞ்சநேரம்தான்.

மணிக்கணக்காக வரும் வியாதிகள். வருடாந்திரமாக-

இரவில் பாதிக்குமேல் 1 மணியிலிருந்து 3 மணிவரை குறி அதிகரிக்கும்-சில்லிப்பு, குளிர்ந்த காற்று ஜலத்தினாலும் அதிகமாகும்.

பாம்புக்கடி—டைபாயிட், காலரா-ஆஸ்த்மா-இளைப்பு-டி. பி-பிளவை முதலியன.



## (34) ஆர்ச்-அயோட்.

டி. பி—அஸ்தி சுரம்.

நாள்பட்ட தோல் வியாதி—வரண்டு செதில்போன்ற தடிப்பு.

க்ளாண்டு வீக்கம்—சீழ் பிடித்தல்—முதலியன.

பாக்கிக் குறிகள் ஆர்சனிக்கை சற்று ஒத்தவை.

## (35) ஆரம் ட்ரைபில்லம்.

உதட்டை ரத்தம் பெருகும் வரைக்கும் பிய்ப்பர் — வாயின் ஓரங்கள் வெடித்து புண்ணாகியிருக்கும்—(டைபஸ்).

நாசித் துவாரத்தை நோண்டிக்கொண்டேயிருப்பர்.

தொண்டைக் கம்மல்—அதிகமாகப் பேசுவதினால்—ஆகாரம் சாப்பிட்டால் அதிகரிக்கும்.

பட்ட இடம் புண்ணாக அடிக்கும் சளி முதலியன.

## (36) அஸபீடிடா.

இரவில் குத்தும் வலி-எலும்பைச் சுற்றி வலி-எலும்பு அழுகல்.

புண்ணைச்சுற்றி தொடமுடியாத வலி. புண் கருக்கும்.

ஏராளமான காற்றுப்பிசம் — தொண்டையில் பந்து அடைப்பதுபோலுணர்ச்சி.

ஹிஸ்டிரியா—மாதவிடாய், சீழ் எல்லாம் துர்நாற்றமுடையவை.

காற்று மேலெழும்புவதுபோல்—அடைப்பு—ஹிஸ்டிரியாவில். ஏப்பம்.

அதிக ரசம், சாப்பிட்டவர்கள், ஸிபிலிஸ் வியாதியஸ்தரின் எலும்பு வியாதிகள்.

பாதி இரவிற்குப் பிறகு இடது பக்கம் முழுவதும் கடும் வலி.

---

## (37) அஸாரம்.

எந்த அதிர்ச்சியினுலும் குளிர் நடுக்கல் நரம்புகள் அதிக உணர்ச்சியுடையவை. பேப்பர் மடங்கும் சப்தமும், துணி உராயும் சப்தமும் பாதிக்கும் — தாங்கமுடியாமலிருக்கும்.

உடலவயவங்கள் லேசாகத் தென்படும், காற்றில் பறந்து செல்வதுபோன்ற உணர்ச்சி.

காதுகளில் ஏதோ தக்கை போட்டது போன்ற உணர்ச்சி.

படிக்கும்பொழுது கண்கள் வெளியே பிதுங்கி வந்து விடும்போலுணர்ச்சி. குளிர்ந்த தண்ணீரில் அலம்பினுல் சாதகம். வெய்யில், வெளிச்சம், காற்று முதலியவைகள் கண்ணுக்கு பொறுக்கமுடியாது.

ஓயாத குமட்டல், சாப்பிட்டால் அதிகம்; நாக்கு சுத்தமாயிருக்கும்—கர்ப்பகால வாந்தி.

குடியைத்தடுக்க சிறந்த மருந்து.

காலையில் எழுந்ததும் வயிற்றில் சகிக்கமுடியாத சங்கடம் (குடிகாரனுக்கு)

அடிக்கடி கொட்டாவி, மயக்கம்.



## (38) ஆஸ்டீரியஸ்.

சைகோசிஸ் உடையவர்களுக்கு உகந்தது; ஊதிப் பெருத்த சரீரிகள்—ஆத்திரமுடையவர்கள்.

மறுத்துக் கூறினுல் கோபங்கொள்வார்கள்.

தலையில் மட்டும் சூடான காற்றினுல் மூடப்பட்டது போல் சூடு.

மூளையில் உஷ்ணம்—அபாப்ளக்சி.

ஸ்தனத்தின் புற்று—தாங்கமுடியாத அறுக்கும் வலி—உள்ளுக்கு இழுத்தாற்போல வலி—வீங்கி சிவந்துமிருக்கும்.

ஒரு சிவந்த தடிப்பு ஏற்பட்டு ஸ்தனத்தில் முழுவதும் பரவி, உடைந்து துர்நாற்றமுடைய கசிவுடன், ஓரங்கள் வெளுத்திருக்கும்.

உடம்பு தள்ளாட்டம்—தசைகள் இஷ்டப்படி வேலை செய்யாது.

காக்கை வலிப்பு-வலிப்பு வருவதற்கு 4-5 நாள் முந்தி உடம்பெல்லாம் துடிப்புகள்.

மலச்சிக்கல்—மலம் கெட்டியான உருண்டைகளாக சிரமத்துடன் வெளிப்படும்.

பேதி—தண்ணீர் மாதிரி, கருஞ்சிவப்பு, பீச்சாங்குழல் மாதிரி வேகமாக பீச்சப்படும்.

ஸ்திரீகளுக்கு அதிக காம இச்சை.

---

## (39) ஆரம்மெட்.

ரொம்ப மனத்தளர்ச்சி — மனதிற்குவேலை கொடுத்தால் அயர்வு-வருங்காலத்தைப்பற்றி கவலை.

வாழ்வில் அலுப்பு-சதா தற்கொலையைப்பற்றி நினைவு-ஞாபகம்-வாழ்வே ஒரு சுமை—சாவைப்பற்றி பயம்.

அதிக ரசம் கலந்த மருந்து, ஸிபிலிஸ் முதலியவைகளினல் கெட்ட சரீரமுடையவர்கள்.

வயதானவர்கள், கண்பார்வை மங்கல், வாழ்வில் அலுப்பு.

பையன்கள்—விரை வளராது—வெறும் கம்பி போல இருக்கும் — "ஆண் பிள்ளை" மாதிரி இருக்கமாட்டான். ரொம்ப அலுப்பு.

எலும்பிற்குள் இரவு முழுவதும் குடையும் வலி—எலும்பு அழுகல், கெடுதல் முதலியன.

ஹிருதயம் பெருத்தல்—உடம்பும் ஊதுதல், — படபடப்பு-நாடி பலவீனம்-ஹிருதய சம்பந்தப்பட்ட ஆஸ்த்மா.

பார்வையில் பாதி சாமான்தான் தெரியும்—அதுவும் கீழ்பாதிதான் தெரியும்.

காதிலிருந்து துர்நாற்றமுடைய சீழ்—நாட்பட்ட சீழ் வடிதல்.

கர்ப்பப்பை வீக்கம்-மலடு.

---

## (40) பாப்டிஷியா.

உடம்பு சிதறிக்கிடப்பதுபோலுணர்ச்சி, அவைகளை ஒன்று சேர்க்க முயற்சி.

குடித்தவன் மாதிரி மனக்குழப்பம், ஞாபகப்படுத்த முடியாது.

முகம் கருஞ்சிவப்பு-கண் கலங்கியிருக்கும்.



எப்படிப்படுத்துக்கொண்டாலும் உடல் முழுவதும் வலி. படுத்துக்கொண்ட இடம் உறுத்தும்.

பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே தூக்கம்—ஜன்னி.

வாய் புண்ணுகி—நாற்றம்—வரண்ட நாக்கு—நடுவில் மாத்திரம் கோடுபோல் நாக்கில் வரண்டிருக்கும்.

இது சுரங்களில் தென்படும் — ஸெப்டிக் சுரங்கள் — டைபாயிட்டுக்கு சிறந்தது.

மலம் தளர்ந்து—சிறு நீர் முதற்கொண்டு ஒரே வீச்சமடிக்கும்.

திரவ பதார்த்தம்தான் விழுங்கமுடியும் — கெட்டியான ஆகாரம் எதுக்களிக்கும் — தொண்டையில் புண்கள்—வலி இருக்காது.

---

## (41) பரைடா கார்ப்

பேசும்பொழுது ரொம்ப சகஜமான வார்த்தைகள் நினைவு வராது, ரொம்ப மனச்சக்தி குறைவு — உடம்பு பலவீனம் — குழந்தைகளுக்கும் — கிழவர்களுக்கும், குழந்தைகள் வளரா—தள்ளாடும் குழந்தைகள்—ஞாபக மறதி.

டான்சில்ஸ்—வீக்கம்—அடிக்கடி வீங்கி சீழ்பிடிக்கும்—சிறிது ஜலதோஷம் பிடித்தாலும்—வீங்கும்.

க்ளாண்டுகள் வீக்கம்—எல்லா க்ளாண்டுகளும் வீங்கலாம்—கரளைக் கட்டிகள்.

உள்ளங்காலில் நாற்றமான வியர்வை.

அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல்—தொண்டைகரகரப்பு—இருமல், பேதி—இடுப்புப்பக்கம் வலி.

அபாப்லக்ஸி, பக்ஷவாதம்-கடி, பாலுண்ணிகள்.

---

## (42) பெல்லடோனு

எல்லா அக்யூட். சுரத்துடன் கூடின வியாதிகளில் கடும் தலைவலி, முகம் உப்பி நன்ருக சிவந்திருக்கும்; தொண்டை-ரத்தக் குழாய்கள் துடிப்பது தெரியும்; வலிப்புகள், இசிவுகள்-ஜன்னி—மூளையில் துடிப்பு.

கண்கள் சிவந்து கோவைப்பழம் மாதிரி, பாப்பா முதலில் சுருங்கி பிறகு விரிந்திருக்கும்.

கடும் ஜன்னி-அடித்தல், கடித்தல், ஸ்பூனை கடித்தல், சண்டைபோடுதல்.

வலி—திடீரென்று ஏற்பட்டு—கொஞ்ச நேரம் இருந்து விட்டு திடீரென்று மறையும்.

தோல் சிவந்து. சூடாக இருக்கும். அனல் வீசும். ஆனல் போர்த்த பாகத்தில் வியர்க்கும்—தொட்டால் சுடும்.

வயிற்றில் வலது குடல்புறம் வலி — தொடக்கூட முடியாது. துணிபடமுடியாது.

நாக்கும் வாயும் வரண்டு, சிவந்து, சில சமயம் வீங்கியுமிருக்கும்.

நாக்கு ஓரங்கள் சிவந்து நடுவில் வெள்ளை படர்ந்திருக்கும்.



யோனி வழியாய் எல்லாம் வெளிவந்துவிடும்போல அமுக்கம்—நின்ருலும், நிமிர்ந்து உட்கார்ந்தாலும், காலையிலும் அதிகரிக்கும்.

பிசாசுகள், பயங்கர முகங்கள், பலவிதமான பூச்சிகள், நாய்கள், ஓநாய்கள் இவைகளைக் காணுவதாகத் தோற்றம்.

அடிக்கடி சுலபமாக ஜலதோஷம் பிடிக்கும். க்ஷவரம் செய்துகொண்டால், குளிர்ந்த காற்று வாடையில் தலையை மூடாமல் வைத்திருந்தால் ஜலதோஷம்-டான்சில்ஸ் வீக்கம்.

தாங்கமுடியாத தலைவலி—சூரிய உஷ்ணம் தாளாது—கத்தியினுல் பொட்டுகளில் குத்துவதுபோல்-அசைந்தாலும், நடந்தாலும் அதிகப்படும். நன்ருக இறுக்கிக்கட்டிக் கொண்டால் சாதகம்.

வலிப்புகள்—சுரங்களில் சிறந்த மருந்து.

தோல் வழவழவென்று-நன்ருக சிவந்து—தொட்டால் சுடும்.

தூக்கத்தில் முனகல்-பயப்படுதல்-தூக்கிப்போடுதல்.

---

## (43) பெல்லிஸ்.

உடம்பு முழுவதும் அடித்து முறித்துபோட்டாற் போல வலி.

சுளுக்கு-மூட்டுவாயு-சுளுக்கினமாதிரி வலி.

பேதி - மஞ்சளான, துர்நாற்றமுடைய வலியில்லாத போக்கு.

வலியுடன் உஷ்ண கட்டிகள்.

---

## (44) பெர்பெரிஸ்வல்.

மரமரப்பு, பிடிப்புடன் கூடிய முறித்துப்போட்ட வலி— மூத்திரக்காய்ப்புறத்தில்-காலையில் அதிகம்.

இடுப்பு வலி—எழுந்திருக்கும்போது அதிகம்—அசதியினால் அதிகரிக்கும்.

மூத்திரக்காய் பாகத்தில் கொப்பளிக்கும் உணர்ச்சி.

பித்தக்கல், மூத்திரக்காய்க்கல், வலி.

வாயு வலிகள், மூட்டுகளில் — ஒரு மத்தியிலிருந்து பரவும் வலிகள்.

நரம்புச்சுருட்டல்.

சிரங்குகளை பழுக்கவைத்து திரும்ப வராமல் தடுக்கும்.

---

## (45) பிஸ்மத்.

வயிற்றுவலி — வயிற்றில் எரிச்சல், அமுக்கும் வலி— பின்புறம் சாயவேண்டும்.

வாந்தி — ஏராளமான தாகம், தண்ணீர் வயிற்றில் பட்டவுடன் வாந்தி—சாப்பாடு தங்கும் (ஆபிரேஷன்களுக்குப் பிறகும்)—புற்று குன்மம்.

இரண்டு மூன்று நாள் ஆகாரத்தை சேர்த்துவைத்து வாந்தி.

பேதி — ஏராளமாக தண்ணீர்மாதிரி வலியில்லாமல்— சகிக்கமுடியாத நாற்றம்.



அமைதியின்மை — தனிமையில் பயம் — ரொம்ப பலவீனம்—ஒரே இடத்தில் இருக்கமுடியாது — கண்களைச் சுற்றி நீல வளையம்—உடம்பு வியர்வையால் நனைந்திருக்கும். ஆனால் வியர்வை சூடாகயிருக்கும்.

---

## (46) போரக்ஸ்

விழுவதற்குப் பயம், கீழிறங்குவதற்குப் பயம், குழந்தை தாயாரை கட்டிக்கொள்ளும்-சத்தங்கள் உதவாது.

அதிகத் தூக்கம்—குழந்தை தூக்கத்தில் அழும் அல்லது பயந்து தூக்கிவாரிப்போடும்.

எந்த சத்தமும் தூக்கிவாரிப்போடும்—பீதி.

வாய்ப்புண்—இரவும் பகலும் பச்சையான மலம்—வாய் உஷ்ணமாக இருக்கும்.

கண்ணிமை பிசின்மாதிரி ஒட்டிக்கொள்ளும் — காதில் சீழ்.

இருமல்—கோழை அழுகின செடி நாற்றம் — மாரிலிருந்து முதுகுவரை வலி.

வெள்ளை முட்டைக்கரு மாதிரி வெள்ளைபடுதல்—சுடு தண்ணீர் கொட்டுவது மாதிரி இறங்கும்-மலடு. மாதவிடாய்க்கு மத்தியில் அதிகம் படும்.

தோலில் சிறு காயமும் சீழ் பிடிக்கும். சோரியாசிஸ்.

---

## (47) போவிஸ்டா

அதிக ரத்தக்கொதிப்பு.

பெரும்பாடு—இரவில் படுக்கையில்தான் காணும் அல்லது அதிகரிக்கும்.

மூக்கு, மியூகஸ் தசையிலிருந்து பிசின் கம்பி போன்ற சளிப் பெருக்கு.

மொட்டை ஆயுதங்களை உபயோகிப்பதனுல் விரல்களில் ரொம்ப ஆழமான பள்ளங்கள்.

கிழவிகள்—படபடப்பு.

குழந்தைகள்—திக்குதல்.

மாடியில் ஏறினுல் — ரொம்ப படபடப்பு, கைகள் நடுக்கல்.

அதிக போகத்தினுல் மதுமேகம்—ஸ்கலிதம்.

## (48) புரோமியம்

க்ளாண்டு வீக்கங்கள்—கெட்டியான வீக்கம்.

முகத்தில் ஒட்டடை இருக்கிறமாதிரி உணர்ச்சி.

வலது மார்பில் வெட்டும் வலி-வலது நுரையீரல்-டி. பி.

ரொம்ப தேகாப்பியாசம் செய்பவர்களுக்கு ஏற்படும் ஹிருதய வீக்கம்—இடது பக்கம் படுக்கமுடியாது-படபடப்பு.

டிப்திரியா — அடித்தொண்டையிலிருந்து ஆரம்பித்து மேலேறும் ஜவ்வு.

க்ரூப்—கபம் களகளவென்று சத்தம்; ஆனுல் வெளி வராது; மூச்சு நின்றுவிடும்போல அடைப்பு.

மாலுமிகளுக்கு கரையில் வந்தவுடன் ஆஸ்த்மா.

நல்ல சிவந்த உடம்புடையவர்களுக்கு ஏற்றது.

நாசியின் இரு விளிம்பும் விசிறி மாதிரி அசையும்.

யோனியிலிருந்து காற்று பரியும்—வலி தாங்காத மாத விடாய்-சதைத்துண்டுகள் வெளிவரும்.



## (49) பிரியோனியா.

எல்லா வியாதிகளும் அசைந்தால், நடந்தால் அதிகரிக்கும்-அசையாமலிருந்தால் சாதகம்.

தாகவரட்சி—ஏராளமான தண்ணீர் குடிப்பர்.

மலச்சிக்கல்-தீய்ந்த கட்டிமாதிரி மலம் அல்லது-பேதி-காலையில் அல்லது அசைந்தால் அதிகரிக்கும்.

எழுந்து உட்கார்ந்தால் மயக்கம்—குமட்டல்.

மெனிங்கைடிஸ், பிளூரைடிஸ், பெரிடோனைடிஸ் முதலியன—குத்தும் வலி—மூட்டுகளிலும் வலி.

இருமல், வரட்டு, அதிக கோழை இல்லை—தெரிக்கும் தலைவலி—ஜன்னி—பகலில் நடந்த வியவகாரங்களைப்பற்றி பேத்தல்—குனிந்தால், உஷ்ணகாலத்தில், இருமினுல், நடந்தால், மயக்கம், தலைவலி, குமட்டல்.

வயிற்றில் வலி, கல் விழுந்தமாதிரி, ஏப்பம் வந்தால் சாதகம்.

மாதவிடாய்க்கு பதிலாக மூக்கிலிருந்து ரத்தம்.

ஸ்தனம் கனந்து—கல்போல்—வெளுத்து உஷ்ணமாகவும் இருக்கும்—வலியுமிருக்கும்-தூக்கிக்கொள்ளவேண்டும்.

மூட்டுகளில் வாயு — வீக்கம் — சுரம் — தொட்டாலும், அசைந்தாலும் அதிகம்.

அமுக்கினுல் வலி சாதகம்—வலியுள்ள பாகத்தில் படுத்துக்கொள்வர்.

பால், மாதவிடாய், அம்மை இவைகள் தோன்ருவிட்டால் அல்லது தோன்றுவதற்கு நாட்பட்டால்—பிறகு நீர் சுரப்பு (Dropsy) மெனிங்கைடிஸ் முதலியன.

## (50) காக்டஸ்.

ஹிருதயத்தை இறுக்கிறாற்போல வலி—ஒரு இரும்புக் கட்டு அதன் அசைவை தடுப்பதுபோல் இருக்கும்.

பொதுவாக எல்லா பாகங்களிலும் ஹ்ருதயம், மார்பு, மூத்திரப்பை, யோனி, கர்ப்பப்பை, ஆசனவாய் இருக்கிறாற்போல உணர்ச்சி.

உச்சந்தலையில் சுமை இருப்பதுபோன்ற தலைவலி—ஹிருதய வியாதிகளில்—ரத்தபெருக்கு—ரத்தவாந்தி—குடல் வழியாய் ரத்தப்பெருக்கு—ரத்த மூத்ரம் முதலியன.

படபடப்பு-இடதுபக்கம் படுத்துக்கொண்டாலும் நடந்தாலும்—பகலிலும் இரவிலும்—மாதவிடாயின்போது.

அடிக்கடி மூச்சுவிட சிரமம்—மயக்கம் — சில்லென்ற வியர்வை—நாடி தென்படாது.

சாவைப்பற்றி பயம்—தன் வியாதி சௌகரியமாகாதென்று நினைப்பு.

இடது கால், கை, நீர் சுரப்பு—இடது கை மரமரப்பு.

மூட்டுகளில் வாயு வலி—மேல்புறத்திலிருந்து ஆரம்பிக்கும்.

## (51) கலாடியம்.

ஆண்தன்மையின்மை, போகத்தில் இச்சை ஆனால் நிறைவேற்றமுடியாது.

வியர்வையின் வாசனையால் ஈக்கள் மொய்க்கும்.

புகையிலையின் கெட்ட பழக்கத்தை இதனால் நிவர்த்திக்கலாம்.

யோனி அரிப்பு தாங்காததினால் ஹஸ்தப்பிரயோகம்.



## (52) கால்-ஆர்ஸ்.

நாள்பட்ட தோல் வியாதிகள் —ஸோரியாசிஸ்.

ரொம்ப பலவீனம், தலையைச்சுற்றி வியர்வை.

ஆஸ்த்மா - இரண்டு படி ஏறினாலும் படபடப்பு - மூச்சுத் திணறல்.

சிறிய மன அதிர்ச்சியும் படபடப்பு உண்டாக்கும்.

## (53) கால்-கார்ப்.

அழகாய் உடம்பு ஊதிப்பெருத்திருப்பர்—சில்லிப்பு-உடம்பு முழுவதும் அல்லது சிற்சில இடங்களில்-கால்களில் நனைந்த துணியை போட்டுக்கொண்டிருக்கிறுப்போல—ஈரத்தில் வேலைசெய்வதால் வரும் வியாதிகள்.

தலையில், கைகால்களில், அக்குளில் ஏராளமான வியர்வை.

தலையில் உச்சாங்குழி மூடாது—எலும்புகள் சரியாக வளராது—முதுகெலும்பு வளைந்து—கை கால்கள் வளைந்திருக்கும்—சிறு குழந்தைகளும் பெருத்துவிடுவர்.

சதை வளருதல்;—மூக்கில், காதில், கர்ப்பப்பையில், மூத்திரக்காயில்.

புளிச்ச ஏப்பம்—புளிச்ச ருசி, புளிப்பான வாந்தி, புளித்த தயிர்கட்டிகளாக வாந்தி—புளித்த பேதி — பல் முளைக்கும்போதும்—உடம்பும் புளிப்பு நாற்றமடிக்கும்.

முட்டை, உப்பு, தித்திப்பு இவைகளில் பிரியம்.

சட்டென்று ஜலதோஷம் பிடிக்கும்.

சில்லிப்பு — அநேக அவயவங்களில்.

வலது நுரையீரல் அதிகமாகத் தாக்கப்படும். மூச்சு உள்ளிழுக்கும்போதும் மார்பைத்தொட்டாலும் வலி.

பசி குன்றந்து—உடம்பு வரவர இளைக்கும்.

படபடப்பு; சாப்பாட்டிற்குப்பிறகு படி ஏறினாலும் அதிகமாகும்.

தொண்டைக்கம்மல்; வலியிருக்காது.

காக்கை வலிப்பு — வலிப்பிற்கு முந்தி கை வழியாக ஏதாவது ஓடும்போல அல்லது வயிற்றின் நடுவிலிருந்து கால்வரைக்கும் ஓடுவதுபோல உணர்ச்சி. அமாவாசைக்கு அல்லது பௌர்ணமிக்கு முந்தி அதிகப்படும்.

எல்லாக்குறிகளும் பௌர்ணமிக்கு முந்தி அதிகமாகும்.

கடி, ஜலத்தில் அல்லது சுண்ணாம்பில் வேலைசெய்பவரது கை, விரல்களுக்கிடையில் வெடிப்புகள்.

---

### (54) கால் பாஸ்.

ஒல்லியான, உயரமானவர்கள் - வெகு துரிதமாய் வளருபவர்கள்.

குழந்தைகள் உச்சந்தலை மூடாமலும் மூடினாலும் திரும்பத் திறந்துவிடும். சோகை, தலைப்பக்கம் வியர்வை.

போக்கு ரொம்ப படபடவென்ற சத்தத்துடன் பச்சையாகவும் இருக்கும்.

உடம்பு இளைப்பு.

இருமல் — அடிக்கடி தொண்டையை கனைத்துச் சரிப் படுத்தவேண்டும். டி. பி.



சோகையுடைய சிறு பள்ளிப் பெண்களுக்கு தலைவலி.

தன் வியாதியைப்பற்றி நினைத்தால் வியாதி அதிகரிப்பது மாதிரி தோற்றம்.

குழந்தை சதா தாய்ப்பால் சாப்பிட விரும்பும் — சுலபமாக வாந்தி எடுக்கும்.

குழந்தைகள் நடப்பதற்கு சக்தியிழந்துவிடும்.

எலும்புகள் உடைந்தவை ஒட்டாது.

எல்லா மூட்டுகளிலும் வலி.

பனிகாலத்திலும், குளிர்காலத்திலும் அதிகப்படும் வாயு வலிகள்.

ஒவ்வொருதரமும் சாப்பிட்டால் வயிற்றுவலி.

---

### (55) காலண்டுலா

அதிகமாக மேலுபயோகத்திற்கு உபயோகப்படுத்தப் படுவது.

புண்களை சீக்கிரம் ஆற்றும்.

வயிற்றுப்புண்—வயிற்று வலி.

கிழித்த புண், மூட்டுகளில் ஏற்படும் புண், சீழ் பிடிக்காமலிருக்கும் புண் முதலியவற்றிற்கு மேலுக்குப் போடவும்.

அடிபட்ட காயத்திலிருந்து ரத்தப் பெருக்கை நிறுத்தும்.

ஆபிரேஷன் காயங்களுக்கு கைகண்டது.

நாள்பட்ட கண்ணிமை வியாதிகள்.

---

## (56) காம்போரா

மேற்புறம் சில்லிப்பு—திடீரென பலவீனம்—அதிர்ச்சி-நளிர்.

பேதி—காலரா—முதலில் மிகுந்த நரம்பு அதிர்ச்சி.

எவ்வளவு குளிராயிருந்தாலும் போர்த்திக்கொள்ள விரும்பான்.

காலரா, நிமோனியா, பிரான்கைடிஸ், ஜலதோஷம், அடியினால் அதிர்ச்சி. இவைகளில் சிறந்தது.

நினைத்தபொழுது வலி மறையும். சில்லிப்பு காற்று உதவாது.

கண்டை ஏறுதல்—சிறுநீர் பிரிவதில் சிரமம்; கடுப்பு அல்லது பிரியாது.

---

## (57) கானபிஸ் இண்டிகா

சரியானபடி சமாசாரங்களை கோர்த்து சொல்ல முடியாது—மறதி.

நாள் கணக்கு, தூரம் எல்லாம் அதிகரித்து பிரமைப் படும்—ஒரு கஜ தூரம் ஒரு மைல் மாதிரியும், ஒரு நிமிஷம் ஒரு யுகம் மாதிரியும் தோற்றம்.

குடிகாரனின் ஜன்னி — குமட்டல் — அடக்க முடியாத தாகம், கோபம்—நடுக்கல்—மனத்தோற்றங்கள்.

ஞானதிருஷ்டி.



சிறுநீர் பிரிவதற்கு காத்திருக்கவேண்டியிருக்கும். பிரிந்த பிறகும் சொட்டும்.

சிறுநீர் பிரியும் முன்னும், பிரியும்போதும், பின்னும் எரிச்சல், குத்தல்.

அடிக்கடி சிறுநீர், ஆனால் கொஞ்சம்.

ஹிருதயத்திலிருந்து சொட்டுவதுபோலுணர்ச்சி.

தூங்க ஆரம்பித்தவுடன் பயங்கரமான சொர்ப்பனம்.

உடம்பு வெகு லேசாகத்தோனும்-அப்படியே ஆகாயத்தில் பறந்துவிடலாம்போல.

---

## (58) கானபிஸ் ஸடைவா

தலையில், வயிற்றில், ஆசனவாயில் அல்லது ஹிருதயத்தில் தண்ணீர் சொட்டுவதுபோல உணர்ச்சி.

சிறுநீர் பிரியும்போது மூத்திரத்துவாரத்தின் நுனியிலிருந்து அடிப்புறம் வரைக்கும் எரிச்சல், குத்தல்.

மூத்திரப்பை சரியானபடி வேலை செய்யாததால் மூத்திரம் பிரிவதில் சிரமம்.

மூத்திரக்குழாய் தொடமுடியாதபடி வலி; இரண்டு காலையும் அகற்றிவைத்து நடக்கவேண்டும்.

கடுமையான வெட்டை; மூத்திரம் பிரிய சிரமம்—எரிச்சல்—மஞ்சளான வெட்டை.

ஆஸ்த்மா அல்லது மூச்சுவிட சிரமம். நின்றால்தான் சற்று சாதகம்.

8

சுளுக்கிற்குப் பிறகு கைவிரல் முடக்கம். விழுங்கும் போது ஆகாரம் சரியான வழியில் செல்லாததுபோல அடைப்பு.

கடும் மலச்சிக்கல்—நீரடைப்பு.

சாப்பிட்டதும் ரொம்ப அசதி.

மாடியில் ஏறினால் முழங்கால் எலும்பு பிசகுதல்.

---

## (59) காந்தாரிஸ்

அடிக்கடி நீர் பிரிதல்—எரிச்சல், வெட்டும் வலி, தாங்க முடியாத கடுப்பு; நீரடைப்பு-சில சொட்டுகள்தான் பிரியும்-சிலசமயம் ரத்தமும் தென்படும்.

சிறுநீர் பிரிய தாங்கமுடியாத உணர்ச்சி—ஆனால் தாங்க முடியாத வலி.

கொஞ்சம் தண்ணீர் சாப்பிட்டாலும் மூத்திரப்பையில் வலி.

எங்கும் ஒரே எரிச்சல்—ரொம்ப பலவீனம்—வலி.

உடலில் எல்லா பாகங்களிலும் சுரணை அதிகமாயிருக்கும்.

ஏதைக்கண்டாலும் வெறுப்பு; ஆகாரம், தண்ணீர், புகையிலை.

எரிசிபிலஸ்—தோலெல்லாம் கொப்புளங்கள், கடுப்புடன் சீழ்—அழுகல்.

சூரிய வெப்பத்தினால் தோல் கன்னுதல்.

மலம்—ரத்தம் கலந்த சீதக்கட்டு—குடலிலிருந்து சதைத் துண்டுகள் மாதிரி வரும்.



ரத்தப்பெருக்கு—நாசி, வாய், குடல், நீர்த்துவாரம் முதலியவற்றிலிருந்து.

இரவில் ரத்தங்கலந்த ஸ்கலிதம்.

காம இச்சை; அதிகம்-தூக்கம் வராது; தாங்கமுடியாத வலியுடன் ஆண்குறி விறைத்திருக்கும்-ஆண் பெண் இருவருக்கும் அமிதமான இச்சை.

சுவாசக்குழாயில் பிடிவாதமான கோழை.

தலையில் ஏராளமான பொடுகு.

நெருப்புசுட்ட புண் (மேலுக்கும் போடவும்).

---

## (60) காப்சிகம்

உடம்பு உஷ்ணம் குறைந்தவர்கள், ஊளைச்சதை, தளர்ந்த தசையுடையவர்கள், பலவீனமுடையவர்களுக்கு உகந்தது.

சரியான மருந்து கொடுத்தும் மருந்து பிடிக்காவிட்டால் இது உபயோகப்படும்.

உள்ளூர குளிர்—திறந்த காற்று உதவாது—வேலை செய்யவும், மனதால் நினைக்கவும்கூட சோம்பல்—உடம்பு பெருத்து, அழுக்கானவர்கள்.

தண்ணீர் குடித்ததும் நடுக்கல், குளிர்-தோள்களுக்கு மத்தியிலிருந்து பரவும்.

குஷியான பேர்வழி—சோம்பல்—ஆனால் சின்ன சமாசாரத்திலும் கோபம்.

தனிமையில் இருந்து—படுத்துத்தூங்க பிரியம். காபியில் பிரியம்.

சொந்த வீட்டிலிருக்கப் பிரியம் — தூக்கமின்மை — கன்னங்கள் சிவப்பு.

உடம்பில் மிளகாயை அரைத்துத் தடவினமாதிரி எரிச்சல்—சூடுபட்டால் எரிச்சல் குறையாது-தொண்டையில் மற்றும் பல பாகங்களில்.

இறுக்கம் — தொண்டை, நெஞ்சு, நாசி, மார்பு, மூத்திரப்பை, மூத்திரக்குழாய், ஆசனவாய்.

எரிச்சலுடன் இருக்கும்-வலி-விழுங்கும்போது அதிகமாகும்.

காதின் பின்பக்கம் எலும்பு வீக்கம் — (மாஸ்டாயட் வீக்கம்) தொடமுடியாத வலி.

டான்சில்ஸ் — வீக்கம், எரிச்சல், கடுப்பு, இறுக்கம் விழுங்க சிரமம்.

இருமல்—தலைவலி இருமும்போது பிளக்கும்-இருமும்போது வாயிலிருந்து துர்நாற்றமான காற்று வெளிப்படும். இருமினால் மூத்திரப்பை, கால்கள், காதுகள், முழங்கால் முதலிய தூரபாகங்களில் வலி.

நாள்பட்ட காது சீழ்.

முறை சுரம்—ரத்த சீதபேதி — ஸ்பிலீன் வீக்கம்—மூலம்—நாள்பட்ட தொண்டைக்கம்மல்—நரம்பு வலிகள்.

காபியினால் ஏற்படும் கெடுதல்களுக்குச் சிறந்தது.

---



## (61) கார்போ அனிமாலிஸ்

க்ளாண்டு வீக்கம்-கல்மாதிரி கரளைகள்-வலி-கழுத்தில், அக்குளில், துடைச்சந்தில், ஸதனத்தில்—வலி வெட்டுவது மாதிரி, கிழிப்பது மாதிரியும், எரிச்சலுடனும் இருக்கும்.

சீழ்பிடித்து—புற்று—ஆறுத ரணம்.

கர்ப்பப்பை வாய்ப்புண்—கட்டி.

கனமான சாமானைத் தூக்கினால் சீக்கிரம் சுளுக்கிக் கொள்ளும்; ரொம்ப பலவீனம், கணுக்காலிற் சுளுக்கு.

மூட்டுகள் பலவீனம்; சுளுக்கும்

திறந்த காற்று உதவாது—பிடிக்காது.

மாதவிடாய்க்குப்பிறகு ரொம்ப பலவீனம், பேசக்கூட முடியாது; காலையில் மாத்திரம் மாதவிடாய் — மஞ்சளான வெட்டை.

ப்ளூரசிக்குப் பிறகு மார்பில் வலி.

காதில் சீழ்—செவிடு; எந்த பக்கத்திலிருந்து சத்தம் வருகிறதென்று சொல்லமுடியாது.

அழுகின பதார்த்தங்களை சாப்பிட்டதினால் வலி, அஜீரணம்.

கிரந்தி நீரினால் செம்புபோன்ற தோல் தடிப்புகள்—முகப்பரு.

கிழவர்கள், ரத்த ஓட்டக் குறைவு உடையவர்கள் தளர்ந்த உடல் நலம், நீல உதடு, நீல கன்னம் முதலியன உடையவர்கள்.

தலைவலி-தலை வெடித்துப்போனமாதிரி, இரவு முழுவதும் தலையைப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும்.

மாதவிடாய், காது சீழ், வெட்டை எல்லாம் ரொம்ப பலவீனப்படுத்தும்.

---

## (62) கார்போ வெஜி

நாள்பட வேலைசெய்யும் மருந்து.

பலவீனப்படுத்தின வியாதிகளுக்குப்பிறகு உகந்தது.

பல நாள் முந்தின கடும் வியாதியிலிருந்தே உடல் தேருதவர்கள்-குழந்தைப்பருவத்தில் சின்னம்மை அல்லது கக்குவானிற்குப்பிறகு ஆஸ்த்மா; அமித குடிக்குப்பிறகு அஜீரணம்; ரொம்ப நாள் முந்திய அடிக்குப்பிறகு கெடுதல்கள்; டைபாயிட்டுக்கு பிறகு தேருமலிருப்பது இம்மாதிரி.

சரியான மருந்து கொடுத்தும் சரியானபடி பலனேற்படாவிட்டால்.

கொயினு, ரசம், உப்பு, உப்பு மாமிசம், அதிக உஷ்ணம் இவைகளினுல் ஏற்படும் வியாதிகளுக்கு.

அதிகப் பெரும்பாடு, அதிகப் போக்கு முதலியவற்றிற்குப் பிறகு உடல் நலம் குறைவு.

எரிச்சலுடன் வலி-நடுமார்பில் தணல்போல எரிச்சல்-எங்கும் பலவீனம்.

மறதி—யோசனை செய்வதுகூட மெது.

வயிற்று மந்தம்—சாதாரண ஆகாரம்கூட ஒவ்வாது—காலையில் குமட்டல், எச்சல் ஊறல், வலியினுல் வயிற்றைப்



பிடித்துக்கொள்ளவேண்டும்; சாப்பிட்ட ஒரு மணிக்குப் பிறகு வலி—ஏராளமான காற்றுப்பிசம்-படுத்தால் திணறல்-வயிறு வெடித்துவிடும்போல.

இடுப்பைச்சுற்றி இறுக்கி வேஷ்டியை கட்டமுடியாது.

ஏப்பத்தினுல் சாதகம்.

ஒவ்வாத வஸ்துக்களில் ஆசை, பழைய குடிகாரர்கள் பிராந்தி முதலியன விரும்புவர்; உப்புப்பண்டத்தில் இச்சை.

தினம் நாசியிலிருந்து ரத்தப்பெருக்கு — வாரக்கணக்கில் — முகம் வெளுத்து — சுண்டி — பசுமஞ்சள் நிறம்—சில்லிட்டு—வியர்வை—ரத்தப்பெருக்கிற்குப்பிறகு.

பல்வீரலிலிருந்து ரத்தப்பெருக்கு-(பயரியா) நாற்றம்-ஏராளமான கம்பிபோன்ற உமிழ்நீர்.

எந்த மியூகஸ் துவாரத்திலிருந்தும் ரத்தப்பெருக்கு—ரத்தம் கரியும்—பலவீனம்.

அடிக்கடி, தானறியாமலே நாற்றத்துடன் போக்கு—எரிச்சல்.

வியாதியின் கடைசி காலம் — உடல், நாக்கு, மூச்சு, வியர்வை எல்லாம் சில்லிட்டு, சத்தம் கம்மி - இந்த மருந்து காப்பாற்றும்—காலரா—பாம்பு கடி.

வீனஸ் குழாய்களின் வியாதிகள் - போதுமான அளவு பிராணவாயு ரத்தத்தில் சேராது.

நன்ருக அடிக்கடி விசிற வேண்டும் — உடல் சக்தி மிகவும் குறைந்திருக்கும்—காற்றிற்காக மீன் மாதிரி விழுங்குவர்—ஜன்னல்களெல்லாம் திறந்து வைக்கவேண்டும்.

தொண்டைக்கம்மல் — மாலையில், அதிகம்—கொஞ்சம் சிரமப்பட்டால் கம்மல் அதிகரிக்கும்.

வயதானவர்களுக்கு ஆஸ்த்மா — நாடி, பலவீனம், சாப்பிட்டபின், முகம் நீலம் பூத்து—ஒரே பலவீனம்.

கக்குவான்—குன்ம வலி — டைபாயிட் — நிமோனியா-க்ஷயஜ்வரம் — தாளம்மை — ஸெப்டிக் வியாதிகள் — ராஜப் பிளவை.

பிரசவ காலத்தில் சிறந்த மருந்து — தங்கிப்போன நஞ்சு.

மயக்கம்.

---

## (63) காலோபில்லம்

பெண் பிள்ளை மருந்து — கர்ப்பகாலம், பால்சுரக்கும் காலம், பிரசவகாலம் இவைகளுக்குச் சிறந்தது.

அடிக்கடி கர்ப்பச் சிதைவு—கர்ப்பப்பை பலவீனம்.

பிரசவ வலி - ஒழுங்கில்லாமல் - வலிப்புடன் - சிறு வலியாக - தொந்திரவுடன் ஆரம்பிக்கும் - பிரயோசனமில்லாத வலி.

கர்ப்ப வாய் விறைப்பு - வாயில் ஊசி மாதிரி வலி.

நஞ்சு தங்கிவிடுதல்-நீடித்த ரத்தக்கசிவு-நாட்கணக்கில்.

பிரசவத்திற்குப்பிறகு வலி — அவசர பிரசவத்திற்குப் பின் ரத்தப்பெருக்கு—மண்குத்துவலி.

பொய் வலி.



வெட்டை — பலவீனப்படுத்தும் — கண் மேலிமைகள் கனத்திருக்கும்—கையினால் தூக்கவேண்டும். நெற்றியில் திட்டுதிட்டாய் பொட்டுகள்.

சிறுபெண்களுக்கு வெள்ளைபடுதல்.

வெள்ளைபடுவதால் கர்ப்பத்தடை.

வாயு வலி—சின்ன மூட்டுகளில்-வலி இடம்விட்டு இடம் அடிக்கடி மாறும்—வலியுடன் விறைப்பு.

ஹிஸ்டிரியா, காரியா, காக்கை வலிப்பு, புஷ்பவதியாகும்போது.

---

## (64) காஸ்டிகம்

பாரிசவாதம்-தளர்ந்தநாடி—சரீர உஷ்ணம் குறைவு-நரம்பு பலவீனம்.

கருத்த மயிரும், கட்டுமஸ்தான தேகமும் உடையவர்கள்.

பலவீனமானவர்கள்—ரொம்ப மஞ்சளான சோபை; மூத்திரக்கருவி, சுவாசக்கருவிகளின் வியாதிகள்.

நாட்பட்ட வியாதிகள்—உடம்பு இளைப்பு. கவலை-மழை, பனி காலத்தில் வியாதி அதிகரிக்கும்.

குழந்தைகள் நடப்பதற்கு நாள்பிடிக்கும்—பல் முளைக்கும்போது வலிப்பு—தோல் அரிப்பு—பலவீனமான சுரம்.

நாள்பட்ட தூக்கம், தூக்கமின்மை, திடீரென அதிர்ச்சி, துக்கம், ஆனந்தம், கோபம் இவைகளினால் வியாதி—பக்ஷவாதம்.

மனத்துக்கம்—வருத்தம்—அழுதல்—சின்ன சமாசாரத்தாலும் குழந்தை அழும்.

மற்றவர்களின் வியாதியைக்குறித்து கவலை.

வலது பக்கத்து வியாதிகள்.

நாக்கு, வலது பாரிசம், பக்ஷவாதம்-மெதுவாக வரும் வாதம், ரொம்ப பலவீனம்.

பாலுண்ணிகள்—ஈரக்கசிவு, எல்லா இடங்களிலும், ரத்தம் கசியும்.

சிராய்த்தவலி—தலை, தொண்டை, சுவாசக்குழாய், ஆசனவாய், மூத்திரக்குழாய், யோனிக்குழாய், கர்ப்பப்பை.

எரிச்சலுடன்—தொண்டைக்கம்மல்.

சிறுநீர்—தானகவே பிரியும்—இருமும்போது, தும்மும்போது, மூக்கைச் சிந்தும்போது.

மலச்சிக்கல்—ரொம்ப முக்கலுடன் எழுந்து நின்றால் போகும்—சீதக்கட்டுடன் மெழுகு தடவினமாதிரி—பெரும் மூலம்.

இருமல்—மார்பில் சிராய்த்த வலி—கோழையைத் துப்ப முடியாது, விழுங்கவேண்டிவரும்; ஒரு வாய் குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டால் சாதகம்—மூச்சு வெளிவிட்டால் சாதகம்—இருமும்போது இடுப்புப் பக்கம் வலி.

கைகளில் உணர்ச்சியின்மை, மரமரப்பு—பிடரியில் வலி—காயிடர்.

அடிக்கடி படுக்கையில் புரளவேண்டும் ஆனல் சௌகரியமிராது.



குளிரடங்க போர்த்துக்கொள்ள முடியாது-ஆனல் சூடு சாதகப்படாது.

வடுக்கள்—நெருப்பு சுட்ட வடு—மறுபடியும் புண்ணாகி விடும்—"அந்த தீப்பட்டதற்குப் பிறகு உடல் நலம் கெட்டு விட்டது" என்று தொடர்ந்த தேக அசௌக்கியம்.

காக்கை வலிப்பு—மாதவிடாய், அமாவாசை, புஷ்பவதியாகும்போது முதலிய சமயங்களில்.

பாரிச வாயுவினல் மேல் கண்ணிமை தொங்குதல்—திறந்துவைத்திருக்க முடியாது.

வாயு—தசைநார்கள் விறைப்பு, முட்டுகளில் அசைவின்மை; தசைகள் சுருங்கி இழுத்துக்கொள்ளும்.

மாதவிடாய்—இரவில் இருக்காது-நாட்பட்டு, அல்லது அடிக்கடி, படுத்துக்கொண்டாலும் நின்றுவிடும்.

நோயாளி சில நாள் சௌகரியமடைந்து வருவர்—பிறகு சாதகம் தெரியாது.

க்ஷயம், துரிதமான க்ஷயம்.

---

## (65) காமோமில்லா

ஆத்திரம், முன்கோபம், வலி தாங்கமுடியாது, சாதாரணமாக பதில் சொல்லமாட்டார் — ஆங்காரம் பைத்தியம்.

வலி-ரொம்பத்தாங்கமுடியாது—வலியுடன் மரமரப்பு—வலியுடன் வியர்வை—வலியினல் பைத்தியமே பிடிக்கும்-சூட்டினல் அதிகரிக்கும் - சாயங்காலத்திலிருந்து பாதி ராத்திரி வரைக்கும் அதிகரிக்கும்-மயக்கம்-தாகம்.

தன்னிடத்தில் யாரையும் அண்டவிடமாட்டான். பேசினாலும் ஆத்திரப்படுவான்.

கோபத்தினால் ஏற்படும் வலிப்பு. வியாதிகள்—சுரம்—நடுக்கல்.

குழந்தைகளுக்கு தாயார் கோபத்தில் பால் கொடுத்தால்—வலிப்பு.

தான் வேண்டுவது கிடைக்காததினால் பிடிவாதமான குழந்தையின் அழுகை—நசநசப்பான அழுகை—கொடுத்தாலும் தூக்கி எறியும்.

ரொம்ப அமைதியின்மை; பயம், கவலை, கிடந்து புரளுவான்; குழந்தையை தூக்கிக்கொண்டு இருந்தால் அமைதி.

குழந்தைக்கு பிறந்ததும் — பல் முளைக்கும்போதும் வியாதி.

பல் முளைக்கும்போது பேதி. கோபம், அவமானம் இவைகளினால் பேதி—புகையிலையினால், பிரசவ அரையில், அதிகதூரம் கீழிறங்கினால், ஏற்படும் பேதி—பச்சை மலம், அழுகின முட்டைமாதிரி நாற்றம், வயிறு உப்பி, அதிகவலி-அதிக சூடாக இருக்கும்.

கடுமையான சுரம்; வியர்வை; தலையில் மாத்திரம்; ஒரு கன்னம் சிவந்து சூடாகவும், ஒரு கன்னம் சில்லென்றுமிருக்கும்.

திறந்த காற்று உதவாது, காற்றே உதவாது.

பல்வலி—சூடாக வாயில் எது பட்டாலும் அல்லது உஷ்ணமான அறைக்குள் சென்றாலும்; காபி சாப்பிட்டால் மாதவிடாய், கர்ப்பம் இவைகளின் சமயத்தில் வலி.



பிரசவ வலி—தாங்கமுடியாது—வலியைவிட்டு ஓடிவிட்டால் தேவலை—கால் பக்கம் கிழித்துக்கொண்டு இறங்குவது போல; மேல்பக்கம் இறுத்தும்-சிறந்த மருந்து.

முலைக்காம்புகள் வீங்கி தொடமுடியாது. சிறு குழந்தைகளின் காம்பும் தொடமுடியாமல் வலிக்கும்.

பால் கொடுக்கும் தாயாருக்கு பால் வழிந்தோடும்.

தாங்கமுடியாத வாயு வலி—இரா முழுவதும் எழுந்து உலாத்த வேண்டும்.

உள்ளங்கால்கள் இரவில் எரியும்-படுக்கைக்கு வெளியே கால்களை நீட்டுவர்.

தூக்கக்கலக்கம்—ஆனால் தூங்கமுடியாது.

அதிகமாக காபி குடிப்பவர்கள், அபின் சத்து உபயோகித்த பின், இவர்களுக்கு உபயோகமுள்ளது.

இதன் வலி வியாதியின் கடுமைக்குத்தக்கபடி இராது. வலி கொஞ்சமாயிருந்தாலும் ஓரே கூப்பாடுதான்.

இருமல், இரவில் தூங்கும்போது-இருமினால் தூக்கம் கலையாது—குளிர்காலத்து இருமல்.

## (66) செலிடோனியம்

வலது தோள்பட்டை எலும்பிற்கு அடிப்பாகத்தில் (முதுகுப்புறம்) சதா வலி.

மஞ்சள் கண், நாக்கு, முகம், தோல், கைகள், நாக்கில் பல்லின் பதிவு தெரியும்.

மூத்திரம் தங்கம் மாதிரி, எல்லாம் மஞ்சள்.

ஈரல் வியாதி — மஞ்சட்காமாலை வலது பக்கத்து மருந்து—கண், இடுப்பு, கால், நுரையீரல், வயிறு, வலது கால் ஐஸ் மாதிரி சில்லென்றிருக்கும், இடது கால் சாதாரணமாக இருக்கும்.

நிமோனியா ; வலதுபுறம்.

பித்தப்பைக்கல்—வலி தோள்பட்டையில் வலதுபுறம்.

வலது கண் குழியில் நரம்பு வலி; ஏராளமான கண்ணீர் வழிந்தோடும்.

ரொம்ப சூடாக குடிக்கவேண்டும்; கொதிக்க இருந்தால்தான் வயிற்றில் தங்கும்.

மலச்சிக்கல்; கடினமான உருண்டைகள் — ஆட்டுப் புழுக்கை மாதிரி-அல்லது பேதி-களிமண்போல வெளுத்து அல்லது தங்கம்மாதிரி மஞ்சளான மலம்.

கடுமையான இருமல்-இருமும்போது கோழைத்துண்டுகள் வெளியே சிதறி விழும்.

நாட்பட்ட அழுகிப்பரவும் புண்கள்; ஈரல் வியாதி அல்லது க்ஷயம் சம்பந்தப்பட்டது.

சீதோஷ்ண ஸ்திதி மாறுபடுவதால் வியாதிகள்—சாப்பாட்டிற்குப்பிறகு சாதகம்.

---

## (67) சைனு ஸல்ப்

மலேரியா சம்பந்தப்பட்டது — ஏராளமான பேதி, சீழ், ரத்தப்பெருக்கு.



மலேரியா-ஒரு நாள்விட்டு மறுநாள்-ஒவ்வொருதரமும் ஒரு மணி அல்லது 2 மணி முந்திக்கொண்டுவரும் சுரம்.

தினம் ஒரே டயத்தில் வரும் நரம்பு வலி.

முள்ளம்தண்டு வலி—மூளையின் அடிப்பக்கத்திலிருந்து இடுப்புவரையில் தொடவும் அமுக்கவும் முடியாது-ஒருபுறம் சாய்ந்துதான் உட்காரவேண்டும்.

---

## (68) சிகூடா

வலிப்புகள்—கடுமையானவை-ரொம்ப பயங்கரமானவை — உடம்பு முழுவதும் வலிப்புகள் — முதுகு வில் போல வளைந்து, நினைவிழந்து-சிறிது தொட்டாலும் சத்தம் கேட்டாலும் அதிகரிக்கும்—ஸ்பைனல் மெனிங்கைடிஸ்.

பிரசவத்தில் வலிப்பு அடிக்கடி — மூச்சு சில நிமிஷ நேரம் தடைப்பட்டுவிடும்—பிரசவம் ஆனபிறகும் இருக்கும்.

காக்கைவலிப்பு — வயிறு முட்டிட்டு கத்தல் — முகம் சிவந்து அல்லது நீலமாய், பல்கிட்டி, நினைவு இழந்து—இரவில் பெரும்பாலும், அடிக்கடி.

வயிற்று நாக்குப்பூச்சியினால் வலிப்பு—பல் முளைக்கும் போது.

வலிப்புகளுடன் அதிக சத்தம்—ஊளையிடுதல்—ரொம்ப ஆர்ப்பாட்டம்.

மூளை, முள்ளந்தண்டு இவைகளில் அடிபட்டதினால்—வலிப்புகள்—ரணஜன்னி.

பல் முளைக்கும்போது—பல்லை இறுக்கி அரைத்தல்—பல் கிட்டுதல்.

கரி, சாக்கு, ஜீரணமாகாத பதார்த்தங்கள் இவைகளைத் தின்ன ஏராளமான பசி.

வாசிக்கும்பொழுது எழுத்துக்களெல்லாம் மறைந்தோ, விலகியோ, ஒதுங்கியோ தெரியும்.

தோல் சிரங்குக் கொப்பளங்கள்; ஒன்றாக சேர்ந்து கொள்ளும்; முகம், தலை மற்றும் பலபாகங்களில் தடிமனான மஞ்சள் பொறுக்குடன் பரவிவரும்- கரப்பான்—அரிப்பு இராது.

---

## (69) சீனா

குழந்தைகள் — அசிங்கம், ஆத்திரமுடையவை — உதைத்து, அடித்துக்கொண்டும் இருக்கும்—தூக்கச்சொல்லும், ஆனால் தூக்கினால் சாதகமில்லை—தொடக்கூடாது—அருகில் செல்லக்கூடாது — பார்க்கக்கூடாது, சாமான் வேண்டியிருக்கும் ஆனால் கொடுத்தால் தூக்கித்தள்ளும்.

அடிக்கடி நாசியை நோண்டும். மூக்கில் அரிப்பு—தலைகாணியில் அல்லது தாயாரின் தோள்பட்டையில் மூக்கைத்தேய்க்கும்.

கண்களைச்சுற்றி வெளுத்து நோய்கொண்டிருக்கும் அல்லது வாயைச்சுற்றி வெளுப்பும் நீலமாயுமிருக்கும்—ஒரு கன்னம் சிவந்தும் ஒன்று வெளுத்துமிருக்கும்.

குழந்தைகளுக்கு வயிற்றில் நாக்குப்பூச்சி; தூக்கத்தில் உளறி, பயந்து வீறிட்டு எழும்; பல்லைக்கடிக்கும்.

ஏதோ தொண்டையில் வருவது மாதிரி அடிக்கடி விழுங்கவேண்டும்.



அகோரப்பசி-சாப்பிட்டதும் பசி, தித்திப்பு அதிகம் பிடிக்கும், தாய்ப்பால் பிடிக்காது—பசியின்மை.

சிறுநீர்—தங்கினால் பால் மாதிரி ஆகும்—தானாகவே பிரியும்.

அடிக்கடி கடும் சுரம்—முகம் நல்ல சிவப்பு.

இருமல் — கக்குவான் — பேசினாலும், அசைந்தாலும் கடுமையான இருமல் — வரட்டுத்தும்மலுடன் — இலையுதிர் காலத்தில், ஏற்படும்.

---

## (70) சின்கோனா

ஏராளமான ரத்தப்பெருக்கு, அதிகமாக பால், பேதி, சீழ், உண்டாவதினால் வியாதி-மலேரியாவினால் ஒன்றுவிட்டு மற்றொரு நாள் கணக்காக வரும் சுரம், வியாதி.

நல்ல கொழுத்த திடமான சரீரிகள். வியாதி கண்டவுடன் சட்டென்று உடல் நலம் சீர்கெடும்.

ஏராளமான ரத்தப்பெருக்கு — மயக்கம்—கண் பஞ்சடைந்து, காதில் இரைச்சல்.

மாதவிடாய் நின்ற பிறகு பெரும்பாடு இருந்தவர்களுக்கு உடம்பு எல்லாம் நீர் சுரப்புடன் கூடியிருக்கும்.

அலுப்பு, கவலை, துக்கம், உயிரோடிருக்க ஆசையில்லை ; ஆனால் தற்கொலை செய்துகொள்ள தைரியமில்லை.

வலியில்லாத பேதி—மஞ்சள், தண்ணீர் மாதிரி, கருஞ்சிவப்பாக, ஜீரணமாகாமல்.

ஏராளமான காற்றுப்பிசம்—வயிறு அடைத்து வைத்தாற்போல; காற்று பரிந்தாலும் ஏப்பம் வந்தாலும் சாதகமில்லை. பழங்கள் சாப்பிட்டபிறகு.

வலி-ஒவ்வொரு மூட்டிலும், எலும்புகளில்-சிராய்த்த மாதிரி எங்கும் வலி-அடிக்கடி கால்களை ஆட்டவேண்டும்-அதனால் சாதகம்-மறுபடியும் அதிகரிக்கும்.

வலி — சிறிது தொட்டாலும், காற்று பட்டாலும் அதிகம்; நன்றாக அமுக்கிக்கொண்டிருந்தால் சாதகம்.

தலைவலி — தலைவெடித்துவிடும்போல — பொட்டுகளில் கடுமையான துடிப்பு—முகம் சிவந்து; தலை முழுவதும்—உட்கார்ந்தாலும் படுத்துக்கொண்டாலும் அதிகமாகும், நடக்கவேண்டும் அல்லது நிற்கவேண்டும். ரத்தப்பெருக்கு அல்லது அதிக சம்போகத்திற்குப்பிறகு.

முகம் வெளுத்து, தொங்கி, கண்கள் குழிந்து, நீல வளையம் ஏற்பட்டு இருக்கும். குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது பல் வலி.

ரத்தப்பெருக்கு — எல்லா இடத்திலிருந்தும் — ரத்தம் கருப்பாகவும், கட்டிதட்டி — நீடித்துமிருக்கும் — புளிப்பான வஸ்துவில் பிரியம்.

காலையில் 3 மணிக்குப்பிறகு சரியான தூக்கம் இல்லை அல்லது ஒரே தூக்க மயக்கம்.

வயிற்று வலி—தினம் ஒரே டயத்தில்-பித்தப்பைக்கல்-இரவிலும், சாப்பிட்டாலும், அதிகம்-முன்பக்கம் குனிந்தால் சாதகம்,

உடம்பு முழுவதும் நடுக்கும் குளிர், ஒரு கை ஐஸ் மாதிரி சில்லிட்டு, மற்றொன்று உஷ்ணமாகவும் இருக்கும்.



முறைக்காய்ச்சல் — ஒவ்வொரு தடவையும் இரண்டு மூன்று மணி நேரம் முன்கூட்டி வரும், 7 அல்லது 14 நாளைக்கொருதரம் வரும் — இரவில் வராது.

வியர்வை-அதிகத்தாகம்-தூக்கத்தின் போது-போர்த்திக்கொண்டாலும் இருக்கும்.

---

## (71) கோகா

அதிக மனச்சோர்வு — நரம்புத் தளர்ச்சியினாலும் — ரொம்ப சங்கோசி-நாலுபேருக்கு மத்தியில் வெட்கம்.

கவலை, ஆத்திரம், தனிமையிலும், வெளிப்படாமலிருப்பதிலும் பிரியம்.

ரொம்பக் கடுமையான தொழிலினால் மனதிற்கும்; உடலிற்கும் சோர்வு. நரம்பும், மூளையும் சோர்வு.

சாராயம், புகையிலை முதலிய போதை வஸ்துக்களைச் சாப்பிட பிரியம்.

ரொம்பப் படபடப்பு - அதிக தேகப் பரிசிரமம், காற்றுப்பிசத்தினால், ஹிருதயம் அதிக வேலைசெய்வதனால்.

மூச்சுவிடத் திணறல் - அதிக விளையாட்டுகளில் ஈடுபடுபவர்களுக்கு; வயதானவர்களுக்கு—புகையிலை, சாராயம் அமிதமாக உபயோகிப்பவர்களுக்கு - மலை ஏறுவதினால்.

தூக்கம் வரும் - ஆனால் ஒரு இடத்திலும் நிம்மதி இராது.

பல் சொத்தை விழாமல் தடுக்கும்.

ரத்த வாந்தி-மூச்சுத்திணறல்.

## (72) காக்குலஸ்

பிள்ளை பெருத, கல்யாணமாகாத ஸ்திரீகள், மாத விடாயின்போது அதிகக் கஷ்டப்படுவார்கள்; சிறு குழந்தைகள் இவர்களுக்கு உரியது.

புஸ்தகப் புழுக்கள். சரியான மாதவிடாயில்லாத பெண்கள், காமப்பேய்கள், ஹஸ்தப்பிரயோகம் செய்பவர்கள் இவர்களுக்கும் உகந்தது.

கழுத்து தசைகள் பலவீனம்—தலையை நிமிர்த்த முடியாது.

கிறுகிறுப்பு-படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது போதையுள்ளவன் மாதிரி, அல்லது வண்டியில் போவதினல்.

தலைவலி—பிடரியிலும், பின் தலையிலும், குமட்டல் வாந்தி, தலையைத்தூக்கினல், வண்டி சவாரியினல், ஓடத்தில் செல்வதினல்.

குமட்டல் அல்லது வாந்தி - வண்டி சவாரியினல், ஓடத்தில் செல்வதினல், காரில் சவாரி செய்வதினல், சமுத்திரத்தில், ரயில் பிரயாணத்தினலும்.

கால் கைகள் நடுக்கம், அதிர்ச்சியினல் அல்லது வலி அதிகமானல்.

குடிகாரனின் வியாதிகள்.

அதிபலவீனம்—தலையில், வயிற்றில் குடலில் ஒன்றுமில்லாததுபோன்ற உணர்ச்சி - தூக்கம் கெடுவதினல். இரவில் கண் விழிப்பதினல். கோபம், துக்கம், ஒரு மணி தூக்கம் கெட்டுதினலும்—வலிப்புகள்கூட.



பின்புற இடுப்பில் பலவீனம்; உடம்பில் அசதி-நிற்கக்கூட முயற்சிக்கவேண்டும்; நடக்க, பேச சக்தி கிடையாது-பலவீனம்.

பசியின்மை; நாக்கில் உலோக ருசி.

காலம் வெகு துரிதமாகச் செல்லும்.

மாதவிடாயின்போது அதிக பலவீனம்; எழுந்து நிற்கக்கூட சக்தியிராது - ஒவ்வொரு மாதவிடாயின்போதும் மூலம்.

மாதவிடாய்க்குப்பதிலாக வெள்ளை, அல்லது இடைக்காலத்தில், மாமிசம் அலம்பின நீர் மாதிரி, ரத்தம் கலந்து-கர்ப்ப காலத்திலும்.

மறுத்துச் சொன்னல் கோபம்; வெகு சீக்கிரம் ஆத்திரம்; படபடப்பாகப் பேசுவர்.

கோபத்துடன் சுரம். நரம்புத்தளர்ச்சியுடன் அதிகமாகி, வீசாமலிருந்தால்.

கடுமையான மலச்சிக்கலுடன் தொப்புள் ஹெர்னியா.

## (73) காபியா

திடீரென சந்தோஷம், ஆச்சரியம் முதலியவைகளினல் வியாதிகள்—ஆனந்தத்தினல் அழுதல்.

எல்லா இந்திரியங்களும் அதிக உணர்ச்சியுடனிருக்கும்; சின்ன எழுத்துக்களையும் நன்ருக வாசிப்பர்; அதே மாதிரி கேட்டல், வாசனை, சுவை, ஸ்பரிச உணர்ச்சி எல்லாம்

அதிகமாகயிருக்கும், ஏராளமான எண்ணங்கள், சடசட வென்று வேலைசெய்வர், அதனால் தூக்கமின்மை.

மனதும், சரீரமும் வெகு சுறுசுறுப்பு.

நெட்டையாய் மெலிந்த கருநிறமுள்ள சரீரிகள்.

வலி—தாங்கவே முடியாது—கண்ணீர் வடிப்பர்—துடிப்பர் தூக்கமின்மை.

தலைவலி—அதிகமாய் மனதிற்கு வேலைகொடுத்ததினால்; நினைப்பதினால், பேசுவதனால், ஒருபக்கத்து வலி, மூளைக்குள் ஆணி அடித்தாற்போல; மூளை சிதறடிக்கப்பட்டாற்போல-திறந்த காற்றில் அதிகரிக்கும்.

விட்டுவிட்டு துடிக்கும் பல்வலி-ஐஸ் தண்ணீரை வாயில் வைத்துக்கொண்டிருந்தால் சாதகம்; தண்ணீர் சூடாக ஆனவுடன் மறுபடியும் வலி.

அவசரப்பட்டு சாப்பிடுதலும், குடித்தலும்.

காபிக் குடியர்களுக்கு இம்மருந்து வலியை சமனப்படுத்ாது—காமோமில்லாதான் உகந்தது.

---

## (74) கால்சிகம்

சமைக்கும் ஆகாரத்தின் வாசனையே கிறுகிறுப்பை உண்டாக்கும், மீன், முட்டை, மாமிசம் முதலியன—கொஞ்சம் அசைந்தாலும், குமட்டல் அதிகப்படும்.

ஆகாரத்தில் வெறுப்பு.

துக்கத்தினால் அன்னியர்களின் கெட்ட நடவடிக்கையினால் மனந்தாளாது.



சீதபேதி- பகல் சூடாகவும், இரவுகள் குளிர் தாங்காமலும் இருக்கும் காலங்களில் — குடலிலிருந்து சதைத் துணுக்குகள் ஏராளமாக வெளிப்படும்.

வயிறு காற்றினால் ரொம்ப உப்பியிருக்கும்; வெடித்துவிடும்போல தோற்றம்.

எரிச்சல் அல்லது ஐஸ் மாதிரி சில்லென்று இருக்கும், வயிறு, உதரம்.

மூட்டுகளின் வீக்கம், இடம்விட்டு இடம் மாறும்; மூட்டுகள் நீர் சுரந்திருக்கும். அமுக்கினால் குழு விழும்; தொட்டால் வலி தாளாமல் கதறுவர்.

கிழிக்கும், அமுக்கும், இழுக்கும் வலி. எலும்புகளிலும் ஆழமான சதைகளிலும் வலி — இடது பக்கத்திலிருந்து வலதுபுறம் போகும் வலி; அதிக உஷ்ணமும் அதிக குளிரும் உள்ள நாட்களில் அதிகரிக்கும்.

வாயு, கவுட், வயதானவர்கள் இந்த தேகவாகு உடையவர்களுக்கு உகந்தது.

மூத்திரம் கொஞ்சமாகவும், கருஞ்சிவப்பாகவும், சொட்டு சொட்டாகவும், ரத்தம் கலந்தும், இங்க் மாதிரியும், ஆல்புமன் சர்க்கரை சத்து முதலியன கலந்தும் இருக்கும்.

இடது கண் பாப்பா சுருங்கியும், வலது கண் பாப்பா நன்றாக விரிந்துமிருக்கும்.

---

## (75) காலின்சோனியா

மூலத்திற்கும், மாதவிடாய்க் கோளாறுக்கும் சிறந்தது.

ஹிருதய வியாதியால் நீர் சுரப்பு—படபடப்பு—மூலம், அஜீரணம் உடையவர்களுக்கு.

ஹிருதய வியாதி சமனப்பட்டால் மூலம் திரும்பிவரும் அல்லது நின்ற மாதவிடாய் திரும்பும்.

நீடித்த, வலியுள்ள, ரத்தம் கொட்டும் மூலம்-ஆசனத்தில் குச்சிகள் அல்லது சிறு கற்கள் நிரப்பினது மாதிரி கடுப்பு வலி.

மூலத்துடன் சீதபேதி.

கடும் மலச் சிக்கல் — வயிற்று வலி — ஏராளமான காற்றுப்பிசம்;-குடலில் அடிப்பாகம் சக்தியிழந்ததுபோல— அல்லது பேதி.

கர்ப்ப காலத்தில் அரிப்பு — மூலம், படுக்கமுடியாது.

## (76) கோலோசிந்திஸ்

தாளாத வயிற்று வலி-குனிந்து வயிற்றை மடித்துக் கொள்ளவேண்டும். அமைதியின்மை, முறுக்கிக்கொண்டு துடிப்பர் - நன்றாக வயிற்றை அமுக்கி இருக்கினால் சாதகம்.

சாப்பிட்டாலும், குடித்தாலும் வலி அதிகரிக்கும், மாதவிடாய் வலி, காபியினால் சாதகம்.

ரொம்ப ஆத்திரம், பொறுமையின்மை, பேசவும், பார்க்கவும்கூட பிடிக்காது. சட்டென்று கோபம், கேள்வி கேட்டால் கோபம், கையிலிருக்கும் சாமானை தூக்கி எறிதல்.

அவமானத்துடன் கோபத்தினால் — வயிற்று வலி, வாந்தி, பேதி, மாதவிடாய் தாமதித்தல்.

சீதபேதிமாதிரி பேதி - ரத்த சீதபேதி - வயிற்றுவலியுடன், சாப்பிட்டாலும், குடித்தாலும் அதிகரிக்கும்.



இடுப்பிலிருந்து கடைசிவரைக்கும் தெறிக்கும் வலி, மின்னல் மாதிரி தாக்கும், இடது இடுப்பு, இடது துடை. இடது முழங்கால் முதலிய இடத்தில் — சியாடிகா — தாள முடியாது — வலியுள்ள பக்கம் படுத்தால் சாதகம் — சூடான ஒற்றடத்தினால் சாதகம்.

அடிக்கடி மூத்திரம் பிரிய தோற்றம் - தடிப்பாக, நாற்றமுடன், பாகு மாதிரி.

கிறுகிறுப்பு - சட்டென்று இடது பக்கத்தில் தலையைத் திருப்பினால் - கீழே விழுந்துவிடுவர்போல.

## (77) கோனியம்

கிழ கன்னிகளுக்கும், மாதவிடாய் ஈன்ற ஸ்திரீகளுக்கும்- வயதான பிரமசாரிகளுக்கும் சிறந்தது.

ரொம்ப அடிக்கடி போகிப்பவர்களுக்கும், ரொம்பக் குறைவாக சம்போகம் செய்பவர்களுக்கும் அல்லது சம்போகத்தை ரொம்பநாள் தடைசெய்திருப்பவர்களுக்கும் ஏற்படும் நரம்பு பலவீனம், மனச்சலிப்பு.

பெண்களைக்கண்டால் அமிதமான ஆசை. ஆனால் உடனே இந்திரிய ஸ்கலிதம்-பிறகு மனத்தளர்ச்சி. இதே மாதிரி பெண்களுக்கும்.

ஞாபக மறதி - மனதிற்கு வேலையே முடியாது.

சோகம் - சட்டென்று ஆத்திரம், தான் சொல்வது, செய்வதுதான் சரி — சண்டையிடும் குணம் — மறுத்துச் சொன்னால் துராங்காரம்.

தொழில், படிப்பு, எதிலும் பிரியமில்லாமை — சோம்பல்.

தனிமையிலிருக்க பயம் ஆனால் பலபேர் மத்தியில் இருக்க பிடிக்காது.

அடிபட்டதினால், சிராய்த்ததினால் க்ளாண்டு (கோளம்) களின் வீக்கம் - கரளைகள்.

கல் போன்ற கரளை - ஸ்தனம், விரை, - புற்று, நோய்.

மாதவிடாயின்போதும், முந்தியும் ஸ்தனம் வீங்கி, கடினமாகி, வலிக்கும்.

மயக்கம் - படுத்தவுடன் அல்லது படுக்கையில் புரண்டால் பக்கத்தில் பார்த்தால், தலையை அசைத்தாலும், தலையை அசைக்காமல் வைத்திருக்கவேண்டும்; வயதானவர்களுக்கு, சினைப்பை, கர்ப்பப்பை வியாதியுடையவர்.

சிறுநீர் நிற்கும், வெளிப்படும், மறுபடி நிற்கும். இப்படி பிராஸ்டேட் அல்லது கர்ப்பப்பை வியாதிகளில்.

வெள்ளை - மாதவிடாய்க்குப் பத்து நாட்களுக்குப் பிறகு; பால் மாதிரி, சிவப்பாக, அதிகமாய், தடிப்பாய், நின்று நின்று வெளிப்படுவதாய் இருக்கும்.

இருமல் - லொக்கு லொக்கென்று - தொண்டையில் வரண்ட இடம், மார்பில் அரிப்பு - இரவில் அதிகம், படுத்தால் அதிகம் - கர்ப்பத்தின்போது.

கண்களை செயற்கை வெளிச்சங்களில் உபயோகப் படுத்துவதால், இரவில் அதிக வேலை செய்யும் மாணவர் களுக்கு, வெளிச்சமே பார்க்கக்கூடாது. கண் வீக்கம்.

கால்களிலிருந்து மேலேறும் வாதம் - லோகாமோடார் அடாக்சி - பக்கத்தில் தலையைத்திருப்பினால் கிறுகிறுப்பு.



இரவிலும் பகலிலும் வியர்வை — தூங்கினவுடன் அல்லது கண்ணை மூடினவுடன்

## (78) கோராலியம்

கக்குவானுக்கு சிறந்த மருந்து — பகல் முழுவதும் சினுக்கு சினுக்கென்று. துப்பாக்கியிலிருந்து வெடி கிளம்புவதுபோல இருமும்.

இரவில் கடுமை.

சளி மூக்கிலிருந்து தொண்டைப்பக்கம் அதிகமாய் விழுந்துகொண்டிருந்தால்.

பவழம் மாதிரி சிவந்த கிரந்திப்புண், தட்டையாகவும் ரொம்ப உணர்ச்சியுடனும் இருக்கும்.

## (79) க்ரோகஸ்

அடிக்கடி திடீரென்று மாறும் மன நிலை. ரொம்ப ஆனந்தம் - உடனே ரொம்ப துக்கம்.

ரொம்ப சந்தோஷம், பிரியம், யாரையும் முத்தமிட விருப்பம், அடுத்த நிமிஷம் ஒரே கோபம் - அழுகை, எல்லோரையும் வைதல்.

தசைகள் துடிக்கும் – வெட்டி இழுக்கும்.

எந்த பாகத்திலிருந்தும் ரத்தப்பெருக்கு - ரத்தம் கருப்பாகவும், கட்டிதட்டியும் - கம்பி மாதிரி நீண்டு தொங்கிக்கொண்டிருக்கும்.

வயிற்றில், குடலில், மார்பில், கர்ப்பபையில், கைகால்களில் ஏதோ உயிரோடிருக்கிறப்போல உணர்ச்சி-மயக்கம், குமட்டலுடனிருக்கும்.

மாதவிடாய் கோளாறு - வலி - கட்டிதட்டின ரத்தப் பெருக்கு.

கண்களின் அறைகள் புகையினால் அடைபட்டது போல - அழுதுகொண்டிருந்த மாதிரி - சில்லென்ற குளிர் காற்று வீசுவதுபோல - கண்ணிமைகளை இறுக்கி மூடிக் கொண்டால் சாதகம்.

தலைவலி - துடித்துத்தெரிக்கும் - மாதவிடாய்க்கு இரண்டு மூன்று நாள் முந்தி அதிகம். நரம்பு வலி - மாதவிடாயின்போதும்

## (80) க்ரோடாலஸ்

ரத்தம் முறிந்து, ஸெப்டிக் நிலை, உடல் சக்தி குறைந்த நிலை, நாட்பட்ட சாராயக் குடியர் இவைகளுக்கு உகந்தது.

க்ளாண்டு வீங்கி,| உடல் நிலை மிகத்தளர்ந்து, ரத்தப் பெருக்கெடுத்து, மிகக்கடுமையான மஞ்சள் சுரம் முதலானவைகளினால் பாதிக்கப்பட்டவர்கள், ரத்தப்பிளவை ஏற்படும் தேகங்களுக்கும் உபயோகப்படும்.

ரத்தம் ஒழுகும் தேகவாகு.

கண்கள், காது, நாசி, ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் ரத்தக்கசிவு. வியர்வை ரத்த மயம்.

தோல், நகம், பல்லீரல் முதலிய இடங்களில் ரத்தம் கசியும்; பர்பூரா.



ஸெப்டிக் சுரங்கள், டைபாயிட் முதலிய வியாதிகளில் குடலிலிருந்து ரத்தப்பெருக்கு — ரத்தம் கருப்பாகவும்; தண்ணீர், மாதிரியும், கட்டிதட்டாமலுமிருக்கும்,

மாதவிடாய் நிற்கும் காலம்; கடுமையான வியர்வை, முகம் சிவந்து சிவந்து காணும், வயிற்றில் கிறுகிறுக்கும் சங்கடம், நீடித்த பெரும்பாடு, ரத்தம் கருப்பாகவும், தண்ணீர் மாதிரியும், கடும் ரத்தசோகை.

கர்ப்பப்பையின், கடும் வியாதிகள், ரத்தப்பெருக்கும்-கருப்பாகவும், நீர்த்தும்.

ரத்த விஷம் கலந்ததனால் உடல் சக்தி திடீரென்று மங்கி விடுதல். நாடி காணப்படாது.

விஷப்பூச்சிக்கடி, அம்மை வைப்பதனால் ஏற்படும் கெடுதல், ரண ஆபிரேஷன் காயம்.

கடும் மஞ்சட்காமாலை - ரத்தம் மஞ்சளாக மாறிவிடும்-கண் மஞ்சள்.

நாக்கு - பளபளவென்று நல்ல ரத்தச்சிவப்பு - அதிக வீக்கம்.

கடுமையான டிப்திரீயா, ஸ்கார்லடினு; தொண்டையில் நீர்சுரப்பு அல்லது அழுகல் காணுதல். விழுங்கினால் அதிகரிக்கும் வலி—வாந்தியினால் அதிக வலி.

பித்தவாந்தி — பலவீனமான நாடி, மாதவிடாய்க்குப் பிறகு ஒவ்வொரு மாதமும்-வலது பக்கம் படுக்கமுடியாது-மல்லாக்கவும் படுக்கமுடியாது — படுத்தால் உடனே கருப்பான வாந்தி—காபி பவுடர் மாதிரி கலர்-மஞ்சட்சுரம்.

பேதி மலம் கருத்தும், நீர்த்தும், காபி பவுடர் மாதிரியும், துர்க்கந்தமுடையதாயும், விஷம் கலந்த ஆகாரத்

தினுல் உண்டாகும் மஞ்சள் சுரத்தில், காலரா டைபாயிட், டைபஸ் முதலிய சுரங்களில்.

## (81) க்ரோடான்

குடலின் மியூகஸ் சதைகளையும், தோலையும் தாக்க வல்லது ரத்தத்தை முறித்து பேதியாகவும், தோலில் கரப்பான் கொப்பளமாகவும் உண்டாக்கும்.

துப்பாக்கியிலிருந்து பட்பட்டென்று வருவதுமாதிரி பட்பட்டென்று பீச்சும் பேதி — சாப்பிட்டவுடன் குடித்தவுடன், சாப்பிடும்போதே மஞ்சளான, தண்ணீர் போன்ற பேதி.

மலம் போவதற்கு முந்தி குடலில் களகளவென்ற சப்தம் — உள்ளே தண்ணீரிலிருந்து அலைமோதுவது போலிருக்கும்.

ஒவ்வொரு தடவையும் குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது முலைக்காம்பிலிருந்து முதுகு தோள்பட்டை வரைக்கும் தாங்கமுடியாத வலி.

தோலில் கடுமையான அரிப்பு — சொரியமுடியாது- மெதுவாக தேய்த்தால் அரிப்பு சாதகமாயிருக்கும்; தோல் முழுவதும் கரப்பான்.

இருபாலாருக்கும் மர்ம ஸ்தானத்தில் அரிப்பு. ஆணுக்கு கொப்பளங்கள்—ரொம்ப அரிப்புடன்.

படுக்கையில் தலையைச் சாய்த்தவுடன் இருமல்; மூச்சுத் திணறல்; ரூமில் நடக்கவேண்டும் அல்லது நாற்காலியில் தூங்கவேண்டும்.



## (82) குப்ரம்

வலிப்பு, கண்டை ஏறுதல் — தனித்தனிக்கூட்டமாக குறிகள் காணப்படும்.

ஒரே அசதி — பாம்பு மாதிரி நாக்கை இழுத்துக் கொள்ளுதல்.

அதிகமாக மனதிற்கு வேலை கொடுப்பதாலும், தூக்க மின்மையாலும், அசதி—தாங்கமுடியாத கவலை.

காலரா - ஏசியாடிக் காலரா - வயிற்றிலும் கண்டைக் காலிலும் கண்டை ஏறுதல்.

குடிக்கும்பொழுது, தண்ணீர் களகளவென்ற சத்தத்துடன் தொண்டையிலிறங்கும்.

நொப்பங்கள் அமுக்கப்படுவதால் ஏற்படும் மூளை வியாதிகள்; வலிப்புகள், இசிவுகள், வாந்தி முதலியன.

திடீரென கண்பார்வை மறைந்துவிடும் - வலிப்புகளில்- முகம் நீலம் பூத்து - கை கட்டைவிரல் உள்முடங்கியிருக்கும்.

இசிவுகள் — கைவிரல்களிலிருந்தும், கால் விரல் களிலிருந்தும் ஆரம்பித்து உடல் முழுவதும் பரவும் - கர்ப்பகாலத்தில் பிரசவத்திற்குப்பின்; பயம் அல்லது அவமானத்திற்குப்பின், மூளை வியாதிகளில்.

நாக்கு வாதம்—திக்கும் பேச்சு.

காக்கைவலிப்பு - வலிப்பு பரவிவரும் உணர்ச்சி, முழங் காலிலிருந்து ஆரம்பித்து ஏறும்—வாயில் நுரை; முதுகு பின்புறம் வளைந்து, தலைவலி, தூக்கத்தில் இரவில் அதிகப் படும் — அமாவாசை சமயத்தில், மாதவிடாய் காலத்தில்

அதிகப்படும். வலிப்பிற்குப்பிறகு முறுக்கி, நெளித்துக் கொண்டு இன்னொரு வலிப்பு வரவழைத்துக்கொள்வர்.

பல் முளைக்கும்போது இசிவு — முப்புறப்படுத்துக் கொண்டு புட்டத்தை தூக்கி உதைத்துக்கொள்ளும்.

கக்குவான் — நீடித்தது — மூச்சுத்திணறல் — பேச முடியாது, மூச்சு நின்று, முகம் நீலம்பூத்து, உடம்பு விறைத்து — மூன்று தடவை சேர்ந்தாற்போல் இழுக்கும். நினைவு வந்தவுடன் கெட்டியான ஆகாரத்தை வாந்தி யெடுக்கும்.

கடும் ஆஸ்த்மா - திடீரென்று ஏற்பட்டு இரண்டு மூன்று மணி நேரம் இழுத்துவிட்டு, நின்றுவிடும்.

இருமலில் களக்களக்கென்ற சப்தமும் — பாட்டிலி லிருந்து தண்ணீரைக்கொட்டுவதுமாதிரியுமிருக்கும்.

குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டால் சாதகம்.

பிரசவத்திற்குப்பின் வலி — கடுமை தாங்கமுடியாது. கண்டைக்காலிலும், உள்ளங்காலிலும்.

வாயிலிருந்து தித்திப்பு அல்லது செம்புமாதிரி ருசியுள்ள உமிழ்நீர்.

படபடப்பு — ஹிருதய வீக்கம் — நாடி மாறுபட்டுக் கொண்டிருக்கும்.

## (83) சைக்லமன்

சோகையுடைய வெளுத்த சதையுடைய சரீரிகள். சட்டென்று அசதி—ஆகவே ஒரு வேலைசெய்யவும் மனது வராது. சில அவயவங்கள் வேலைசெய்யாது.



மாதவிடாய்க்கோளாறு — வெளுத்து சோகையுடைய வர்கள்; மயக்கம், கிறுகிறுப்பு, தலைவலி, மங்கலான கண் பார்வை.

எலும்புகள் சதைக்குப் பக்கத்தில் இருக்கும் இடங் களில் அமுக்கும், கிழிக்கும், தெரிக்கும் வலி.

சோகையுடையவர்களுக்கு தலைவலி - கண்களுக்கு முன்னால் பூச்சி பறக்கும் - காலையில் எழுந்ததும்.

கண்களுக்கு முன்னால் நெருப்பு பொறிகள்மாதிரி பல கலர்கள், பளபளக்கும் ஊசிகள், புகை அல்லது பனி மாதிரி தோற்றங்கள்.

ரொம்ப துக்கம், பொருமை, ஆத்திரம், மனச்சலிப்பு, ஆங்காரம், அழுகை, தனிமையாயிருக்கப் பிரியம், திறந்த காற்று உதவாது.

அமுக்கின துக்கம், மனச்சாக்ஷியின் பயம், கடமை யிலிருந்து தவறினது அல்லது ஒரு கெட்ட காரியம் செய்தது இவைகளினால் வியாதிகள்.

உமிழ்நீர், ஆகாரம் எல்லாம் உப்புக்கரிக்கும்.

மாதவிடாய் — அதிதுரிதமாய் காணும். அளவும் அதிகமாய், கருப்பாகவும், கட்டிதட்டியும், வலியுடனும் இருக் கும். மாதவிடாய் காணும்போது சௌகரியமாகயிருக்கும்.

குதிகாலில் எரிச்சலுடன் வலி; உட்கார்ந்தால், எழுந் திருந்தால் அல்லது திறந்த காற்றில் நடந்தால்.

## (84) டிஜிடாலிஸ்

ஹிருதய வியாதிகள் — வேகம் அதிகரித்திருக்கும்– ரொம்ப மெதுவான நாடி–பூர்ணமான நாடி, ஒழுங்கில்லாத

நாடி, பலவீனமானது, ஒவ்வொரு 3-வது, 5-வது அல்லது 7-வது துடிப்பு — துடிக்காமல் விட்டுவிட்டு அடிக்கும் நாடி.

ரொம்ப பலவீனம்—பேசக்கூட முடியாது.

முகம் வெளுத்து, பிணம் மாதிரி அல்லது நீலம் கலந்த சிவப்பு; அதிக ரத்தக்கொதிப்பு.

ஹிருதய வால்வ்களின் வியாதிகள் — பலவீனமான ஹிருதயம்.

ஹிருதயம் அசைந்தால் நின்றுவிடும்போல உணர்ச்சி.

திடீரென்று உடம்பில் உஷ்ணம் ஏற்படுதல் — நரம்புத் தளர்ச்சி; ஒழுங்கில்லாத விட்டு அடிக்கும் நாடி, மாதவிடாய் நிற்கும் வயதில்—அசைந்தாலும் அதிகரிக்கும்.

சோர்வு, அசதி, பலவீனம்; சாகப்போவதுபோல இருக்கும் — மயக்கம் அல்லது வயிற்றில் சங்கடம்.

ஹிருதய வியாதிகளில் நீர் சுரப்பு-ஸ்கார்லடினாவிற்குப் பிறகு—பிரைட்ஸ் வியாதியில், மூத்திரம் தடைபட்டு சில சமயம் மயக்கமும்.

நிமிர்த்தி உட்காரவைத்தால் மரணம் உண்டாக்கக் கூடிய மயக்கம் — ஈரல் வீக்கம் — மஞ்சட்காமாலை. சதை நீலமாயிருக்கும், கண்ணிமைகள், உதடுகள், நாக்கு முதலியனவும்.

உதடுகள், இமைகள், நாக்கு, காதுகள் முதலியவற்றில் பெருத்திருக்கும் கெட்ட இரத்தக்குழாய்கள்.

மூச்சுவிடுவது ஒழுங்கீனமாயும், சிரமப்பட்டும், பெருமூச்சுடனும் இருக்கும்.



கைவிரல்கள் அடிக்கடி மரத்துவிடுதல்.

மலம்—விபூதி கலராகவும், நாள்பட்டும், சாக் மாதிரியும், வெள்ளையாகவும், நிறைய பூச்சிகளுள்ளனவாகவும், மஞ்சட்காமாலையில் பேதியும்.

நாள்பட்ட வெட்டை (க்ளீட்).

டி. பி.யில் சுரத்தைத் தணிக்க சிறந்தது.

சொப்பனமில்லாமலே இரவில் இந்திரிய ஸ்கலிதம்—ரொம்ப பலவீனம்.

---

## (85) டயஸ்கோரியா

வயிற்று வலியில் "கோலோசிந்த்"க்கு நேர் விரோதமானது — தொப்புளைச்சுற்றி வலி — படுத்துக்கொண்டாலும், முன் குனிந்தாலும் அதிகரிக்கும். முதுகுப்புறம் வளைந்துகொண்டால் சாதகம்.

வலி அதிகமாயிருந்தாலும் முன்புறம் குனிந்து கொள்வர்.

கடுமையாய் முறுக்கும் வலி — அலை அலையாய் வரும், குடலை ஒரு பலமான கையினால் முறுக்கி அமுக்கிறாற்போல.

சாப்பிட்ட பிறகு காற்றுப்பிசம் — டீ சாப்பிடுபவர்களுக்கு—வலி அதிக ஆகாரம்.

வயிற்றின் சீரண சக்தி மிகக் குறைந்தவர்களுக்கு—ஏராளமான ஏப்பம்.

விரற்சுற்றிக்கு சிறந்தது — ஆரம்பத்தில் தாங்க முடியாத வலி—குத்தும் வலி—நகம் வெடிக்கும். அடிக்கடி வருதல்.

தூக்கத்தில் இந்திரிய ஸ்கலிதம் — இரவு முழுவதும் ஸ்திரீகளைப்பற்றி கனவு-முழங்கால் பலவீனம், ஆண்குறி சில்லிட்டு, ரொம்ப மனச்சலிப்பு.

---

## (86) டிப்தெரினம்

கிளாண்டு வீக்கமுடையவர்கள், ஸோரா, டி. பி. தேகவாகிகள், அடிக்கடி தொண்டைச்சளி, சுவாசாசய வியாதிகளுடையவர்கள்.

ரொம்ப ஜீவசக்தி குறைந்தவர்கள், அதனால் சட்டென்று டிப்திரீயாவினால் தாக்கப்படுபவர்கள் - தாக்கினால் உடனே மிகக்கடுமையாக பாதிக்கப்படுபவர்கள்.

வலியில்லாத டிப்திரீயா — ரொம்ப பலவீனப்பட்டு— சக்தியிழந்து, மயக்கமடைந்து அல்லது தூக்கத்திலாழ்ந்து இருப்பர்-எழுப்பினால் சட்டென்று எழுந்து பதில் சொல்வர்.

டான்சில்ஸும், மேல்வாயும் கருஞ்சிவப்பாக வீங்கி, பரோடிட், கழுத்து கிளாண்டுகள் அதிகமாக வீங்கி, தொண்டையிலிருந்தும், நாசி, வாய் முதலியவற்றிலிருந்தும் வரும் மூச்சும், நீர் கசிவும் துர்நாற்றமுடையனவாயிருப் பன-நாக்கு வீங்கி, நல்ல சிவப்பாகவும், மாசு அதிக மில்லாமலுமிருக்கும்.

டிப்திரீயா ஜவ்வு தடிமனாகவும், வெண் கருப்பாகவும் அல்லது கருஞ்சிவப்பு நிறமாகவுமிருக்கும். சரீர உஷ்ணம் குறைந்தும் நாடி துரிதமாகவும், பலவீனமாகவும் இருக்கும். கை கால்கள் சில்லிட்டும் ரொம்ப பலவீனமும் — நோயாளி ஜன்னி மயக்கமுடையவனாகவும் — **கண் ஒளியிழந்தும் — நீர்** படர்ந்துமிருக்கும்.



க்ளோரின், கேலி பைக், லாக்-கானி இவைகளுக்குப் பிறகு டிப்திரீயா, டிப்திரீயாவிற்குப்பிறகு பக்ஷவாதம். காஸ்டிகம், ஜெல்சமியம் வாதத்தை சௌகரியம்பண்ண முடியாவிட்டால் அதற்கப்புறம்.

நோயாளி ஆரம்பத்திலிருந்தே சாகப்போகும் மாதிரி சக்தியிழந்துவிட்டால், நன்றாக பொருக்கிக்கொடுக்கப்பட்ட மருந்துகள் வேலைசெய்யாவிட்டாலும் இது கொடுக்கலாம்.

மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகுதல் அல்லது ஒரே சக்தியின்மை, இது ஆரம்பத்திலேயே—நாடி பலவீன மடைந்து, ஜீவசக்தி சட்டென்று தளர்ந்துவிட்டால்.

டிப்திரீயா ஊரில் பரவியிருந்தால் இதை அவ் வியாதியைத் தடுப்பதற்காகக் கொடுக்கவும்.

---

## (87) டிராசிரா

கக்குவான் — மூச்சுவிடக்கூட முடியாதபடி அடிக்கடி தொடர்ந்தாற்போல் சீக்கிரம் சீக்கிரமாக இருமல்—ஏராள மான ரத்தம் மூக்கிலிருந்து ஒழுகும்; பகலில் துப்பாக்கி யிலிருந்து கிளம்புவதுபோல பட்பட்டென்று, இரவில் ஹூப்ஹூப்பென்ற இழுப்பு இருமல்.

ரொம்ப ஆழ்ந்த வெண்கல சத்தத்துடன் இருமல்— குலைக்கும் இருமல்—பாதி இரவிற்குப்பின் அதிகரித்து, மணல்வாரி அம்மைக்குப்பிறகு, மூச்சுத் திணறல் தொண்டை அடைப்பு, குமட்டல், வாந்தியுடனிருக்கும்.

தலையை தலைகாணியில் சாய்த்தவுடன் இரவில் இருமல்- தொண்டையில் சதா உறுத்திக்கொண்டிருக்கும் இருமல்.

டி. பி. உடையவர்களுக்கு இரவில் தொந்திரவு கொடுக்கும் இருமல்-ரத்தம் கலந்து அல்லது சீழுடனிருக்கும்.

உஷ்ணத்தினாலும், குடிப்பதினாலும், பாடுவதாலும், சிரிப்பதாலும், அழுவதாலும், படுத்துக்கொண்டாலும் பாதி இராத்திரிக்குப்பின்னும், அதிகரிக்கும் இருமல்.

கக்குவானிருமலில் ஒரே டோஸ் போதும். ஒரு வாரம், 8 நாட்களில் சௌகரியம் செய்துவிடும். இரண்டாவது டோஸ் கொடுத்தால், வியாதியை கண்டிக்காமல் போவதோடுகூட கெடுதலேயே உண்டுபண்ணும்.

இருமலின்போது, வாந்தி, கோழையான வாந்தி-மஞ்சட்கோழை - மார்பு தசைகளில் வலி - வாயிலிருந்தும் ரத்தம்.

சின்னம்மைக்கு சிறந்தது.

பிரசாரம் செய்பவர்களுக்கு ஏற்படும் தொண்டைக் கம்மல், அடித்தொண்டையில் வரண்ட, கரகரக்கும் உணர்ச்சி, வரண்ட, வெண்கல சத்தம், முயற்சி செய்தால் தான் பேசலாம்.

கக்குவானுக்குப் பிறகு டி. பி.

இரவில் எலும்புகளில் வலி—எலும்புருக்கி வியாதி.

## (88) டல்காமரா

மனக்குழப்பம், ஆத்திரம்; பொறுமையில்லாதவர்கள்-சரியான வார்த்தை அகப்படாது.

ஒவ்வொரு சீதோஷ்ண ஸ்திதி மாறுதலாலும் பாதிக்கப் படுபவர்கள்.



வாயு — வாயுவலிகள் — சில்லிப்பான ஈர நைப்பான சீதோஷ்ண ஸ்திதி, திடீரென உஷ்ண காலத்தில் மாறுதல்.

தோல் வியர்க்காதபோது அல்லது வியர்வை ஏற்படும் போது திடீரென்று சரீரம் குளிர்ந்தால் பாக்கி மியூகஸ் சதைகளிலிருந்து அதிக நீர் ஊறல்.

ஈர இடங்களில் வேலைசெய்வதால் வரும் வியாதிகள்.

பேதி — பனி காலங்களில், உஷ்ணகாலம் சீதள காலமாய் மாறும்போது தண்ணீர் மாதிரி-இரவில் அதிகம்.

தோல்—நுண்ணியது—சில்லிப்பு. குளிர், தாங்காது-அனேக கொப்பளங்கள், அர்டிகேரியா - ஒவ்வொருதரம் ஜலதோஷம் பிடிக்கும்போதும் அல்லது ஈரத்தில் இருந்தாலும்.

அர்டிகேரியா — உடம்பு முழுவதும் — சுரம் இராது. சொரிந்த பிறகு எரிச்சலுடன் அரிப்பு — உஷ்ணத்தினால் அதிகரித்து குளிரினால் சாதகம்.

தலையில், முகத்தில், நெற்றியில், பொட்டுகளில், மோவாய்க்கட்டையில், சிவந்த கண்களுடன் தடிப்பான மஞ்சள் நிறமான பொறுக்குகள் — சொரிந்தால் ரத்தம் கொட்டும்—கரப்பான்.

கடிக்கு சிறந்த மருந்து.

பாலுண்ணிகள் — பெரிதாகவும், வழவழவென்றும், முகம், கையின் பின்புறத்திலும் அதிகம்.

மாதவிடாய்க்கு முந்தி உடம்பில் தடிப்புகள்.

இன்ப்ளுயன்ஸா — மழை பெய்தவுடன் மூக்கடைப்பு-குழந்தைகளுக்கு சளி.

வயதான குழந்தைகளுக்கு ஈரத்தில் உளைவதால் மூத்திரம் தானகவே பிரியும்—பால் மாதிரி சிறுநீர்.

வியர்வையைத் தடுத்ததினால், நொப்பங்களை தடுத்ததினால், குளிரினால் நீர் சுரப்பு—மகோதரம்—மலேரியாவுக்குப் பிறகு, வாயு அல்லது ஸ்கார்லட் சுரத்திற்குப்பிறகு-பிரைட்ஸ் வியாதி.

இடுப்பில் வலி — பிடிப்பு-கழுத்து, தோள்பட்டையில்-சுரம்-நனைவதால்.

ரத்தம் கொட்டும் புண்கள்-பொய்யான சதை வளர்ச்சி.

## (89) ஈக்விஸ்டியம்

காந்தாரிஸ் பலிக்காத கேசுகளில் இது உபயோகமானது.

அடிக்கடி அடக்கமுடியாத நீர் பிரிய உணர்ச்சி—நீர் பிரிந்த பிறகு கடுமையான வலி.

சதா மூத்திரம் பிரிக்க இச்சை; ஏராளமான தண்ணீர் போன்ற நீர் — ஆனல் எவ்வளவு தடவை போனலும் மூத்திரப்பை நிரம்பியிருக்கிறதுபோலவும் மறுபடியும் போகவும் உணர்ச்சி.

கடுப்பும், எரிச்சலும், வெட்டும் வலியும் — மூத்திரக் குழாயில்-மூத்திரம் போகும்போது.

கிழவிகளுக்கு மூத்திரப் பையின் வாதத்தினல் பலவீனம்.

பகலிலும், இரவிலும் தானறியாமலே நீர் பிரிதல்-பழக்கம்தான் காரணம்.



## (90) யூபடோரியம்

உடம்பு முழுவதும் சிராய்த்த வலி, முறிந்த வலி.

எலும்பிற்குள் வலி; முதுகு, தலை, கால்கைகள், மணிக்கட்டுகள், மார்பு எல்லாவிடத்திலும் மூட்டு விலகினது போல வலி—கண்டைக்கால் சதை அடிபட்டதுபோல் வலி—இன்ப்ளூயன்ஸா, மலேரியா, பித்தசுரம், ஜலதோஷம் முதலியவைகளில்.

கண் விழிகளில் உறுத்தும் வலி — ஜலதோஷம்; ஒவ்வொரு எலும்பிலும் வலி — இன்ப்ளூயன்ஸா சுரத்தில் ஒரே அசதி.

சட்டென்று வந்து சட்டென்று விலகும் வலிகள்.

காலையில் 7—9 மணிக்குள் குளிர் நடுக்கல் — மறுநாள் மத்தியானம் குளிர்—குளிர் நிற்கும்போது கசப்பான ஜலம் குடித்தால் அதிகக்குளிர்-வாந்தி-எலும்பு வலி-குளிருக்கு முந்தியும், குளிரின்போதும்.

குளிரின்போதும், சுரத்தின்போதும், அடங்காத தாகம், தான் போதுமான அளவு குடிக்காததினல்தான் குளிர் வருகிறதென்று தோற்றம்.

தொண்டைக்கம்மல், காலையில்—மார்புறங்களில் உறுத்தும் வலி—கைகளினல் அமுக்கிப் பிடித்துக்கொள்ள வேண்டும்—இரவில் அதிகம்—மணல்வாரி அல்லது முறைக் காய்ச்சலுக்குப் பிறகு-நாள்பட்ட இருமல்-அஸ்தி இருமல்.

கிறுகிறுப்பு — இடது பக்கம் சாய்ந்து விடுவதுபோல் தோற்றம்.

வயதானவர்களின் வியாதிக்கும், உழைத்துக் களைத்துப்போன சரீரங்களுக்கும், அதிகக் குடியினல்

தளர்ந்தவர்களுக்கும், நாள்பட்டு நீடித்த முறைக்காய்ச்சல், பித்த சுரங்களினால் தளர்ந்த சரீரமுடையவர்களுக்கும் உகந்தது.

---

## (91) யூபர்பியா

கடும் பேதி மருந்து.

கக்கும் இருமலுடன்-பேதி-வாந்தி-ஓயாமல் அடிக்கடி-நடுநடுவே அசதி, தூக்க மயக்கம்.

வாந்தி, நீர், மலம் எல்லாம் ஏராளமாகவும், தண்ணீர் மாதிரியும், சில சமயம் வெள்ளை சீதக்கட்டு கலந்ததாகவும்.

முகம் குழி விழுந்து உடல் முழுவதும் சில்லென்ற வியர்வை, மூச்சும், சில்லிட்டு ஹிருதயம் பலவீனப்பட்டு நினைவின்மை.

எரிசிபிலஸ்—கடும் சுரத்துடன் சிவந்து, அரிப்பு, எரிச்சல்—தாங்காத எரிச்சல்—பிளவை.

---

## (92) யூபரேஷியா

கீழே விழுதல், அடிபடுதல், முதலியவைகளினாலேற்படும் கெடுதல்கள்.

கண் வியாதிகள்—கண் விழியில் புண், வீக்கம், கடுப்பு, முதலியன — ஏராளமான கண்ணீர், மூக்கிலிருந்து ஏராளமான சளி — கண்ணீர் பட்ட இடம் புண்ணாகும், சளி புண்ணாக்காது.

கண்களிலிருந்து சதா கண்ணீர் — காலையில் ஒட்டிக் கொள்ளும், இமை ஓரங்கள் சிவந்து, வீங்கி எரியும்.



ஒழுகும் சளி, காலையில்—கடும் ஜலதோஷம் — நிறைய கோழை-உஷ்ண தெற்குக்காற்றால் அதிகப்படும்.

காலையில் தொண்டையிலிருந்து கோழையைத் துப்ப ரொம்ப முயற்சிசெய்தால் காலையில் சாப்பிட்ட ஆகாரமும் வாந்தியாகிவிடும்.

தானாக காறி இருமினால் நிறைய கோழை வெளிப்படும்—காலையில் எழுந்ததும்.

மணல்வாரி, கக்குவான்—இருமலின்போது நிறையக் கண்ணீர். பகலில் மாத்திரம் இருமல்.

சளியுடனும், கண்ணீருடனும், மாதவிடாய் ஆகாமலிருத்தல்.

மாதவிடாய் — வலி — ஒரே ஒரு மணி நேரத்திற்கு மட்டுந்தானிருக்கும் அல்லது நாட்தள்ளிவந்தால் ஒரே ஒரு நாள் மட்டும்தானிருக்கும்.

---

## (93) பெர்ரம் மெட்

ரத்த சோகை, எல்லா மியூகஸ் சதையும் வெளுப்பு-ரொம்ப வெளுப்பு-கொஞ்சம் வலியினாலும் அதிர்ச்சியினாலும், சிரமத்தினாலும் சட்டென்று சிவந்து காணும்.

சிவந்த பாகங்கள் வெளுக்கும்-முகம், உதடு, நாக்கு, வாய்ச்சதைகள் ரத்தம் எந்த அவயவத்திலிருந்தும் கொட்டும். ரத்தம் கொட்டும் தேகவாகு, சிவந்த ரத்தம்-கருப்பு கட்டிகள்-சட்டென்று கட்டிதட்டும்.

வீக்கங்கள், கத்தியினால் அடிப்பது போன்ற துடிக்கும் வலியுடன்-கெட்ட ரத்தக்குழாய் நிறைந்து, முகம் சிவந்து, வெளுப்புதட்டியுமிருக்கும்.

தலைவலி - துடிக்கும், பிளக்கும் வலி, படுத்துக்கொள்ள வேண்டும்; சாப்பிடப்பிடிக்காது. இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒருமுறை, இரண்டு, மூன்று அல்லது 4 நாளைக்கு சேர்ந்தார்ப்போல்.

மயக்கம் — தண்ணீரில் இருப்பதுபோல் — ஓடும் தண்ணீரைக்கண்டால் கிறுகிறுப்பு, தண்ணீரில் நடக்கும் போதும், பாலம் தாண்டும்போதும்—இறங்கும்போதும்.

அகோரப்பசி—அல்லது பசியே இராது — ஆகாரத்தில் வெறுப்பு.

ஏப்பம், அல்லது வாயில் சாப்பிட்ட ஆகாரம் எதுக்களித்தல், குமட்டல் இராது. பகலில் சாப்பிட்ட ஆகாரம் இரவில் வாந்தி—பாதி இரவில் வாந்தி—சாப்பிட்டவுடன் வாந்தி - சாப்பிடும் நடுவே ஒரு வாயில் வாந்தி எடுத்தபின் மறுபடியும் சாப்பிடலாம்—புளிப்பான.

பேதி — வலியில்லாமல், ஜீரணமாகாமல் — இரவில்— சாப்பிடும்போது அல்லது குடிக்கும்போது—நல்ல பசி— டி. பி. வியாதியஸ்தர்கள்.

குளிரின்போது சிவந்த முகம்.

ரத்த சோகையுடைய ஸ்திரீகள்-பலஹீனம், மென்மையான தேகம்-முகம் மாத்திரம் நல்ல சிவப்பு.

அதிக சண்டையிடக்கூடியவர்கள், வம்பு பேசுபவர்கள், விதண்டாவாதம் செய்பவர்கள், சிறிது மறுப்பும் தாளாதவர்கள், மனதிற்கு வேலைகொடுத்தால் அதிகப்படும்— ஆத்திரம்-சிறிய சப்தங்களும் அதாவது பேப்பரை மடித்துப் பிரித்தால் ஏற்படும் சிறிய சப்தங்கூட ஆத்திரத்தை உண்டாக்கும்.



மாதவிடாய் — ரொம்ப சுருக்க, ரொம்ப அதிகம், முகம் நல்ல சிவப்பு, காதுகளில் சத்தம், இரண்டு மூன்று நாட்கள் விட்டுவிட்டு மறுபடியும் தென்படும் — வெளுத்து நீர்த்த மாதிரி. பலவீனப்படுத்தும் மாதவிடாய் பெருக்கு.

மெதுவாக நடப்பதால் சௌகரியம் — பலவீனத்தினால் படுத்துக் கொள்ளும்படியாக இருந்தாலும் — இடுப்பு வலி, கைகால் வலி, ஆஸ்த்மா, ரத்த வாந்தி, ஹிருதய படபடப்பு.

பகலில் மாத்திரம் இருமல்; படுத்துக்கொண்டால் சாதகம், சாப்பிட்டாலும் சாதகம்.

மலச்சிக்கல் — குடல் பலவீனத்தினால் மலம் கடினமாகவும், இடுப்பு வலியுடனும், ஆசனவாய் கடுப்புடனும், குழந்தைகளுக்கு மூலம் தள்ளியும், இரவில் ஆசனவாய் அரிப்புடனும் இருக்கும்.

ரத்தப்பெருக்கு அதிகமானால், அதிகமாக கொயினா சாப்பிட்டதினால், நீர் சுரப்பு.

கிரந்தியில் (ஸிபிலிஸ்) கொடுக்கக்கூடாது.

## (94) பெர்ரம் பாஸ்

வலிகள், நடப்பதினால் அதிகம், சில்லிப்பினால் சாதகம்.

எந்த அவயவத்திலிருந்தும் ரத்தப்பெருக்கு — சட்டென்று கட்டிதட்டும் சிவந்த ரத்தம்.

எந்த சுரத்திற்கும் ஆரம்பத்தில் சிறந்தது.

தூக்கமின்மை—பலவீனம்—வலி அதிகம்.

கட்டி முதலியவைகளில் ஆரம்பத்தில் கொடுத்தால் சீழ் பிடிக்காமல் தடுக்கும்.

புதிதான வெட்டுக்காயங்களுக்கு ஆரம்பத்தில்.

புளித்த ஏப்பம் — பசியின்மை, சிவந்த ரத்தத்துடன் அல்லது ஜீரணமாகாத ஆகாரம் வாந்தி — வயிற்றுவலி.

முகம் சிவந்து—பின் பிடரியில் சில்லிப்பான உணர்ச்சி.

மலச்சிக்கல்—ரத்தம் கொட்டும் மூலம்.

நீர் இரவில் தானுகவே பிரிதல்—மூத்திரப்பை பலவீனம்.

வாயு சுரம், சகல சுரங்களும்.

கப சுரம் — கோழை ரத்தங்கலந்தும், குறைவாகவும், வரண்ட தொண்டையுடனிருக்கும்.

---

## (95) ஜெல்சமியம்

சகல தசைகளும் பலவீனப்பட்டு, தளர்ந்து — அசைவு நரம்புகளின் வாதமும் இருக்கும்.

கண்ணிமைகள் தொங்கிவிடும்—தசைகள் வேலையைச் செய்ய மறுக்கும்—குழப்பம்.

நடுக்கல் — பலவீனம் — நாக்கு, கை, கால், உடம்பு முழுவதும்.

தனியாக அமைதியாக இருக்க இச்சை, யாருடனும் பேசவோ இருக்கவோ பிரியமில்லை - அசையக்கூட முடியாத படி பலவீனம்.



குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு, ஹிஸ்டிரியா மாதிரி நரம்புத்தளர்ச்சியுள்ள ஸ்திரீகளுக்கு உகந்தது.

இருபாலாருக்கும் ஹஸ்தப்பிரயோகத்தினுல் ஏற்பட்ட நரம்புத்தளர்ச்சிகள், ஆத்திரம், அதிர்ச்சி.

பயம், மன அதிர்ச்சிகள், அதிர்ச்சி ஏற்படுத்தும் சமாசாரங்கள் இவைகளினுல் கெடுதல்கள்.

செத்துவிடுவோமென்ற பயம்—கொஞ்சம்கூட தைரியமின்மை—கோழை.

எதிர்பாராத அலுவல், கோவில், குளங்களுக்கு போதல், சபை முதலியவற்றிற்கு செல்லுதல் என்ருல், பேதியாகும்—சபைக்கோழை.

உஷ்ணத்தினுலும், வெயிற்காலத்திலும் உடம்புத் தளர்வு.

மூளையின் அடிப்பக்கத்திலிருந்து ஆரம்பிக்கும் தலைவலி—நெற்றியிலும், கண் விழிகளிலும் தெறிக்கும் வலி—மனதிற்கு வேலைகொடுத்தால் அதிகரிக்கும்-தளர்ச்சி-தலையைத் தூக்கியிருக்கவேண்டும். தலையைத் தொங்க விட்டாலும், சூரிய வெப்பத்தினுலும், சிகரெட்டினுலும் வலி அதிகம்.

தலைவலி வருவதற்குமுன் கண்ணிருட்டல், அதிக மூத்திரம் பிரிந்தால் சாதகம்.

மயக்கம்—கண் மங்கல்—பாப்பா விரிந்து இரட்டைப் பார்வை—நகர்ந்தால் போதையுடையவன் மாதிரி தோற்றம்-பின் தலையிலிருந்து பரவும் மயக்கம்.

மனச்சக்தி மந்தம்—யோசனைசெய்யமுடியாது; அசதி, மயக்கம், முகம் மந்தச் சிவப்பு.

குழந்தைகள் கீழே விழுந்துவிடுவோமென்று பயப்பட்டு தாயைப் பிடித்துக்கொள்ளும்.

வயதானவர்களுக்கு மெதுவான, பலவீனமான நாடி.

நடந்துகொண்டேயிருந்தாலொழிய ஹிருதயம் நின்றுவிடுமென்ற பயம்.

கண்ணிமைகள் கனத்திருக்கும். கண்ணை திறந்து வைத்திருக்கமுடியாது.

கண்களுக்குமேல் தலையில் பட்டைகட்டினது போலுணர்ச்சி.

தாகமில்லாத குளிர்—முள்ளந்தண்டு வழியாக மேலும் கீழும் வேகமாக அலை வீசுவதுபோன்ற குளிர் நடுக்கல், கடுமையான நடுக்கல்—சில்லிப்பு இருக்காது. நடுக்கலின் போது பிடித்துக்கொள்ளவேண்டும். முறைக்காய்ச்சல்.

---

## (96) க்ளனுயின்

தலையிலும், மார்பிலும், ஹிருதயத்திலும் ரத்த ஓட்டம் அதிகப்படுதல்.

காஸ் விளக்குகளின் அடியில் வேலை செய்வதாலும், தலையில் உஷ்ணம் தாக்குவதாலும், ஸ்டவ் சூடு, வெய்யிலில் நடப்பதாலும் தலை நோய்.

ரொம்பப் பெரிதாக தோன்றும் தலை—மூளை மண்டைக்குள் அடங்காதுபோன்ற தோற்றம்-சூரிய வெப்ப ஜன்னி, தலைவலி. சூரியன் புறப்படும்போது ஆரம்பித்து, மத்தியானம் கடுமையாகி, அஸ்தமிக்கும்போது குறையும்.

தலையில் வெகு கடுமையான வலி-நாடித்துடிப்புடனே இதுவும் துடிக்கும். இரண்டு கைகளாலும் அமுக்கிப் பிடித்துக்கொள்ளவேண்டு[ம்]. படுத்துக்கொள்ளமுடியாது. படுத்துக்கொண்டால் த[லையணை]கூட துடிப்ப[தும] திரியிருக்கும்—கழுத்திலிருந்து பு[றப்படுவ]துபோலிருக்கும்.



TAMIL NADU ARCHIVES LIBRARY No. 101600 MADRAS

மூளை ரொம்ப பெரிதாக தோன்றும்— துடிக்கும் ரத்தம் மூளைக்கு குழாய்மூலம் தள்ளப்படுவதுபோல் — ஒவ்வொரு நாடித்துடிப்பிற்கும், அசைவினுலும், நடையினுலும் அதிகரிக்கும்.

மாதவிடாய் நின்றுவிட்டாலும் அல்லது நாள்பட்டாலும்—மாதவிடாய்க்குப் பதிலாக தலைவலி.

ஏராள பெரும்பாட்டிற்குப் பிறகு தலைவலி — கர்ப்ப ஸ்திரீகளுக்கு தலையில் அதிக ரத்தம்.

தலையில் ஒன்றும் வைத்துக்கொள்ள முடியாது — தொப்பிமாதிரியுள்ளவைகூட.

நரம்புத்தளர்ச்சியுடையவர்கள், ரத்தம் அதிகம் அல்லது கொதிப்புடையவர்கள், நுட்ப சரீரிகள்.

மன அதிர்ச்சியினுலும், பயம், பீதி, அடிபடுதல், தலைமயிர் வெட்டிக்கொள்ளுதல் இவைகளினுல் ஏற்படும் கெடுதல்கள்.

கடும் படபடப்பு — ஹிருதயத் துடிப்பு சிரமப்பட்டு, தடைபட்டு இருக்கும். ஹிருதயத்திற்கு ரத்தம் வேகமாக ஓடுவதுபோலவும், பிறகு தலைக்கு ஓடுவதுபோலவும்.

மெனிங்கைடிஸ், பல் முளைத்தல் இந்த சமயங்களில் குழந்தைகளுக்கு வலிப்பு.

அடுப்பு உஷ்ணத்தில் உட்கார்ந்திருப்பதனுலும் அல்லது அடுப்படியில் படுத்துத் தூங்கினதாலும் உண்டாகும் வியாதிகள். (குழந்தைகளுக்கு)

மாதவிடாய் நிற்கும் காலத்தில் உடம்பில் உஷ்ணம் — மாதவிடாயின்போதும் உஷ்ணம் வீசும்.

## (97) க்ராபைடிஸ்

ஆரோக்கியமில்லாத தோல் — தோல் வியாதிகள் — எந்தக்காலமும் சீழ்பிடித்துவிடும். பழய வடுக்கள் மறுபடியும் புண்ணுகும் — விரல் இடுக்குகள், காதுகள் மற்றும் பல இடங்களிலும் தண்ணீர் போன்ற பிசுபிசுப்பான நீர் கசிவு.

கொப்புளங்களிலிருந்து தேன்போன்ற தடிப்பான கசிவு.

ஸ்தனத்தில் கட்டிகளேற்பட்டால் சௌகரியமான பிறகு கரலைகள் தங்குதல் — பால் வருவது தடைபடும் — ஸ்தனத்தின் புற்று — அடிக்கடி சிரங்குகள் ஏற்படுவதினால்.

மியூகஸ் சதை இணைப்புகளில்—கண்ணிமைகள் வீங்கி, கொப்பளங்கள், காதிலிருந்து சீழ் — காதின் பின்பக்கம் கரப்பான் நீர், விரல் நுனிகள், முலைக்காம்புகள், யோனி வாய், ஆசனம், வாய் ஓரங்கள் இவைகளில் வெடிப்புகள் அல்லது அரிப்புடன்கூடிய பிளவுகள்.

கண்ணிமைகளில் கரப்பான்—பொருக்குத்தட்டும்.

நகங்கள் நொறுங்கும் — கோணலாயிருக்கும் — வலி, புண்மாதிரி, தடித்து உருமாறும்.

வெள்ளைபட்ட இடம் புண்ணுகும், இரவும், பகலும் கொட்டும் — மாதவிடாய்க்கு முன்னும், பின்னும்.

மாதவிடாய் ரொம்பக் குறைந்தும், வெளுத்தும், தங்கி அதிக வயிற்றுவலியுடனும், ஒழுங்கில்லாமலும் கால் நனைவதால் நாட்படும்.



மாதவிடாய் இருக்கும் காலத்திலே காலை வாந்தியும் ஏற்படும். ரொம்ப பலவீனம், தளர்ச்சி.

அதிக போகத்தினுல் வீர்யக்குறைவு — சம்போகத்தில் இச்சை இராது.

நாள்பட்ட மலச்சிக்கல்—கஷ்டப்பட்டும், பெரிய கட்டிகளாகவும், சீதக்கட்டுடன்கூடின கட்டிகளாகவும் இருக்கும். போனபிறகு புண்பட்டமாதிரி ஆசனவாயில் வலி.

பேதி — கருஞ் சிவப்பு நீர்மாதிரியும், ஜீரணமாகாத பதார்த்தங்களுடனும், தாங்கமுடியாத கவிச்சு நாற்றத்துடனும்—பெரும்பாலும் தோல் வியாதிகள் அமுக்கப்படுவதனுலேற்படும்.

குழந்தைகள் அதிகப்பிரசங்கி — திட்டினுல் நம்மைக் கண்டு சிரிக்கும்.

உடம்பு பெருத்த ஸ்திரீகளுக்கும், சதா மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்களுக்கும், சதா நாள் தவறிவரும் மாதவிடாயுள்ளவர்களுக்கும் சிறந்தது.

ரொம்ப முன் ஜாக்கிரதை; கோழை, தாமதம், சட்டென்று எதையும்பற்றி முடிவுக்குவர யோசனை.

வேலைக்கு உட்கார்ந்தபொழுது சதா கால் ஆட்டம்.

வருத்தம், மனத்தளர்ச்சி. பாட்டைக் கேட்டால் அழுகை — சாவைத்தவிர மற்றதைப்பற்றி நினைவே கிடையாது.

உச்சந்தலையில் ஒரு வட்டமான எரிச்சல்.

கட்டைபோல் கிடக்கும் ரோகம்—பிரக்ஞை இருக்கும்; ஆனல் அசையவோ பேசவோ முடியாது.

அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும். வியாதியுற்ற அவயவங்கள் இளைக்கும்.

சத்தத்தில் காது நன்றாக கேட்கும் — வண்டியில் அல்லது காரில் சென்றால் அல்லது கடகடவென்ற சத்தத்தில் காது நன்றாகக்கேட்கும்.

நெற்றியில் ஒட்டடை இருப்பதுபோலுணர்ச்சி, அதை எடுக்க அதிக முயற்சி.

முகத்தில் எரிச்சல் குத்தலுடன்கூடிய எரிசிபிலஸ்— வலது பக்கம் ஆரம்பித்து, இடது பக்கம் பரவும். அயோடின் தடவின பிறகு.

---

## (98) க்ரைன் டலியா

தூங்க ஆரம்பித்தவுடன் மூச்சு நின்றுவிடும்-நோயாளி விழித்துக்கொண்டு அதைப் பிடிக்க யத்தனிப்பர்—ஆழ்ந்த மூச்சு—இதனால் தூக்கம் கெடும் — ஆஸ்த்மா, ஹிருதய வியாதிகள்.

---

## (99) கயாகம்

ஸிபிலிஸ் வியாதியஸ்தர்கள்.

கோழை முதலியவைகள் கடும் துர்நாற்றமுடையன.

இருமல் ஏராளமான கோழை—சீழ்போன்ற நாற்றம்-ப்ளூரஸி—இடது பக்கம் அதிகம்-க்ஷயம்.



வாயு—சினைப்பை வீக்கம்—முதுகின் ஒரு பக்கம் பிடிப்பு அதிகம்—கழுத்திலிருந்து இடுப்புப் பக்கம்—அசைந்தால் அதிகம்.

கால் கைகள் முடங்கிவிடும். நீட்டமுடியாத பிடிப்புகள். வாயு வீக்கம்.

மூட்டு வீக்கம் — வலி — தொட முடியாது — சூடு தாங்காது.

வலிக்கும் கால்களில் சூடு.

இரவில் வியர்வை—நாற்றமடிக்கும்.

தூக்கத்தில் அடிக்கடி எழுந்திருத்தல். கீழே விழுவது போல தோற்றம்.

வாயுத்தலைவலி—ஒற்றைத்தலைவலி—நெற்றியில், மூளையில் குத்தும் வலி.

---

## (100) ஹாமமலிஸ்

உடம்பின் எந்த துவாரத்திலிருந்தும் ரத்தப்பெருக்கு— ஏராளமாக, கருப்பாகவும், கட்டி தட்டியும், கெட்ட ரத்தக்கசிவு.

கர்ப்பப் பையிலிருந்து ஓயாமல் பெருகும் — அடி அல்லது அசௌகரியமான பிரயாணம், மூக்கிலிருந்து ரத்தம்—மனதில் கவலை கிடையாது.

ரத்த வாந்தி—கரகரக்கும் இருமல்—ரத்த ருசி, அல்லது கந்தக ருசி, மந்தமான நெற்றித் தலைவலி, மார்பு இருக்கம், படுத்துக்கொள்ள முடியாது, மூச்சுத் திணறல்—இருமாமலே ரத்த வாந்தி — சில சமயம் மாதக்கணக்கில், வருஷக் கணக்கில்.

ரத்தப் பெருக்கும் மூலம், எரிச்சல், கடுப்பு, நிறைவு, கனம், இடுப்பு ஓடிந்துவிடும் போல, மலம் பிரிக்க அவசரம்.

குடலிலிருந்து தார் மாதிரி ரத்தப் பெருக்கு — டைபாயிட்.

மூலத்திலிருந்து ரத்தக்கசிவிற்குப் பிறகு ரத்தம் குறைவாயிருந்தபோதிலும் ஓரே தளர்ச்சி, பலவீனம்.

பல் பிடுங்கின பிறகு ரத்தப் பெருக்கு. கருப்பான ரத்தம்.

ரத்தப் பெருக்கினுல் ஏற்படும் கெடுதல்கள்.

மூக்கிலிருந்து ரத்தம் — சீக்கிரம் கட்டிதட்டாது. ஏராளம், தலைவலியினுல் சாதகம், அடிபட்டதினுல், மாதவிடாய் நின்றுவிட்டால், குழந்தைகளில்.

அடிபட்டதினுல் கண்வலி—கண் அறைக்குள் ரத்தக் கசிவு—அதிகக் கடுமையான இருமலால், ரொம்பக்கடுப்பு.

அடிபட்டதினுல் நாட்பட்ட கெடுதல் — ஆண் விரை நரம்பு வீக்கம்—விரை வீக்கம்—நரம்பு சுருட்டல்.

நரம்பு சுருட்டல்—அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல்.

வியாதியுற்ற பாகங்கள் சிராய்த்த கடுப்பு வலியுடன்—வாயு—தசை வாயு—மூட்டு வாயு—கால் கை அசதி.

கிழித்த அறுத்த, நசுங்கின காயங்கள்—அடிபட்டதினுல் ரத்தக் கசிவு; ரத்தக் கசிவை நிறுத்தும் — வலியையும், கடுப்பையும் குறைக்கும். மேலுக்கும் உபயோகிக்கலாம்.



## (101) ஹெல்லபோரஸ்

கடுமையான மூளை சுரங்களுக்கு — மூளையில் நீர் சுரப்பிற்குச் சிறந்தது.

தலைகாணியில் தலை அப்படியும் இப்படியுமாக உருளும், தலையை கைகளால் அடித்துக்கொள்ளுதல்.

மெனிங்கைடிசில் (செரிப்ரோ — ஸ்பைனல்; டியூபர்குலார், அக்யூட்) பக்ஷவாதம்—க்றீச்சென்ற சத்தம்.

பிரக்ஞையின்மை; மயக்கமான தூக்கம்; கேள்வி கேட்டால் ரொம்ப மெதுவாக பதில் சொல்லுவர்.

பல் முளைக்கும்போது மூளைக்குறிகள்.

மயக்கமான நித்திரை, கத்தல் கீச்சிடுதல், தூக்கத்தில் எழுந்திருத்தல்.

பரபரக்க குளிர்ந்த தண்ணீரை விழுங்குவர்; ஸ்பூனைக் கடிப்பர், ஆனல் பிரக்ஞையிருக்காது.

நெற்றியில் சுருக்கம் விழுந்து — குளிர்ந்த வியர்வை—கண்கள் நன்ருக திறந்திருக்கும், பாப்பா விரிந்திருக்கும், வெளிச்சத்திற்கு கூசாது, பார்வை தெரியாது, காதும் கேட்காது, வாசனை தெரியாது.

வாய் அசைபோடும்; கடைவாயிரண்டும் வெடித்து புண்ணுகி நாசி அழுக்கேறி, பொருக்குத்தட்டி, வரண்டுமிருக்கும்.

ஹைட்ரோசிபாலஸ் — ஸ்கார்லடினு — சுரத்திற்குப் பிறகும், க்ஷயத்திற்குப்பிறகு, துரிதமாக வரும்; ஒரு காலும் ஒரு கையும் தானுக ஆடும்—மற்றது அப்படியே கிடக்கும்.

உடம்பு மிகவும் சில்லிட்டு வலிப்புகளுடன் கூடியிருக்கும்—தலை மாத்திரம் சுடும்.

அடிக்கடி உதடுகளை பிய்ப்பர், துணிகளைப் பிய்ப்பர், நாசியை விரலால் நோண்டுவர்.

முள்ளந்தண்டிலிருந்து பரவும் வலி—சில்லென்று ஒற்றடத்தினால் சாதகம்.

வருத்தம், துக்கம், மனத்தளர்ச்சி — கவலை — டைபாயிட்டிற்குப் பிறகு; புஷ்பவதியாகும் பெண்கள், மாதவிடாய் வெளிப்பட்ட பிறகு மறுபடியும் வராமல் தங்கி விட்டால்.

ஆத்திரம் — சட்டென்று கோபமடைவர் — சமாதானப்படுத்தினால் இன்னும் அதிகரிக்கும்; தொந்திரவு பொறுக்க மாட்டார்.

பல் முளைக்கும்போது; ஹைட்ரோசிபாலஸ் வியாதியின்போது, கர்ப்ப காலத்தில் தண்ணீர் மாதிரி, சீதக்கட்டு, தவளை முட்டைக் குவியல்மாதிரி, தன்னறியாமலே போகும்.

சிவந்த, கருத்த, குறைவான, காப்பிப்பொடி மாதிரி மஸ்டு தங்கும் மூத்திரம் பிரியாமலேயிருக்கலாம்-அல்புமனும் இருக்கும்.

மூளை, மார்பு, வயிறு இவைகளில் ஸ்கார்லடினா, மலேரியா முதலிய சுரங்களுக்குப்பிறகு நீர் சுரப்பினால் வீக்கம்; பலவீனம்—மூத்திரம் பிரியாது.

## (102) ஹெலோனியஸ்

ஸ்திரீகளுக்குச் சிறந்தது — சோகை, பலவீனத்தினால் கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்; வேலை செய்யாமலிருந்தா



லும்; அதிக சுகவாழ்க்கையினாலும் நரம்புத்தளர்ச்சி. அதிக கடினமான வேலையினால் தளர்வு. மனோ வேலை அல்லது உடல் வேலை—தசைகள் அதிக வேலை செய்ததினால் எரிச்சலுடன் வலிக்கும்; அசதியினால் தூக்கம் வராது.

இடுப்புப் பக்கம் கனம், கடுப்பு, கர்ப்பப்பை இருக்கிறதென்று உணர்ச்சி, தான் நகரும்போது அதுவும் நகருவதாக தோற்றம், வலி, தொடமுடியாமலிருக்கும்.

கர்ப்பச் சிதைவுகள், குறைப் பிரசவங்களுக்குப் பின் ஏற்படும் கெடுதல்களுக்குச் சிறந்தது.

வேறு வேலை ஏதாவது செய்துகொண்டிருந்தால், தன் வியாதியைப்பற்றி நினைக்காமலிருந்தால் சௌகரியம்.

மாதவிடாய்—அதி துரிதம், அதிக அளவு, ரத்தம் அதிகம் நஷ்டமானதினால் ஏற்படும் கர்ப்பப்பை பலஹீனம், ஸ்தனங்கள் வீங்கி, முலைக்காம்புகள் தொடமுடியாமல் வலியுடன் வீக்கம்—மாதவிடாய் இரத்தம் கருப்பாகவும், கட்டிதட்டியும், நாற்றத்துடனும், ஓயாமலும், பெருகிக்கொண்டுமிருக்கும்.

ரொம்ப துக்கம், ஆழ்ந்த மனக்கவலை.

ஆத்திரம் - குற்றம் கண்டுபிடிப்பர், கொஞ்சம் மறுத்துச்சொன்னாலும் அல்லது யோசனை சொன்னாலும் கோபம்.

அமைதியின்மை — சதா நகர்ந்துகொண்டேயிருப்பர்.

ஆரம்ப மதுமேகம் — அமிதமான மூத்திரம் — தித்திப்பானது — உதடுகள் வரண்டு, ஒட்டிக்கொள்ளும் — ரொம்ப தாகம் — அமைதியின்மை; உடம்பு இளைப்பு.

அல்புமன் சத்து மூத்திரத்தில், கர்ப்ப காலத்தில், ரொம்ப தளர்ச்சி, ரொம்ப அசதி, காரணம் மட்டும் தெரியாது.

---

## (103) ஹீபர் ஸல்பர்

வலி தாங்க முடியாது, தொட்டாலும் தாங்காது, சில்லிப்பான காற்று ஓவ்வாது, வலியுடன் மயக்கம், சின்னக் காரியமும் ஆத்திரமுண்டாக்கும்; ரொம்பத் துரிதமான பேச்சு, அவசரம் அவசரமாய் குடித்தல்.

ரொம்ப சின்ன காரியத்திலும் ஆத்திரம், காரணமில்லாத கவலை, ஆதுரம்.

சிறு காயமும் சீழ் பிடிக்கும் — சீழ் பிடிப்பது கட்டாயமென்ற வியாதிகளில் சீழை வெளிப்படுத்தி ஆற்றும்.

அதிக பாதரசம் உள்ள மருந்துகளை சாப்பிட்டவர்களின் வியாதிக்கு உகந்தது.

சில்லிப்பான காற்று சற்றேனும் உதவாது; அடுத்த அறையில் கதவைத் திறந்தாலும் தனக்கு குளிர்வாடை அடிக்கும் என்று பயப்படுவர். உஷ்ண காலத்திலும்கூட முகம் உடல் முழுவதும் போர்த்திக்கொள்ளுவர்.

வரண்ட, குளிர்ந்த காற்றின் வாடையினுல் க்ரூப் யென்னும் வியாதி—ஆழ்ந்த, குலைக்கும் இருமல்—தொண்டைக்கம்மல்; களகளவென்ற கபம், சில்லிப்பான காற்றினுல் சில்லென்ற பானங்களினுல், காலையிலும், நடுநிசிக்கு முந்தியும் அதிகரிக்கும்.

இருமல் — தொண்டையை அடைத்து திணறும், வரண்ட மேற்கத்திக்காற்று, சில்லிப்பான வாடைக்காற்று பட்டதால்.



ஆஸ்த்மா—மூச்சுத்திணறல்: காற்று இழையும் சப்தம்—களகளவென்ற சப்தம்—தலையை பின்புறம் சாய்த்துக் கொண்டு உட்காரவேண்டும்-தோல் வியாதியை அமுக்கினுல் ஏற்படும்-க்ஷயம், ப்ரான்கைடிஸ், க்ரூப் முதலியன.

தொண்டையில் முள் மாட்டிக்கொண்ட மாதிரி-டான்சில்ஸ், சீழ் பிடிக்கும் சமயம்; காது மந்தம் தோலைத் தொட முடியாது; மேல் துணிகூட உறுத்தும்.

மூத்திரம் மெள்ள, வேகமில்லாமல் வெளிப்படும். செங்குத்தாக விழும்—ரொம்ப நாழி காக்கவேண்டியிருக்கும்—மூத்திரப்பையின் பலவீனத்தினுல் பெய்து முடிக்க முடியாது-கொஞ்சம் தங்கியிருப்பதாகவே தோற்றம்.

மலச்சிக்கல் ரொம்ப கஷ்டத்துடன் வெளிப்படும்.

குழந்தையின் புளிச்ச பேதி—உடம்பு புளித்த நாற்றமடிக்கும்—களிமண் கலரான மலம்.

புண்கள், அக்கி, சிறு சிறு கொப்பளங்கள் சுற்றி ஏற்பட்டு ஒன்றுசேரும்.

கீழ் உதடு நடுவில் வெடிக்கும்.

கண் விழிகள் உள்ளே சென்றுவிடும்போல வலி—தொடமுடியாது.

பகல் இரா முழுவதும் ஒரே வியர்வை. சாதகம் ஒன்றுமில்லை; புளித்த நாற்றமுடைய வியர்வை, கொஞ்சம் தேக பரிசிரமமோ, மனதிற்கு வேலையோ ஏற்பட்டால் உடனே வியர்வை.

ஸோரா, ஸ்க்ரோபுலா தேகவாசிகளுக்கு.

---

## (104) லைகோபோடியம் [?]

(104) லைஸட்ராஸ்டிஸ்

வயதானவர்கள், வியாதியினால் நொந்தவர்கள், ரொம்ப பலவீனமுடையவர்கள் இவர்களின் மியூகஸ் சதைகளின் சளியுடைய வியாதிகள்:

புற்று—புற்றுக்கு முந்தி ஏற்படும் பலவீனம், புண் ஏற்படுவதற்கு முந்தி கத்தியினால் வெட்டுவதுபோன்ற வலி, குத்தும் வலி, கல்மாதிரி கெட்டியான புற்று.

சலதோஷம்—தண்ணீர் மாதிரி—பட்டவிடம் புண்ணாகும்; அறைக்குள்ளிருந்தால் குறைவாகவும், திறந்த காற்றில் ஏராளமாகவும், தடிப்பான, மஞ்சளான காபி போன்ற மூக்குச்சளி.

தடிப்பான, மஞ்சளான, கோழை, புண்—பாதரசம் அல்லது வெடியுப்பு சம்பந்தப்பட்ட மருந்து அதிகமாகத் தின்னதால்—கிரந்தி நீர் சம்பந்தமான தொண்டை நோய்—டிப்தீரியா.

அதிகச் சாராயம் குடித்ததினால் கெட்ட சரீரம். வயிற்று, ஈரல் கோளாறுகள்—மஞ்சக்காமாலைக்கு தாய்த் திராவகமாகக் கொடுக்கலாம்—பித்தப்பைக்கல்.

ஆசனவாய்ப்புண்—ஆசனம் வெளித்தள்ளுதல்.

ஆறுத புண்கள், கரளைகள், கரப்பான், குஷ்டப்புண்.

கடும் மலச் சிக்கலுக்கு தாய்த்திராவகமாக கொடுத்து வர சிறந்தது.

வெட்டை வெள்ளை-நூல் மாதிரி, தடிப்பாக, மஞ்சளாக; தொங்கும்—அரிப்பு.



வாயில் புண் — நாக்கு பெரிதாகவும், பல் பதிந்தும் காணப்படும்.

---

## (105) ஹையாசயாமஸ்

பெல்லடோனாவிற்கும், ஸ்டிராமோனியத்திற்கும் மத்திமமாகச் சொல்லப்படும் ஜன்னி—அதாவது பெல்லடோனா அவ்வளவு கடுமையில்லாமலும் ஸ்டிராமோனியம் அவ்வளவு, கோபம், பேச்சு இல்லாமலுமிருக்கும்.

ஹிஸ்டிரியா, குடிகாரன் மயக்கம், பிரக்ஞையின்மை, கேள்விகளுக்குப் பதில் கொடார்; அமைதியின்மை, படுக்கையை விட்டு குதித்து எழுவர்— சரியானபடி பதில் சொல்லுவர் ஆனால் உடனே மயக்கம், சரியான பதில் சொல்ல மாட்டார், எதையோ பற்றி பேத்துவர் — ஒருவிதமான தேவையும் ஒருவிதமான குறையும் சொல்லமாட்டார்.

தான் ஒரு தவறுதலான இடத்திலிருப்பதாக நினைப்பு-விழித்துக்கொண்டிருக்கும்போதே ஜன்னி.

வலிப்புகள், நினைவின்மை; உடம்பின் ஒவ்வொரு தசையும் துடிக்கும்; கண்களிலிருந்து கால்விரல்வரைக்கும் ஸ்பைனல் மெனிங்கைடிஸ்.

குழந்தைகளுக்கு நாக்குப்பூச்சி அல்லது, பீதியினால் ஏற்படும் வலிப்பு; பிரசவ இசிவு, பிரசவத்திற்குப்பிறகு இசிவு, சாப்பாட்டிற்குப்பிறகு குழந்தை வாந்தி எடுத்து, கீச்சென்று கத்தி உடனே வலிப்பு ஏற்படும்.

உன்மாதம்-சித்தபேதம் - சந்தேகம் - பொறுமை அதிக காம இச்சை.

நாணமின்மை; துணிகளை அவிழ்த்து எறிவர்—நிர்வாணமாக படுத்துக்கொண்டு ஆபாசமான பாட்டுகள், பேச்சுகள்.

சித்தியாகாத காதல்—எதைப்பார்த்தாலும் சிரிப்பு, ஆங்காரம், பொறுமை—காக்கை வலிப்பு.

தனியாக இருக்க பயம்-விஷம் வைத்துவிடுவார்களோ, கடித்துவிடுவார்களோ, விற்றுவிடுவார்களோ என்று பீதி-ஏதோ ஒரு முயற்சி நடக்கிறதென்று சந்தேகம் — சாப்பிடவும், பருகவும் பயம்.

ஜன்னியில் படுக்கைத்துணிகளை பொறுக்குவர்—நிமோனியா, டைபாயிட் முதலியவற்றில், கண் நிலைகுத்தி, பிரக்ஞையிழந்து—பல் ஊத்தையடைந்து நாக்கு வரண்டு, அசைக்கமுடியாமல், தானறியாமலே மலமும் நீரும்.

அபாப்ளக்சி.

தூக்கமின்மை, வேலைத்தொந்திரவு, பெரும்பாலும் கற்பனையே.

பிரசவத்திற்குப்பிறகு — தானறியாமலே பிரியும் நீர், அல்லது நீர் பிரியாது. மூத்திரப்பையின் வாதம்.

பிரசவித்த ஸ்திரீக்கு வலியில்லாத வயிற்றுப்போக்கு.

இருமல்—வரண்டது; இராப்பட்டு இருமல்—படுத்துக்கொண்டால் அதிகமாகும், எழுந்து உட்கார்ந்தால் சாதகம். இரவில் சாப்பிட்டபிறகு, பருகின பிறகு—பேசினால், பாடினால் அதிகமாகும்.

நீர் பருக பயம்—சூடான, கெட்டியான ஆகாரம் விழுங்கமுடியும்—திரவங்கள் வலியுண்டாக்கும்—விக்கல்.



## (106) ஹைபரிகம்

முள்ளந்தண்டு அடிகள்; விழுந்ததினால் முதுகுத் தண்டில் அடி.

பொத்துவிட்ட காயங்கள், நசுங்கின கிழிக்கப்பட்ட காயங்கள், வலி—நாட்பட்டவை.

ஆணிகள், ஊசிகள் முதலிய எலிக்கடி, முதலிய கூரான வஸ்துக்களினால் காயங்கள்.

ரண ஜன்னி வராமல் தடுக்கும்.

கட்டை விரல், கை விரல், நகக்கணு, உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய உணர்ச்சி நரம்பு அதிகமுள்ள ஸ்தானங்களில் காயம் ஏற்பட்டால்—நரம்புகள் கிழிக்கப் பட்டால்—தாங்கமுடியாத வலி.

ரண சிகிச்சை, காயங்கள் முதலியவைகளுக்குப் பிறகு நரம்புத்தளர்வு.

அதிர்ச்சி, பீதி இவைகளின் பலன்கள்.

அடிபட்டதினால் முள்ளந்தண்டு ரொம்ப வலிக்கும், நடக்கமுடியாது அடிப்பட்டதினால் வலிப்புகள்.

தலை திடீரென்று நீண்டுவிட்டமாதிரி கிறுகிறுப்பு; இரவில், நீர் பிரிய உணர்ச்சி.

அடிபட்ட இடத்தில் தாளாத வலியும் கடுப்பும்.

தலைப்புறமாக அடிபட்டதினால் தலைவலி — காற்றில் உயரத்தூக்கிச் செல்லப்படுவது மாதிரி தோற்றம். அவ்வளவு உயரத்தில் அவன் விழுந்துவிடுவானோவென்ற பீதி.

## (107) இக்னேஷியா

ரொம்ப முரண்பாடுடைய மருந்து. அதாவது காதின் இரைச்சல் அதிக சத்தத்தினால் குறையும்; மூலம் நடப்பதினால் சாதகமாகும். வயிற்றில் ஒன்றுமே இல்லாததுபோன்ற உணர்ச்சி சாப்பிட்டதினால் சாதகப்படாது; திரவங்களை விழுங்க சிரமம், கெட்டியானவைகளை விழுங்குவது சுலபம்; அதிகமாய் இரும இரும, இருமல் சமனப்படும்; நடந்துகொண்டிருக்கும்போது அசையாமல் நின்றால் இருமல் வரும். தூக்கத்தினால் சிரிப்பு. பேடித்தனத்துடன் அதிக காம இச்சை; குளிர் நடுக்கலின் போது தாகம்; சுரத்தில் தாகமின்மை; சுரமாயிருக்கும் போது முகத்தின் கலர் மாறுதல், இம்மாதிரி.

அடிக்கடி மனது மாறும். துக்கத்திலிருந்து ஆனந்தம்; சிரிப்பிலிருந்து அழுகை—சோகம்.

நீடித்த துக்கத்தினாலும், கோபத்தினாலும் ஏற்படும் உடம்பு, மனது இவற்றின் தளர்ச்சி.

கோபம், துக்கம்; ஏமாற்றமடைந்த காதல், இவைகளின் கொடுதல்கள், தனியே உட்கார்ந்து கற்பிக்கப்பட்ட அபாயங்களை நினைத்து யோசனை செய்வர்.

தானாக பெருமூச்சு; வயிற்றில் ஒன்றுமில்லாததுபோல சங்கடம், சாப்பிட்டால் தீராது; குன்மம் அஜீரணம்.

திடமில்லாமை, தீர்மானமில்லாமை, பொறுமையில்லாமை, சண்டைபோடும் குணம்.

உடம்பு சுகமாயிருந்தால் இளகிய சுபாவம், சிறிது அதிர்ச்சியினாலும் ஆத்திரம். ரொம்ப துரிதமாகக்கோபம்.



கெட்ட சமாசாரங்களினாலும், அவமானம், அடக்கி வைக்கப்பட்ட மனோ துக்கம் முதலியவற்றால் ஏற்படும் கெடுதல்.

சற்று மறுத்துக்கூறினாலும் கோபமேற்படும்; அது தன்னிடத்திலேயே கோபம்கொள்ளச் செய்யும்.

ஹிஸ்டிரியா—ஹிஸ்டிரியாவின் வாதம்—தொண்டையில் பந்துபோன்ற அடைப்பு.

தலைவலி—ஆணியைச் செலுத்தின மாதிரி—அந்தப் புறமாக படுத்துக்கொண்டால் சாதகம்.

புகையிலை ஒவ்வாது—புகையிலைப் புகை பட்டாலும் தலைவலி அதிகரிக்கும் அல்லது உண்டாக்கும்.

பேசும்போதும், சாப்பிடும்போதும் கன்னத்தைக் கடித்துக்கொள்ளுதல்.

சாப்பிடும்போது முகத்தில் ஒரு சிறு இடத்தில் வியர்வை.

நரம்புகளெல்லாம் மிக்க உணர்ச்சியுடனிருத்தலால்—வலி தாங்காது—வெளி அதிர்ச்சிகள் வெகு துரிதமாகத் தாக்கும்.

மலச்சிக்கல்—குடல் பலவீனம்; வண்டியில் போவதினால், மலம்போக உணர்ச்சி, மேல் வயிற்றில் அதிகம் தெரியும்—அதிக வலி, கக்கூசுக்கு போக பயம்—அதிகமாக காபி குடிக்கும் ஸ்திரீகளுக்கு.

ஆசனம் தள்ளும்; கொஞ்சம் முக்கினாலும் வெளித்தள்ளும், குனிந்தாலும், சாமானைத்தூக்கினாலும், இருக்கும்—தளர்ந்த மலத்தினால் அதிகரிக்கும்.

மூலம்; மலத்தோடு வெளித்தள்ளும்; மறுபடியும் கையினால் அமுக்கித் தள்ளவேண்டும்: ஆசனவாயில் மேலேறும் குத்தும் வலி. மலம் பிரிந்த பிறகு அதிகரிக்கும்.

தூங்கும்போது துடிப்புகள், உதறல்; ஒரு கால், கை அல்லது முழு உடம்பும்.

சுரம் குளிரின் போதும் முகம் சிவப்பு; குளிரின்போது மாத்திரம் தாகம்; சூட்டினால் சாதகம்; சூட்டில் தாகமின்மை; போர்த்துக்கொண்டால் சாதகமில்லை.

சரியாக ஒரே மணிக்கணக்காக வரும் கோளாறுகள்.

ப்ளேக் வியாதிக்குச் சிறந்தது.

---

## (108) அயோடம்

க்ளாண்டு வீக்கங்களுக்குச் சிறந்தது. கருப்பு திரேகிகள்—கருத்த மயிர், கருத்த கண்—அதிக இளைப்பு—அதிக களைப்பு வியாதியால் அழன்ற தேகம்.

எல்லா (கிளாண்டு) கோளங்களும் வீங்கிப்பெருக்கும்;- உடம்பு இளைக்கும்—ஸ்தனம் மட்டும் வாடிச்சுருங்கும்.

தைராயிட் கிளாண்டு வீங்கும்—சாப்பிட்டால் சாதகமாக இருக்கும்.

அகோரப்பசி, நிறையச் சாப்பிடுவர் — நன்றாகச் சாப்பிடுவர், ஆனால் சதா சதை குறைந்து இளைப்பர்.

பசியினால் அடிக்கடி சாப்பிடவேண்டும் — சாப்பிடா விட்டால் ரொம்ப துன்பமடைவர்; சாப்பிட்டால் அல்லது சாப்பிடும்போது சாதகமாகத் தோன்றும்.



ரொம்ப பலவீனம்; காரணமில்லாத பலவீனம்; படியேறினால் மூச்சுத் திணறல் — மாதவிடாயின்போதும் மூச்சுத் திணறல்.

பகல் முழுவதும் வெறும் ஏப்பம்; சாப்பிட்ட ஆகாரம் முழுவதும் காற்றாக மாறிவிட்டதுபோல தோற்றம்.

மனதில் ஆதுரம், கவலை, நகர இச்சை; ஏதாவது துரிதமாக செய்யவேண்டுமென்ற எண்ணம், யாரையாவது சொல்லவேண்டுமென்ற எண்ணம்.

உடம்பு இளைத்தாலும் சூடு குறையாது — அசையவோ, யோசனைசெய்யவோ, வேலைசெய்யவோ ஒரு குளிர்ந்த இடம் வேண்டும்.

நுரையீரலில் ஆழத்தில் அரிப்பு; நடு மார்பு எலும்பிற்கு அடியில், இருமல் ஏற்படும்; பிரான்கியல் குழாய் வழியாக சென்று மூக்குவரையில் அரிப்பு.

க்ரூப்—வரண்ட இருமல்—உஷ்ணமும் நைப்பும் உள்ள காலத்தில் அதிகம் — ரம்பம் அறுப்பதுபோன்ற மார்ச்சளியின் சப்தம்.

குழந்தை இருமும்போது தொண்டையை அமுக்கிக் கொள்ளும் — முகம் வெளுத்து, சில்லிடும்; கொஞ்சம் கொழுத்த குழந்தைகள்.

ஹிருதயத்தை இறுக்கி அமுக்கினாற்போல உணர்ச்சி; இரும்புக்கையினால் அமுக்கிப்பிடித்ததுபோல.

கொஞ்சம் உடலசைத்தாலும் படபடப்பு.

நாட்பட்ட வெள்ளை ஒழுக்கு—மாதவிடாய் காலத்தில் அதிகப்படும்—பட்ட இடங்களிலும், துணியையும் அரித்துப் பொத்துவிடும்.

ஏராளமான மாதவிடாய்ப்பெருக்கு-கர்ப்பப்பை புற்று-ரத்தப்பெருக்கு—வயிற்றில் வெட்டும் வலி — மலம் பிரியும் போது ரத்தப்பெருக்கு, கர்ப்பப்பையிலிருந்து ஏற்படும்.

மலச்சிக்கல்—குளிர்ந்த பால் சாப்பிட்டால் சாதகம்.

உடல் முழுவதும் துடிப்பு—வயிறு, முதுகு; கை கால், விரல்கள் எங்கும்.

---

## (109) இபிகாகுவானா

ஓயாத குமட்டல், எதனாலும் சாதகப்படாது, எல்லா வியாதிகளிலும்.

குமட்டலுடன், ஏராளமான உமிழ்நீர், வெள்ளை கோழையாக வாந்தி — குமட்டல் சாதகப்படாது. பிறகு தூக்கம், குனிந்தால் அதிகரிக்கும், கர்ப்பகாலத்திலும், புதிதாக புகையிலை உபயோகிப்பவர்களுக்கும்.

இலைப்பச்சையான, நுரைத்த சீதக்கட்டுடன் கூடின, தண்ணீர் மாதிரியான, அதிக ரத்தங்கலந்த மலங்கள்.

இளையுதிர்கால ரத்த சீதபேதி - இரவு குளிர்ந்தும் பகல் உஷ்ணமாயுமிருந்தால்—தொப்புளைச்சுற்றி வெட்டும் வலி.

காலரா ஏசியாடிகா—ஆரம்பத்தில்—குமட்டல் வாந்தியுடனிருந்தால்.

தலைவலி—அடிபட்டு சிராய்த்த மாதிரி, தலை எலும்பிலெல்லாம் வலி, நாக்கு அடிவரைக்கும் வலி-குமட்டலுடன்.

நல்ல சிவந்த ரத்தப்பெருக்கு-எங்கிருந்தும், கர்ப்பப்பையிலிருந்து—மூச்சுவிட கஷ்டம், குமட்டல், தொப்புளிலிருந்து கர்ப்பப்பை வரையில் சுருக்கென்ற வலி.



வயிற்றில் இடதுபுறத்திலிருந்து வலது பக்கமாக வெட்டும் வலி.

ஆஸ்த்மா மாதிரி இருமல், ரொம்ப தளர்வும், வயிற்றில் சங்கடமும், இழுப்புடன் இருமல் — கொஞ்சம் வேலை செய்தாலும் மூச்சுத்திணறல்.

கக்குவான் — குழந்தை மூச்சு திணறி நிற்கும், விறைத்து நீலம் பூத்துவிடும் — நாசி அல்லது வாயிலிருந்து இரத்தம் பெருகும்—கோழை கக்கும்.

மூச்சு உள்ளிழுக்கும்போது களகளவென்ற சப்தம்; கோழையினால் மூச்சு நின்றுவிடும்போல.

முதுகுவலி — உடம்பெல்லாம் எலும்புகளை முறித்துத் துண்டாக்கினமாதிரி வலி.

மலேரியா அல்லது முறைக்காய்ச்சலில் கொயினாவைக் காட்டிலும் நல்லது. குமட்டல். அதிகக்கொயினா கொடுத்துக் குட்டிச்சுவரான கேசுகளில் இது நன்றாக வேலைசெய்யும்.

முறையாக ஒன்றுவிட்டு மற்ற நாளில் அதே சமயத்தில் அஜீரணம், சுரம் — குமட்டல், உஷ்ணமும், குளிரும் இரண்டும் தாங்காது.

வயிறு தளர்ந்து தொங்குவது மாதிரித் தோன்றும் — சற்று அசைந்தாலும் குடலில் ஐந்து விரல்களையும் அழுத்தி பிடித்து இறுத்தினமாதிரி திருகும் வலி.

---

## (110) கேலி-பைக்ரோமிகம்

எந்த மியூகஸ் சதையிலிருந்தும் கண் — நாசி, வாய், தொண்டை, சுவாசக்குழாய், மூத்திரக்குழாய், குடல்

எங்கிருந்தும் கம்பிபோன்ற, பிடித்தமான, கோழை-லேசில் வராது—கயிறு மாதிரி தொங்கும் — கம்பிபோல் இழுக்கலாம்.

உஷ்ணகாலத்திலேற்படும் வியாதிகள்—திறந்த காற்றில் சலதோஷம் பிடிக்கும்.

கிரந்திப் புண், ஸோரா முதலிய தேகவாதிகளுக்கும், ஸ்தூல சரீரிகளுக்கும் ஏற்படும் கப சம்பந்தமான வியாதிகள்.

புண்கள் வட்டவடிவமாகவும், கோணலில்லாத விளிம்புடன் ஆழமாக இருக்கும்.

தொண்டைக்குழியில் ஆழத்தின்னும் குழிப்புண்கள்.

வலிகள் அங்குமிங்கும் துரிதமாக ஏற்பட்டு மறையும்.

சிறு சிறு புள்ளிகளாக வலி தோன்றும். இது தலை வலியில் சகஜம்.

தினம் ஒரே டயத்தில் வரும் நரம்பு வலி.

தலைவலிக்கு முன் கண் மங்கி பார்வை மறையும்—படுத்துக்கொண்டு வெளிச்சத்தை மறைத்துக்கொள்ள வேண்டும், தலைவலி அதிகரிக்க பார்வை வரவர சரியாகும்.

வாயு—ரத்த சீதபேதி அல்லது பேதியுடன் மாறி வரும்.

அதிக பீர் சாப்பிட்டதால் ஏற்படும் அஜீரணம்; பசியின்மை வயிற்றில் கல்போட்ட மாதிரி—காற்றுப்பிசம்; சாப்பிட்டதும் அதிகமாகும்; கம்பி போன்ற கோழையையும் ரத்தத்தையும் வாந்தி செய்வார்—குன்மப்புண்.



நாசியின் நடுத்தண்டு புண்ணாகி கடினமான சளி வெளி வரும்.

நாசியிலிருந்து தசை மாதிரி சளி வெளிப்படும்—கம்பி மாதிரி, ஒட்டிக்கொண்டு, பச்சை நிறமாக, மூக்கின் அடிப்பாகத்தில் வலியுடன் அல்லது பின் தலையிலிருந்து நெற்றி வரையில் தாளாத வலியிருக்கும்.

டிப்திரியா — பிடித்தமான அழுத்தமான ஜவ்வு. உள் நாக்கு தண்ணீர் பை மாதிரி ஒப்பியிருக்கும்—ஆனால் சிவந்திருக்காது.

இருமல்—தொண்டையில் பிசுக்கென்ற கோழையுடன் மூச்சுத்திணறல் — உடம்பிலிருந்து துணிகளை எடுத்தால் அதிகரிக்கும்.

க்ருப்—வெண்கலச் சத்தத்துடன், தொண்டைக் கம்மல் — காலையில் திணறலுடன் பிசின் போன்ற கோழை — படுத்துக்கொண்டால் சாதகம்.

கர்ப்பப்பை வெளித்தள்ளின மாதிரி தோற்றம்.

ஸ்தூல சரீரமுடையவர்களுக்கு போக இச்சை குறைவு.

---

## (111) கேலி-ப்ரோமேடம்

நரம்பு அமைதியின்மை; சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. நகர்ந்துகொண்டு அல்லது ஏதாவது செய்துகொண்டிருக்க வேண்டும்—கைகளும், விரல்களும் சதா அசைந்துக்கொண்டிருக்கும்.

தள்ளாடும், ஆடும் நடை; கால்களில் உணர்ச்சியின்மை; உடம்பு முழுவதும் உணர்வின்மை.

அடக்கமுடியாத அழுகை, அடக்கமுடியாத சோகம்— அடிக்கடி ஏற்படும்.

மறதி—எப்படிப் பேசுவதென்பதே மறந்துவிடும்— பேசுவதற்குமுன் வார்த்தை சொல்லித்தரவேண்டும்.

மனத்தளர்ச்சி, உற்சாகமின்மை; கவலை, 'மனதே' நஷ்டமாகிவிடும்போல தோற்றம்.

நரம்புத் தளர்ச்சியினுல் தசைகள் வேலை செய்ய மறுக்கும்; மரமரப்பு.

தொழில் கவலையினுலும், பொருள் அல்லது, பெயர் நஷ்டத்தாலும், அமைதியின்மையுடன் தூக்கமின்மை.

குழந்தைகளுக்கு வயதானவர்களைவிட நன்ருக வேலை செய்யும். இரவில் குழந்தை பயந்து—பற்களை நறநற வென்று கடிப்பார்கள். தூக்கத்தில் கத்துவார்கள், முனகு வார்கள், பயங்கரமான சொப்பனம். சமாதானப்படுத்த முடியாது—தூக்கத்தில் நடப்பர்.

காக்கை வலிப்பு—பிறவியிலிருந்தே, கிரந்தி நீரினுல், டி.பி.யினுல் மாதவிடாய்க்கு ஒன்றிரண்டு நாள் முந்தி, அமாவாசையின்போது, தலைவலியுடன் ஆரம்பிக்கும்.

பயம், பீதி, கோபம், மன அதிர்ச்சி இவைகளினுல், பிரசவத்தின்போது, பல் முளைக்கும்போது, கக்குவானிருமலின்போது, பிரைட்ஸ் வியாதியில் இழுப்பு இசிவுகள்.

காலையில் தினம் 5 மணிக்கு சிறு குழந்தைகளுக்கு வயிற்றுவலி.

கர்ப்பத்தின்போது நரம்புத்தளர்ச்சியினுல் வரண்ட, கடினமான, ஓயாத, இருமல்; சிதைவு ஏற்படுமென்ற சம்சயம்.



திக்குவாய்—மெதுவாகப் பேச்சு.

முகப்பரு—எல்லா விதங்களும், சிவந்து சீழ்கோத்துக் கொண்டு, முகம்; மார்பு, தோள்பட்டை, அசிங்கியமான வடுக்களுடனிருக்கும்-சிறு வயதினர்கள் - நடத்தைப்பிசகு.

---

## (112) கேலி–கார்பானிகம்

சுருக் சுருக்கென்று குத்தும் வலிகள். பாயும் வலி, சும்மாயிருக்கும்போது அதிகமாகவும், வியாதி தாக்கப்பட்ட பாகத்தில் படுத்துக்கொண்டால் அதிகமாகவும் இருக்கும்.

வயதானவர்களுக்கும், மகோதரம், பக்ஷவாதம் முதலியன உடையவர்களுக்கும், ஸ்தூலித்த தேகமுடையவர்களுக்கும் உகந்தது.

அதிகமாக சத்து குறைந்தவர்களுக்கும், ரத்த சோகையுடையவர்களுக்கும் உகந்தது.

ரத்த சோகையுடன் உப்புதல், மேல் கண்ணிமைகள் தண்ணீர் நிரம்பிய பை மாதிரி தொங்கும் — மேல் கண்ணிமைகளுக்கும், கண் புருவத்திற்கும் மத்தியில் பை மாதிரி வீக்கம்.

இடுப்பு வலி, வியர்வை பலவீனம் அதிகம், தொப்பென்று நாற்காலியில் உட்காரச் சொல்லும் கர்பச்சிதைவு, பிரசவம், உதிரப்பெரும்பாடு இவைகளுக்குப்பிறகு சாப்பிடும்போது நடக்கும்போது எங்கேயாவது உட்கார்ந்து கொண்டால் தேவலை எனத்தோன்றும்.

வலது மார்ப்புறம் முன்புறமிருந்து பின்புறம் வரையில் குத்தும் வலி.

வரண்ட, இருமல், தடித்த கோழை அல்லது சீழ் வெளிப்பட்டதும் விழுங்கவேண்டிவரும்; சாப்பிட்டதும் வெளியில் கக்கப்படும். இருமும்போது சிறிய, புகை போன்ற கட்டியான தூள்கள் தொண்டையிலிருந்து தெறித்து வெளிப்படும்.

ஆஸ்த்மா — எழுந்து உட்கார்ந்தால், முன்பக்கம் சாய்ந்தால் அல்லது அசைந்து ஆடினுல் சௌகரியம்—காலை 2லிருந்து 4 மணிவரை அதிகம்.

தொட்டால் தாங்காது — ரொம்ப லேசாக தொட்டு விட்டாலும் தூக்கிப்போடும், காலில் தொட்டால் மிக அதிகம்.

தனியாயிருக்க விருப்பமின்மை.

வயிறு காற்றினுல் உப்பியிருக்கும் — வெடித்துவிடும் போலுணர்ச்சி, ஏராளமான வாயு, சாப்பிடுவதெல்லாம் காற்ருக மாறும்.

கண்கள் சம்போகத்திற்குப்பிறகு, ஸ்கலிதமானபிறகு, கர்பச்சிதைவு, மணல்வாரி அம்மைக்குப்பிறகு பலவீனம்.

முகத்தை அலம்பும்போது காலையில் நாசியிலிருந்து ரத்தப்பெருக்கு.

சாப்பிடும்போதுமட்டும் பல்வலி, துடிக்கும், உஷ்ண மானதோ, குளிர்ந்ததோ எதுபட்டாலும் அதிகரிக்கும்.

மாதவிடாயின்போது இடுப்புவலி. மாதவிடாய்க்கு ஒரு வாரம் முந்தி ரொம்ப தொந்திரவு.

பிரசவ வலி பலக்குறைவு, கடும் இடுப்புவலி, இடுப்பை பிடித்துவிடவேண்டும்.



மலச்சிக்கல்—பெரும் மலம், ஒரு மணி அல்லது 2 மணி நேரம் முந்தியே கடும் வயிற்று வலி.

நுரையீரல் வியாதிகளில் அதுவும் புண் ஏற்பட்டு விட்டால் இம்மருந்து இல்லாமல் சௌகரியம் செய்ய முடியாது என்று ஸாமுவேல் ஹானிமான் எழுதியிருக்கிருர்.

தொண்டை விழுங்கமுடியாது; தொண்டையில் குச்சி மாதிரி குத்தும் வலி. காற்றுக் குழாயில் ஆகாரம் சட்டென்று சென்றுவிடும்—விழுங்கும்போது இடுப்பு வலி.

ஹிருதய வீக்கம்—அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும்—ஹிருதய வியாதியுடன், மகோதரம், பாண்டு வீக்கம், க்ஷயம் முதலியன.

## (113) கேலி-அயோடாடம்

இருமல், நிறைய தடிப்பான, பச்சையான உப்பு ருசியுடைய கோழை, நடு மார்பிலிருந்து வருவதுபோல—பின்புறம் வரைக்கும் வலி—ரொம்ப பலவீனம்—இரவில் வியர்வை—க்ஷயம் ஆரம்பிக்குமோவென்ற சந்தேகம்.

நுரையீரல் வலி — மார்பு நடு எலும்பு முன்புற மிருந்து பின்புறம் வரையிலும் குத்துவலி — நடந்தால் அதிகரிக்கும்.

திறந்த காற்றில் இருக்கப் பிரியம். திறந்த காற்றில் நடந்தால் அயர்வு தோன்றுது — எலும்பைச்சுற்றி மூடி யிருக்கும் சதை வாயு.

தாங்கமுடியாத எலும்பு வலி. இரவில் அதிகம், ஸிபிலிஸ் உடையவர்கள், அதிகமாக பாதரசம் சாப்பிட்டவர்களுக்கு உபயோகம்.

கிளாண்டு வீக்கங்கள்; எலும்பு வீக்கங்கள் முதலியன.

## (114) கேலி - மூரியாடிகம்

நாக்கின் அடியில் வெண்மையான அல்லது வெளுர் கருப்பான படர்ச்சி.

எந்த மியூகஸ் சதையிலிருந்தும் வெண்மையான, தடிப்பான கோழை அல்லது சீதம்.

காது வலி—காது சீழ், வெள்ளை சீழ்.

கண் ரோகங்கள்—வெள்ளை மியூகஸ் கசிவு.

தொண்டை வலி, டிப்திரியா, வாய்ப்புண், தாளம்மை, டான்சில்ஸ்.

ஆஸ்த்மா, ப்ரான்கைடிஸ், நிமோனியா, இருமல்—வெண்மையான தடிப்பான கோழை, ப்ளூரஸி, க்ஷயம், வலதுபுறம்.

க்ளாண்டு வீக்கங்கள்.

தோலில் மாவு மாதிரி செதில்களுடன் வியாதி.

எந்த வியாதியும், வலியும் அசைந்தால் அதிகரிக்கும்—கொழுப்பு அதிகமுள்ள பதார்த்தத்தாலும், அதிகரிக்கும்.

ஈரல் வியாதி, மஞ்சட்காமாலை, வெண்மையான மலம்.

மலச்சிக்கல், மூலம்—பூச்சிகள்.

ரத்த சீதபேதி—வலியுடன் முக்கல்.

கானரியா—மூத்திரத்தில் அல்புமன் சத்து—மஞ்சள் மஸ்டு, கருநிறமான கலங்கின மூத்திரம், மூத்திரப்பை வீக்கம்.

கடும் வாயு சுரம்-வீக்கம், அசைந்தால் மட்டும் வலி. வெண்மை படர்ந்த நாக்கு, இரவில் வாயு வலி.



## (115) கிரியோசோடம்

ஒல்லியாய் சரியான வளர்ச்சியில்லாத, சரியான ஆகாரமில்லாத அதிக வளர்ச்சியுடைய, தன் வயதிற்கு அதிக உயரமானவன்.

வயதானவர் மாதிரி, சுருக்கம் விழுந்து, ரொம்ப இளைத்து இருக்கும் குழந்தைகள்—மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஸ்திரீகளின் வியாதிகள்.

குழந்தைக்கு காலரா — துர்நாற்றமுடைய மலம் — ஏராள வாந்தி.

ரத்தக்கசிவுடைய தேக வாகு — சின்ன காயங்களும் ரொம்ப ரத்தம் கொட்டும். ரத்தம் ஓயாமல் பெருகும்; நாசியிலிருந்து, டைபாயிட் சுரத்தில் குடலிலிருந்து, ரத்த மூத்திரம், ரத்த வாந்தி—எங்கிருந்தும் கருப்பாக இரத்தம் —பல் பிடுங்கின பிற்பாடும் ரத்தக் கசிவு.

மியூகஸ் கசிவுகள், அமிலம் மாதிரி குணமுடையனவாயும், பட்ட இடம் புண்ணாக்கியும் விடும்.

ஏராளமான மூத்திரம், சட்டென்று பிரிக்கமுடியாது; அவ்வளவு துரிதமான இச்சை. மூத்திரம் பிரியும்போதும், அதற்குப் பிறகும் கடுப்பு, எரிச்சல், படுத்துக்கொண்டால் தான் நீர் பிரியும்.

படுக்கையில் குழந்தைகள் முதல் தூக்கத்தில் மூத்திரம் பிரித்துவிடும். தூக்கத்திலிருந்து லேசில் எழுப்ப முடியாது.

துரிதமாக ஏற்படும் மாதவிடாய் நீடித்துமிருக்கும், வலியுமிருக்கும், மாதவிடாய் கண்ட பிறகு அதிகரிக்கும்;

படுத்துக்கொண்டால்தான் மாதவிடாய் காணும். உட்கார்ந்தாலோ நடந்தாலோ நின்றுவிடும்; சில்லென்ற பானம் வலியைக் குறைக்கும், விட்டு விட்டு வரும் மாதவிடாய்.

மாதவிடாயின்போது கடும் தலைவலி, காதில் இரைச்சல்.

வெள்ளை, துர்நாற்றம், பட்ட இடம் புண்ணாக்கும், மாதவிடாய்க்கு இடைக்காலத்தில்—கஞ்சி மாதிரி துணியை விறைப்பாக்கும், மஞ்சள் கரைபடும்.

இடுப்பில் எரிச்சல், கட்டிதட்டின ரத்தம், கருநிறம், விட்டு விட்டு வரும்.

அரிப்பு, சாயங்காலங்களில் ரொம்ப அதிகம்.

யோனி அரிப்பு—கடும் அரிப்பு.

கர்ப்பகால வாந்தி, தித்திப்பான உமிழ் நீர் ஊறும்—காலராவில் வாந்தி—பல் முளைக்கும்போதும், புற்றுமாதிரியான வயிற்று வியாதிகளிலும் வாந்தி.

பல் முளைத்தவுடன் சொத்தையாகிவிடும் — பல் முளைக்க கஷ்டம்; ஈரல் கருஞ்சிவப்பாக, மிருதுவாகி, பஞ்சு போல் நைந்து, ரத்தம் கசியும் புண்ணாகிவிடும்.

## (116) லாக் கானினம்

வலி—அடிக்கடி இடம்விட்டு இடம் மாறும்—ஆனால் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம்-மாறும்-வியாதிக் குறிகளும் அப்படியே.

டிப்திரியா, டான்சில்ஸ்—குறிகள் பக்கத்தில் இருந்து பக்கம் மாறும்.



வாயு வலிகள், தொண்டை கரகரப்பு — இடம்விட்டு இடம்—பக்கம் மாறும்.

தொண்டை வெளிப்புறம்கூட தொடமுடியாது. வெறுமனே விழுங்கினாலும்கூட சிரமம்; அடிக்கடி விழுங்கவேண்டும். ஆனால் வலி அதிகம்; காதின் பக்கம் வலி பரவிவிடும். இடது பக்கம் ஆரம்பிக்கும்.

பளபளவென்று இருக்கும் டிப்திரியா ஜவ்வு—குழிப் புண்கள் — கிரந்திப்புண்கள்.

ஒரே பசி—போதுமான அளவிற்குச் சாப்பிட முடியாது. சாப்பிட்ட பிற்பாடும் ஒரே பசி.

வயிற்றில் சங்கடம்—வயிற்றில் மயக்கம்.

ஒரு நாசி அடைபட்டு அடுத்தது சரியாக இருக்கும். இது மாறி மாறி வரும்—சளி புண்ணாக்கும் தடித்த வெள்ளைச்சளி.

மாதவிடாயுடன் ஆரம்பித்து முடிவடையும் தொண்டைக் கரகரப்பு, இருமல், காதுவரையில் குத்தும் வலி.

மாதவிடாய் துரிதமாகக்காணும், அதிக அளவு, சிவந்த ரத்தமாக வெளிப்படும், தடித்து கம்பிபோலுமிருக்கும், ஸ்தனங்கள் வீங்கி, வலியுடன் மாதவிடாயின்போதும், முந்தியுமிருக்கும்.

யோனிக் குழாயிலிருந்து காற்று வெளிப்படும்.

ஸ்தனங்கள் வீங்கியிருக்கும், சற்று அசைந்தாலும் அதிகரிக்கும். மாலை நேரத்திலும் அதிகரிக்கும்; கீழிறங்கும்போது அவைகளை இறுக்கிப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

பாலை வற்றவைக்கச் சிறந்த மருந்து.

பாலூட்டும்போது காரணமில்லாமலே பால் குறையும்.

இடதுபக்கம் படுத்துக்கொண்டால் படபடப்பு, வலது பக்கம் புரண்டு படுத்தால் சாதகம்.

கீழே படுத்துக்கொண்டால் மூச்சு போய்விடும்போலுணர்ச்சி, ஆகவே எழுந்து நடக்கவேண்டும்.

நடந்தாலும், உராய்ந்தாலும், நடக்கும்போது உரசினலும் மர்மஸ்தானங்கள் உணர்ச்சி அதிகப்படும்.

நடக்கும்போது காற்றில் நடப்பதுபோலிருக்கும். படுக்கும்பொழுது படுக்கையில் படாததுபோலிருக்கும்.

தாங்கமுடியாத இடுப்பு வலி, சும்மா இருந்தால் அதிகரிக்கும், அசைய ஆரம்பிக்கும்போது அதிகரிக்கும், முள்ளந்தண்டு மூளை அடியிலிருந்து கடைசி வரைக்கும் வலி — தொட்டாலும் அமுக்கினாலும் தாங்காது.

அமைதியில்லாத ரொம்ப நரம்பு அதிர்ச்சியுடையவர்கள்.

ரொம்ப மறதி, ஞாபக மறதி, வாங்கின சாமான்களை கடையிலேயே வைத்துவிட்டு நடையைக்கட்டி விடுவர்.

எழுதும்போதும் ரொம்ப அதிக வார்த்தைகளை உபயோகிப்பர் அல்லது சரியில்லாத வார்த்தை உபயோகிப்பர், கடைசி எழுத்தை விட்டு விடுவர், வாசிக்கவோ, புரிந்து கொள்ளவோ மனது வசப்படாது.

திடமின்மை, தன் வியாதி தீராதென்ற நம்பிக்கை, நம்பிக்கையின்மை, ஒரு சினேகிதன் கூட இல்லை என்ற



எண்ணம், உயிரோடு இருப்பது பிரயோசனமில்லை என்பது எண்ணம், எந்த நிமிஷத்திலும் அழுவர்.

ஆத்திரம், ஆங்காரம், குழந்தை சதா அழுதுகொண்டும், கத்திக்கொண்டும். பெரும்பாலும் இரவில் அதிகம்.

தனியாக யிருக்க பயம்—கீழே விழுந்துவிடுவோமென்ற பயம்; செத்து விடுவோம், பைத்தியமாகி விடுவோமென்ற பயம்.

அடிக்கடி கோபம், கொஞ்சம் கோபமூட்டினாலும்; வசவு, திட்டு; சாபம் கொடுப்பர், பொறுமை, துராங்காரம், அலங்கோலம்.

நீடித்த 'கருமை' எதுவும் கருப்பாகத் தென்படும்— அதைவிட கருப்பாக முடியாதென்ற தோற்றம்.

---

## (117) லாக் டிப்ளோராடம்

தலை வலி—நெற்றியில் ஆரம்பித்து பின் தலையில் சென்று முடியும். காலையில் எழுந்ததும் ஆரம்பித்து கடும் துடிப்பு; குமட்டலும், வாந்தியும், கண் இருட்டு; கடும் மலச்சிக்கலுடனிருக்கும் — சத்தத்தினல் அதிகரிக்கும், வெளிச்சம், அசைவு உதவாது, மாதவிடாய் காலத்தில் அதிகம், ரொம்ப அசதி, அமுக்கிப் பிடித்துக்கொண்டால் சாதகம்; ஏராளமான மூத்திரம்.

ஓயாத வாந்தி—சாப்பாட்டிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை; முதலில் ஜீரணமாகாத ஆகாரம்; ரொம்பவும் புளிப்பானது; பிறகு கசப்பான நீர்—கர்ப்ப காலத்திலும்.

தொண்டையில் பந்துபோல அடைப்பு; பெரிய பந்து வயிற்றிலிருந்து கிளம்பி மூச்சு திணறும்படியாக ஏறி அடைக்கும்.

ரொம்பக் கடுமையான மலச்சிக்கல்; முக்கினுலும் பிரயோசனமில்லை—வரண்டு, கெட்டியான, பெரும் மலம்—முக்குவதினுல் ஆசனம் கிழியும், வலி தாங்காததினுல் கத்த வேண்டியிருக்கும்.

நாள் தங்கின மாதவிடாய், குளிர்ந்த தண்ணீரில் கையை நனைப்பதால் நின்றுவிடும் மாதவிடாய், ஒரு கிளாஸ் குளிர்ந்த பாலைக்குடிப்பதால் உடனே மறுமாதம் வரைக்கும் மாதவிடாய் தங்கிவிடும்.

தூக்கமின்மையினுல் — ரொம்ப அமைதியின்மை; ஓயாத துன்பம்.

ரொம்ப அசதி; வேலைசெய்தாலும் செய்யாவிட்டாலும், நடந்தாலும் ஒரே அசதி—ஓய்ச்சல்.

போர்த்துக்கொண்டிருந்தபோதிலும்கூட மேல் போர்த்துக்கொண்டிருக்கும் துணி ஈரமாயிருப்பதுபோல், குளிர்ந்த காற்று உடம்பில் படும்.

ஹிருதய வியாதியினுல் — உடம்பு சுரப்பு — நாள்பட்ட கல்லீரல் வியாதியினுல் முற்றின அல்புமனேரியா (மலேரியாவிற்குப் பிறகு).

உடம்பு ஊதிப் பெருத்தல்.

சரியானபடி சத்துள்ள ஆகாரமில்லாததால் ஏற்படும் வியாதிகள்.

மனச்சோர்வு. தான் நிச்சயமாக சாகப்போகிறேமென்று சாவிற்கு பயப்படுவதில்லை.

---



## (118) லாசெசிஸ்

ரொம்பக் கவலை, துக்கம்—வருத்தம், சோம்பல்.

எல்லா வியாதிகளும் இடது பக்கம் அதிகம்—தொண்டை, மார்பு, சினைப்பை—இடது பக்கம் ஆரம்பித்து வலது புறம் போகும்.

பொதுவாக ரொம்ப இளைத்தவர்களுக்கும், மெலிந்தவர்களுக்கும் உகந்தது; வியாதியினுல் உருக்குலைந்தவர்களுக்கு சிறந்தது.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படும் வியாதிகள் மூலம், பெரும்பாடு. உடம்பெல்லாம் சூடான வியர்வை; வெப்பக்கனல் வீசும்; உச்சந்தலையில் எரிச்சல்; தலைவலி—ஈயம் மாதிரி கனத்துத்தோனும்.

நாட்பட்ட வருத்தம், கவலை, பீதி, அவமானம், பொருமை, முடிவடையாத காதல் இவைகளினுல் நோய்; தானறியாமலே பெருமூச்சு.

மாதவிடாய் நின்ற காலத்திலிருந்து உடம்பு 'சரியாயில்லாமை'.

ஸ்பரிச உணர்ச்சி அதிகரித்திருக்கும்—தொண்டை, வயிறு, உதரம், மேல் துணிகூட தொண்டையும், வயிற்றிலும் படமுடியாது. வலி வீக்கத்தினுல் அல்ல, ஆனுல் ஒருவித குறுகுறுத்தும் உணர்ச்சியினுல்.

ஆகவே இடுப்பிலும், தொண்டையிலும் இறுக்கிக் கட்ட முடியாது.

அதிக உஷ்ணமும், அதிக சீதளமும் ரொம்ப பலவீனத்தை உண்டாக்கும்.

குடிகாரனுக்கு ஏற்படும் தலைவலிமூலம், அபாப்ளக்ஸி, எரிசிபிலஸ் முதலியன.

பொட்டுகளில் தெறிக்கும், அமுக்கும் தலைவலி, அசைந்தாலும், அமுக்கினாலும், குனிந்தாலும், படுத்துக்கொண்டாலும், தூக்கத்திற்குப் பிறகும் தலைவலி—தூங்குவதற்கே பயம், ஏனென்றால் தூங்கி எழுந்தால் தலைவலி வந்துவிடும்.

சாராயக்குடிக்குப் பிறகு தலைக்கு அதிக ரத்தம் ஏறுதல்; மனோ அதிர்ச்சி, சரிவரயில்லாத மாத விலக்கு, மாதவிடாய் நிற்கும் காலத்தில் அபாப்ளக்ஸியில்—தலைக்கு அதிக ரத்தம் செல்லுதல்.

எல்லாக்குறிகளும், பெரும்பாலும் மனக்குறிகள் தூக்கத்திற்குப் பிறகு அதிகமாகும் அல்லது வியாதி அதிகரித்து தூக்கத்தைக் கலைத்துவிடும்; அதிக வியாதியின்போது தூக்கம்—சந்தோஷமின்மை, கவலை, துக்கம்-காலையில் எழுந்ததும் அதிகரிக்கும்.

தூங்க ஆரம்பித்தவுடன் மூச்சு நின்றுவிடும்.

வாயின் பக்கமோ, நாசியின் பக்கமோ ஏதாவது வந்தாலும் மூச்சு தடைப்படும்; விசிற வேண்டும், ஆனால் மெதுவாகவும், தூரத்திலும் விசிறவேண்டும்.

ரொம்ப மனத்தளர்வு, உடம்பு அயர்வு, உடல் முழுவதும் நடுக்கல், பலவீனத்தினால் அடிக்கடி அயற்சி, காலையில் அதிகம்.

அதி சந்தோஷம், ரொம்ப பேச்சு, பரந்த கற்பனைகள், ஞான திருஷ்டி மாதிரி மனநிலை, சதா பேசிக்கொண்டிருக்க வேண்டும். ஒரு எண்ணத்திலிருந்து இன்னொன்றுக்கு தாவுவர், ஒரு வார்த்தையே இன்னொரு கதைக்கு அடிபோடும்.



கடும் மலச்சிக்கல், குடலில் மலம் அப்படியே யிருக்கும்; மலம் பிரிக்க உணர்ச்சியிருக்காது. ஆசனவாய் நெருங்கி யிருத்தல் போல உணர்ச்சி.

சரியான காலத்தில் மாதவிடாய் ரொம்பக் குறைந்து இருக்கும்; வலியெல்லாம் மாதவிடாய் பட்டதும் சரியாகிவிடும். மாதவிடாயின்போது எப்போதுமே சௌகரியம்.

மூலம், மாதவிடாய் நிற்கும் காலத்தில் குத்தும் வலி.

தூக்கத்தின்போது வரும் காக்கை வலிப்பு—தாது நஷ்டத்தினால், ஹஸ்தப்பிரயோகத்தினால், பொறாமையினால்.

ரத்தம் பெருகும் தேகவாகு; சிறு காயங்களும் ஏராளமாக ரத்தம் கொட்டும்; கருப்பான, கட்டிதட்டாத ரத்தம்.

தாங்கமுடியாத வலியுடைய கட்டிகள், பிளவைகள், புண்கள்; கருப்பான, நீலமான, நிறம்—அழுகல் காணும்.

விஷக்காயங்களினால், கெடுதல்.

டிப்தீரியா, டான்சில்ஸ், இடது பக்கம் ஆரம்பித்து வலது பக்கம் போகும்; கருத்த நிறம், சூடான பானங்களினால் சாதகம்; தூக்கத்திற்குப் பிறகும் சாதகம்; கெட்டியான ஆகாரத்தைவிட திரவமான ஆகாரத்தை விழுங்குவது சுலபம். தொண்டை வியாதியின் கடுமையைவிட ரொம்ப அதிகமான அயர்வு, தளர்ச்சி.

வருஷந்தோறும் வரும் சுரம்; ஒவ்வொரு தளிர் காலத்திலும் வரும் சுரம். அதிகக் கொயினா சாப்பிட்டு அமுக்கப் பட்ட சுரம்.

டைபாயிட், டைபஸ், சுரம்—மயக்கம், பிரக்ஞையின்மை; முகம் வதங்கி, அடித்தாடை தளர்ந்து தொங்கி, நாக்கு

கருத்து, வரண்டு, நடுங்கும், வெளியே நீட்ட மிக சிரமப் படும், அல்லது நீட்டும்போது பல்லில் ஒட்டிக்கொள்ளும். கண் வெள்ளை ஆரஞ்சு நிறம் அல்லது மஞ்சளாகி, சில்லென்ற வியர்வை, வியர்வை கரையுண்டாக்கும், இரத்த நிறமான வியர்வை.

---

## (119) லீடம் பாலஸ்திரி

கூரான ஆயுதங்கள் குத்துவதினால் ஏற்படும் காயங்கள்; ஆணிகள், உளி, எலிக்கடி, பூச்சிக்கொட்டுகள், கொசுக்கடி முதலியன.

காயங்களுக்குப் பிறகு வெகுநாள் வரை இருக்கும் கரு நீல நிறம்.

வாயு, கவுட் சரீரிகளுக்குச் சிறந்தது. கண்ணிற்குள் ரத்தக்கசிவு—கண்களில் அடி.

வலி—குத்தும் வலி, கிழிக்கும், துடிக்கும், வாயு வலி கள்—அசைந்தால் அதிகரித்து, இரவிலும், படுக்கையிலும், போர்வையினாலும் அதிகரிக்கும். கால்களை ஐஸ் தண் ணீரில் வைத்துக்கொண்டிருந்தால்தான் சௌகரியம்.

நோயுற்ற பாகங்கள் இளைக்கும்.

வயதானவர்களுக்கு ஏற்படும் கோளாறுகள்; சதா குளிரினால் வருந்துவர்; உடம்பில் சூடே இராது; காயம் பட்ட பாகங்கள் சில்லென்றுமிருக்கும்.

வியாதியுற்ற பாகங்கள் தொட்டால் சில்லென்று இருக் கும்; ஆனால் வியாதியஸ்தருக்கு சில்லென்றிருப்பதாகத் தோன்றாது.



சில வியாதிகளில் படுக்கையின் சூடே தாங்காது, கால் கைகளில் எரிச்சல், சூடு.

முழங்கால்வரைக்கும் வீக்கம்; கணுக்காலில் நடந்தால் வலி; சுளுக்கிக்கொண்ட மாதிரி வலி—கால் கட்டைவிரலின் வீக்கம்; குதியங்காலில் சிராய்த்த மாதிரி வலி.

வாயு, கவுட்; கால்களிலிருந்து ஆரம்பித்து மேலேறி வரும். மூட்டுகளில் கவுட் கட்டிகள்; வலி தாங்காது. நரித் தலை வாயு.

இடது தோளும், வலது இடுப்பு மூட்டும் வலி.

கால்களிலும், கணுக்கால்களிலும் அதிக அரிப்பு, சொரியச்சொரிய இரவிலும் படுக்கையின் சூட்டிலும் அதிக ரிக்கும்—கொசுக்கடி.

நெற்றியிலும், கன்னங்களிலும் சிறு சிறு வேர்க்குரு மாதிரி சினைப்புகள்; தொட்டால் குத்தும்.

கணுக்கால்கள் சுலபமாக மக்களித்துக்கொள்ளும்.

பிளவைகள்.

---

## (120) லிலியம்

இடது பக்கம் தாக்கும் வியாதிகள்; வயிற்றிலும், இடுப் பிலும் கீழமுக்கும் தோற்றம்; எல்லா உள் அவயவங்களும் பிதுங்கி வெளிவந்துவிடும்போல, யோனியை கைவிட்டு அமுக்கிப்பிடித்துக்கொண்டால் அதிகமாகும். படபடப்பு மிருக்கும்.

நகர்ந்துகொண்டிருக்கும்போதுமட்டும் படும் மாதவிடாய் நடக்காமலிருந்தால் நின்றுவிடும்; கொஞ்சமாகவும், கருப்பாகவும், துர்நாற்றமுடையதாகவும் இருக்கும்.

சினைப்பை, கர்ப்பப்பை இவைகளின் வியாதிகளுடன் தான் தேறமாட்டோம் என்ற எண்ணம்—சமாதானப்படுத்தினுல் வியாதி அதிகரிக்கும்.

எண்ணங்களில் குழப்பம். ரொம்ப மனத்தளர்ச்சி-உற்சாகமின்மை, அழுகையைத் தடுக்கமுடியாது; அதிக சங்கோசி. பயங்கொள்ளி—அதிக அழுகை; தனக்காக செய்வனவற்றைப்பற்றி அவள் பொருட்படுத்துவதில்லை.

வியாதியைப்பற்றி கவலை; தீராத வியாதி என்று சந்தேகம்.

கர்ப்பப்பை வியாதியுடன் வெய்யவும், திட்டவும் விகாரமான எண்ணங்களும் உண்டாகும்.

காம விகாரத்தை அடக்க முடியாததினுல் வேலை செய்துகொண்டே இருக்கவேண்டும், அமைதியின்மை ஆனுல் நடக்க இச்சையில்லை; ஏதாவது செய்ய எண்ணம்; அவசரம்; ஆனுல் எதையும் செய்துமுடிக்க ஆதுரமின்மை; குறிக்கோளில்லாமல் அவசரம்.

தனியாயிருக்கவும், பைத்தியம் பிடித்துவிடுமென்றும், ஹிருதயம் தாக்கப்படுமென்றும், பயம்—கர்ப்பப்பை வியாதிகளினுல் தலைவலி, மனோ வியாதிகள்; கர்ப்பப்பை இடம் விட்டு பெயருதல்.

மேடு பள்ளமுள்ள தரையில் நடக்கமுடியாது.

அடிக்கடி இடம் மாறிக்கொண்டிருக்கும் வலி.



அடிக்கடி மூத்திரம் பெய்ய இச்சை ; உடனே போகாவிட்டால் மார்பில் ஏதோ இறுக்குவதுபோன்ற தோற்றம்.

ஹிருதயம் ஒரு இரும்புப்பிடியில் அகப்பட்டது போன்ற உணர்ச்சி ; உடம்பின் எல்லா இரத்தமும் ஹிருதயத்திலே போய்ச் சேர்ந்துவிட்டாற்போல் உணர்ச்சி—அப்படியே தெறித்துவிடும்போல தோற்றம்—நிமிர்ந்து நடக்க முடியாது.

துடிக்கும் படபடப்பு—ஹிருதயம் துடிக்கும் பாகத்தில் ஒரு துரிதமான கவலையுண்டாக்கும் உணர்ச்சி. இடது மார்பில் சுருக்கென்ற வலி. இரவில் விழித்துக்கொள்வர்; நாடி சரிவர அடிக்காது ; கால் கைகள் சில்லிட்டும், குளிர்ந்த வியர்வையுடனும் கூடியிருக்கும் ; சாப்பிட்ட பிறகும் எந்தப் பக்கமாக படுத்துக்கொண்டாலும் அதிகரிக்கும்.

ஹிருதயத்துடிப்பு ஒரு நிமிஷத்திற்கு 150 முதல் 170 வரை துரிதமாக இருக்கும்.

உடம்பு முழுவதும் துடிப்பு—இரத்தக் குழாய்களில் இரத்தம் அதிகமாகி பெருக்கெடுத்து ஓடுவதுபோல் நிரம்பின தோற்றம்.

அடிக்கடி மலம் கழிக்கவும், மூத்திரம் பிரிக்கவும் இச்சை, ஆசனவாயில் மலம் பிரிக்கவேண்டும்போல கனத்த உணர்ச்சி.

பிரசவத்திற்குப் பிறகு உடம்பு சீக்கிரமாகத் தேருது ; மலச்சிக்கல், கர்ப்பப்பை பலவீனத்தினுல் நிலை திரும்பி இருத்தல்.

## (121) லொபீலியா

நாட்பட்ட வாந்தி — நல்ல பசி; குமட்டல், அதிக வியர்வை, ரொம்ப அசதி—முகம் முழுவதும் சில்லென்ற

வியர்வை துளிக்கும்; ஏராளமான எச்சல்; கர்ப்ப காலத்திலும்.

அஜீரணம்; தாளாத குமட்டலும், வாந்தியும், ஆஸ்த்மா; கக்குவான்; மூச்சுத் திணறல்.

ஜீரணக் கோளாறு, குமட்டலுடன் தலைவலி; வாந்தியுடன் பலவீனம், குடிகாரனுக்கு ஏற்படும்; மத்தியானத்திலிருந்து இரவு வரை அதிகரிக்கும்; முகம் வெளுத்து கொட்டும் வியர்வை—புகையிலையினால் அதிகரிக்கும்.

அடிவயிற்றில் சகிக்கமுடியாத சங்கடத்துடன் மயக்கம், பலஹீனம், அதிகமாக டீ அல்லது புகையிலை உபயோகிப்பவர்களுக்கு.

நடுமார்பு இறுகுவதனால் ஏற்படும் மூச்சுத்திணறல்; ஒவ்வொரு பிரசவ வலிக்கும்; பிரசவ வலியை குறைத்துவிடுவது மாதிரி தோணும்; சற்று குளிர்ந்த காற்றில் இருந்தாலும் படிகளில் ஏறி இறங்கினாலும் திணரல் ஏற்படும்.

மூத்திரம் கருஞ் சிவப்பு நிறம்—ஏராளமான சிவப்பு வண்டல் தங்கும்.

கால் கைகளிலிருந்து ரத்தம் வந்து மார்பில் சேருவது மாதிரி தோற்றம்; அதனால் வலி, அமுக்கம், வேகமாக நடந்தால் சற்று சாதகம்.

ஹிருதயம் வேலை செய்யாமல் நின்றுவிடுவதுபோலத் தோற்றம்; ஹிருதயத்தில் அடிப்புறத்தில் ஆழ்ந்த வலி.

இடுப்பு அடிப்பக்கத்து எலும்பு தொடக்கூட முடியாதபடி அமித உணர்ச்சி; தலைகாணியில்கூட சாய்ந்திருக்க முடியாது. முன்பக்கம் சாய்ந்துகொண்டு உட்காரவேண்டும்.

---



## (122) லைகோபோடியம்

மனதின் சக்தி மிகவும் குறைந்துவிடும். பிரக்ஞைகூடத் தவறும்—கீழ்த்தாடை தொங்கும்—நாள்பட்ட சீக்குகள்.

புத்திசாலிகள், ஆனால் உடல் சக்திக்குறைவு; இடுப்பிற்குமேல் இளைத்து, கீழ்பக்கம் நீர் சுரப்புடன்கூடியிருப்பர்.

மறதி—சரியான வார்த்தை பேசவராது, மூளைதளர்ச்சி, வார்த்தைகளில் குழப்பம்.

கிரானிக் வியாதிகள், நாட்பட்டு அதிகரித்துக் கொண்டேவரும்.

குழந்தைகள் இளைத்து தலைமட்டும் நன்றாகப் பெருத்து உடம்பு நோய்ப்பட்டுமிருக்கும்.

குழந்தை பகல் முழுவதும் அழும், இரவில் தூங்கும்.

பீதி, கோபம், அவமானம் இம்மாதிரியானவைகளினால் ஏற்படும் வியாதிகள்.

ஆங்காரம், எழுப்பினால் ஆத்திரம், உதைத்துக் கொண்டு கத்துவர், சட்டென்று கோபம், மறுப்பு சகிக்க முடியாது, சதா சண்டை பிடிப்பர்.

சதா அழுகை, தன்னைத்தானே அவளால் சமாதானம் செய்துகொள்ளமுடியாது; வந்தனம் செலுத்தப்பட்டால் கூட அழுவாள்.

பேராசை, சிடுமூஞ்சி, பொறுமையுடையவர், கஞ்சன்.

ஆண்களைக்கண்டு பயம், தனிமையிலிருக்க பயம், வருத்தம்.

முகம் சோபை குறைந்து, வெளுத்து, நோயுற்று, ஆழ்ந்த பள்ளங்களுடன், வயதானவன் மாதிரி, தோன்றுவர். நாசின் இருவிளிம்புகளும் விசிறி மாதிரி அடித்துக் கொள்ளும்.

வலதுபக்கம் தாக்கும் அல்லது ஆரம்பிக்கும் நோய்கள், வலி வலதுபுறமிருந்து இடதுபுறம் பரவும். தொண்டை, சினைப்பை, கர்ப்பப்பை, மார்பு, வயறு, ஈரல், மூத்திரக்காய், தோல் வியாதி, ஹெர்னியா.

வலி, அமுக்கும் வலி, இழுத்துப்பிடிக்கும் வலி, வலது புறமதிகம். மாலை 4 முதல் 8 மணி வரை அதிகம். எல்லாக் குறிகளும் மாலை 4 முதல் 8 மணிவரை அதிகரிக்கும் சாப்பிட்டபின், உஷ்ணமான அறையிலுமதிகரிக்கும். நடந்துகொண்டிருந்தால் சமனமாகும்—குளிர்ந்த திறந்த காற்றில் சமனம்.

எல்லாம் புளிக்கும்—ஏப்பம், நெஞ்செரிச்சல், எச்சில் நீர்—புளிப்பான வாந்தி—முறைக்காய்ச்சலில் காற்றுப்பிசம், புளிச்ச ஏப்பம், புளிப்பான ருசி, புளிச்ச வியர்வை, புளிச்ச வாந்தி.

வியர்வைக்குப்பின் ரொம்ப தாகம்.

இடது பக்கம் குளிர்.

ஒரு கால் சூடாகவும் மற்றொன்று சில்லென்று மிருக்கும்.

வயிற்றுக்கோளாறுகள், ஏராளமான காற்றுப்பிசம்; சதா வயிறு நிரம்பினமாதிரி தோற்றம், நல்ல பசி, ஆனால் இரண்டுமூன்று கவளமே தொண்டைவரைக்கும் நிரப்பி விடும். வயிறு உப்பினமாதிரி தோற்றம், வயிற்றில் புளித்தல் —ஏராளமான களகளவென்ற சத்தம், கடபுடா என்ற



சத்தம், ஏப்பம் விட்டாலும் வயிறு உப்புசம் சாதகப் படாது.

அகோரப் பசி—எவ்வளவு சாப்பிட்டாலும் இன்னும் வேண்டுமென்பர் — சாப்பிடாவிட்டால் தலைவலி. இரவில் பசிக்கும்.

புஷ்பவதியானதிலிருந்து மலச்சிக்கல்; போன பிரச வத்திலிருந்தும் வீட்டைவிட்டுப் போனாலும் மலச்சிக்கல்— சிறு குழந்தைகளுக்கு மலச்சிக்கல்; மலம் பிரியும்போது ஆசனவாய் விரிந்து சுருங்கும், மூலம் ஏற்படும்.

சிறுநீரில் சிவந்த மணல் மாதிரி மாசு. நீர் பிரிக்கும் முன் குழந்தை விறிடும். முதுகுப்புறம் வலி, நீர் பிரிந் தால் சாதகம், மூத்திரப்பைக்கல் வலி—வலதுபுறம்.

சளி—மூக்கு இரவில் அடைபட்டு விடும்; வாயினால் மூச்சுவிடவேண்டிவரும், குழந்தை தூக்கத்தில் எழுந்து மூக்கை தேய்த்துக்கொள்ளும். நாசியிலிருந்து தொங்கும் சளிக்கட்டிகள், தக்கை மாதிரி அடைத்திருக்கும்.

டிப்திரீயா — கருஞ்சிவப்பாக வலது டான்சில்ஸி லிருந்து இடதுபுறம் பரவும் அல்லது மூக்கிலிருந்து வலது டான்சில்ஸ் புறம் இறங்கும்—தூக்கத்திற்குப் பிறகும், சில் லென்ற பானங்களுக்குப் பிறகும் அதிகரிக்கும்.

வலதுபுற நிமோனியா—நாள்பட்டது அல்லது சரி யானபடி வைத்தியம் செய்யப்படாதது.

ஆழ்ந்த இருமல், ஏராளமான கபம் வெளிப்பட்டாலும் சாதகமில்லை.

யோனிக்குழாய் வரண்டு விடும். சம்போகத்தின் போதும், பிறகும் எரிச்சல், யோனியிலிருந்து காற்று வெளிப்படும்.

ஒவ்வொரு தடவையும் மலம் பிரிக்கும்போது யோனியிலிருந்து ரத்தம் வெளிப்படும்.

வயிற்றில் சிசு கரணம் போடுவதுமாதிரி தோற்றம்.

சிறு ஆண்களுக்கு நபும்ஸகத்துவம்—ஹஸ்தப்பிரயோகத்தினால் அல்லது அதிக சம்போகத்தினால் ஏற்படுவது. ஆண் குறி சிறுத்து, வதங்கி, குளிர்ந்து இருக்கும்—வயதானவர்களுக்கு அதிக இச்சை ஆனால் லிங்கம் விறைக்காது. ஆலிங்கனம் செய்யும்போதே தூக்கம், துரித ஸ்கலிதம்.

சிறு வயதில் மயிர் நரைத்தல்.

---

## (123) லிஸ்ஸின்

ஓடும் தண்ணீரின் சப்தமோ, அல்லது பார்த்தாலோ அல்லது தண்ணீரைக் கொட்டினாலோ குறிகள் அதிகப்படும்.

பயித்தியம் பிடித்துவிடுமோ என்ற பயம்.

அதிக காம இச்சையினால் ஏற்படும் கோளாறுகள்.

மன அதிர்ச்சி அல்லது துன்பகரமான செய்தி உடனே அவன் வியாதியை அதிகரிக்கும். புண்கள் நீலம் பூத்துவிடும். சூரிய வெப்பம் தாங்காது.

கர்ப்பப்பை வெளித்தள்ளுதல் — வருஷக் கணக்காக நீடித்தது — கர்ப்பப்பை தனியாக உறுத்தினாற்போல இருக்கும்.

யோனிக்குழாய் உறுத்தும், சம்போகத்தின்போது வலிக்கும்.



பளிச்சென்று இருக்கும் வெளிச்சத்தைக் கண்டாலும், எந்த திராவகத்தை நினைத்துக்கொண்டாலும், சிறிது காற்று வீசினாலும் வலிப்புகள்.

பிசுபிசுப்பான, கம்பிபோன்று கெட்டியான நுரையுடன் கூடிய எச்சில் — தொண்டையிலும் நுரை; அடிக்கடி துப்ப வேண்டும்.

தொண்டை கரகரப்பு — அடிக்கடி விழுங்க உணர்ச்சி, நாய் கடியினால் தலைவலி—நாள்பட்டது—மனதிற்கு அதிர்ச்சி அல்லது சிரமமேற்பட்டாலும் தலைவலி — தண்ணீர் ஓடும் சலசலப்பினாலும், பிரகாசமான வெளிச்சத்தினாலும் அதிகரிக்கும்.

விழுங்க சிரமம்—திரவம் விழுங்கினாலும் தொண்டையில் இசிவு.

---

## (124) மாக் — கார்ப்

குழந்தைகளுக்கும், புளிப்பு நாற்றமுடைய சரீரமுடையவர்களுக்கும், தளர்ந்த சரீரமுடையவர்களுக்கும் சிறந்தது.

உடம்பு, கை கால்கள் தளர்ந்து வலியுடன் கூடியிருக்கும். வலியினால் அமைதியின்மை.

பக்கத்துக்குப் பக்கம் வலி.

தூங்கினாலும் அசதி குறையாது. தூங்கி எழுந்தால் உடலசதி அதிகமாயிருக்கும்.

குழந்தைகளுக்கு பரம்பரையில் டி. பி. இருந்து, மாமிசத்தில் அதிகம் பிரியமிருந்தால்.

வயிறு, குடல் இவைகளின் மியுகஸ் தசைகளின் நீர் அதிகம் சுரந்து அதனால் கோளாறுகள்.

நெஞ்செரிவு, புளிச்ச ஏப்பம், ருசி, புளிப்பான வாந்தி, கர்ப்பகாலத்திலும் வாந்தி.

பல்வலி — சொத்தைப்பல் — இரவில் அதிகம் கர்ப்ப காலத்தில் பல்வலி — மின்னல் வெட்டு மாதிரி இடதுபுறம் அதிகமாகும்.

உச்சந் தலையில் மயிரைப்பிடித்து இழுப்பது மாதிரி வலி.

வயிற்று வலிக்கு " மில்க் ஆப் மெக்னீஸியா " சாப்பிட்டு வருபவர்களுக்கு ஏற்படும் வயிற்று வலிக்கு சிறந்தது.

வயிற்றுப்போக்கு — போவதற்குமுன் கடுமையான வலி — வயிற்றை முடக்கிக்கொள்ள வேண்டும் — 3 வாரத்திற்கு ஒரு முறை வரும் மலம் நுரைத்துக்கொண்டு பச்சையாக, தவளை குளத்துப் பாசி மாதிரி இருக்கும்—வெள்ளைக் கொழுப்புப்போன்ற கட்டிகள் மலத்தில் மிதக்கும்.

பால் குடிக்கும் குழந்தைகளுக்கு பால் ஜீரணமாகாமலே போகும்.

சைனா எப்படி ரத்தம் குறைந்தவர்களுக்கு உகந்ததோ அதேபோல நரம்புத்தளர்ச்சிக்கு இது உகந்தது.

மாதவிடாய்—பிரசவ வலி மாதிரி கடும் வயிற்று வலி, இடுப்பு வலி, பலவீனம், குளிர் இவற்றுடன் ஆரம்பிக்கும்— இரவில் மாத்திரம் அல்லது படுத்துக்கொண்டால்தான் மாதவிடாய் ஆகும். நடந்தால் நின்றுவிடும்; கருப்பாக தார் மாதிரி, அலம்பமுடியாதபடி ஒட்டிக்கொள்ளும் மாதவிடாய் பெருக்கு.

---



## (125) மாக் மூர்

ஹிஸ்டிரியா உடைய ஸ்திரீகளுக்கும், கர்ப்பப்பை வியாதியுடையவர்களுக்கும், அனேக வருஷங்களாக பித்த ஜீரணக்கோளாறுடையவர்களுக்கும் சிறந்தது.

மலச்சிக்கல் — மலம் முடிச்சு முடிச்சாக, கல்மாதிரி, ஆட்டுப்புழுக்கை மாதிரி சிரமப்பட்டுப்பிரியும் — ஆசனவாய்ப்புறத்தில் நொறுங்கும் — பல் முளைக்கும் குழந்தைகளுக்கும் மலச்சிக்கல்.

குழந்தைகளுக்கு பால் ஜீரணமாகாது. பல் முளைக்கும் போது—வயிற்றில் பால் வலியை உண்டாக்கும் அதிகத் தித்திப்பு தின்னும் சோனிக்குழந்தைகள்.

சப்தத்தை கேட்கும் உணர்ச்சி அதிகம்.

நரம்புத்தலைவலி — 6 வாரத்திற்கொருமுறை — நெற்றியிலும், கண்களைச்சுற்றியும், கண்கள் வெடித்துத்தெறித்து விடும்போல வலி-நடந்தாலும், திறந்த காற்றிலும் சாதகம்-படுத்துக்கொண்டால் சாதகம்-நன்றாக இறுக்கி அமுக்கிக் கொண்டால் சாதகம்; நன்றாக துணியினால் சுற்றிக்கொண்டிருந்தாலும் சாதகம்—தலையில் அதிக வியர்வை.

ஏப்பம், அழுகினமுட்டை மாதிரி வீச்சம். வெங்காய நாற்றமடிக்கும்—வாயில் சதா நுரை ஏற்படும்.

ஆகாரம் பல்லில் பட்டால் தாங்கமுடியாத பல் வலி, ஈரல் பெருத்து கட்டியாகி வலியிருக்கும் — நடந்தாலும், தொட்டாலும் வலி — வலது பக்கம் படுத்துக்கொண்டாலும் வலி — அதிகரிக்கும்.

ஹிருதயப் படபடப்பு — சும்மாயிருந்தால் அதிகப்படும்-நடந்துகொண்டிருந்தால் சாதகம்— வலி.

மூத்திரம், வெளுத்து, மஞ்சளாகவும், வயிற்றுத் தசைகளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டால்தான் பிரியும். மூத்திரப்பையில் பலவீனம்.

மாதவிடாய் — கருப்பாக, கட்டி தட்டின இரத்தம்—இசிவான வலி, நடந்தால் இடுப்புப் பக்கம் அதிகப்படும். துடைகளிலும் வலி இறங்கும். ஹிஸ்டிரியா உண்டாக்கும் பெரும்பாடு—இரவில் படுக்கையில் அதிகப்படும்.

மலம் பிரியும்போதும், தேகாப்பியாசத்திற்குப்பிறகும் வெள்ளை படுதல்—கர்ப்பப்பையில் இசிவான வலி—பெரும்பாடுமேற்படும். மாதவிடாய்க்கு இரண்டு வாரங் கழித்து—3, 4 நாள் நீடிக்கும்.

## (126) மாக்—பாஸ்

வலி—வெட்டும், குத்தும், தெறிக்கும், மின்வெட்டுபோல வந்து மறையும், தைக்கும், விட்டுவிட்டு வரும், வலிகள்; வலி தாங்காததினால் பைத்தியமே பிடிக்கும் — வலிகள் அடிக்கடி இடம் மாறும், இறுக்கும் வலிகள்--வெட்டி இசிவு மாதிரி இறுத்தும் வலிகள்.

வலது பக்கம் தாக்கப்படும், காது, முகம், பல், தாடை, தலை, மார்பு, சினைப்பை, துடை நரம்பு முதலியன.

சில்லென்ற காற்று வாடையில் பீதி, போர்த்த துணியை விலக்க பீதி; வலியுற்ற பாகத்தை தொடவும், குளிர்ந்த நீரில் குளிக்கவும், அசையவும் பீதி.

அசதி, தளர்வு—உட்காரக்கூட முடியாது.

சில்லென்ற தரையில், நீரில், களி மண்ணில் வேலை செய்வதனால் ஏற்படும் கோளாறுகள்.



பல் முளைக்கும்போது சுரமிராது—இசிவு ஏற்படும்.

முகத்தில் கண் குழிப்பக்கம் நரம்பு வலி—வலது பக்கத்தில் தெறிக்கும், வெட்டும், விட்டு விட்டு வரும் வலி—தொட்டாலும், அமுக்கினாலும் அதிகரிக்கும்.

இரவில் அதிகரிக்கும் பல் வலி—சட்டென்று இடம் மாறும், சாப்பிட்டாலும், பருகினாலும் அதிகரிக்கும், சூடான பதார்த்தத்தினால் சாதகம், தலைவலி பின்பிறத்திலிருந்து தலை முழுவதும் பரவுகிறது; பள்ளிப்பெண்களுக்கு வரும் தலைவலி, முகம் சிவந்து, மன அதிர்ச்சியினால், அதிகப்படி படிப்பதினால் அதிகரிக்கும். காலை மணி 10 முதல் 11 வரை அல்லது மாலை மணி 4 முதல் 5 வரை அதிகம். கட்டினாலும் இறுக்கிக் கட்டுவதினாலும் சாதகம்.

வயிற்றில் வலி—ஒரு பட்டையினால் இறுக்கிக் கட்டினாற் போல வலி—நாக்கு சுத்தமாகயிருக்கும்.

குடலில் வலி—வாயுவினால், அடிவயிற்றை முடக்கிக் கொள்ளவேண்டும். சூட்டினால் சாதகம், நன்றாக அமுக்கினால் சாதகம்.

கர்ப்ப காலத்தில் கைகால்களில் வலி—எழுத்தாளர்கள், ஹார்மோனியம், பிடில் வாசிப்பவர்கள், டைப் அடிப்பவர்களின் கைவிரலின் இசிவு.

கருப்பான, கம்பிபோன்ற மாதவிடாய்; ஆரம்பிக்குமுன் வலி, வெளிப்பட்ட பிறகு சாதகம்; வலி சுருக்சுருக்கென்று குத்தும். வலதுபக்கம் அதிகம், சூட்டினாலும் குனிந்து அமுக்கிக்கொண்டாலும் சாதகம்.

நரம்புத்தளர்ச்சியினால் இரவில் தானறியாமல் நீர் பிரிதல், சிலாகை போட்டபிறகும் தானறியாமல் நீர் பிரிதல்.

சூடான தண்ணீரில் கரைத்துக்கொடுக்க நன்முக வேலைசெய்யும்.

---

## (127) மெடாரினம்

சரியான வைத்தியம் செய்யப்படாத வெட்டை வியாதியினுலும் அல்லது உள்ளமுக்கப்பட்ட வெட்டை வியாதியினுலும் ஏற்படும் தேக வாகுகளுக்கு — சரியான மருந்து கொடுத்தும் பலனேற்படாவிட்டால்.

வெட்டையினுல் ஏற்படும் வாயு வியாதிகள், கவுட், நரம்புவலி, முள்ளந்தண்டு வியாதிகள், பாரிச வாயுகள் முதலியவற்றிற்கு இது அவசியம் கொடுக்கப்படவேண்டும்.

வெட்டையினுல் ஸ்திரீகளுக்கு ஏற்படும் சினைப்பை, கர்ப்பப்பை, சினைக்குழாய் வீக்கங்கள், கர்ப்பப்பை, சினைப்பைக் கட்டிகள், கரளைக்கட்டிகள் ; புற்றுகள் முதலியன.

எல்லாவித புற்றிற்கும், வெட்டை காரணமாயிருந்தால்.

குழந்தைகள் வளராமல், சூம்பி, மனதின் வளர்ச்சியும் குறைந்திருந்தால்.

உடம்பு முழுவதும் நிண நீர்க்கோளங்கள் வீக்கம் காணும், சுரம் இருக்கலாம்.

அஸ்தி சுரத்தினுல் அசதி, பலவீனம் ; சக்திக் குறைவு.

உடம்பு முழுவதும் உறுத்தல், வலி, வாயு வலிகள்.

உடல் முழுவதும் நடுங்குவது மாதிரி—ரொம்ப நரம்புத் தளர்ச்சி, ரொம்ப பலவீனம்.



சதா விசிறவேண்டும். புதிய காற்று வேண்டும்போலிருக்கும். தோல் சில்லிட்டு, ஆனுலும் போர்வைத்துணியை விலக்கிவிடுவர். சில்லென்ற வியர்வை கொட்டும்.

அழாமல் பேசமுடியாது.

ஞாபகமறதி ; ரொம்ப பழகின சிநேகிதரின் பெயரைக்கூட மறந்துவிடுவர். தன் பெயர்கூட மறந்துவிடும் ; உச்சரிப்புகூட மறந்துவிடும்.

ரொம்ப துடிதுடிப்பு, பொறுமையின்மை ரொம்ப அவசரம் ; அவசரத்தினுல் தளர்ச்சிகூட வந்துவிடும். காலம் ரொம்ப மெதுவாக ஊறும்.

நினைத்துப்பார்த்தால் குறிகள் அதிகரிக்கும்.

எரிச்சலுடன் கூடிய வலி—முள்ளந்தண்டு முழுவதும்.

வண்டி ஆட்டத்தினுல் தலைவலியும் பேதியும்.

தொண்டையில் நாசித்துவாரத்திலிருந்து கபம் விழும்.

சாப்பிட்டவுடன் அகோரப்பசி. சதாதாகம். சொப்பனத்தில் கூட தாகம்.

பிராந்தி, உப்பு, தித்திப்பு, ஐஸ், புளிப்பான வஸ்து, ஆரஞ்சு, பச்சைப்பழங்கள் இவைகளில் அபார விருப்பம்.

பிசுக்கென்ற களி மண் மாதிரி மலம் ; —முதுகை பின்புறம் ரொம்ப வளைத்துக்கொண்டு முக்கினுல்தான் மலம் பிரியும் ; ரொம்ப வலி ; கண்ணீர்கூட வந்துவிடும். ஊசி குத்துவதுமாதிரி வலி.

இரவில் தானறியாமல் நீர் பிரிதல்.

ஏராளமான அளவில் அதிகக் கலருள்ள, அம்மோனியா நாற்றமடிக்கும் நீர் ஒவ்வொரு இரவும் பிரியும். இது அதிக வேலை, தேக சிரமம், ரொம்ப உஷ்ணம் அல்லது குளிர் இவைகளினால் ஏற்படலாம்.

மாதவிடாயின்போது தாங்கமுடியாத வலி—கால்களை பிரசவத்தின்போது உதைந்துக்கொள்ளுவதுபோல, உதைந்துக்கொள்ளுவர்.

யோனியின் அரிப்பு—நினைத்தால் அதிகரிக்கும்.

ஸ்தனங்களும், முலைக்காம்புகளும் புண்மாதிரி வலிக்கும் தொடமுடியாது.

மாதவிடாயின்போது ஸ்தனம் சில்லென்றிருக்கும் காம்பும் சில்லென்றிருக்கும்.

ஆஸ்த்மா; தொண்டை வழியாக காற்று புக முடியாது போல தோற்றம் குப்புறப்படுத்துக்கொண்டு நாக்கை நீட்டிக்கொண்டிருந்தால்தான் சாதகம்.

மூச்சை சுலபமாக உள்ளிழுக்க முடியும். வெளிவிட முடியாது.

குரல்வளை சதை பிய்க்கப்படுவதுபோல் ஓயாத வரண்ட இருமல். இரவிலும் தித்திப்பினாலும், படுத்துக்கொண்டாலும் அதிகரிக்கும் இருமல் சப்தம் பீப்பாய்க்குள்ளிருந்து இருமுவதுபோல கேட்கும், குப்புறப்படுத்தால் சாதகம்.

ஆரம்ப க்ஷயம்; நுரையீரலின் நடு மத்தியில் வலி.

தோற்பட்டைகளுக்கு நடுவில் வலி — இடுப்பிலிருந்து முழங்கால் வரைக்கும் வாயு வலி — நடந்தால்தான் தெரியும். கால்கள் ஈயம் மாதிரி கனம்.



கால்களின் வலியினால், தூக்கம் வராது. கால்களும் பாதங்களும் சதா ஆடிக்கொண்டேயிருக்கும்.

கைகளும், பாதங்களும் எரியும் — அவைகளை மூடிக் கொண்டு விசிறவேண்டும்.

கொஞ்சம் சிரமப்பட்டாலும் கால்களும், கைகளும் நரம்புத்தளர்ச்சியடையும்.

உடம்பின் ஒவ்வொரு மூட்டிலும் விறைப்புடன் வலி.

கை மூட்டுகள் விறைத்து - பெருத்து ஊதியிருக்கும். விக்கம், குதியங்காலும், வலி.

## (128) மெலிலோடஸ்

கடுமையான தலைவலி — மூக்கிலிருந்து இரத்தம் வெளிவந்தால் சாதகம்.

பல் முளைக்கும்போது வலிப்பு-பிரசவ இசிவு, காக்கை வலிப்பு.

நாசியிலிருந்து ரத்தப்பெருக்கு — வருவதற்குமுன் முகம் நன்றாக பளபளப்புடன் சிவந்து, கழுத்து நரம்புகள் துடிக்கும்.

எந்த பாகத்திலிருந்தும் ரத்தப் பெருக்கு ஏற்படுவதற்கு முன் முகம் நல்ல சிகப்பு.

கடுமையான மலச்சிக்கல் நிறைய மலம் சேரும்வரை வெளிப்படாது.

## (129) மெனியாந்திஸ்

அதிகமாக கொயினா முதலியவைகளைச் சாப்பிட்டதினால் வரும் வியாதிகள்.

ரொம்பக் குளிருள்ள சுரங்கள், வயிற்றிலும், கால்களிலும் குளிர் தாக்கும்.

நாசி அடிப்பாகத்தில், கைகளில், விரல்களில், தோலில் பிருவு. அளவு ரொம்பக் குறைவாயிருந்து திணிக்கப் பட்டாற்போல தோற்றம்.

உச்சந்தலையில் அமுக்கும் தலைவலி கையினுல் அமுக்கிப்பிடித்து அழுத்திக்கொண்டால் சாதகம்: ஒவ்வொரு தடவை நடக்கும்போது தலையில் ஒரு பெரிய கனத்தை தூக்கிவைத்தாற்போல இருக்கும். படிகள் மேலேறினுல் அதிகப்படும். கைகால்களில் ஐஸ் மாதிரி சில்லிப்பு.

ஹிருதயத்தைச்சுற்றி ஏதோ கெடுதல் சம்பவிக்கப் போகிறதென்று பீதி.

---

## (130) மெர்குரியஸ் ஸால்

ஈரல்கள் வீங்கி-ஸ்பாஞ்ச்மாதிரி ஆகி, ரத்தங்கொட்டும்.

நாக்கு வீங்கி, பதிவு தென்படும், வலி, புண்கள், சிவப்பாக அல்லது வெண்மை. பல் வலி — துடித்து, தெறிக்கும், இழுக்கும், வலி—காது முகம் முழுவதும் வலி—குளிர்காலத்திலும், சாயங்காலத்திலும், படுக்கைச்சூட்டினுலும் சூடான அல்லது குளிர்ந்த சாமான்களாலும் அதிகப்படும், கன்னங்களை தேய்த்துக்கொண்டிருந்தால் சாதகம்.

பற்களின் மேல்பாகம் சொத்தை விழும்; வேர் பலமாயிருக்கும்.

ஏராளமான எச்சில், சோப்புத்தண்ணி மாதிரி, கம்பி மாதிரி, நாற்றத்துடன் கசப்பு ருசியுடன், உமிழ் நீர்.



நாக்கு ஈர நைப்புடனிருந்தபோதிலும் அதிகத் தாகம்; எச்சிலும் ஏராளம்.

எலும்பு வியாதிகள் இரவில் வலி அதிகம். கிளாண்டு வீக்கங்கள், சீழ் அதிகமாயிருந்தால் உகந்தது.

சீழ்க்கட்டிகள் லேசில் பழுக்காது. எங்கும் புண்கள், ஈரல், நாக்கு, தொண்டை, கன்னங்களின் பக்கங்கள், ஏராளமான எச்சில் நீர்; சாம்பல் நிறம் பூத்து பரவும் புண்கள்—குத்துவலியும் எரிச்சலும் இருக்கும். ஸிபிலிஸ் புண்கள்.

ஏராளமான வியர்வை—எந்த வியாதியிலுமிருக்கும்; ஆனுல் ஒரு வியாதியும் சாதகப்படாது. வியாதி அதிகரிக்கலாம்.

ரொம்ப அசதி, நடுக்கல் பலவீனம், அயர்வு.

கைகால்களில் நடுக்கம், பாதத்திலும்.

துர்நாற்றம்—வாய், மூத்திரம், மலம், வியர்வை, எல்லாம்.

படபடவென்று பேச்சு.

டிப்திரியா—டான்சில்ஸ் வீங்கி, பெருத்து, உள்நாக்கு வீங்கி, அடிக்கடி விழுங்க உணர்ச்சி.

தாளம்மை, டான்சில்ஸ், ஏராளமான எச்சில் நீர், நாக்கு பெருத்து, வீங்கியிருக்கும்.

ரத்த சீதபேதி—மலம் சீதமாயும் ரத்தக்கட்டுடனும்—வயிற்று வலியுடன் மயக்கம்; துர்நாற்றம்—மலம் போகு முன்னும் பின்னும் வலி, கடுப்பு மலம் போனதினுல் சாதகப்படாது.

உள்ளூர நடுக்கல், குளிர்—மலம் போய் முடிந்த மாதிரி உணர்ச்சியிராது.

மலம் பிரிந்த பிறகு ஆசனம் வெளித்தள்ளுதல்—பூச்சிகள், கீரைப்பூச்சிகள்.

தண்ணீர் குடித்த அளவிற்கு அதிகப்பட்டு மூத்திரம் பிரியும். அடிக்கடி நீர் பிரிய உணர்ச்சி.

வெட்டை, கிரந்திப்புண், வெட்டை பச்சையாய் இரவில் அதிகமாக இருக்கும்.

இரவில் ரத்தத்துடன் ஸ்கலிதம்.

வெள்ளை—எரியும், அரிக்கும், பட்ட இடம் புண்ணாகும்; இரவில் எப்போதுமதிகம், மூத்திரம் பட்டால் அரிப்பு அதிகப்படும்.

கர்ப்ப காலத்தில் ஏராளமான எச்சிலுடன் வாந்தி. தூக்கத்தில் தலைகாணி நனைந்துவிடும்.

ஒவ்வொரு மாதவிடாயின்போதும் ஸ்தனம் புண் மாதிரி வலிக்கும். மாதவிடாய்க்குப் பதிலாக பால்சுரக்கும்.

ரொம்பத் தும்மலுடன் சளி, தண்ணீர்மாதிரி அதிகமாக கொட்டும். நாசி புண்ணாகிவிடும்—பச்சையாக, நாற்றத்துடன், சீழ் மாதிரி, நாசி எலும்புகள் வீங்கி, இரவிலும்; ஈர காலத்திலும் அதிகரிக்கும்.

மாடிப்படியில் ஏறுவதாலும் நடந்தாலும் மூச்சுத் திணரல்; சிறிது சிரமத்தாலும் படபடப்பு.

வரண்ட இருமல்; மார்பைப் பிளக்கும்; இரண்டு இரண்டு இருமலாக இருமும்; இரவிலும், படுக்கையிலும் அதிகப்படும்; வலது பக்கம் படுக்கவே முடியாது.



வலதுபுற மார்பில் குத்தும் வலி; வலது நுரையீரலின் அடிப்பாகம் தாக்கப்படும். நுரையீரல் சீழ்பிடிக்கும்; நிமோனியாவில் இரத்தப்பெருக்கிற்குப்பிறகு.

மஞ்சட்காமாலை; ரத்தம் கொட்டும் புண்கள்.

---

## (131) மெர்-பைன் அயோடைட்

இடதுபுறத்து டிப்திரீயா, கிளாண்டு வீக்கங்கள், தொண்டை கருஞ்சிவப்பு—எந்தப்பதார்த்தமும், விழுங்கச் சிரமம்; டிப்திரீயா ஜவ்வு சிறிது, சுலபமாக பிய்த்துவிடலாம்.

தொண்டையில் புண்கள் :-

கூடியத்தில் தொண்டைக்குழாய் வீக்கம்.

---

## (132) மெர்-கரோ

மலத்திற்கு முந்தியும், சமயத்திலும், பிந்தியும் கடுமையான கடுப்பு. மலம் பிரிந்தாலும் சாதகம். தாங்கமுடியாது—மலம் சூடாகவும், குறைவாகவும்-ரத்தங்கலந்தும், சீதமாகவும், நாற்றத்துடனும், வயிற்று வலியுடன் வெட்டும் வலி.

ஆசனக்கடுப்புடன், நீர்த்துவாரக் கடுப்புமிருக்கும்—கடுமையான எரிச்சல்; மூத்திரம் சிவந்தும், குறைந்துமிருக்கும்—சொட்டு சொட்டாக கடும் வலியுடனிறங்கும்—ரத்தம் கலந்து, கருஞ்சிவப்பாகவும், அல்புமன் கூடியுமிருக்கும்.

தொண்டை ரொம்ப வீங்கி, எரிச்சல், பல்லீரல் வீங்கி-ரத்தம் கொட்டும்.

ஆண்களுக்கு கிரந்திப்புண்கள், அரிக்கும் சீழ். பிரைட்ஸ் வியாதி.

அதிக ரத்தம் போகும் ரத்த சீதபேதி — வெட்டை, பச்சையான கசிவு. இரவில் அதிகப்படும். ரொம்ப எரிச்சலுடன் கடுப்பு.

---

## (133) மெர்-செயனேட்

ரொம்ப ரொம்ப அசதியுடன் கூடின டிப்திரியா தொண்டை முழுவதும் ரொம்ப சிவப்பாக விழுங்க மிக சிரமம். தொண்டை முழுவதும் அழுகல் கண்டு அரிக்கும் புண்களுடன்கூடி ஜவ்வும் பரவியிருக்கும்.

பலவீனத்தினல் நிற்கக்கூடமுடியாது.

பேச்சாளர்களின் தொண்டை மியூகஸ் சதை புண்ணுன மாதிரி இருக்கும். சில சமயம் தொண்டைக்கம்மலுமிருக்கும்.

---

## (134) மெர்-டல்சிஸ்

காது, கண் இவைகளில் வீக்கம். உட்காதின் வீக்கத்தினல் சீழ்—தொண்டைச்சளி முதலியவைகளினல் காதுக் குழாய் அடைப்பட்டு செவிடு.

வயதானவர்களுக்கும் செவிடு.

ஸோரா உடைய குழந்தைகளுக்கு காது சீழுடன் செவிடு.

குழந்தைகளுக்கு பேதி—பசும்பச்சை நிறம், உடைத்த முட்டை மாதிரியும் இருக்கும், அதிக அளவில் போகும். ஆசனவாய் உறுத்தும்.



1x போடன்சியில் 4 தடவை மூன்று மணிக்கொருதரம் கொடுக்க நன்ருக மலப்பிரவிர்த்தி ஏற்படும்.

---

## (135) மெர்—புரோடோ அயோடைட்

உண்மையான கிரந்திப்புண்—கவுட்டியின் கோளங்கள் வீங்கி, சீழ் பழுக்காது.

நாக்கு அடிப்பாகத்தில் நல்ல மஞ்சளாக படர்ந்திருக்கும். நுனியும், ஓரங்களும் சிவந்து அல்லது வெளுத்திருக்கும். பல் அடையாளம் பதியும். வலது பக்கத்து கழுத்து தாக்கப்பட்டிருக்கும்.

கழுத்து கோளங்களும் தாடையின் கோளங்களும் ரொம்ப வீங்கியிருக்கும். டிப்திரியா வலது பக்கம் அதிகம், சூடான திராவகங்களினலும் வெறுமனே விழுங்குவதினலும் அதிகப்படும்.

---

## (136) மெர்—ஸல்ப்

ஈரல் அல்லது ஹிருதய வியாதியினல் ஏற்படும் மகோதரம். மூச்சுத்திணறலினல் உட்காரவேண்டும், படுக்க முடியாது. கால்கள் ரொம்ப வீங்கி, மலம் தளர்ந்து தண்ணிர்மாதிரி ரொம்ப எரிச்சலுடன் போகும். மார்பிலும் எரிச்சல் காணும்.

---

## (137) மெஜீரியம்

பெரிய எலும்புகளில் வலி—இரவில் அதிகரிக்கும்—தொட்டாலும், ஈர நைப்பு காலங்களிலும் அதிகமாகும்.

எலும்புகள் வீங்கி, அழுகல்கண்டு நொறுங்கும். எலும்புகளில் கட்டிகள் காணும் உள்ளிருந்து நையும். கிரந்தி வியாதிகள், அதிக பாதரசம் முதலியவை சாப்பிட்டவர்களுக்கு.

முகத்தில் நரம்புவலி, அல்லது பல் வலி—சொத்தைப் பல்—பல் நீண்டிருப்பதுமாதிரி தோற்றம்; இரவிலும், சாப்பிட்டாலும், தாடையை அசைத்தாலும் வலி அதிகரிக்கும், சூட்டினாலும் வாயைத்திறந்து காற்றை உள்ளிழுத்தாலும் சாதகம். பல் நரம்புகள் கெட்டுவிடும்.

சிறிது அவமானம் ஏற்பட்டாலும் தலைவலி, தொட்டாலும் வலிக்கும், வலது பக்கத்து வலி.

கரப்பான்—அம்மை வைத்ததினால் ஏற்படும் அரிக்கும் தோல் வியாதிகள். தாங்க முடியாத அரிப்பு — இரவிலும் தொட்டாலும் அதிகம், ஏராளமான கசிவு.

அக்கியில் நரம்பு வலி—எரிச்சல் வலி.

புண்களைச்சுற்றி கொப்பளங்கள், நெருப்பு மாதிரி எரியும்—கடும் அரிப்பு பளபளவென்று சிகப்பாக சுற்றி இருக்கும்.

புண்களில் தடிப்பான மஞ்சள் வெளுப்பான பொருக்கு. அடியில் மஞ்சளாக சீழ் தேங்கும்—புண்களில் துணி ஒட்டிக் கொள்ளும்—பிய்த்தால் ரத்தம் வரும்.

தலையில் தடித்த—தோல்மாதிரி பொருக்கு தட்டும். அடியில் சீழிருக்கும். மயிர் ஒட்டி சடையாகிவிடும். சீழ் நாற்றத்தில் கிருமிகளும் வளரும்.

முகத்தில் கரப்பான்—குழந்தை அரிப்பினால் அடிக்கடி முகத்தை தேய்த்துக்கொள்ளும். ரத்தம் கசியும். இரவில் அதிகம்.

---



## (138) மில்லிபோலியம்

அடிபடுதல், விழுதல், அதிக சரீர சிரமப்படுதலினால் ஏற்படும் வியாதிகள்.

ரத்தப்பெருக்கு — வலியில்லாமல் சிவந்த கலருடன், சுரமில்லாமல் அகோனைட் மாதிரி பீதியில்லாமல் வெளிப்படும். எந்த இடத்திலிருந்தும் — நுரையீரல் (க்ஷயம்) தொண்டை, குரல்வளை, வாய், நாசி, வயிறு, மூத்திரப்பை, ஆசனவாய், பெருங்குடல் — புண்கள் — அடிபட்டதினாலும்.

விழுந்ததினால் புண்கள் ரொம்ப ரத்தம் கொட்டும். கர்ப்பச்சிதைவிற்குப் பிறகு, பிரசவத்திற்குப் பிறகு வலி இல்லாத ரத்தப்பெருக்கு.

துரிதமாகக்காணும் ஏராளமான நீடித்த மாதவிடாய் பெருக்கு—வயிற்று வலியினால் வெளிப்படாமலிருக்கும்.

பலவீனத்தினால் பெண் குழந்தைகளுக்கு வெள்ளை படுதல்.

இருமலினால் சிவந்த இரத்தம்—மூலம், தங்கின மாதவிடாய்—படபடப்பு, உயரத்திலிருந்து கீழே விழுந்து அடிபட்டதினால், ரொம்ப சரீர சிரமத்தினால், தினம் மாலை 4 மணிக்கு ரத்தம்.

---

## (139) மூரக்ஸ்

மாமிசத்தில் அதிக ஆசை. தாங்கமுடியாத காம இச்சை —ஆலிங்கனம் செய்துகொள்ள இச்சை.

மர்ம ஸ்தானங்களில் கைபட்டுவிட்டாலும் அதிக காம இச்சை.

ரொம்ப மனக்கவலை. மாதவிடாய் நிற்கும் காலத்திய வியாதிகள். மனத்தளர்ச்சி. உற்சாகக் குறைவு.

வயிற்றில் ஒன்றுமில்லாதது போல சங்கடமான உணர்ச்சி.

அடிவயிற்றிலிருந்து உள்ளிருக்கும் சகல பாகங்களும் வெளிப்பட்டுவிடும்போல அமுக்கும் உணர்ச்சி, உட்கார்ந்து கொண்டு இரண்டு கால்களையும் குறுக்காக போட்டுக் கொள்ளவேண்டும்.

கர்ப்பப்பையில் உறுத்தும் வலி.

கர்ப்பப்பையில் தனியாக ஒன்று இருப்பதுபோல உணர்ச்சி.

மாதவிடாய் ரொம்ப அதிகம்—நாள் நீடிக்கும் பெருங் கட்டிகள் காணும்.

வெள்ளைபடுதல் — அதிகம் வெள்ளை படுவதால் மனதிற்கு சந்தோஷம்.

## (140) நாஜா

சதா வியாதிகளையும், துன்பங்களையும் பற்றியே குருட்டு யோசனை—தற்கொலை செய்துகொள்ளும் சித்தபேதம்.

ஹிருதய வீக்கம்—பலவீனமாக ஹிருதயம்.

டிப்திரியாவில் ஹிருதயம் நின்றுவிடும்போலிருந்தால் —ஹிருதய வாதம்.

வாயு சுரம் முதலிய கடும் அக்யூட் வியாதியினால் கெட்டுப்போன ஹிருதயம். நாட்பட்ட ஹிருதய வால்வ் வியாதிகள்.



பேசினால்கூட திணறல் — நரம்புத்தளர்ச்சியினால் படபடப்பு—கூட்டத்தில் பேசினால் படபடப்பு, வண்டியில் சவாரி செய்வதினால் அல்லது ஒரு பக்கமாக படுப்பதினால் வலி அதிகரிக்கும்.

ஹிருதய ஸ்தானத்தில் கடுமையான குத்தும் வலி.

அக்யூட் வாயு சுரத்தில் அல்லது நாட்பட்ட ஹிருதய வியாதிகளில் வரண்ட இருமல்.

## (141) நேட் — கார்ப்

மனதிற்கு வேலை கொடுத்தால் குறிகள் அதிகப்படும். திறந்த காற்றும், மனதிற்கு வேலையும், சரீர பரிசிரமமும், ஒவ்வாது.

நினைக்கவோ அல்லது மனதிற்கு வேலை கொடுத்தாலோ தலைவலி, சமாசாரம் புரிந்துகொள்ளுவது சிரமப்படும். மனத்தெளிவில்லாமை.

ரொம்பக் கவலை, பீதி, துக்ககரமான எண்ணங்களே மனதில் நிறைந்திருக்கும். கோடை உஷ்ணத்தினால் ரொம்ப பலஹீனம். நடந்த உடன் சட்டென்று உட்கார வேண்டும். சூரிய வெப்ப ஜன்னியின் கோளாறுகள்.

உஷ்ண காலங்களில் தலைவலிகள்.

கண்களைச்சுற்றி நீல வளையம்; பாப்பா விரிந்து மூத்திரம் கருத்து; சோகை ஏற்பட்டு, பால்போல் வெள்ளையான, சரீரத்துடன் பலவீனம்.

இடியின்போது கவலை, அமைதியின்மை.

பெட்ரோமாக்ஸ் முதலிய விளக்குகளின் அடியில் வேலை செய்வதாலும், சூரிய வெப்பத்தில் வேலை செய்வதாலும்,

தலைவலி — மாதவிடாய்க்கு முந்தி பிடரியிலும், பின் தலையிலும் பிடிப்பு. தலை பெரிதாகவும் வெடித்துவிடும்போலும் தோன்றும்.

கண்ணிமைகள் வீங்கி, பீளை சாய்ந்து, தொண்டையில் கபம் கட்டி அடிக்கடி தொண்டையைச் சரிப்படுத்த கனைத்துக்கொள்ளவேண்டும்.

தொண்டையிலிருந்து தடிப்பான கோழை. பகலில் நிறைய கோழை—இரவில் ஒன்றுமிராது.

நாசியிலிருந்து நாற்றம் வீசும் தடித்த, மஞ்சள், பச்சை நிறமான சளி—சாப்பிட்டபின் நின்றுவிடும்.

பால் ஒவ்வாது—பாலினால் பேதி.

கணுக்காலின் பலவீனம்—சுலபமாக சுளுக்கிக்கொள்ளும்; கால் மடித்துக்கொள்ளும்.

கீழமுக்கும் உணர்ச்சி—கனம்—உட்கார்ந்தால் சாதகம், நடந்தால் அதிகரிக்கும்.

ஆலிங்கனத்திற்குப் பிறகு யோனிக்குழாயிலிருந்து மியூகஸ் கசிவு. மலட்டுத்தன்மை.

---

## (142) நேட்—மூர்

ரொம்ப ரத்தச் சோகையுடையவர்களுக்கு—உடம்பின் ரத்தம், தாது முதலியவைகளின் நஷ்டத்தினால், பெரும்பாடு அல்லது மஹோ வியாதிகளினாலும்.

வருத்தம் தோய்ந்தவர்—உற்சாகமின்மை; சதா அழுது கொண்டிருப்பர், காரணமில்லாமல் அழுகை; மற்றவர்கள் சமாதானம் செய்தால் அவள் வியாதி அதிகரிக்கும்.



நரம்பு பலவீனத்தினால் ஆத்திரம், அவசரம், சாமான்களை கீழே போட்டுவிடுவர்.

ரொம்ப இளைப்பு—நன்றாக சாப்பிடும்போதே கழுத்துப்பக்கம் இளைப்பு உஷ்ண காலத்துக் கோளாறினால் குழந்தைகளுக்கு கழுத்துப்பக்கம் இளைக்கும்.

வெகு சீக்கிரம் ஜலதோஷம் பிடிக்கும்.

குழந்தைகளுக்கு ஆத்திரம்; சின்ன காரியத்தினாலும் அழுகை, சமாதானப்படுத்தப்படுத்த ஆத்திரம் அதிகரிக்கும்.

ரத்தச் சோகையுடன் தெறிக்கும் தலைவலி—பள்ளிப் பெண்களுக்கு தலைவலி—மாதவிடாயின்போது தலைவலி—சூரியோதயத்திலிருந்து அஸ்தமனம் வரையில் ஆயிரக்கணக்கான சிறு கத்திகள் கொண்டு பிளப்பதுபோல் சுரத்தில் தலைவலி—வியர்வையினால் சாதகம். முகம் சிவந்து குமட்டல் வாந்தியுடனும் இருக்கும்.

தலைவலிக்கு முன் கண் இருட்டும்; மின்னல் மாதிரி கண்களில் பளபளத்துக்கொண்டு, கண்களை அதிக சிரமப்படுத்தின பின்னர் சகஜம்.

மியூகஸ் சதைகளின் வரட்சி, உதடுகள் வரண்டு, வெடித்து—நடுவில் வெடித்து, ஆசனம் வரண்டு, வெடித்து பிளவுபட்டு, மலச்சிக்கலுடன் கூடியிருக்கும்.

மலச்சிக்கல் — ஆசனவாய் குறுகின மாதிரி, கிழிந்து ரத்தங்கொட்டும் குத்துவலி, கடுப்புமிருக்கும், மலம் வரண்டு, கெட்டியாக கஷ்டத்துடன் நொறுங்கி பிரியும் — மலமா, குசுவா என்று தானறியாமலே பிரியும்.

கண்களில் நீர் — அருவி மாதிரி வழியும். இருமும் போது அதிகம்.

நாக்கில் மயிர் சிக்கின மாதிரி தோற்றம்.

நாக்கில் படம் மாதிரி மாசு, சிவந்த திட்டுகள்; ஓரங்களில் கரப்பான் மாதிரி இருக்கும். பேசுவதற்கு கஷ்டம், குழந்தைகள் சீக்கிரம் நடக்கக் கற்றுக்கொள்ளாது.

தானறியாமலே சிறுநீர்; நடக்கும்போது, இருமும் போது, சிரித்தால், மூத்திரம் பிரியும், நீர் பிரிக்க வெகு நாழி காக்கவேண்டும்— மற்றவர்களிருந்தால்—நீர் பிரிந்த பிறகு வெட்டும் கடுப்பு.

இந்திரிய ஸ்கலிதம் — சம்போகத்திற்குப் பிறகு, இச்சை அதிகரித்திருக்கும், ஆலிங்கனத்தின்போது குறியின் பலஹீனத்துடன் தாது தாமதப்படும்—நபும்சகத்துவம், மிதமிஞ்சின போகத்தினால் பாரிசவாதம்.

மர்ம ஸ்தானத்தின் வழியாக யாவும் பிதுங்கி வெளி வந்துவிடும்போலுணர்ச்சி.

ஹிருதயப் படபடப்பு, மயக்கம் படுத்தால் அதிகரிக்கும்—படபடப்பினால் உடல் முழுவதுமே ஆடும்—இடது பக்கம் படுத்தாலதிகரிக்கும்.

கோபம், அதிகமாக உப்பைத் தின்றுதல், புளித்த ஆகாரம், கொயினா, ஸில்வர் நைட்ரேட், பீதி, துக்கம், அவமானம், சோகம் இவற்றினால் உண்டாகும் வியாதிகள். உப்புப்பண்டங்கள்தான் அதிகம் பிடிக்கும்—ரொட்டி பிடிக்காது.

ஹே சுரம் — நாசியில் கிருமி துளைவதுபோன்ற உணர்ச்சி, அதிக சூரிய வெப்பத்தினால் அல்லது கோடை உஷ்ணத்தினால் ஏற்படுவது.



முறைக்காய்ச்சல் — காலை 10—11 மணிக்கு வரும்— நீடித்தது, நாள்பட்டது, சரியானபடி வைத்யம் செய்யப் படாதது, கொயினா கொடுத்து கெடுக்கப்பட்டது, தலைவலி, சுரத்தின்போது பிரக்ஞையின்மை, வியர்வையினால் வலி குறையும்.

சுரத்தின்போது கொடுக்கக்கூடாது.

நகத்தைச்சுற்றி வரண்டு, வெடித்து இருக்கும்—ஆசன வாய், பிடரியின் மயிர் இருக்கும் ஓரங்களிலும் அக்கி.

உள்ளங்கைகளில் பாலுண்ணிகள்.

கரப்பான் — சிவந்து வரம்பு கட்டிக்கொண்டு, அதிக உப்பு தின்பதால் அதிகரிக்கும் — சமுத்திரக்கரையிலும் சமுத்திரப் பிரயாணத்தினாலும் அதிகப்படும்.

உடல் முழுவதும் அர்டிகேரியா—கடும் தேகாப்பியாசத்திற்குப் பிறகு வியர்க்குறுமாதிரி உடல் முழுவதும்.

ஜ்வரத்தில் கொப்பளங்கள் — உதட்டைச்சுற்றி முத்து முத்தாய்—உதடு வரண்டு வெடிக்கும், புண்ணாகும்.

முழங்கால் உட்பக்கத்து தசை நார் சுருங்கினமாதிரி வலி.

வீட்டில் திருடர்கள் மாதிரி சொப்பனம்—விழித்த பிறகு தேடி மனதை சமாதானப்படுத்திக்கொண்டாலொழிய சந்தேகம் தீராது—அதிகத் தாகம் ஏற்பட்ட மாதிரி சொப்பனம்.

உதடுகள், நாக்கு, நாசி, முதலியவற்றில் குறுகுறுப்புடன் மரமரப்பு. அஜீரணம்.

## (143) நேட்—ஸல்ப்

ஈர நைப்புள்ள இடங்களில் வசிப்பதாலும், பனி, குளிர் காலங்களிலும் ஏற்படும் வியாதிகள் அல்லது அதிகரிக்கும் வியாதிகள்.

உஷ்ண அல்லது வரண்ட காலத்திலிருந்து ஈர நைப்பு ஏற்படும் சீதோஷ்ண ஸ்திதி நன்ருக பாதிக்கும் நோயாளிகள். சமுத்திரத்தின் காற்று ஒவ்வாது, ஜலத்தில் கிடைக்கும் சாமான்களை சாப்பிட்டாலும் உடம்பில் கெடுதலேற்படும், வெட்டையினுல் அழிந்த சரீரிகள், ஒவ்வொரு வியாதியிலிருந்தும் மெதுவாக தேறுபவர்கள்.

தலை, மூளை பாகத்தில் அடிபட்டதினுல் ஏற்படும் மனக் கோளாறுகள்—மன அதிர்ச்சி — 'ஸ்பைனல் மெனிங்கைடிஸ்' சுரம்.

ஸ்பைனல் மெனிங்கைடிஸ்—மூளையின் அடிப்பாகத்தில் அமுக்கும், பிடுங்கும் வலி — தலை பின்புறமிழுக்கப்பட்டு, ஜன்னியுடன் வலிப்புகள், முதுகே வில்போல் வளைந்திருக்கும்.

ஒவ்வொறு பனிகாலத்திலும் தோல் வியாதிகள் திரும்பிவரும்.

சோகம், உற்சாகமிழந்து, காலையில் அதிக மனச் சோர்வு, பேசவும் பிடிக்காது. யோசனை செய்ய சக்தியிராது.

மனச்சோர்வு—நல்ல கீதமும் சோகமுறச் செய்யும்; உயிரில் பிடித்தமில்லை. தன்னைத்தானே சுட்டுக்கொள்ளாமலிருக்க ரொம்ப தன்னைத் தடுத்துக்கொள்ளவேண்டும்.

பேதி—நாட்பட்டது அல்லது அக்யூட் — திடீரென்று—பீச்சிட்டடிக்கும், நிறைய வாயு பரியும்; காலையில் எழுந்து



நின்றதும் — வயிற்றுவலி — ஈரத்தில் வேலை செய்ததனுல் அல்லது அதிக குளிர், ஈரவாடையினுல்.

மூச்சுத்திணறல்—மேகம் கவிந்திருக்கும் நாளில்.

குழந்தைகளுக்கு கணை - ஆஸ்த்மா-ஒவ்வொரு குளிர் நைப்பு காலத்திலும், ஒவ்வொருதரம் ஜலதோஷம் பிடிக்கும்போதும், கோழை பச்சையாகவும், அதிகமாகவுமிருக்கும்.

வெட்டையினுல் ஏற்படும் நிமோனியா; இடது நுரையீரலில் அடிப்பக்கம் தாக்கப்படும். மார்பில் அதிக வலி, இருமும்போது படுக்கையிலெழுந்து உட்கார்ந்துகொண்டு இரு கைகளினுலும் மார்பைப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

வெட்டை; மஞ்சள் பச்சை நிறம். வலியிருக்காது; தடிப்பாகவுமிருக்கும், நீடித்தது அல்லது அமுக்கப்பட்டது. கண்ணிமைகளில் சிறு கொப்புளங்கள், பச்சை சீழ் — வெளிச்சமே பார்க்கமுடியாது; வெட்டையினுல் ஏற்பட்டது.

புளித்த வாந்தி — பித்த வாந்தி—அஜீரணம், நெஞ்செரிச்சல், வயிறு உப்பிசம்.

நாக்கில் கருஞ்சிவப்பான அல்லது மஞ்சள் கலந்த கருப்பான மாசு.

மாதவிடாயின்போது நாசியிலிருந்து ரத்தப்பெருக்கு.

பல்வலி — சில்லிப்பான ஜலத்தினுலும் சில்லென்ற காற்றினுலும் அதிகரிக்கும்.

அடிபட்டதினுலேற்படும் காக்கைவலிப்பு விரற்சுத்தி.

பெருவாரியாகத்தாக்கும் இன்ப்ளுயன்ஸா.

ஈரல் வியாதிக்குச் சிறந்த மருந்து.

## (144) நக்ஸ்-மாஸ்சடா

வரண்ட தோலுடையவர்களும், வியர்வையேயில்லாதவர்களும், கர்ப்ப காலத்திலும், ஹிஸ்டிரியா மாதிரி நரம்பு வியாதியுடையவர்களான பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சிறந்தது.

எல்லா வியாதிகளுடன் மயக்கமும், தூக்கமும் இருக்கும்—அல்லது சிறிது வலியேற்பட்டாலும் மூர்ச்சையடைவர். வியாதிகளினால் தூக்கக்கலக்கம்.

குடித்தவன்மாதிரி தூக்கக்கலக்கம், தடுக்கமுடியாத தூக்கம்.

ஞாபக மறதி — யோசனை செய்யமுடியாது; எதிலும் பற்றில்லாமை.

வயதானதினால் பலஹீனம்—அஜீரணம்.

வெளிச்சம், காது கேட்டல், வாசனை, ஸபரிச உணர்ச்சி இவைகள் மிகைப்பட்டிருக்கும்.

வாசிக்கும்போதே எண்ணங்கள் மறைந்துவிடும்; பேசும்போது, மறதி-வார்த்தைகள் தப்பாக வெளிவரும்; ரொம்ப பழக்கமுள்ள வீதிகள் கூட ஞாபகத்திற்கு வராது.

கடும் வியாதிகளுடன் பிரக்ஞையின்மையுமிருக்கலாம். குடித்தவன் மாதிரி மயக்கம், அசையாமலிருப்பர்—கண்கள் சதா மூடியிருக்கும்.

மன நிலை மாறும். ஒரு நிமிஷம் சிரித்துக்கொண்டும், அடுத்த நிமிஷம் அழுதுகொண்டுமிருப்பர்.

வரட்சி — வாய் வரண்டிருக்கும்—நாக்கு காய்ந்து வாயின்மேல் அண்ணத்தில் ஒட்டிக்கொள்ளும்; எச்சல் பஞ்சு



மாதிரி இருக்கும், தொண்டை உலர்ந்து, விறைப்பாகி, தாகமில்லாமலிருக்கும்.

ரொம்ப உலர்ந்திருக்கிறது மாதிரியும், வாஸ்தவமான தாகமில்லாமலும், நாக்கும் உண்மையில் உலர்ந்திராமலும் தோன்றும்.

கண்களும் உலர்ந்து, கண்ணிமைகளை மூடமுடியாதபடி உலர்ந்திருக்கும்.

கர்ப்ப காலத்தில் பல்வலி.

கொஞ்சம் அதிகப்படியாக சாப்பிட்டாலும் தலைவலி ஏற்படும்; சாப்பிடும்போது அல்லது சாப்பிட்டவுடன் வயிற்றில் வலியுடன் சங்கடம். ரொம்ப பசி, தாகமின்மை.

சாப்பிட்டவுடன் வயிற்றில் ஏராளமான காற்று உப்பிசம்.

கோடைகாலத்தில் பேதி—சில்லென்ற பானங்களினால்—இலையுதிர் காலத்தில்-வெள்ளை மலம்—காய்ச்சின பாலினால், பல் முளைக்கும்போது—கர்ப்பகாலத்தில்—வசந்த காலத்தில் பேதியேற்படும் — பெருவாரியாகத்தாக்கலாம். தூக்கமும், மயக்கமுமிருக்கும்—ஜீரணமாகாமல், பசியின்மையுமிருக்கும்.

ஒவ்வொரு மாதவிடாய்க் காலத்திலும் வாய், தொண்டை, நாக்கு, எல்லாம் சகிக்கமுடியாதபடி, வரண்டுவிடும். தூங்கும்போது அதிகமாயிருக்கும்.

மாதவிடாய்க்குப் பதிலாக வெள்ளைப்பாடு—கர்ப்பப் பையில் காற்றுப்பிசம்—வரண்ட நாக்கு.

கர்ப்ப காலத்தில் வாந்தி, குமட்டல்—வலி—வண்டியில் செல்வதாலும், கர்ப்பப்பையில் வலையங்கள் போட்டுக் கொள்வதாலும் ஏற்படக்கூடியது.

ஹிருதயத்திற்கு திடீரென ரத்தம் வந்துசேர்வது போல பிறகு தலைக்கு, பிறகு உடல் முழுவதும் பரவும். படபடப்பு.

ஹிஸ்டிரியாவின் இருமல்—படுக்கையில் உஷ்ணப்பட்டதும் இருமல், அதிக உஷ்ணத்தினால், கர்ப்பகாலத்தில், குளிப்பதினால், ஜலத்தில் நின்றதனால், ஈரமான இடங்களில் வசிப்பதினால், இருமல் — சாப்பிட்டபிறகு தாராளமான கோழையுடனும்; பருகினபிறகு வரண்டுமிருக்கும்.

திடீரென்று கம்மல். காற்று வீசுவதற்கு எதிர்நோக்கிச் செல்லுவதால் அதிகரிக்கும்.

உடம்பெல்லாம் வலி—எப்பக்கம் படுத்துக்கொண்டாலும் உறுத்தும் வலி—படுக்கைப்புண்கள் ஏற்படலாம்.

வாயு உபத்திரவங்கள்; கால்களை நனைப்பதாலும், சரீரம் உஷ்ணமடைந்திருக்கும்போது காற்றுவாடையில் நிற்பதாலும் ஏற்படும் ஈர, பனி காலங்களில் அதிகமாகும்; ஈரத்துணிகளாலும் அதிகரிக்கும். இடது தோள்பட்டை வலி — இடுப்பு முறிந்தமாதிரி வலி.

வண்டியில் செல்லும்போது இடுப்பு வலி.

சற்றே உழைத்தாலும் அதிக சோர்வு—படுத்துக் கொள்ளவேண்டும்.

---

## (145) நக்ஸ் — வாமிகா

எப்போது பார்த்தாலும் ஏதாவது பருகிக்கொண்டிருப்பர்—காபி, டீ ஏதாவது.



அடிக்கடி அஜீரணம், மூலம் உண்டாகும். ஒல்லியாய், ஆத்திர சுபாவமுடையவர்கள்.

ஜாக்கிரதையானவர்கள், அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டு, ரோசமுடையவர்களாயிருப்பவர்கள்.

பிடிவாதம், ஆத்திரம், ஆதுரம், பொறுமையின்மை, கோபம், வஞ்சகம் இவையுடையவர்கள்.

ஆத்திரத்துடன் மனச்சோர்வு, கவலை — தற்கொலை செய்துகொள்ள எண்ணம்—ஆனால் சாவதற்குப் பயம்.

சதா படிப்பு, வீட்டிலேயே அடைந்து தேகாப்பியாசம் இல்லாதவர்கள், மலச்சிக்கலுடன் கூடிய வயிற்றுக் கோளாறுகள்—குடிகாரர்கள்.

மிகைப்பட்ட உணர்ச்சிகள் — சப்தம், வாசனை, வெளிச்சம், பாட்டு இவைகளுக்கு. சிறிய வியாதிகளும் தாங்கமுடியாது-குற்றமில்லாத வார்த்தைகளும் குற்றமாகப் படும்.

சட்டென்று ஆங்காரம், கோபம், பிடிவாதம் — முன் ஜாக்கிரதையுடையவர்கள். தன் காரியத்தில் குறிப்புடையவர்கள்.

காபி, சாராயம், புகையிலை, ரொம்ப மசாலை சேர்ந்த பதார்த்தங்கள், அதிகமான ஆகாரம், நீடித்த மனச்சிந்தனை.

தேக உழைப்பில்லாத வேலைகள், தூக்கமின்மை, வாசனை அல்லது "பேடண்ட்" மருந்துகள், உஷ்ண காலத்தில் சில்லென்ற கற்களின்மேல் உட்காருவதினால் ஏற்படும் வியாதிகள்.

கண்ட மருந்துகளை — அவுன்ஸ் கணக்கில் ஆங்கில வைத்தியர்களின் மருந்துகளைக் குடித்து, கசப்பான

மருந்துகள், மாத்திரைகள், பேதி மருந்துகள், கஷாயங்கள், மிக்ஸர்ஸ், நாட்டு வைத்தியர்களின் லேகிய முதலிய மருந்துகள், பற்பல கடைச்சரக்குக் கஷாயங்கள்-இம்மாதிரி மருந்துகளைச் சாப்பிட்டு சாப்பிட்டு உடம்பை கெடுத்துக் கொண்டவர்களுக்கு — ஆரம்பத்தில் இதைக் கொடுக்க வேண்டியிருக்கும்-ஆனால் ஹோமியோபதி முறைப்பிரகாரம் குணங்குறி ஒத்திருந்தால்மட்டுமே இது பிரயோஜனப்படும்.

பிரக்ஞையுடன் வலிப்புகள்; கோபத்தினால், அதிர்ச்சியினால், அசைந்தால், தொட்டால் அதிகரிக்கும்.

மயக்கமேற்படும்-வாசனையினால், காலையில், சாப்பிட்டவுடன், ஒவ்வொரு பிரசவ வலிக்குப்பிறகும் மயக்கம்.

குத்தும், சுருக்கென்னும், வலி அசைவதனாலும் தொடுவதினாலும் அதிகரிக்கும்.

படுப்பதற்குமுன் மணிக்கணக்கில் வாசிப்பதனாலும், உட்கார்ந்திருப்பதினாலும் தூக்கம் வந்துவிடும் — காலை 3 அல்லது 4 மணிக்கு விழிப்பர் — மறுபடியும் காலையில் தூக்கக்கலக்கம்-இந்த தூக்கத்திலிருந்து எழுப்பமுடியாது; பிறகு ஒரே அசதி — பலவீனம்.

ஜலதோஷம், குழந்தைகளுக்கு மூக்கடைப்பு இரவில் வரண்டும் பகலில் அதிகச் சளியும் வரும் — உஷ்ணமான அறையில் அதிகரித்தும் சில்லென்ற காற்றில் சமனமாகும். சில்லிப்பான இடங்களில் உட்காருவதாலும், கற்படிகளில் உட்காருவதாலும் சளி.

மிதமிஞ்சி உண்பதனால் ஏற்படும் வயிற்றுக்கோளாறு, சதா மருந்தையே சாப்பிட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு குடிப்பவர்களுக்கு ஏற்படும் வயிற்று கோளாறு.



சாப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு மணிக்குப்பிறகு வயிற்றில் வலி, கனம், கல் விழுந்திருப்பதுமாதிரி, நெஞ்சில் நீர் சுரத்தல், இறுக்கும் வலி துணிமணிகளை தளர்த்த வேண்டும், சாப்பிட்டபிறகு இரண்டு மூன்று மணி நேரம் மனதிற்கு வேலை கொடுக்கமுடியாது.

சாப்பாட்டிற்குப்பிறகு தூக்கம் — கவலை, சாராயம், காபி, ஆங்கில, நாட்டு வைத்திய மருந்துகள், ராக்கண் விழிப்பு — ரொம்ப ஆடம்பரமான நாகரீக வாழ்க்கை இவைகளினால் ஏற்படுவது.

ஏப்பம், புளிச்ச, கசப்பான, ஒவ்வொரு காலையிலும் குமட்டல், வாந்தி, மனச்சோர்வு, சாப்பிட்டபின்னர்.

சாப்பிட்டபின், காலையில், சதா குமட்டல், புகையிலை உபயோகித்தலால், வாந்தி யெடுத்துவிட்டால் சாதகமாகி விடும் என்று தோற்றம்.

மலச்சிக்கல், அடிக்கடி முயற்சி. ஆனால் வெளிவராது. கொஞ்சம் கொஞ்சமாக மலம் வெளிப்படுதல்; மலம் பிரிந்து விட்ட மாதிரி முடிவான உணர்ச்சியிராது.

அடிக்கடி மலம் பிரிக்க இச்சை; மலம் பிரிந்த பிறகு சற்று சாதகம், காலையில் எழுந்தவுடன் வெறும் முயற்சி; பேதியும் மலச்சிக்கலுமிருக்கலாம்—அடிக்கடி பேதி சாப்பிட்டவர்கள்.

இடுப்பு வலி, எழுந்து படுக்கையில் உட்காரவேண்டும். பிறகுதான் பிரண்டு படுக்கலாம்—அமித சம்போகத்தினால் — அதிக முஷ்டிமைதுனத்தினால்.

மாதவிடாய் — அதி துரிதமாகவும், நாள்பட்டு நீடித்திருக்கும்; ஆரம்பிக்கும் பொழுதும் மாதவிடாய் நின்ற பின்னும் ஏற்படும் வியாதிகள் — இரண்டு வாரத்திற்கொருதரம்

—நாள் தவறி சரியான டயத்தில் வராது — நின்று பிறகு ஆரம்பிக்கும் — பழய கோளாறுகள் ஜாஸ்தியாகும்.

பிரசவ வலி — வலிபோதாது — கடுமையான இசிவு மாதிரி வலி — மூத்திரம் பிரிக்கவும், மலம் பிரிக்கவும் ஒவ்வொரு வலியுடனும் இச்சை; முதுகில் அதிகம். உஷ்ணமான அறை வேண்டியிருக்கும்.

குடல் வாதத்தில் குடல் இறுக்கப்படும் — (ஸ்ட்ராங்குலேஷன்) — பெரும்பாலும் தொப்புள் — ஹெர்னியா.

குளிர் — குளிர்காற்று உதவாது—சற்று அசைந்தாலும் உள்ளுரக்குளிர் — போர்வையை நீக்கினல் குளிர் — முறைக்காய்ச்சலில் மூன்று நிலையிலும் போர்த்துக் கொள்ளவேண்டும்.

சுரத்தில் அதிக சூடு; உடல் முழுவதும் பற்றிக் கொண்டு எரியும் ; முகம் சிவந்து சூடாயிருக்கும், ஆனல் போர்த்திக்கொள்ளாமல் அசைந்தாலும் உள்ளுரக் குளிர்.

ஹிருதய ஸ்தானத்தில் வலி—படபடப்புடன் வாந்தி—ஒற்றைத் தலைவலி.

சிறந்த ஆஸ்த்மா மருந்து. ஈரல் கட்டிக்கு சிறந்த மருந்து.

## (146) ஓபியம்

எல்லா கோளாறுகளிலும் வலியின்மை ஒரே மயக்கம் — ஒன்றும் வேண்டாம் — ஒரு கோளாறுமில்லை என்றிருப்பர்.



மருந்துகள் வேலையே செய்யாது :—

நன்ருக பொறுக்கிக் கொடுத்த மருந்தும் வேலை செய்யாது — நடுக்கல்—உடம்பில் சக்திக்குறைவு.

முழுவாதம், உணர்வின்மை இவைகளுடன் கூடின வியாதிகள், பீதியினுல் ஏற்படலாம். பயத்தினுல், கரிப் புகையினுல், குடிகாரனுக்கு வியாதிகள்.

குழந்தைகளுக்கும், கிழவர்களுக்கும், சரீர உணர்ச்சி குறைந்தவர்களுக்கும், தளர்ந்த கட்டுடையவர்களுக்கும் உகந்தது.

அயோக்கியன், அண்டப்புளுகன்.

புதிய மனிதர்கள் வருவதால் குழந்தைகளுக்கு ஏற்படும் வலிப்புகள்; பீதியுற்ற தாயார் குழந்தைக்குப் பால் கொடுத்து அதனுல் குழந்தைக்கு வலிப்பு, அழுவதனுல் வலிப்பு; கண்கள் பாதி திறந்து, மேல்நோக்கியிருக்கும்.

வலியின்போது கூச்சலிடுதல்; மூச்சு உள்ளிழுக்கும் போதும் வெளியிடும்போதும் திணறின மூச்சு.

தூக்கம் – மயக்கம் மாதிரி – மூச்சு குறட்டையொலி சப்தம் — முகம் சிவந்து, கண்கள் பாதி மூடி, சிவந்து, உடம்பில் உஷ்ணமான வியர்வை ஏற்பட்டு – வலிப்புகளுக்கு பிறகு.

தூக்க மயக்கம் ஆனல் தூக்கம் வராது. சாதாரணமாக காதில் கேட்காத சத்தங்களும் நன்ருகக்கேட்கும்; ரொம்ப தூரத்தில் காக்கை கரைதலும், கடிகார ஓசையும் தூக்கத்தை கலைக்கும்.

ஜன்னியில் சதா பேத்தல் — கண்கள் அகலத்திறந்து, முகம் வீங்கி, சிவந்து, பிரக்ஞையில்லாமல், ஆழ்ந்த மயக்

கத்துடன் இருக்கும் — முகம் வெளுத்து கண்கள் பளபள வென்று, பாதி திறந்தும் இருக்கும்.

குடிகாரன் ஜன்னி – இளைத்த தேகிகள்; முகம் ஊதி— கண்கள் சிவந்து வரண்டு, பெரும் குறட்டையுட னிருக்கும்.

தான் வீட்டிலில்லை என்ற எண்ணம்; இது சதா மனதை உறுத்தும்.

தூக்கத்தில் மூச்சு நின்றுவிடுதல்.

தூக்கத்தில் படுக்கைத்துணியை பிய்த்தல்.

படுத்த இடம் ரொம்ப உஷ்ணமாகத் தோன்றுவதால் சில்லென்ற தரையை நோக்கி நகருவார்; போர்த்திக்கொள்ள மாட்டார்.

மலச்சிக்கல், மலம் பிரிக்க இச்சையிராது; சுயப்பாஷாணத்தினால் ஏற்படலாம். மலம் தீய்ந்து கடுமையான கெட்டி யான உருண்டைகளாக இருக்கும் – மலம் வெளிவந்து பிறகு உட்சென்று விடும்.

மலமாக வாந்தி — குடல் மேல்நோக்கி வேலைசெய்யும்.

மலம் தானறியாமலே பிரியும்-பேதிக்குப்பிறகு, கருப் பாகவும், துர்நாற்றத்துடனும்.

நாட்பட்ட பேதிக்கு 'அபின்' மற்ற வைத்திய முறை களில் கொடுக்கப்பட்டு - குணப்படாமலே இருக்கும் கேசு களுக்கு.

குழந்தை கிழவன் மாதிரி இளைத்திருக்கும்.

மூத்திரம் - நிறைய இருக்கும் - ஆனால் பிரியாது - பிரசவத்திற்குப் பிறகு — அதிக புகையிலை உபயோகிப்பத



னால் குழந்தைகளுக்கு, பாலூட்டும் செவிலிக்கு, அதிக இச் சையினால் — கடும் ஜுரத்தினால் — மூத்திரப் பையின் வாதத்தினால்.

---

## (147) பெட்ரோலியம்

தோல் முழுவதும் வலியுள்ள உணர்ச்சி, துணிகள் வலி புண்டாக்கும்; சிறு காயமும் சீழ் பிடிக்கும்.

கைகளின் தோல் தடிப்பாகவும், வெடித்தும் — விரல் நுனிகள் சொரசொரவென்றும், வெடித்தும் இருக்கும் — ஒவ்வொரு மழை காலத்திலும் வரும். கால்கள் மிருது வாய் நாற்றமுடைய வியர்வையினால் நனைந்திருக்கும்.

தலை, காதின் பின்பக்கம், விதை, ஆசனவாய், கைகள், கால்கள், இந்த இடங்களில் கரப்பான் — ரத்தம் கொட்டும் — கோடையில் சௌகரியம்.

மர்மஸ்தானத்தின் அக்கி, துடை, ஆசனவாய் பக்கம் பரவி—அரிப்பு, சிவப்பு, தோல் வெடித்து தடித்து ரத்தம் கொட்டும்.

வியர்வை — அக்குள், உள்ளங்கால் — மர்மஸ்தானம், உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல்; ஹிருதயத்தைச்சுற்றி சில்லிப்பு.

தானறியாமலே மூத்திரம் போதல் — இரவில் பேதி — மஞ்சளாக தண்ணீர் மாதிரி — பீச்சும் வலியுடன் — பகலில் மாத்திரம், கர்ப்ப காலத்தில், புயல் வீசும் காலத்தில்.

வண்டியில் செல்வதாலேற்படும் வியாதி — ரயில் அல்லது கப்பல் பிரயாணத்தால்.

இடி சமயத்தில் அல்லது முன்னால் வரும் கோளாறுகள்.

குறிகள் சட்டென்று தோன்றி சட்டென்று மறையும்.

வயிறு நிரம்பாமலிருந்தால் வயிற்று வலி. சதா சாப்பிட்டுக்கொண்டிருந்தால் சாதகம்.

எழுந்தால் மயக்கம் - பின் தலையில் குடித்தவன்மாதிரி-கடல் வாந்தி, மயக்கம்.

பின்தலையில் பாராங்கல் வைத்த மாதிரி தலைவலி—துடிக்கும் வலி — தலையில் இருப்பவை எல்லாம் உயிரோடிருக்கிறமாதிரி — மரமரத்து — மரத்தால் செய்ததுபோலிருக்கும்—வண்டி சவாரியினால் அதிகரிக்கும்.

தூக்கத்தில் அல்லது ஜன்னியில் ஒரு கால் இரட்டையாய் தோன்றும். தன் படுக்கையில் இன்னொருவன் படுத்திருப்பது மாதிரி, படுக்கையில் இரண்டு சிசுக்கள் இருப்பது மாதிரி.

---

## (148) பெட்ரோசெலினம்

ரொம்ப அவசரமாக மூத்திரம் பிரிக்க உணர்ச்சி. குழந்தைகள் எழுந்து குதிக்கும். வலியினால் துள்ளும்.

மூத்திரக்குழாயில் அரிப்பு — வெட்டை — ரொம்பக் கடுப்பு-நன்றாக எதைக்கொண்டாவது தேய்த்துக்கொள்ள வேண்டும். ஆண்குறியின் அடிப்பக்கத்தில் வலி.

தாகம், பசி — ஆனால் சாப்பிட அல்லது பருக ஆரம்பித்ததும் ஆசை நின்றுவிடும்.

---



## (149) பாஸ்பரஸ்

ஒல்லியாய், உயரமாய், குறுகின மார்புடையவராய், மிருதுவான மயிரும், பூஞ்சையான இமை மயிரும், பலஹீனமானவர்களுக்கும் உகந்தது. வெளுத்து, சோகையுற்று, மஞ்சட்காமாலையுடையவர்கள்.

சதா அமைதியின்மை, கவலை, அசையாமல் உட்காரவோ, நிற்கவோ முடியாது. தனியாக இருக்கும்போதும், இரவிலும், இடிக்கு முன்னும் அதிகமாகும்.

எரிச்சல் — முள்ளந்தண்டில், தோள்பட்டைகளுக்கு நடுவில் — முதுகில் உஷ்ணம் — உள்ளங்கையில், மார்பில், ஒவ்வொரு இடத்திலும் நரம்பு வியாதிகளில் இது அதிகம்.

ரத்தம் கொட்டும் சரீரவாகு; சிறிய காயமும் ரத்தம் கொட்டும்.

சிறுவர்கள் சீக்கிரமாக வளருவார்கள்; வளைந்து நடப்பார்கள். சோகை, வயதானவர்களுக்கு காலையில் பேதி.

வெளிச்சம், சப்தம், வாசனை, ஸ்பரிசம் இவைகளின் உணர்ச்சி மிகைப்பட்டுக் காணும்.

ரொம்ப பலவீனம், தள்ளாமை, நடுக்கல் — தாது நஷ்டம், ரத்தப்பெருக்கினால்.

வலி-மார்பில்-அமுக்கினால் அதிகரிக்கும், மார்ப்புறத்தில், இடதுபக்கம் படுத்தால் சற்று திறந்த சில்லென்ற காற்றினாலும் அதிகம்.

வயிறு முழுவதும், தலை, மார்பு முதலிய இடங்களில் ஒன்றுமே இல்லாததுபோல தோற்றம்—சங்கடம்.

ஐஸ் போட்ட சாமான்கள் பிடிக்கும் — ஒத்துக்கொள்ளும். குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டால், வயிற்றில் சற்று உஷ்ணப்பட்டவுடன் வெளியே வாந்தி எடுத்துவிடும்— ஐஸினுல் வயிற்றுவலி சாதகம்.

வெந்நீரில் கையை வைத்தால் குமட்டல், தும்மல், சளி.

சோகத்தினுல் பேசக்கூட பிடிக்காது, மெதுவாக பதில் சொல்லுவர்—வாழ்வில் அலுப்பு, கண்கள் குழி விழுந்து — நீல வளையங்கள் சுற்றி — இமைகள் வீங்கி, ஊதி.

தலைப்பொடுகு - கொத்து கொத்தாய் மயிர் உதிரும், திட்டு திட்டாய் வழுக்கை.

பேதி-குடலில் எது சேர்ந்தாலும் உடனே — பெரிய குழாயிலிருந்து கொட்டுவதுபோல-தண்ணியாக, ஜவ்வரிசி மாதிரி துணுக்குகளுடன் போகும். ஆசனம் விரிந்திருக்கிறுப்போல தோற்றம்-தானறியாமலே, காலரா காலத்தில், வயதானவர்களுக்கு காலையில்.

நாடா மாதிரி மெலிந்த, நீண்ட கெட்டியான மலம்- ரொம்ப முக்கலுடன் வெளிப்படும்.

கர்ப்ப காலத்தில் தண்ணீர் சாப்பிடமுடியாது. பார்த்தாலும் வாந்தி, குளிக்கும்போதும் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.

ரத்தப்பெருக்கு - நிறையக்கொட்டி சற்று நிற்கும்— பெரும்பாடு, புற்று, ரத்த வாந்தி, நாசியிலிருந்து ரத்தம். வயிறு, குடல், நீர்த்துவாரம் மாதவிடாய் நின்ற சமயத்தில்.

பேசமுடியாது, குரல்வளை வலி, வரண்டு புண்ணுக இருக்கும்.



உஷ்ணமான காற்றிலிருந்து சில்லென்ற காற்றிற்கு சென்றால் இருமல்—சிறித்தால், பேசினுல், வாசித்தால் பருகினுல், சாப்பிட்டால் இடது பக்கத்தில் படுத்தால் அதிகரிக்கும்.

மார்பில் ஒரு பெரிய கனம் தூக்கிவைத்த மாதிரி தோற்றம்.

வியர்வை கந்தக நாற்றமடிக்கும். அடித்தாடை எலும்பு கெட்டுவிடும். ஹிருதயம் கொழுத்துப் பெருத்துவிடும். டி. பி க்கு முக்கியமான மருந்து.

## (150) பைரோஸ்டிக்மா

டிடானஸ் என்ற ரண ஜன்னி இசிவு; பக்கத்தில் செல்லும் மனிதனின் மூச்சுக்காற்றுபட்டாலும் அதிகரிக்கும்.

கண்களை அதிகமாக உபயோகித்ததனுல் வலி. கருப்பு பூச்சி பறப்பது மாதிரி — கண் தசைகள், இமைகள் துடிக்கும்.

நடை கெட்டுவிடும் — தசைகள் பலவீனப்பட்டுவிடும்.

மன அதிர்ச்சி அல்லது தேகக் கோளாறினுல் சிறுவர்களின் உடம்பு நடுக்கல்.

கண் பார்வை மங்கல், தோற்றம் கலங்கும்.

மனதில் துரிதமான யோசனை - யோசனை செய்யாமல் இருக்கவே முடியாது.

## (151) பைடோலாகா

வாயு சரீரிகள், பாதரசம் ஸிபிலிஸ் இவைகளினுல் தாக்கப்பட்டவர்கள்.

இளைப்பு—கொழுப்பு குறைந்துவிடும். ரொம்ப அசதி, தளர்ச்சி.

டிப்திரியா, வெட்டை, ஸிபிலிஸ் இவைகளுக்குப்பிறகு நரம்பு வலி, வாயு.

வலி — மின்னல் வெட்டு மாதிரி வெட்டும், குத்தும், இடம் விட்டு இடம் மாறும், இரவிலும், அசைந்தாலும் அதிகம்.

டான்சில்ஸ், சிவந்து வீங்கி, வெள்ளைத்திட்டுகள், காதுகளுக்குள்ளே வலி பரவும், தலை, முதுகு, கால்கள் எங்கும் வலி — ரொம்ப வலி.

தொண்டை கருஞ் சிவப்பாக சிவந்து உள் நாக்கு பெருத்து, தண்ணீர்ப் பை மாதிரி இருக்கும்.

டிப்திரியா எரிச்சல் நெருப்பு, சுடுகிறமாதிரி, வரட்சி கைகளில் நடுக்கம், விழுங்கச் சிரமம், தொண்டையில் கட்டி இருக்கிற மாதிரி, உஷ்ணமாக குடிக்க முடியாது.

பல்ஸீரல்களையும், பல்லையும் சேர்த்து கடிக்க தடுக்க முடியாத உணர்ச்சி - பல் முளைக்கும்போது.

அவள் செத்துவிடுவாளென்று வாழ்வில் மிக அலுப்பு.

படுக்கையை விட்டு எழுந்தால் கிறுகிறுப்பு, தாளாத தலைவலியும், முதுகு வலியும் — உடல் முழுவதும் அடித்துப் போட்ட மாதிரி, அடிக்கடி நகர ஆசை ஆனால் வலி அதிகமாகிவிடும்.

ஸ்தனங்கள் — கல் மாதிரி ரொம்பக் கடினமாக பெருத்து, உஷ்ணமாகவும், வலியுடனும் இருக்கும் - சீழ் பிடிக்கலாம், குழந்தை பால் குடித்தால் வலி காம்பிலிருந்து உடல் முழுவதும் பரவும்.



ஸ்தனக் கட்டி - பவித்திரங்கள். பயங்கரமான ஆழமான புண்கள், துர்நாற்றமுடைய சீழ்.

கல்போன்ற கெட்டியான ஸ்தனம் ஆறுது. சீழும்பிடிக்காது - கருஞ்சிவப்பாக இருக்கும்.

ஸ்தனத்தில் கல்போன்ற சிறு கட்டிகள், முலைக்காம்பு- வெடித்து புண்ணாகி - சீழ் உண்டாவதை சீக்கிரப் படுத்தும்.

## (152) ப்ளாண்டாகோ

பல் வலிக்கு சிறந்தது.

பல் வலி - காது வலி - இவைகளுக்கு மேலுக்கும், உள்ளுக்கும் உபயோகிக்கவும்.

நரம்பு வலி — மேலுக்கும் போட சாதகம்.

பல் வலி — சாப்பிடும்போது அதிகம்.

## (153) ப்ளாடினா

ரொம்ப அகம்பாவம்; தன்னைப்பற்றி ரொம்ப அதிகமாக நினைத்துக்கொள்ளுதல்; மற்றவர்களைப்பற்றி கேவலமாக நினைத்துக்கொள்ளுதல்.

திமிர், கர்வம், அகம்பாவம், தன்னைச்சுற்றி இருப்பவை எல்லாம் சிறியவைகளாகத் தோன்றும்; பாக்கி மற்றவர்களெல்லாம் ரொம்ப கீழ்ப்பட்டவர்களாகத்தோன்றும்.

நாலு பக்கமும்தான் வளருவதாகத் தோற்றம்.

சின்ன காரியங்களும் ரொம்ப ஆத்திரமுண்டாக்கும்.

வாழ்வில் கசப்பு – சாவைப்பற்றி பயம்.

பீதி, துக்கம், அவமானம், கைமுஷ்டி, கர்வம் இவைகளினால் மனக்கோளாறுகள்.

மனக்குறிகளும், சரீரக்குறிகளும் மாறி மாறி வரும்.

ரொம்ப உணர்ச்சியுள்ள ஜனனேந்திரியங்கள் — துணிகூடப்பட முடியாது, பரிசோதனை செய்தால்கூட வலிப்புகள் வந்துவிடும். சம்போகத்தின்போது யோனி ரொம்ப வலிக்கும்; சம்போகம் தாளாது — மயக்கமும் வந்துவிடும்.

அதிக காம இச்சை; பிரசவித்த ஸ்திரீகளுக்கு அதிகம்; கல்யாணமாகாத பெண்களுக்குமதிகம். சினைப்பைக் கோளாறுகள், கர்ப்பப்பை வெளித்தள்ளுதல் அல்லது பெரும்பாடு உடையவர்கள்.

மாதவிடாய் — ரொம்ப சீக்கிரம், ரொம்ப அதிகம், நீடிக்கும், கருப்பான கட்டிகளாக, ரொம்ப வலியுடன், துர்நாற்றமாக வெளிப்படும் — தார் மாதிரி கெட்டியாகவுமிருக்கும்.

கர்ப்பப்பையில் அதிக அரிப்பு, யோனி அரிப்பு.

வலிகள் படிப்படியாக அதிகப்பட்டு படிப்படியாகக் குறையும். மரமரப்புடன் கூடியிருக்கும்.

ஹிஸ்டிரியா உடையவர்கள்; சந்தோஷம், துக்கமும் மாறி மாறி வரும், சுலபமாக அழுகை வரும் — ரொம்ப அசதி.

தலைவலி — மூளையில் அல்லது உச்சந் தலையில் மரமரப்புடன் கனமான வலி. கோபம், ஆத்திரம், இவைகளினால், கர்ப்பப்பை வியாதிகளினால்.



சமுத்திரத்து பிரயாணத்தினால், மலச்சிக்கல்; ஈயப் பாஷாணத்தினால், குடல் சரியாக வேலைசெய்யாததினால், அடிக்கடி வெற்றியுறாத முயற்சி, குடலிலும், ஆசனவாயிலும் மலம் களி மண் மாதிரி ஒட்டிக்கொள்ளும் — கர்ப்ப காலத்தில், பிரயாணிகளுக்கு சகஜம்.

---

## (154) ப்ளம்பம்

முள்ளந்தண்டு வியாதிகள்.

துரிதமான இளைப்பு; பக்ஷவாதம், ரொம்ப ரத்த சோகை-பலவீனம்.

முள்ளந்தண்டு வியாதியினால் தசைகள் சுருங்கி விடுதல் —மணிக்கட்டு வாதம்.

அசதி — கூட்டமிருக்கும் அறைக்குள் செல்வதனால் மயக்கம்.

புத்தி மந்தம் - படிப்படியாக அதிகரிக்கும் மனச் சலிப்பு.

மறதி-சரியான வார்த்தை நினைவு வராது.

முகம் கொழுப்பு தடவின மாதிரி பளபளப்பு-வெளுத்த, விபூதி மாதிரி, மஞ்சளாக அல்லது பிணம்மாதிரி, கன்னங்கள் குழிந்த முகம்—ரொம்ப வருத்தம், கவலை, சோகம் குடியிருக்கும்.

மஞ்சட்காமாலை - வெளுத்த மலம், மஞ்சள் மூத்திரம்; கண் மஞ்சள்.

பல்லீரலின் ஓரங்களில் நீலக்கரை. ஈரல் வீங்கி, நீலக் கோடிட்டிருக்கும்.

ஜன்னியுடன் வயிற்று வலி.

படுக்கையில் பலவிதமான அதிசயமான நிலையில் படுத்துக்கொள்ளுவர் — நரம்பு வலிகள்.

வயிற்றுவலி — வலி உடல் முழுவதும் பரவும்.

வயிற்றுவலி – இரவில் – கைகால்களை நீட்டிக்கொண்டு மணிக்கணக்கில் ஒவ்வொரு திசையிலும் படுத்துக்கொள்ள வேண்டும்.

கடும் வயிற்றுவலி –வயிற்றின் சுவர் கம்பிபோட்டு முள்ளந்தண்டுடன் இழுத்துக்கட்டினதுபோல், முதுகுப் பக்கம் உள்ளடங்கியிருக்கும்.

நெறுக்கப்பட்ட குடல் வாதம்;—வயிற்று வலியுடன் மலம் வாந்தியாகும்.

மலச்சிக்கல் — மலம் கெட்டியாக முடிச்சாக, ஆட்டுப் புழுக்கை மாதிரி கருப்பாய் கட்டியாக வெளிப்படும். ஆசன வலிப்பினால் வலி தாளாது. மலம் கட்டி தட்டினதினால் மலம் வெளிப்படாது.

கர்ப்ப காலத்தில், 'பிளாடினா' சரியாக வேலைசெய்யா விட்டால் இதைக்கொடுக்கவும்.

பிரைட்ஸ் வியாதி:— மூத்திரக்காய் சுருங்கிவிடுதல் — வயிற்று வலி.

மூளை வியாதியால், மூளைக்கட்டியினால், வலிப்புகள், காக்கை வலிப்பு முதலியன.

சிசுவிற்கு கர்ப்பப்பையில் இடமில்லாததுபோலிருக்கும் — கர்ப்பப்பை வளருவதற்கு சிரமப்படும் — கர்ப்பச் சிதைவு ஏற்படலாம்.

---



## (155) போடோபில்லம்

பேதி — நாட்பட்டது — காலையில்; முற்பகல் முழுவதுமிருக்கும் — மாலையில் சாதாரண மலம்பிரியும், ரொம்ப பலவீனம் அல்லது சங்கடம்.

பல் முளைக்கும்போது, சாப்பிட்ட பிறகு, குளிக்கும் போது, குமட்டலுடன்.

ஓயாத எதுக்களிப்பு — வாந்தி இராது. அரைக் கண் மூடி தலையைப்போட்டு முனகலுடன் உருட்டும் - பல் முளைத்தல் — சிரமம்.

காலரா — வலியில்லாத காலரா.

தண்ணீர் மாதிரி ஏராளமான மலம் – கால் கண்டைச் சதை, துடைகளில் கண்டை ஏறுதல்.

அதிகமான மலப்போக்கு – பச்சையாய், துர்நாற்றத்துடன் — சாக்கு மாதிரி; ஜீரணமாகாமல், மஞ்சளாய், மலத்துடன் ஆசனம் வெளித்தள்ளுதல். பலவீனம்.

கர்ப்பப்பை வெளித்தள்ளுதல் — ஆரம்ப கர்ப்பகாலங்களில் குப்புறப்படுத்தால்தான் சௌகரியம்.

கல்லீரல் இருக்கும் பாகத்தை சதா கையினால் தடவி தேய்த்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

நிறைய குளிர்ந்த நீர் சாப்பிடவேண்டும். பளிச் பளிச் சென்று வரும் வலிகள். தான் ரொம்ப நோயுறுவதாகவும், சாகப்போவதாகவும் — மனச்சலிப்பு.

தலை வலி மழை காலத்தில் — கோடையில் பேதி — தலைவலியும் பேதியும் மாறிவரும்.

சுரத்தில் ரொம்ப பேச்சு — மஞ்சளான தோல் — காலே 7 மணிக்கு சுரம் — வியர்வையின்போது தூக்கம்.

வலது பக்கத்து வியாதிகள்.

சிறு பெண்களுக்கு தடைபட்ட மாதவிடாய். வலது சினைப்பையில் வலி, மரமரப்பு, துடையில் கீழ் புறம் வலி பரவும்.

---

## (156) சோரினம்

'ஸோரா'விற்கு மருந்து.

நீடித்த கிரானிக்கேசுகளில் வேறு சரியானபடி பொறுக்கிக்கொடுக்கப்பட்ட மருந்து கொடுத்து சரியான படி வேலைசெய்யாவிட்டால், இதைக் குறிகளைக்கொண்டு கொடுக்கவும்.

கடும் அக்யூட் வியாதிகளுக்குப் பிறகு உடம்பு தேரு விட்டால் - பசி திரும்பாது.

ரொம்ப கவலை, சலிப்பு, சோர்வு, சர்வம் சோக மயம்.

குழந்தை வெளுத்து, ஒல்லியாகி, வியாதியுற்று— இரா முழுவதும் பகல் முழுவதும் தூங்காமல், சதா தொந்திரவு கொடுத்துக்கொண்டும், அழுதுகொண்டும், சிடுமூஞ்சியாகயிருக்கும்.

குழந்தை நன்ருய் பகலில் விளையாடும், இரவில் கத்திக்கொண்டு அமைதியில்லாமலிருக்கும்.

ரொம்ப பலவீனம் — தளர்ச்சி, சற்று அசைந்தாலும் வியர்வை, பேசாமல் படுத்துக்கொண்டால் தேவலை.



உடம்பில் குளித்த பிறகும்கூட அழுகல் நாற்றம்.

பேதி, வெள்ளைப்பாடு, மாதவிடாய், வியர்வை எல்லாம் ஒரே பிண நாற்றம்.

ஒரு காரணமில்லாமல், அவயவக்கோளாறு. ஒன்றுமில்லாமல் கடும் வியாதிகளுக்குப் பிறகு பலஹீனம், சோர்வு.

உடல் முழுவதும் வலி — சட்டென்று சுளுக்கும், காயப்படும்.

சில்லென்ற காற்று தாக்கும் — சீதோஷ்ண ஸ்திதி மாறுதலும் தாக்கும் — ரொம்ப கடுங்கோடையிலும் கம்பளிக் குல்லாய், சட்டை, போர்வை வேண்டும்.

புயல் அல்லது இடி முதலியவை முன்கூட்டியே தெரிந்து விடும் — அக்காலங்களில் அமைதியின்மை.

தோல் வியாதிகள், வரண்டு, நீர்க்கசிந்து, வரட்டுத் தோல் மாதிரி செதிலாகவும், அழுக்காகவும், இருக்கும் — கோடையில் மறைந்து மழை காலத்தில் வரும்.

அமுக்கப்பட்ட சொரி, தோல் வியாதிகளினல் ஏற்படும் நோய்களுக்கு ஸல்பர் சரியானபடி சௌகரியம் செய்யாவிட்டால், இதைக் கொடுக்கவும்.

சிறு சமாசாரத்திலைும் அதிர்ச்சியடைவர்.

வியாதி தாக்குவதற்கு முதல்நாள் நன்ருக சௌகரியமாகக் காணுவர்.

ஒரே பயம் — கெட்ட முடிவைப்பற்றிய நினைவுகள்— சௌகரியம் அடையமாட்டோமென்ற பீதி — நமக்கு நல்ல கதியில்லையென்ற கவலை.

காதின் பின் பக்கம் கரப்பான் — துர்நாற்றமுடைய நீர் கசியும்.

அரிப்பு தாங்காது. முகப்பரு மாதவிடாயின்போது அதிகரிக்கும், காபி, கொழுப்புப்பதார்த்தம் சர்க்கரை, மாமிசம், இவைகளினல்.

தலையில் கரப்பான் - பிசுக்கென்ற நீர் - துர்நாற்றம்.

தலைமயிர் சோபையிழந்து, சிக்கல் ஏற்பட்டு, ஒட்டிக் கொள்ளும்.

காது சீழ் - தண்ணீர் மாதிரி, துர்நாற்றம், அழுகல் நாற்றம் - மணல்வாரி அல்லது ஸ்கார்லடின சுரத்திற்குப் பிறகு.

கண்கள் — இமை வீங்கி — வெளிச்சம் பார்க்கவே முடியாது.

தலைவலியின்போது சதா பசி - சாப்பிட்டால் சாதகம் - அமுக்கப்பட்ட தோல் வியாதி, மாதவிடாய் இவைகளுக்குப் பிறகு, நாசியிலிருந்து ரத்தம் வந்தால் சாதகம்.

தலைவலி வரும் முன்னல் கண்முன் பூச்சி பறக்கும், கண் மங்கும், பார்வை இராது.

நடு ராத்திரியில் பசி, ஏதாவது தின்னவேண்டும்.

அழுகின முட்டை மாதிரி ஏப்பம்.

டான்சில்ஸ் - பெரிதாய் வீங்கி, விழுங்க சிரமத்துடன், எரியும், வெட்டும், கிழிக்கும், தாங்காத வலி - காதுப்புறம் வலி - ஏராளமான எச்சில் - தொண்டையில் பிடித்தமான கோழை—சதா இருமவேண்டியிருக்கும் — இது வராமலே தடுக்க சிறந்த மருந்து.



வெண்ணை உருண்டைபோல் இருமி வெளிப்படுத்துவர் — துர்நாற்றம் அடிக்கும்.

கடும் வியாதிகளுக்குப் பிறகு அமிதமான வியர்வை — அதனல் சாதகம்.

பேதி — திடீரென்று, தண்ணீயாய், கருப்பாய், ரொம்ப துர்நாற்றத்துடன் இரவில் 1 முதல் 4 மணி வரையில் — சீதோஷ்ண ஸ்திதி மாறுதலின்போது, பல் முளைக்கும்போது — கடும் வியாதிகளில்.

கடும் மலச்சிக்கல் — இடுப்புவலியுடன் — ஸல்பர் சௌகரியம் செய்யாவிட்டால்.

மூத்திரப்பை வாதத்தினல் தானறியாமலே மூத்திரம் பிரியும் — பௌர்ணமியின்போது, கடுமையான கேசுகள், குடும்பத்தில் கரப்பான் வியாதியிருந்தால்.

வெள்ளைப்பாடு - சகிக்காத நாற்றத்துடன் கட்டி முட்டியாய் - இடுப்புப்பக்கம் கடும் வலி - பலவீனம் - மாதவிடாய் நிற்கும் காலத்திலும்.

நீடித்த வெட்டை — எந்த மருந்தினலும் சொஸ்தமாகாதது.

கர்ப்ப காலத்தில் கடுமையான வாந்தி — சிசு ரொம்ப வேகமாகப் புரளும்.

ஆஸ்த்மா - திறந்த காற்றில், எழுந்து உட்கார்ந்தால் அதிகமாகும்; படுத்துக்கொண்டால் கைகளை விரித்துக் கொண்டு சாதகம், தானிறந்துவிடுவோமென்ற நினைப்பு.

ஒவ்வொரு மழை காலத்திலும் வரும் இருமல்.

ஹேசுரம் — ஒவ்வொரு வருஷமும் அதே டயத்தில், ஆஸ்த்மா, ஸோரா, கரப்பான் முதலியவை இருந்திருந்தால்.

கரப்பான் தோல் வியாதி அமுக்கப்பட்டால் வரும் நாள்பட்ட இருமல் காலையில் எழுந்ததும் அதிகரிக்கும், மாலையில் படுத்தால் அதிகரிக்கும் — கோழை மஞ்சளாய், பச்சையாய், உப்புகரிக்கும், சீழ் மாதிரியான கோழை. ரொம்ப நாழி இருமி வாந்தியெடுக்கும்.

தோல் வியாதிகள் சட்டென்று சீழ் பிடிக்கும், வரண்டு, வியர்வையில்லாமல், அமுக்குபடிந்து இருக்கும்.

## (157) பல்ஸாடில்லா

சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்பட்டு, சிரிப்பார்கள் அல்லது சட்டென்று அழக்கூடியவர்கள்; வாஞ்சையுள்ளவர், சாது, பயங்கொள்ளி, சபைக்கோழை - விட்டுக்கொடுக்கும் சுபாவம்-பெண்பிள்ளை இம்மாதிரியானவர்களுக்குஉகந்தது.

சட்டென்று அழுவர்; தன் கோளாறுகளை அழாமல் சொல்லமுடியாது.

குறைந்த மாதவிடாயுடன்கூடின சற்று ஊதிப்பெருத்த ஸ்திரீகள்.

பருவமடைந்த பொழுதிலிருந்தே உடம்பு சரியாக இல்லை - சோகை, பிரான்கைடிஸ், க்ஷயம் முதலியன.

குறிகள் சதா மாரிக்கொண்டே இருக்கும். இரண்டு குளிர், இரண்டு மலம், இரண்டு குறிகள், எதுவும் ஒத்திருக்காது. ஒரு மணி நன்ருகயிருப்பர், மறு மணி ரொம்ப துன்பகரம், நேர் விரோதமாய் இருக்கும்.



வலி அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும். ஒரு பாகத்திலிருந்து மற்ெருரு பாகத்திற்கு-உள்ளூரக்குளிரிருக்கும். எவ்வளவு கடுமையான வலியோ அவ்வளவு குளிர்; சட்டென்று வந்து, மெதுவாக சென்றுவிடும், அல்லது படிப்படியாக முறுக்கேறி பட்டென்று தெரித்தாற்போல் நீங்கிவிடும்.

உஷ்ணமான அறை, உஷ்ணமான ஒற்றடம், இரும்பு சத்து அதிகமாக உட்கொள்ளுதல் இவைகளினுல் வியாதி அதிகமாகும். திறந்த சில்லென்ற காற்றில், மெதுவாக நடந்துகொண்டிருந்தால். சில்லிட்ட பானம் அல்லது ஆகாரத்தினுல் சாதகம்.

மியூகஸ் சவ்வுகளிலிருந்து தடிப்பாகவும், கொழகொழப்பான, மஞ்சள் பச்சையான கசிவு.

எந்த கோளாறிலும் தாகமின்மை, அஜீரணம். மஸ்தான பதார்த்தங்கள், சாப்பிடுவதால் ஏற்படும்.

வாயில் துர்நாற்றம், வரட்சையுடன் காலையில் அதிகப்படும்—தாகமின்மை.

ட சாப்பிடுகிறவர்களுக்கு வயிற்றில் ஒன்றுமில்லாதது போலுணர்ச்சி.

பல் வலி, குளிர்ந்த தண்ணீரை வாயில் வைத்துக்கொண்டிருந்தால் சாதகம். சூட்டினுல் அதிகப்படும்.

தாளம்மை, மணல்வாரி — சிறந்த மருந்து.

பேதி - இரவில் மட்டும், தண்ணீராய், பசும் மஞ்சளாய், மாறி மாறி காணும் மலத்துடன், சாப்பிட்டவுடன், பழம்; ஐஸ் பானங்கள் முதலியவைகளினுல்.

பருவ காலத்தில் மாதவிடாய் கால்களை நனைப்பதினால் தடைப்படும்; நாள்பட்டு வெளிவரும், குறைவாகவும், சீதக் கட்டு மாதிரியும்; வலியுடனும். விட்டுவிட்டுவரும் பெருக்குடனும், சாயங்காலம் குளிருடனும், ரொம்ப வலியுடன் அமைதியின்மையுடனும், பகலில் அதிகமான பெருக்குடனும் ஏற்படும். முதல் மாதவிடாய் நாட்பட்டு ஏற்படும்.

ரஸ்டாக்ஸ் கொடுத்து சரியாகாத கடும் இடுப்பு வலி.

கண் கிரிக்கட்டிகள்; மேலிமையில். கொழுப்பான, மஸ்தான பதார்த்தம் சாப்பிடுவதால்.

கர்ப்பச் சிதைவு ஏற்படும்போது — போக்கு கண்டு, நின்று நின்று வரும்; வர வர வலி கடுமையாகி, மூச்சுத் திணறலுடன், மயக்கமும் வரலாம்; திறந்த காற்று வேண்டியிருக்கும்.

மாலையில் நன்றாக விழித்துக்கொண்டிருப்பர்; படுக்கையில் படுக்கப் பிரியமிராது; முதல் தூக்கம் அமைதியில்லாமல், தூங்கி எழுந்திருக்கும் காலத்தில் நல்ல தூக்கம் வரும்; எழுந்தால் தூக்க அசைதி.

தலைவலி — இறுக்கிக் கட்டிக்கொண்டால் சாதகம்.

---

## (158) பைரோஜன்

சாப்பாட்டு விஷம் அல்லது சாக்கடை விஷங்களினால் ஏற்படும் வியாதிகள்.

ஸெப்டிக் வியாதிகள், பிரசவ ஜன்னி சுரம், டிப்திரியா, டைபாயிட், டைபஸ், முதலிய சுரங்களின்போது சரியான மருந்து கொடுத்தும் குணம் ஏற்படாவிட்டால்.



படுக்கை கடினமாகவிருக்கும். படுத்த இடமெல்லாம் உறுத்தும். ரொம்ப அமைதியின்மை. அடிக்கடி இடம் மாறவேண்டும்.

நாக்கு-பெருத்து - பளபளவென்று, வழவழப்பாய், நல்ல சிவப்பாய், வரண்டு, வெடித்து, பேசமுடியாது.

வாந்தி — ஓயாமல், கருஞ்சிவப்பாய், துர்நாற்றத்துடன் இருக்கும்.

ருசி தித்திப்பாய், ரொம்ப விச்சத்துடன் சீழ்மாதிரி இருக்கும்.

ரொம்ப தாளாத நாற்றமுடைய மலப்போக்கு, கருப்பாக, வலியில்லாமல், தானறியாமல்.

மலச்சிக்கல் — குடல் வேலையே செய்யாது — சுரங்களில் பெருத்த, கருப்பான, அழுகல் நாற்றமுடைய, சிறு உருண்டைகள்.

ஹிருதயம் இருப்பது நன்றாகத் தெரியும் — அது அசந்து; பெருத்திருப்பது மாதிரி, படபடப்புடன், துடிப்பும், இருக்கும் — காதில் நன்றாக கேட்கும் — தூக்கம் அதனால் கலைந்துவிடும்; ஸெப்டிக் கோளாறினால் ஹிருதய பலவீனம்.

நாடித்துடிப்பு ரொம்ப வேகம். சுரத்திற்கும் துடிப்பிற்கும் சம்பந்தமேயிராது.

முதுகிலிருந்து குளிர் கிளம்பி, தோள்பட்டை நடுவில், உடம்பு முழுவதும், எலும்பிற்குள்ளும், கால் கைகளிலும் பரவும். ஸெப்டிக் சுர ஆரம்பம்; சுரம் 103—106 திடீரென சூடு ஏற்பட்டு, தோல் வரண்டு, எரிச்சல், நாடித் துடிப்பு துரிதமாய் 140—170 வரை — சில்லென்ற வியர்வை பின்பு ஏற்படும்.

சிசு, அல்லது நஞ்சு வயிற்றில் நாட் கணக்கில் மரித்துத் தங்கிவிடும். கருப்பான, துர்நாற்றமுடைய கசிவுபடுதல்.

கர்ப்பச்சிதைவு, பிரசவம் இவைகளின் ஸெப்டிக் சுரத்திற்குப் பிறகு உடம்பே சரியாயில்லை.

தோல் வெளுத்து சில்லிட்டு — வயதானவர்களுக்கு ஆறாத நாற்றமுடைய ரத்தக்குழாய்ப் புண்கள்.

---

## (159) ரானன்குலஸ்

உள்ளங்கையில் கரப்பான் கொப்பளங்கள். அக்கி — வலி தாளாது.

அதிக சாராயம் உட்கொண்டதினால் ஏற்படும் விக்கல், சாராய ஜன்னி.

பகலில் கண் மறைத்தல்; கண்ணிற்கு முன்னால் பனித்திரைப்போல், கண்களில் உறுத்தல்.

ப்ளூரஸி, நிமோனியா, திடீரென்று சில்லென்ற காற்று தாக்கினதினால்.

குத்தும், வெட்டும், நரம்பு வலி, வாயு வலி, மார்புப் பக்கத்தில், அடிக்கடி விட்டு விட்டு வரும்.

விலாப்புறவாயு, மார்பு வரண்டு உறுத்தும், தொட்டாலும், அசைவினாலும், உடம்பை திருப்பினாலும் அதிகப்படும். ஈர காலங்களில்.

ஆணிகள், தொடுவதற்கு உறுத்தும் — எரியும், கடுக்கும்.

---



## (160) ராடன்ஹியா

ஆரம்ப கர்ப்ப காலத்தில் தாங்காத பல் வலி — பல் நீண்டிருப்பதுபோல் தோற்றம், படுத்தால் அதிகரிக்கும், ஆகவே எழுந்து நடக்கவேண்டும்.

ஆசனவாய் வெடிப்புகள், மலம்போன பிறகு தாங்காத வலி, தளர்ந்த மலம் போனாலும் எரிச்சல்.

மலச்சிக்கல், ரொம்ப முக்கலுடன் — மலம் கடினமாயிருக்கும் — மூலம் தள்ளும். நீடித்து கடுப்பு, வலி, எரிச்சல் இருக்கும்.

மலம் பிரிந்த பிறகு கண்ணாடித் துண்டுகள் குடலில் ஒட்டிக்கொண்டு குத்துவதுபோல்.

பாலூட்டும் ஸ்திரீகளுக்கு முலைக்காம்பு வெடித்திருக்கும்.

---

## (161) ரியூம்

உடம்பு முழுவதும் புளிப்பு நாற்றம் - குளிப்பாட்டினாலும் புளிப்பு.

குழந்தைகள் கத்திக்கொண்டு, புளிப்பான மலம்.

இராமுழுவதும் அழுதுகொண்டு, புரண்டுகொண்டிருக்கும் குழந்தைகள்.

பிடித்தமான விளையாட்டுச் சாமான்களைக்கூட பிடிக்காது; குழந்தை ஆங்காரப்பட்டு அழும்.

தலைப்பக்கம் ரொம்ப வியர்வை; அடிக்கடி, ஏராளமாக. தூங்கினாலும், விழித்துக்கொண்டாலும், பேசாமலிருந்தாலும், அசைந்தாலும், மயிர் சதா ஈரமாயிருக்கும்.

அனேகவிதமான ஆகாரம் வேண்டுமென்று கேட்கும். ஆனால் சாப்பிடப்பிடிக்காது.

புளிப்பான மலத்துடன் வயிற்றுவலி. ஒரு காலையோ கையையோ போர்வையை விலக்கினால் உடனே அதிகரிக்கும், நின்றால் அதிகரிக்கும், மலம்போனால் சாதகமில்லை.

## (162) ரோடோடென்ட்ரான்

புயல் சமயத்தில், இடி சமயத்தில் அதிகமாகும் வியாதிகள்.

வாயு வலி, இழுக்கும், கிழிக்கும் வலிகள், எல்லா அவயவங்களிலும், அசையாமலிருந்தாலும், ஈரத்திலும், மழை, காற்று காலங்களிலும் அதிகரிக்கும்.

கால்களை குறுக்கே போட்டுக்கொண்டாலொழிய தூக்கம் வராது.

கவுட், கால் கட்டை விரல் வாயு வீக்கம்.

விதை வீக்கம் — வெட்டை அல்லது வாயுவிற்குப் பிறகு — வீக்கத்தினால் இறுக்கினாற்போல் வலி.

வாயு சுரம் — மூட்டுகள் வீங்கி, ஒரு மூட்டிலிருந்து மற்றொன்றிற்கு ஓடும். இரவில் அதிகம். பேசாமலிருந்தால் அதிகம், புயல் காலங்களில் அதிகம்.



பல் வலி — ஒவ்வொரு சீதோஷ்ண ஸ்திதி மாறுதலிலும் — வசந்த காலத்திலும் — காற்றடி காலத்திலும் — இடி இடிக்கும் காலத்திலும் அதிகம்.

## (163) ரஸ் டாக்ஸ்

வாயு தேகிகளுக்கு உகந்தது. நனைவதினாலேற்படும் கோளாறுகள், உஷ்ணப்பட்டிருக்கும் சமயத்தில் குளிர்ச்சியடைந்தால்.

சுளுக்கு — தசையும், தசை நாரும் பிய்ந்துபோன மாதிரியிருக்கும். எலும்பைக் கத்தியால் சுரண்டினமாதிரி — பாதி இரவிற்குமேல் அதிகமாகி, மழை காலத்திலும் அதிகப்படும் — தொட்டால் வலிக்கும்.

விறைப்பு, பிடிப்பு, வலி ஆரம்பத்தில் நடக்க ஆரம்பித்தவுடன் அதிகம், காலையில் எழுந்தவுடன் அதிகரிக்கும், நடந்துகொண்டேயிருந்தால் சாதகம்.

ரொம்ப அமைதியின்மை, கவலை, பீதி, படுக்கையிலிருக்க முடியாது, அடிக்கடி மாறி மாறிப்படுக்கவேண்டும். ஒரே நிலையில் படுத்திருக்க முடியாது.

விழுங்கும்போது தோள்பட்டைகளுக்கு இடையில் வலி, முதுகில் வலி, பிடிப்பும், உட்கார்ந்தால் அல்லது படுத்துக்கொண்டால் அதிகம், கட்டைத் தரையில் படுத்துக்கொண்டால் சாதகம்.

திறந்த காற்று உதவாது. படுக்கையிலிருந்து கையை வெளியே நீட்டினால்கூட இருமல் வரும்.

தசை வாயு; இடது பக்கத்து சியாடிகா; இடதுகையில் வலி — ஹிருதய வியாதி.

இரவில் பயம்; தனக்கு விஷம் வைத்து விடுவார்போல பயம்; படுக்கையிலிருக்க முடியாது.

சுளுக்கிக்கொண்டதாலும், அதிக சிரமப்படுத்திக் கொண்டதாலும் ரொம்பத் தூக்கினலும், ஈரத்தரையில் படுப்பதினலும்; ஏரியிலோ; ஆற்றிலோ கோடை காலத்தில் அதிக நேரம் குளிப்பதனலும்.

நடக்கும்போதும், நிற்கும்போதும் கிறுகிறுப்பு; படுத்தால் அதிகப்படும்; படுத்துக்கொண்டு எழுந்தால் அதிகரிக்கும்.

தலைவலி — நடக்கும்போது மூளை தனியாக ஆடுவதுபோல்—பிய்ப்பதுபோல் தலைவலி; பீர் சாப்பிட்டால்; படுத்தால், உட்கார்ந்தால், சில்லிப்பினல் அதிகம்; உஷ்ணமும் நடையும் சாதகப்படுத்தும்.

ரொம்ப தேகப்பிரயாசை செய்வதுபோல் அதாவது, படகோட்டுதல், நீந்துதல், இம்மாதிரியான கனவு.

பக்ஷவாதம்—மரமரப்பு — நனைவதால் அல்லது ஈரத்தரையில் படுத்திருப்பதால்; தேக சிரமத்திற்குப் பிறகு, பிரசவம், அதிக சம்போகம், மலேரியா, டைபாயிட் இவைகளுக்குப் பிறகு

வரட்டு இருமல்; மலேரியாவில் குளிருக்கு முன்னுலும்; குளிரின்போதும்—ரத்தம்மாதிரி ருசியிருக்கும்.

நாக்கு வரண்டு, சிவந்து, புண்ணுகி, வெடித்து, நுனியில் முக்கோணம் மாதிரி சிகப்பு, பல் பதியும்.

வரட்டு நாக்கும், தொண்டை, இவற்றுடன் தாகமும்.

மர்மஸ்தானம் வீங்கி, எரிசிபிலஸ், உண்டாகி இருக்கும்.

அக்யூட் வியாதிகள் கடுமையாகி டைபாயிட்மாதிரி ஆகிவிடும்.



ஆரம்ப டைபாயிட்டில் போக்கு — தானறியாமலே ரொம்ப அசதி, மலம் பிரியும்போது கால்களில் வலி-கடுப்பு.

இடது புறத்திலிருந்து வலது பக்கம் செல்லும் எரிசிபிலஸ், மஞ்சள் கொப்பளங்கள், ரொம்ப வீக்கம், எரிச்சல், அரிப்பு, கடுப்பு.

---

## (164) ருமெக்ஸ்

ரொம்பக் கடுமையான ஓயாத இருமல். சிறிது சில்லிப்பான காற்று மூச்சிலிழுத்தாலும் இருமல்-ஆகவே தலையையும் வாயையும் மூடிக்கொள்ளவேண்டும்-தொண்டைக்கம்மல், சாயங்காலங்களில் அதிகம்.

தொண்டைக்குழியில் உறுத்தல், வரண்ட இருமல் ஏற்படும்.

இருமல் சில்லென்ற காற்றினல் அதிகரிக்கும்-காற்று வேகமாக உட்கொள்ளப்பட்டாலும் இருமல் அதிகரிக்கும்.

தொண்டையில் கட்டைமாதிரி தோற்றம். விழுங்கும்போது கீழிறங்கி, உடனே திரும்ப வரும்.

கருஞ்சிவப்பான பேதி — விடியற்காலையில் 5—10 மணிக்கு—வலியில்லாமல். ஏராளமாய் துர்நாற்றத்துடன், படுக்கையைவிட்டு விரட்டும்.

இருமலுடன் சிறுநீர் தெரிக்கும்.

படுக்கைக்குப் போக துணியைக் களையும்போதும், சில்லிப்பான காற்றுவாடை பட்டாலும், அரிப்பு—தாங்காத அரிப்பு.

---

## (165) ரூடா

விழுந்ததினால் அல்லது அடியினால், கால்கள், மூட்டு களில், உடல் முழுவதும் சிராய்த்த வலி.

எலும்பு, எலும்புச்சதை இவைகளில் அடிபடுதல், சுளுக்குகள், எரிசிபிலஸ், எலும்பு முறிவு, மூட்டு விலகுதல்.

எப்படிப் படுத்துக்கொண்டாலும் உடம்பில் உறுத்தும் வலி, ஆகவே அடிக்கடி இடம் பெயரவேண்டும்.

சுளுக்குகளுக்குப்பிறகு—மணிக்கட்டு, கணுக்கால்களில் முடங்கிப்போன மாதிரி இயலாமை.

மார்பில் அடிபட்டதினால் க்ஷயம்.

கண்களை ரொம்ப நுண்ணிய வேலையில் அதிகம் உபயோகப்படுத்தினால் ஏற்படும்—கோளாறு.

கடியார ரிப்பேர், அச்சு கோண்டுதல், கூர்ந்து பார்த் தல் முதலியன.

கண்களை அதிகம் உபயோகப்படுத்தினதினால் ஏற்படும் பார்வைக் கோளாறுகள் சரியான வெளிச்சத்தில் படிக்காத தினால், ராத்திரியில் அதிகம் படிப்பதினால், தூரப்பார்வை மழுங்கியிருக்கும்.

கண்கள் நெருப்புருண்டை மாதிரி கடுப்புடன் பற்றிக்கொண்டு எரியும்.

ஆசனம் வெளித்தள்ளுதல்; மலம் பிரியும்போது உடனே கொஞ்சம் குனிந்தாலும் பிரசவத்திற்குப் பிறகு, அடிக்கடி வெற்றியில்லாத முயற்சிக்குப்பிறகு.

பலஹீனத்தினால், அடிபட்டதினால் மலச்சிக்கல்.



மூத்திரப்பை நிரம்பியிருப்பது போல் கனத்துத் தோன்றும்—மூத்திரம் பிரிந்த பிறகும் இருக்கும்—மூத்தி ரத்தை அடக்கமுடியாது, ஆனால் முயற்சி செய்தால் பிரிப் பதும் கஷ்டப்படும்; தானறியாமலே கொஞ்சமாய் பச்சை மூத்திரம்.

முதுகுவலி—மல்லாக்கப்படுத்தால் சாதகம்.

உள்ளங்கைகளில் பாலுண்ணிகள்—வலி.

---

## (166) சாபடில்லா

குழந்தைகளுக்கு பூச்சி.

நரம்பு வியாதிகள், துடிப்பு, வலிப்பு, இசிவு, மயக்கம், போடுதல்—பூச்சியினால்.

ஒரே டயத்தில் வரும் வியாதிகள்.

முறை சுரத்தில் ஜன்னி.

முறை முறையாக தும்மல்; கண்களில் நீர்சுரக்கும், ஏராளமான சளி, முகம் சிவந்து, கண்ணிமைகள் எரிச்ச லுடன் இருக்கும்.

வயிற்றில் காற்றிருந்தால் குழந்தை இருப்பதுபோலும், தனக்கு தொண்டையில் ஒரு தீராத வியாதி ஏற்பட்டு தன்னைக் கொன்றுவிடும்போல தோற்றம்.

டிப்திரியா, டான்சில்ஸ், உஷ்ணமான ஆகாரத்தை சுலபமாக விழுங்கிவிடலாம். தொண்டைக்குறிகள், குத்து வலிகள் இடது பக்கத்திலிருந்து வலதுபுறம் மாறும்.

தொண்டைக்குள் ஒரு மடிப்பு சதை தொங்கிக்கொண் டிருப்பது போலும் அதைத் தாண்டி விழுங்கவேண்டுவது போலிருக்கும்.

அதிகம் யோசனை செய்வதால் தலைவலி. பூச்சியினால் ஏற்படும் தலைவலி.

தொண்டை வரட்சி.

தோல் வரண்டு இருக்கும்.

---

## (167) சாபினா

ஸ்திரீகளின் நீடித்த சிக்குகள் — மூட்டுவாயுக்கள், கர்ப்பச்சிதைவுகள் — பெரும்பாலும் 3-வது மாதத்தில்.

மாதவிடாய், சீக்கிரமாய், ஏராளமாய் நாட்பட்டு நீடிக்கும், தண்ணீர்போலவும், கட்டி தட்டியும், வயிற்று வலியும், பின் இடுப்பிலிருந்து மர்மஸ்தானம் வரைக்கும் வலி பரவும்.

எல்லா வியாதிகளும் இடுப்பிலிருந்து மர்மஸ்தானம் வரைக்கும் இழுக்கும் வலி.

கர்ப்பச்சிதைவு அல்லது குறையாக ஏற்படும் பிரசவம் முதலியவைகளினால் கோளாறுகள்; பெரும்பாடு; சற்று அசைந்தாலும் அதிகம்—நடந்தால் சாதகம்.

மாதவிடாய்க்கு இடையில் ரத்தப் பெருக்கு — காம இச்சை அதிகம்.

கர்ப்பப்பையின் பலவீனத்தால் நஞ்சு தங்கிவிடுகிறது; பிரசவத்திற்குப்பின் கடுமையான மண்குத்துவலி.

மாதவிடாய் நிற்கும் வயதில் உதிரப்பெரும்பாடு.



கர்ப்பச்சிதைவிற்குப்பின் சினைப்பை அல்லது கர்ப்பப் பையின் வீக்கம்.

கர்ப்பப்பையிலிருந்து கட்டிகள் அல்லது அந்நிய வஸ்துக்களை வெளிப்படுத்தும்.

பாலுண்ணிகள்—ரொம்ப அரிப்பு எரிச்சலுடன்.

ஏராளமான உதிரப்பெரும்பாடு-உஷ்ணமான அறையில் அதிகப்பட்டு, திறந்த காற்றில் சாதகம்.

கால்விரல், மணிக்கட்டுவீக்கம்; பெரும்பாடும் இருக்கும்.

---

## (168) ஸாம்புகஸ்

குழந்தைகளுக்கு வரும் சளியினால் மூக்கடைப்பு-வரட்டு ஜலதோஷம்-மூச்சுவிடச் சிரமம், பால் குடிக்கச் சிரமம்.

மூச்சுத் திணறல்-குழந்தை திணறி சட்டென்று எழுந்திருந்து, உட்கார்ந்துகொள்ளும், முகம் நீலம் பூத்து, திணறும்—மூச்சு உள்ளிழுக்கும் ஆனால் வெளிவிடமுடியாது. தூக்கமும் வரும்-இதுமாதிரி அடிக்கடி வரும்-ஆஸ்த்மா.

அழும் குழந்தைகளுக்கு மூச்சுத்திணறும், இருமல்; பாதி இரவில் அதிகப்படும்; ஆழ்ந்த 'ஹூப்'—விலாப்புறம் இசிவு—மூச்சு வெளிவிடும்போதும் பெருமூச்சுடன்.

உடம்பில் பல பாகங்களில் நீர் சுரப்பு, கால்கள், உள்ளங்கால் முதலியன.

சுரம் வருவதற்கு முந்தி வரண்ட இருமல்.

சுரம்—தூங்கும்போது வரட்சியான சூடு—தூங்கின வுடன்—படுத்தபிறகு — தாகமில்லாமை; போர்வையை எடுக்க பயம்.

விழித்துக்கொண்டிருக்கும்போது ஏராளமான வியர்வை; தூங்கினவுடன் வரட்சியான சூடுவரும்.

அதிக சம்போகம், மனக்கவலை, துக்கம், முதலியவற்றினால் வியாதிகள்.

---

## (169) ஸாங்குனேரியா

காலையில் ஆரம்பித்து, பகலில் அதிகமாகி, மாலை வரைக்கும் இருக்கும். தலை வெடித்துவிடும்போல் கண்கள் பிதுங்கிவிடும்போல; தூங்கினால் சாதகப்படும்-பேசாமல் இருட்டறையில் படுத்துக்கொண்டிருந்தால் சாதகம்.

பின்புற தலையிலிருந்து தலைவலி ஆரம்பித்து, பரவி வலது கண்ணில் வந்து தங்கும்.

மாதவிடாய் நிற்கும் வயதில் தலைவலிகள் — ஏழு நாளைக்கு ஒருதரம்.

முகத்து நரம்புவலி. மண்டிபோட்டுக்கொண்டு தலையை தரையில் அமுக்கிவைத்துக்கொண்டால் சாதகம்; மேல் தாடையிலிருந்து எல்லா இடங்களுக்கும் வலி பரவும்.

நடுமார் எலும்பிற்கு பிந்தி வலி — சூடு — உடம்பு இளைப்புடன் இராப்பகல் இருமல்.

மத்தியானம் கன்னங்களில் சிகப்பு நிறம்; காதுகளில் எரிச்சல்—பிரான்கைடிஸ்—நிமோனியா, க்ஷயம்.

தொண்டையில் எரிச்சல், தொண்டையில், மூக்கில் சதை வளருதல்.



ஆஸ்த்மா, இருமல்—படுக்கையில் எழுந்து உட்கார்ந்து வாயு பரிந்தாலொழிய நிற்காது. கன்னங்களில் சிகப்பு. இரவில் வியர்வை, பேதி. ஒவ்வொருதரம் ஜலதோஷம் பிடித்தாலும் கடுமையான இருமல்—கக்குவானிற்குப்பிறகு.

மார்பில் எரிச்சலுடன் அமுக்கம் வயிறு முழுவதும் சூடு ஏற்பட்டு, பேதி வலதுபுற நுரையீரலிலும், மார்பிலும் நன்றாக வேலைசெய்யும்.

கோழை துர்நாற்றமடிக்கும்: நோயாளிக்கே நாற்றம் தெரியும்.

வலது தோள்பட்டையிலும், கையிலும் வாயு வலி கையைத் தூக்கமுடியாது—இரவில் அதிகப்படும்.

எலும்புகள் அதிகமான சதையில் மூடப்படாத இடங்களில் வலி—கைகளின் பின்புறம் மாதிரி.

மாதவிடாய் நிற்கும் வயதில் உஷ்ணம் வீசும்; வெள்ளைப்பாடு; உள்ளங்கை, கால்எரிச்சல், மேற்துணியை விலக்கவேண்டியிருக்கும்; ஸ்தனங்களில் வலியுடன் வீக்கம்.

சிறு பெண்களுக்கு, மாதவிடாய்க் குறைவாய் படும் காலத்தில் முகத்தில் பரு.

---

## (170) சானிகுலா

கீழே இறங்கும்போது பயம்.

குழந்தைகளின் தலையும், கழுத்தும் தூங்கும்போது ஏராளமாக வியர்க்கும். தலைகாணி நனைந்துவிடும்.

பிடிவாதமுடைய குழந்தை: கத்தும், உதைக்கும், ஆத்திரம் மாறி சிரிப்பும் வரும், தொடக்கூட பிடிக்காது.

அடிக்கடி குறிகள் மாறும் — தொழிலும் அடிக்கடி மாற்றுவான்.

தலையில் நிறையப்பொடுகு; கண்ணிமைகளில் தாடியில்.

நாக்கு பெருத்து, தடித்து — எரிச்சல் — குளிர்ச்சியாக வைத்திருப்பதற்காக வெளியே நீட்டிக்கொள்ளவேண்டும். நாக்கில் கடி.

காரில் அல்லது வண்டியில் சவாரி செய்வதால் குமட்டலும், வாந்தியும்.

அடிக்கடி கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடவேண்டும்; வயிற்றில் சென்றவுடனே வாந்தி எடுத்துவிடும்.

மலமும் நீரும் தானகவே வெளிவந்துவிடும், அடக்க முடியாது; குசு வெளிப்பட்டால் மலம் பிரிவதுபோலிருக்கும்—கால்களை மடக்கி அமுக்கிக்கொள்ளவேண்டும்.

ரொம்ப மலம் தங்கினுல்தான் மலம் பிரிய உணர்ச்சி; மலச்சிக்கல்; ரொம்ப முக்கின பிறகு மலம் அறைகுறையாகப் பிரியும்; பிறகு உள்ளிருந்துவிடும்; நிறைய சிறிய உருண்டைகளாக கையைவிட்டுத்தான் எடுக்கவேண்டிவரும்.

மலம் கஷ்டப்பட்டுத்தான் வரும். எரித்த சுண்ணும்புக் கட்டி மாதிரி மலம். ஆசனவாயில் தொறுங்கும்.

பேதி—பசும் பச்சையாக. நுரைத்து அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும்; நாழி கழித்து பச்சையாய் மாறும்; சாப்பிட்டதும் ஓடவேண்டும்.

குளித்தாலும் மலம்மாதிரி நாற்றம் அடிக்கும்.

**ஆசனவாயில்; மர்ம ஸ்தானம் வரையிலும் தோல் ரணமாகிவிடும்.**



வெள்ளைப்பாடு—மீன் நாற்றம்.

இடையிலிருந்து சகல அவயவங்களும் வெளிவந்துவிடும்போல பலஹீனம்; நடந்தால், அசைந்தால் அதிகப்படும்; அசையாமல் படுத்துக்கொண்டால், சாதகம்; கையினல் அமுக்கிக்கொள்ளவேண்டும்.

கால் விரல்களுக்கு நடுவில், உள்ளங்காலில் வியர்வை; நாற்றம்—தண்ணீரின்மேல் நடந்துவந்த மாதிரி வியர்வை.

உள்ளங்கால்கள் எரிச்சல் — சில்லென்ற இடத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ரொம்பக் குளிர்ந்த காலத்திலும் போர்வை உதவாது.

குழந்தை ரொம்ப இளைத்துவிடும். வயதானவன் மாதிரி, கருத்துக்காணும்—கழுத்தைச்சுற்றி சதை மடிந்து தொங்கும்.

---

## (171) சாஸபரிலா

குழந்தைகளுக்கு முகம் கிழவன்மாதிரி தெரியும், வயிறு வீங்கிவிடும்; வரண்ட தோல்.

ரொம்ப இளைப்பு—தோல் வாடி, வதங்கி மடிப்பாய் தொங்கும்.

மூத்திரம் பிரிந்தும் தாங்கமுடியாத வலி.

சிறு கற்கள் மூத்திரத்துடன் இறங்கும் — மூத்திரப் பையில் கல்; மூத்திரம் ரத்தமாய் — மூத்திரக்காயிலிருந்து நரம்பு வலி.

மூத்திரம் — குறைவாகவும், கரிசலாகவும், வெள்ளை மண்ணுடனும், ஏராளமாகவும் இருக்கும்.

மூத்திரப்பை ரொம்ப பெருத்துவிட்டமாதிரி வலி— உட்கார்ந்ததும் மூத்திரம் சொட்டும்; நின்றுகொண்டால் தாராளமாகப் பிரியும் — மூத்திரக்குழாயிலிருந்து காற்று பிரியும்.

வலது மூத்திரக்காயிலிருந்து கீழ்ப்புறம் தாளாத வலி.

வெட்டை வியாதி—பாதரசம் முதலிய மருந்து கொடுக்கப்பட்டு அமுக்கப்பட்டு வாயுவாக மாறினல்.

ஜனனேந்திரியங்கள் தாங்கமுடியாத நாற்றம். ரத்தம் கலந்த இந்திரிய ஸ்கலிதம்.

தலைவலி-அமுக்கப்பட்ட வெட்டை அல்லது கிரந்தி- எலும்பைச்சுற்றி வலி.

உடம்பு முழுவதும் அக்கி மாதிரி வியாதி—புண்கள்— கிரந்தி, பாதரசம் இவைகளினல்.

வசந்த காலத்தில் காணும் வரண்ட தோல் வியாதி— அரிப்பு—பொருத்தட்டும்.

மாதவிடாயின்போது நெற்றியில் அரிப்புடன் கூடிய சினைப்பு.

கையிலும் காலிலும் தோல் வெடிப்பு — வலியுடன் எரிச்சல்; விரல்களின் பக்கங்களில், தோல் தடிமனய் கெட்டியாயிருக்கும்.

முலைக்காம்பு உள்ளமுங்கி இருக்கும். காம்புகள் சிறியதாய்—வாடி, உணர்ச்சியற்றிருக்கும்.

அமுக்கப்பட்ட வெட்டைக்குப்பிறகு வாயு — இரவில் ஈர காலங்களில், குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டபிறகு வலி அதிகம்.



## (172) சில்லா

இருமல், தும்மல் — கண்களிலிருந்து நீர் கொட்டும். இருமும்போது தானுக மூத்திரம் வெளிப்படும்.

மார்பில் பிளூரஸி மாதிரி வலி.

இருமல்-களகளவென்ற சத்தத்துடன்-நிறைய கோழை சுலபமாய் வெளிப்படும்; காலையில் ஏராள கோழை-மாலையில் வரண்ட இருமல்.

பலஹீனம்—அதிக வியர்வையுடன் இருமல்.

## (173) சிகேல்

ஒல்லியான, நோயிஞல் வாடின ஸ்திரீகளுக்கு சிறந்தது.

எல்லாம் திறந்து கிடப்பதுபோல் ரத்தப்பெருக்கு- சதா பெருக்கு-நிறைய தண்ணீர் மாதிரி கருப்பாக, திரவமாய் வெளிப்படும்—ரத்த வடிகங்கள் கெட்டுவிடும்.

வயதான, நோஞ்சையானவர்கள்.

சிறு காயங்களும் ரத்தம் கொட்டும்; வாரக்கணக்கில் ரத்தப்பெருக்கு—அழுகல்காணும்; கால்களில் குறுகுறுப்பு- அசதி.

உடம்பு முழுவதும் எரிச்சல்—நெருப்புத் துணுக்குகள் மேல்விழுவதுபோல்.

அழுகல்—வயதானவர்களுக்கு—சூடான ஒற்றிடத்திஞல் அதிகப்படும்.

பெரிய ரத்தக் கொப்பளங்கள் — அழுகல் தசையில் ஆரம்பிக்கும்.

முகம் வாடி, குழிவிழுந்து, வெளுத்து, வதங்கி, கண்கள் குழிந்து, நீல வளையமிட்டு இருக்கும்.

பேதி — ஏராளமாக தண்ணீராய், ரொம்ப பலமாக வெளிவரும், ரொம்ப அசதி — வலியில்லாமல் தானாகவே ஆசனம் திறந்திருப்பதுபோல்.

காலரா — தோல் சில்லிட்டு, ஆனாலும் போர்த்துக் கொள்ள முடியாது.

தொடுவதற்கு தோல் சில்லென்றிருக்கும் ஆனால் போர்த்துக்கொள்ளமுடியாது. கால் கைகள் ஐஸ் மாதிரி சில்லிப்பு.

வெள்ளை—பச்சை; கருஞ்சிவப்பு, துர்நாற்றம்.

அபாரமான பசி, ரொம்ப பலவீனப்படுத்தும் பேதியுடனும், புளிப்பானது வேண்டும்.

கிழவர்களுக்கு நீர் தானாக பிரிதல்-நீர் தண்ணீர்மாதிரி.

ரத்தம் கலந்து—நீர் கட்டிவிடலாம்.

மூன்றாவது மாதத்தில் கர்ப்பச் சிதைவு. நீடித்த கீழமுக்கும் வலி.

ஒழுங்கில்லாத மாதவிடாய், ஏராளமான கருப்பான திரவம்; வயிற்றில் பிரசவம்மாதிரி வலி—மறு மாதவிடாய் வரையிலும் ஓயாத ரத்தப்பெருக்கு.

பிரசவத்தின்போது பலவீனமான வலி; பலமில்லாமல், நின்றுவிடும்; எல்லா அவயவமும் அப்படியே திறந்து



இருப்பதுபோல, ஆனால் வெளித்தள்ளும் முயற்சியுடன் வலியிராது. கிறுகிறுப்பு—மண்குத்து வலி—ரொம்ப நாழி, ரொம்ப வலி—பிரசவமானவுடன் கர்ப்பப்பை வாய் கெட்டியாக சுருங்கிவிடுதல்.

பால் தடைப்பட்டது—பால் சுரக்காது.

மரமரப்புடன் பக்ஷவாதம்—ஊறுவதுமாதிரி உடம்பில் எங்கும்.

குஷ்டம்.

நாடி துரிதமாகவும், விட்டுவிட்டும், சுருக்கமாகவும்.

---

## (171) ஸெலினியம்

ரொம்ப ரொம்ப பலவீனம் — மனது அல்லது சரீர வேலை எதுவும் பலவீனப்படுத்தும்.

டைபாயிட், டைபஸ், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றிற்குப்பிறகும் அதி பலவீனம்.

பேசாமல் படுத்துக்கொண்டு தூங்க ஆசை; வெயிற் காலத்தில் பலம் சட்டென்று குறைவுபடும்.

சூடான, குளிர்ந்த, ஈரமான எந்த காற்று வாடையும், ஒவ்வாது. நோயுற்ற பாகங்கள் இளைப்பு—டைபாயிடிற்குப் பிறகு முள்ளந்தண்டின் பலவீனம்-பக்ஷவாதம் வரும்போல.

அதி காம இச்சை ஆனால் சக்திக்குறைவு.

ஆண் குறி விறைப்புக்குறைவு—மெதுவாக விறைப்பு—நீடித்த துடிப்பு—துரித ஸ்கலிதம்—பலவீனம்—சம்போகத்திற்குப்பிறகு ஆத்திரம்; முகம் பளபளப்பு.

உட்காரும்போதும், தூங்கும்போதும், மலம் பிரியும் போதும், தானகவே இந்திரியம் சொட்டும், பிராஸ்டேட் நீர் கசியும்.

முகம், கைகள், கால்கள், துடைகள் இவைகள் இளைப்பு.

தொழிலில் ரொம்ப மறதி — ஆனல் மறந்தவற்றை முழுதும் சொப்பனம் காணுவர்.

மலச்சிக்கல் — மலம் ரொம்பப் பெரிது கெட்டியாக ஓட்டிக்கொள்ளும் — கைவிரலை உபயோகித்து எடுக்க வேண்டும். ரொம்ப கடுமையான வியாதிக்குப்பிறகு.

மூத்திரம் நடக்கும்போது தானக சொட்டும். சிவந்து, கருப்பாக, கொஞ்சமாக, மணல் மாதிரி கசண்டுமிருக்கும்.

அதிக டீ சாப்பிடுவதால் கெடுதல்—எல்லா வியாதியும் டீயினல் அதிகரிக்கும்.

இரவில் பசி — சாராய நெடியில் இச்சை — ரொம்ப தடுக்கமுடியாத ஆவல்.

குடிகாரன்களுக்கு தலைவலி, ஒவ்வொரு மத்தியானமும்.

தொண்டைக்கம்மல்; ரொம்ப அதிக உபயோகத்தி ஞல் பாட ஆரம்பிக்கும்போது கம்மல். அடிக்கடி கனைத்து கஞ்சிபோன்ற கோழையைத் துப்பவேண்டும். குரல்வளை யின் க்ஷயம்.

சலதோஷம் பேதியாக மாறும்.

தலை, கண்ணிமை, மீசை, ஜனனேந்திரியங்களிலிருந்து மயிர் உதிர்தல்.

---



## (175) ஸெபியா

பெண்களின் வியாதிகள்; பெரும்பாலும் கர்ப்பகாலத் திலும், பிரசவத்திற்குப்பிறகும், பாலூட்டும்போதும் ஏற்படும் வியாதிகள்; ரொம்ப பலஹீனம், மயக்கம், கிறுகிறுப்பு.

கீழிறுத்தும் வலிகள்; கால்களை குறுக்கே போட்டு இறுக்கிக்கொண்டு உட்காரவேண்டும்; இல்லாவிட்டால் யோனி வழியாக எல்லாம் வெளிவந்துவிடும்போ லுணர்ச்சி; மூச்சுத்திணறல்-கர்ப்பப்பை, யோனி இவைகள் வெளித்தள்ளப்படுதல்.

'வண்ணாத்திகளின் மருந்து' அதாவது சலவைத்தொழி லால் ஏற்படும் வியாதிகள் அல்லது அதிகப்படும் வியாதிகள்.

இடுப்புப்பாக அவயவங்களில் நிறைந்த உணர்ச்சி; ஆசனவாய்ப்பக்கம் பந்தோ, கனமான சாமானே இறுத்தும் உணர்ச்சி; நீர்க்கசிவு.

மற்ற பாகங்களிலிருந்து முதுகுப்புறம் செல்லும் வலிகள்—உள்ளூர நடுக்கல்.

குளிர்ந்த காற்று ஒவ்வாது. நாட்பட்ட சீக்குகளில் உடம்பில் உஷ்ணமே குறைந்தமாதிரி உணர்ச்சி.

தலைவலியுடன் உச்சந்தலையில் சில்லிப்பு.

முகம், தலைப்பக்கம் உஷ்ண அலை வீசும்; கவலை சாயங் காலங்களில் அநாவசியமான கவலை. பீதி. மாதவிடாய் நிற்கும் காலத்தில்.

ரொம்ப வியாதியுற்றதுபோல் முகத்தோற்றம்; மஞ்சள் முகம்; முகத்திலும், மூக்குப்புறமும் மஞ்சளான கோடு; கடிவியாதி.

ரொம்ப வருத்தம், அழுகை; தனியாயிருக்கப்பயம், மனிதனைக்கண்டு பயம், சிநேகிதர்களை சந்திக்க பயம்; கர்ப்பப்பை வியாதிகளுடன்.

ரொம்ப பற்றில்லாமை; தன் குடும்பத்தைப்பற்றிக் கூட சிந்திப்பதில்லை; தன் வேலைகளைப்பற்றியும் கவலையில்லை; தனக்கு மிகவும் பிரியமானவர்களைப்பற்றிக்கூட சிந்தனையில்லை.

ரொம்ப கஞ்சத்தனம், பேராசை.

சோம்பேறி — ஒன்றும் செய்யப்பிடிக்காது; விளையாட்டோ, வேலையோ; யோசனையோ ஏதுவானாலும் பிடிக்காது.

ரொம்ப தளர்ச்சி; பலஹீனம், குனிந்து உட்கார்ந்தாலும் மயக்கம், நனைந்தால் மயக்கம், ரொம்ப சூட்டினாலும், குளிர்ச்சியினாலும், வண்டி சவாரி செய்வதினாலும் ஏற்படும். முதுகுப்புறத்து பலவீனம் நடந்தால் அதிகரிக்கும்.

உள்ளவயவங்களில் பந்துருண்டைபோன்ற உணர்ச்சி. மாதவிடாயின்போது-மலச்சிக்கல், பேதி, மூலம், வெள்ளை மற்றும் கர்ப்பப்பை வியாதிகளில்.

தலைவலி-பிளக்கும்-நரம்புத்தளர்ச்சியுடைய ஸ்திரீகள்; நடந்தால் அதிகரிக்கும்; குனிந்தாலும், மனத்திற்கு வேலை கொடுத்தாலும் அதிகரிக்கும்; வேகமாக நடந்துகொண்டிருந்தாலும், நன்றாக அமுக்கிக்கொண்டாலும் சாதகம்.

தலைமயிர் கொட்டுதல்; நாள்பட்ட தலைவலியினாலும், மாதவிடாய் நிற்கும் காலத்திலும்.

ஒன்றுமில்லாததுபோன்ற சங்கடமான உணர்ச்சி; வயிற்றில் வெறும் சங்கடம். சாப்பிட்டால் சாதகம்.



நாக்கு துர்நாற்றம் வீசும்; மாதவிடாய் காலத்தில் சுத்தமாகிவிடும். மறுபடியும் மாதவிடாய்க்குப்பிறகு நாற்றமடிக்கும்; அடி உதடு வீங்கி வெடித்திருக்கும்.

கர்ப்ப காலத்தில் மலச்சிக்கல்; மலம் கெட்டியாய், முடிச்சு முடிச்சாய் உருண்டைகளாக, கஷ்டத்துடன், ஆசனவாய்க்கடுப்புடன் வெளிப்படும். ஆசனவாயில் பந்து அடைத்திருப்பதுபோன்ற உணர்ச்சியும், மலம் பிரிந்த பிறகும் சாதகப்படாது.

மூத்திரத்தில் சிவந்த களிமண்மாதிரி மாசு படியும். பாத்திரத்தில் ஒட்டிக்கொள்ளும்; ரொம்ப துர்நாற்றம்.

தூங்க ஆரம்பித்தவுடனே குழந்தை முதல் தூக்கத்திலேயே மூத்திரம் பெய்துவிடுவான்.

வலியில்லாத, மஞ்சளான, துணியில் சாயம்படியும் வெட்டை; ரொம்ப நாட்பட்டது, ஜனனேந்திரிய பலஹீனம்.

கர்ப்பப்பையிலிருந்து தொப்புள் வரைக்கும் குத்தும் வலி—யோனிக்குழாயில் மேல்புறம் நோக்கி வலி.

சரியில்லாத மாதவிடாய் — அதிசீக்கிரமாகவும், நாட் கழித்தும் மாதவிடாய் பெருக்கு குறைந்தும், அல்லது அமிதமாகவும், மாதவிடாய் நின்றிருந்தாலும் இது பிரயோசனப்படும்.

கர்ப்பகால வாந்தி—ஆகாரத்தின் நினைவும், வாசனையும் குமட்டும்; பார்த்தாலும் குமட்டும்.

மூச்சுத்திணறல்—உட்கார்ந்தாலும், தூங்கின பிறகும், அறைக்குள்ளும் அதிகரிக்கும்; நாட்டியமாடினாலும், வேகமாக நடந்தாலும் சாதகம்.

உடம்பில் அரிப்புடன் எரிச்சல்; சொரிந்தால் சாதகப்படாது. அக்கி, கடி, படை.

தாயார்களுக்கு சூனு வயிறு.

---

## (176) ஸிலிஸியா

ஸோரா தேகவாகிகளுக்கு சிறந்தது.

எந்தவிதமான ஆகாரம் சாப்பிட்டாலும் சரியானபடி ரத்தத்துடன் கலக்காததினுல் சரீரத்தில் ஏற்படும் கோளாறுகள்.

பலஹீனமான, சோனிக் குழந்தைகள்; மண்டை பெரியதாயிருக்கும். உச்சிக்குழி மூடாமலிருக்கும்; தலைப் பக்கம் ஓரே வியர்வை. அதை சதா மூடி சூடாக வைத்துக்கொள்ளவேண்டும். சூனு வயிறு தட்டி, கணுக்கால்கள் தளர்ந்து, நடப்பதற்குக்கூட ரொம்ப நாள் பிடிக்கும்.

ரொம்ப பலவீனம், படுத்துக்கொள்ளவேண்டியிருக்கும் — சட்டென்று ஆத்திரம் வரும், பலஹீனமான ஹிருதயம்; தளர்ந்த மனது, ரொம்பக்கடுமையான வேலையால் தளர்ச்சி; சிறிது சத்தத்தினுல்கூட உடம்பு அதிரும்.

மனதிற்கு வேலை கொடுக்கமுடியாது — வாசிப்பதும், எழுதுவதும்கூட சிரமம்.

சில்லிப்பு—உடம்பில் குளிர் தேகாப்பியாசம் பண்ணும்பொழுதும்கூட போர்த்திக்கொள்ளவேண்டும்.

கால் வியர்வை நிறுத்துவதினுல்; ஏற்படும் கோளாறுகள்; தலையை சற்று குளிர்ந்த வாடைக்காற்றில் காண்பித்தாலும் வியாதி — ஏராளமான துர்நாற்றமான கால்



வியர்வை—அம்மை வைப்பதினுல் ஏற்படும் வியாதிகள் — கல்லுடைப்பவர்களின் நுரையீரல் வியாதி — ரொம்ப பலவீனம்.

வியாதிக்குறிகள் குளிர்ந்த வாடைக்காற்றினுலும் நடந்தாலும், திறந்த காற்றிலும், அமாவாசையிலும் அதிகரிக்கும்.

உஷ்ணமான அறையிலும் தலையை போர்த்துக்கொள்ளுவதாலும், காந்தம், மின்சாரத்தினுலும் சாதகம்.

வீக்கம், கட்டி முதலியன (அக்குளில், கழுத்து, தாள், ஸ்தனம், துடைச்சந்து முதலிய பாகங்களில்) எங்கு இருந்தாலும் சரி, அழுகல் கண்டாலும், சாதாரணமானதாயிருந்தாலும், சீழ் பிடித்தாலும் இம்மருந்து சிறந்தது.

எலும்பிலோ, சதையிலோ சீழ் பிடிக்கும் கட்டிகள் — சீக்கிரம் ஆற்றிவிடும்.

குழந்தைகளிடம் அன்பாகப் பேசினுலும் கூட பிடிவாதம் பிடித்தழும்.

தோலில் சிறு காயம் ஏற்பட்டாலும் புண்ணுகிவிடும்.

தசையிலிருந்து, எலும்புத் துண்டு, ஊசி முதலிய அன்னிய வஸ்துக்களை வெளித்தள்ளிவிடும். மயக்கம், முள்ளந்தண்டில் முதுகிலிருந்து கழுத்துவரையில் ஏறும். முன்னேக்கி விழுந்துவிடுவர்போலிருக்கும். நிமிர்ந்து பார்த்தாலும் மயக்கம்.

நாட்பட்ட தலைவலி; சிறுவயதிலேற்பட்ட ஏதோ ஒரு கடும் வியாதிக்குப் பிறகு—கழுத்துப்பிடரியிலிருந்து உச்சந்தலைவரைக்கும் ஏறும் வலி. வலது பக்கத்துக் கண்ணில் வந்து தங்கி—தலையைத் திறந்துகொண்டாலும் வாடைக்

காற்றினாலும் அதிகரிக்கும். அமுக்கிக்கொண்டாலும் தலையைப் போர்த்திக்கொண்டாலும் சாதகம். அதிகமாக நீர் பிரிவதால் சாதகம்.

மலச்சிக்கல்—மலம் வெளி வந்து பிறகு உட்சென்று விடும். மறுபடியும் மறுபடியும் இம்மாதிரி. மாதவிடாய்க்கு முந்தியும். அப்போதும் சதா மலச்சிக்கல்—ரொம்ப சிரமம். குடல் சரியாக வேலை செய்யாது.

ஆசனத்தில் மார்பு வியாதிகளுடன்கூட பவித்திரம்.

குழந்தை பால்குடிக்கும் ஒவ்வொரு சமயமும் யோனித் துவாரத்திலிருந்து ரத்தம் பெருகும்.

முலைக்காம்பு புனல் மாதிரி உள்ளமுங்கியிருக்கும்.

இரவில் தூக்கத்தில் எழுந்து, நடந்து, பிறகு படுத்துக் கொண்டுவிடும்.

கண்களில் பவித்ரம், விரல் நகங்கள் பொத்துக்கொண்டு வளரும். விரற்சுத்தி; பிளவை, புண்கள், பவித்திரங்கள், ஆசன வெடிப்புகள் எதுவும் அதிகவலி.

---

## (177) ஸ்பைஜிலியா

ஹிருதயத்தின் வாயு வியாதிகள்:— கடுமையான ஹிருதயத்துடிப்பு மார்பை குலுக்கும். சில சமயம் ஒரு அடி தூரத்திலிருந்து கூட துடிக்கும் சப்தம் கேட்கும். படபடப்பு. சற்று அசைந்தாலும், குனிந்தாலும் அதிகரிக்கும்.

மார்பு வியாதிகளில் சுருக், சுருக் என்று குத்தும் வலி நாடியுடன் சமமாகத் துடிக்கும். குளிர்ந்த காலங்களிலும் அசைந்தாலும் அதிகரிக்கும்.



மூச்சுத்திணறல் — வலது பக்கம் படுத்துக்கொள்ள வேண்டும் அல்லது தலையை உயர்த்திப் படுத்துக்கொள்ள வேண்டும்.

தலைவலி—காலையில் மூளையின் அடிப்புறத்தில் இருந்து ஆரம்பித்து தலை முழுவதும் பரவி இடது புறத்து கண் குழியிலும், பொட்டிலும் தங்கும். வலி ரொம்ப கடுமையாய் தெரிக்கும். வலிகள் சூரியன் மேலே ஏற ஏற கடுமையாகி சூரியன் இறங்க இறங்க குறைந்துவிடும்.

கண் விழிகளில் தாளாத அமுக்கும் வலி. உடம்பு முழுவதையும் திருப்பாமல் கண்ணை திருப்பமுடியாது. கண்களிலிருந்து ஜலம் கொட்டும்.

கண்கள் ரொம்ப பெரியதாய் இருக்கிறது மாதிரி தோற்றம்; தொடமுடியாது. தலையைச்சுற்றி ஒரு பட்டை இருப்பதுமாதிரி தோற்றம்.

உடம்பு முழுவதும் தொட்டால் வலிக்கும். தொட்ட இடம் சில் என்று தென்படும். தொட்டால் உடம்பு முழுவதும் ஒரு குலுக்கு குலுக்கும்.

அடிமூக்கிலிருந்து தொண்டைக்குள் ஏராளமான துர்நாற்றமான கோழை விழும். இரவில் மூச்சு திணறல் ஏற்படும்.

முகத்தில் நரம்பு வலி இடது பக்கம், கண் விழி, கண் குழி, தாடை எலும்பு, பல் இவைகளில் காலையிலிருந்து அஸ்தமனம் வரையிலும் எரிச்சலுடன் கிழிப்பதுபோலவும் குத்துவதுபோலவும் இருக்கும். சில் என்ற மழை காலங்களில் அதிகரிக்கும் தேயிலையினாலும் அதிகரிக்கும்.

புகையிலை குடிப்பதனால் பல் வலி. படுத்துக்கொண்டால் சாதகம். சாப்பிடும்போதும் சாதகம். குளிர்ந்த

தண்ணீரினாலும், காற்றினாலும் அதிகரிக்கும். அதைப்பற்றி நினைத்தாலும் திரும்பி வரும்.

ஆசனவாயில் பவித்திரம். தாளாத தாங்கமுடியாத வலி.

வயிற்றில் கிருமிகளினால் அல்லது வயிற்றுக்கோளாறு களினால் திக்கல். முதல் வார்த்தையை திரும்பத்திரும்ப மூன்று நாலு தடவை சொல்வார்கள்.

வாயு வியாதிகளினாலும், வயிற்றுப் பூச்சிகளினாலும் இரத்த சோகை பிடித்தவர்கள். ஒல்லியாய் உடம்பு வெளுத்து பலஹீனத்துடனும் முகம் சுருக்கம் விழுந்து மஞ்சளாகத் தென்படுவர்.

---

## (178) ஸ்பான்ஜியா

க்ஷய ரோக தேகவாகிகளுக்கு குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், சிவந்த தேகிகளுக்கும், தளர்ந்த தசைகள் உடையவர்களுக்கும் சிறந்தது.

இருமல் வரண்டு நாய்போல் குரைக்கும் இருமல். ஒரே வரட்சை, கபமே இருக்காது.

தொண்டை குரல்வளை, பிரான்கியல் குழாய் எல்லாம் வரண்டு இருக்கும்.

இருமல் வாள்கொண்டு மரம் அரப்பதுபோல் சப்தம் கேட்கும். பேசினாலும், வாசித்தாலும், பாடினாலும், விழுங்கினாலும், தலையைக் கீழே சாய்த்து படுத்தாலும், தித்திப்பினாலும், குளிர்ந்த பானங்களினாலும், சுருட்டு குடிப்பதனாலும், வரண்ட வாடை காற்றினாலும் அதிகரிக்கும். சாப்பிட்டாலும் சூடான பானத்தினாலும் சாதகம். தூக்கத்திலிருந்து விழித்ததும் அதிகமாகும்.



ஒவ்வொரு மன அதிர்ச்சியும் இருமலை அதிகரிக்கும்.

தூக்கத்தில் மூச்சு திணறலினால் பயந்துகொண்டு எழுந்திருப்பார். சத்தத்துடன் இருமலும், பீதியும், மூச்சுக் கஷ்டமும் இருக்கும் — குரூப் ஹிருதய கவாட வியாதிகளில் இந்த குறி முக்கியமானது.

ஹிருதய பாகத்தில் வலி, பாதி இரவிற்குமேல் மயக்கம், மூச்சுத்திணறல், பயம், வியர்வை இருக்கும்.

படபடப்பு கடுமையான வலியுடன் மூச்சுத்திணறல் ஹிருதய கவாடங்கள் சரியானபடி வேலைசெய்யாது. மாதவிடாய்க்கு முந்தியும் அப்போதும் படபடப்பு இருக்கும்.

கிளாண்டு வீக்கங்கள். தைராய்ட் கிளாண்டு வீக்கங்கள். இரவில் அடிக்கடி மூச்சுத்திணறல்.

விரை நரம்பு வலியுடன் வீங்கி இருக்கும். வீரை வீக்கம் சிராய்த்தமாதிரியும், நசுக்ினமாதிரியும் வலிக்கும். சரியானபடி சிகிச்சை செய்யப்படாத வெட்டைக்குப்பிறகு.

---

## (179) ஸ்டானம்

வயிற்றில் ஒன்றுமில்லாததுபோன்ற சங்கடம்.

மனதிலும், உடம்பிலும் ரொம்ப பலவீனம்.

வருத்தம் — கவலை — மனச்சலிப்பு — சதா அழுதால் தேவலை என்ற தோற்றம்—ஆனால் அழுகை நோயை அதிகரிக்கும்—மயக்கம், பலஹீனம், படியில் இறங்கி வந்தால் அதிக சோர்வு—மேலேறிப்போவது சுலபம்.

தலைவலி—நரம்புவலி—வலிகள் மெள்ள ஆரம்பித்து—படிப்படியாக அதிகரித்து படிப்படியாகக் குறையும்.

வயிற்று வலி — அமுக்கிக்கொண்டால் சாதகம் — அல்லது வயிற்றை முழங்காலின்மேல் அல்லது தோலின் மேல் அழுத்தி வைத்துக்கொண்டால் சாதகம் — வயிற்றில் நாக்குப்பூச்சிகள்.

மாதவிடாய்—ரொம்ப துரிதமாக, அதிகமாக இருக்கும், மாதவிடாய்க்கு முந்தி கவலை. மாதவிடாயின்போது தாடை எலும்புகளில் வலி.

வெள்ளை; ரொம்ப பலவீனம்—மார்பிலிருந்து பலவீனம் பரவுவதுபோல.

மார்பில் ரொம்ப பலவீனம். பேசினாலும், சிரித்தாலும், வாசித்தாலும், பாடினாலும், அதிகரிக்கும்; பேசக்கூட முடியாத அளவு அதிபலவீனம்.

ரொம்ப ஆழ்ந்த, மார்பை சிதறடிக்கும், உலுக்கும், இருமல், மூன்று இருமல்களாக வரும், இரவில் அதிகம் — மார்பில் ஒன்றுமில்லாதது போலுணர்ச்சி.

தொண்டைக்கம்மல், சத்தம் கரகரவென்று இருக்கும் — இருமினாலும், சிறிது கோழை வெளிப்பட்டாலும் அப்போது சாதகம்.

கோழை-முட்டையின் வெள்ளைக்கருவைப்போலிருக்கும். தித்திப்பாகவும், உப்புகரித்துக்கொண்டும் ஏராளமாக விழும்—புளிப்பாக, நாற்றமாய், மஞ்சளாகவும், பச்சையான சீழும், பகலிலும் இருக்கும்.

காலையில் தினம் 4 மணிக்கு வியர்வை—துர்நாற்றம், கழுத்திலும், நெற்றியிலும், ரொம்ப பலவீனப்படுத்தும் வியர்வை.



பாடும்போது, தோள்பட்டை எலும்பிலும், கைகளிலும் வலி.

ஆசனம் வெளித்தள்ளுதல், மலம்பிரியும்போது அதிகம்.

அப்போது ஏற்படும் அதிக பலஹீனத்தினால் உட்காரக் கூட முடியாது. தொப்பென்று நாற்காலியில் விழ வேண்டும்.

காலையில் துணி கட்டிக்கொள்ளும்பொழுதும் பலவீனத்தினால் அடிக்கடி உட்கார்ந்துகொள்ளவேண்டும்.

---

## (180) ஸ்டாபி சேகிரியா

ரொம்ப பிடிவாதம் பிடிக்கும் குணவயிறு தட்டியிருக்கும் குழந்தைகள்; அடிக்கடி வயிற்றுவலி — சாப்பிட்ட அல்லது குடித்த பிறகு வயிறு நிறைந்திருக்கும்போதும் அகோரப் பசி.

குழந்தைகள் சாமான் வேண்டுமென்று அழும், சாமான் கொடுத்தால் தூக்கி எறியும்.

ஹஸ்தப்பிரயோகம், அல்லது மிதமிஞ்சி போகத்தினாலேற்படும் மனக்கோளாறுகள்.

சிறு வார்த்தைகூட மனதை துன்புறுத்தும். தான் செய்த காரியத்தைப்பற்றியும், மற்றவர்கள் செய்யும் காரியத்தைப்பற்றியும், காரியத்தின் பலாபலன்களைப்பற்றியும் கவலை.

அமித போகத்தினால், மனச்சலிப்பு, ஞாபக மறதி, கர்வம், அசூயை, பொறுமை இவைகளினாலேற்படும் வியாதி.

அவமதிக்கப்பட்டபிறகு, சண்டைபோடுவது கௌரவ ஹானியென்று கருதி கோபத்தை அடக்கிக்கொண்டு வீட்டுக்கு சென்றவுடன் வியாதி—நடுக்கல், சோர்வு.

நரம்புத்தளர்ச்சி ரொம்ப கடுமையான வேலைக்குப் பிறகு ஏற்படுவதுபோல.

நெற்றியில் ஒரு உருண்டை பந்திருப்பதுபோல, தலையை ஆட்டி அசைத்தாலும் அழுத்திக்கொண்டிருப்பது போலுணர்ச்சி.

கூரான ஆயுதங்களினால் ஏற்படும் காயங்கள் ரண சிகிச்சைக்குப்பிறகு; கொட்டும், தெரிக்கும் வலிகள் — கத்தி வெட்டுவதுபோன்ற வலி.

கிரிக்கட்டிகள், மேலிமைகளில் சிறு கட்டிகள், ஒன்று பின்னால் ஒன்று கிளம்பும், மறையும்போது சிறு கல் மாதிரி கட்டி தங்கிவிடும். சில சமயம் புண்ணாகிவிடும்.

குழந்தைகளுக்கு சீக்கிரமே பல் சொத்தை விழும். கருப்புக்கோடுகள் தென்படும் — சுத்தமாக வைத்திருக்க முடியாது; நொருங்கும், ஓரங்களில் கெட்டுவிடும்.

மாதவிடாயின்போது பல்வலி; நல்ல பல்லிலும் வலி, ஆகாரம் எதுபட்டாலும் வலி, மென்றாலும், கடித்தாலும் வலியிராது. சில்லென்ற காற்று வாயினுள் சென்றால் வலி அதிகம், சில்லென்ற பானத்தினாலும், சாப்பிட்ட பிறகும் அதிகப்படும்.

வயிறும், குடலும் அப்படியே அந்தரத்தில் தொங்குவது போல இருக்கும்.

கர்ப்பப்பை, சினைப்பை, வயிறு ஆபிரேஷனுக்குப் பிறகு வயிற்று வலி.



மூத்திரம் பெய்ய உணர்ச்சி, மணிக்கணக்காக உட்கார்ந்திருக்கவேண்டும். கல்யாணமான சிறு பெண்களுக்கு நீர் கடுப்பு, சம்போகத்திற்குப் பிறகும் கஷ்டப் பிரசவத்திற்குப் பிறகும் கடுப்பு; நீர் பிரியாதபோதும்கூட மூத்திரக் குழாயில் எரிச்சல்; கிழவர்களுக்கு பிராஸ்டேட் கிளாண்டு வியாதியில் நீர் பிரிந்த பிறகும் கடுப்பு வலி.

யோனியின்மேல் பாவாடைத்துணிகூட படமுடியாத படி வலி.

இந்திரிய ஸ்கலிதம்—முகம் சுருங்கி, கவலை தோய்ந்து குற்றம் செய்தவன்போல—ஸ்கலிதத்திற்குப்பிறகு முதுகு வலி—பலஹீனம்—சோர்வு, ஆண்குறி தளர்ந்து சுருங்கியிருக்கும்.

முதுகுவலி—இரவில் படுக்கையில் அதிகரிக்கும், காலையில் எழுந்திருக்கும் முந்தியும் அதிகம்.

கைமூட்டுகளில் வாயு வீக்கம்; விரல் மூட்டுகளில் வீக்கமும், வியர்வையும்; சீழும் பிடிக்கும்.

பகலில் மாத்திரம் இருமல்; அல்லது சாப்பிட்ட பிறகு மாத்திரம்; மாமிசம் சாப்பிட்டால் அதிகம்; கோபம், அவமானம், பல் விளக்கல் இவைகளுக்குப் பிறகும் அதிகம்.

மழை காலத்தில் இருமலும், கோடையில் சியாடிகாவும் மாறும்; சுருட்டின் புகையால் ஏற்படும்.

பகல் முழுவதும் தூக்கக்கலக்கம், இரவில் விழிப்பு; உடம்பு முழுவதும் வலி.

ஜுரத்தால்—பல நாட்களுக்கு முந்தியிலிருந்தே அகோரப்பசி.

கரப்பான்—மஞ்சள், அரிக்கும் நீர் கசியும், நீர்பட்ட இடமெல்லாம் புண்ணாகும்; சொரிந்தால் இடம்விட்டு இடம் தென்படும்.

பாலுண்ணி, தொங்கும் அதிக பாதரசத்திற்குப்பிறகு.

## (181) ஸ்டிக்டா

நெற்றியிலும், மூக்கின் அடிப்புறத்திலும் கனத்த வலி—அமுக்கும் வலி—சளி வந்தால் சாதகம்.

மூக்கில் சளி, கட்டிதட்டி பொருக்கு தட்டி, அடிக்கடி மூக்கைச் சிந்தவேண்டும். ஆனால் வறட்சையினால் சாதகமேற்படாது.

இரவில் வரண்ட இருமல்; தூங்கமுடியாது, படுக்க முடியாது, எழுந்து உட்கார்ந்துகொள்ள வேண்டும். மணல்வாரி அம்மைக்குப்பிறகு இருமல்—ஹேசுரம்.

திடீரென வரும் முழங்கால் வாயு—கால்கள் தரையில் பாவாமல் காற்றில் பறப்பதுபோல் தோற்றம்.

## (182) ஸ்டிராமோனியம்

சிறு வயதினருக்கும், ரத்தம் அதிகமுள்ளவர்களுக்கும் ஏற்படும் வியாதி—கடும் சுரத்தில் ஜன்னி.

ஜன்னி ரொம்ப கடுமை; ஹயாசயாமசைவிட அதிக சுரவேகம், பெல்லடோனாவைவிட குறைச்சல்.

ஆனால் ஜன்னியில் ஒரே பேத்தல், சதா பேசுவர், பாடுவர், உளறுவர்.



முகம் சிவந்து, ஒரே பேச்சு—பேச்சுடன் சிரிப்பு—பிரார்த்திப்பர், கெஞ்சுவர்.

ஜன்னியில் எழுந்து ஓட யத்தனிப்பர்.

வியாதிகளில் வலி தெரியாது. தலையை வலிப்புகளில் தலைகாணியிலிருந்து உதறுவர்.

பலவிதமாக யோசனைசெய்வர்; தான் இரட்டையாக இருப்பதாகத் தோற்றம், குறுக்கே படுத்திருப்பதாகத் தோற்றம்.

தனியாக இருக்க பயம்; வெளிச்சமும், கூட்டமும் வேண்டும்; இருட்டினாலும், தனிமையாலும் அதிகரிக்கும். பயந்து, பீதியடைந்து எழுந்திருப்பர்; முதன் முதலில் தென்படும் வஸ்துவைக்கண்டு பயம். பயங்கரத் தோற்றங்கள்.

தலை சிதறிக்கிடப்பதுபோல தோற்றம்.

பாப்பா நன்றாக விரிந்திருக்கும்; கண் வெளிவந்து, பளபளப்பாகவும், கண்கள் விரிந்தும் நினைவில்லாமலும், தனியாக இருக்க பயமும், கையை யாராவது பிடித்துக் கொள்ளவும் வேண்டும்.

முகம் சிவந்து, சூடாகவும், கால் கைகள் சில்லிட்டும், கன்னங்களில் சிவப்பும்.

ஒரு பக்கம் வாதமும், ஒரு பக்கம் வலிப்புமிருக்கும்.

வலிப்புகள்—நினைவிருக்கும்—பளிச்சென்ற வெளிச்சத்தினாலும், கண்ணாடி அல்லது தண்ணீரில் தெரியும் பிரதிபிம்பத்தின் வெளிச்சத்தினாலும் வலிப்பு மீண்டும் அதிகரிக்கும்.

பைத்திய நாய்க்கடிக்கு சிறந்த மருந்து—தண்ணீரைக் கண்டு பயம், திரவ பதார்த்தத்தில் வெறுப்பு; தொண்டை நரம்பு வாதத்தினால் தொண்டை சுருங்குதல்.

தலைகாணியிலிருந்து தலையை நாக்கினாலும் வாந்தி-வெளிச்சத்தினாலும் வாந்தி.

மேலுடம்பில் பல தசைகள் தனித்தனியாக துடிக்கும்—காரியா.

திக்கல்; ரொம்ப நாழி சிரமப்பட்டுத்தான் ஒரு வார்த்தை உச்சரிக்கவேண்டும்; மூஞ்சி, முகத்தை கோணலாக்கிக்கொண்டு சிரமப்படவேண்டும்.

தூக்கக்கலக்கம் ஆனால் தூக்கம் வராது.

## (183) ஸல்பர்

'ஸோரா' தேகவாகிற்கு சிறந்த மருந்து.

ஒல்லியான, தோள்பட்டை கீழிறங்கின ஆசாமிகள், கிழவர்கள் மாதிரி தோள் கீழிறங்கி உட்காருவர், நடப்பர்.

சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதல் வெகுவாகப் பாதிக்கும்.

இவர்களுக்கு நிற்பதுதான் அதிகத் தொந்திரவு, எப்படி நின்றாலும் பாதகம்.

ரொம்ப அழுக்கான, நாற்றமுடையவர்கள், தோல் வியாதியுடையவர்கள்.

தோலில் அரிக்கும் வியாதிகள்; சொரிந்தால் எரிச்சல் உண்டாகும். சதை மடிப்புகளில் புண்.

மருந்துகலந்த சோப்பினால் கழுவப்படும் தோல் வியாதிகள்; மூலம், ஆயின்மெண்ட் தடவினால் அதிகப்படும்.



சிரங்குகள்; வாரிக்கொட்டும்; அல்லது ஒன்று வந்து ஆறினால் மற்றொன்று கிளம்பும்.

உடம்பை அலம்பிக்கொள்ள அருவருப்பு; குளித்த பிறகு அதிகப்படும். தன்னை எழுப்பக்கூட சோம்பேறித் தனம். வாழ்வதற்குக்கூட பிடிக்காமை.

குழந்தைகளை அலம்ப முடியாது; குளிப்பாட்ட முடியாது. வயிறு குனன் வயிறாகி, அமைதியில்லாமல் இருக்கும். இரவில் உஷ்ணமிகுதியால் துணிகளை உதைத் துத்தள்ளிவிடும்; வயிற்றில் பூச்சிகள்.

வியாதிகள் திரும்பித் திரும்பி வரும். நோயாளி முக்கால்வாசி சௌகரியமாகி திரும்பி சிரமப்படுவான்.

சரியானபடி மருந்து பொருக்கி கொடுக்கப்பட்டா லும், சரியானபடி வேலைசெய்யாது. இந்த மருந்தை நடுவில் கொடுக்க உடம்பின் ஜீவசக்தியைத்தட்டி எழுப்பி மருந்து சரியாக வேலைசெய்யும்படி தூண்டும்.

கிரானிக் வியாதிகள், ஸோரா வியாதிகள்—தோல் வியாதிகளை அமுக்கினால் ஏற்படுபவை.

எல்லா துவாரங்களும் செக்கச்செவேலென்று சிவப்பு, ஏராள ரத்தம் நிறைந்திருப்பதுபோல் தோன்றும்-உதடுகள் கோவைப்பழம்போல் சிவந்திருக்கும்.

கண்கள், நாசி, மார்பு, வயிறு, சினைப்பை, கை, கால்கள் எங்கும் ரத்தம் அதிகம் சேர்ந்திருக்கும்; ட்யூமர் (கட்டிகள்) அல்லது புற்று மாதிரியான கடும் வியாதிகள் ஏற்பட அறிகுறிகள்.

எரிச்சல்—எங்கும், உச்சந்தலையில், கண், முகம், வயிறு, ஆசனவாய், கால்கள்-கால்களை இரவில் படுக்கைக்கு

வெளியே நீட்டிக்கொள்ளவேண்டும். இரவில் கண்டைக் காலில் இசிவு.

தோல் முழுவதும் எரிவு, உடம்பில் உஷ்ண அனல் அடிக்கடி வீசும்; பகலில்—அடிக்கடி மயக்கம், பலவீனம்; சிறிது வியர்வை வந்தால் பலஹீனம் குறைந்துவிடும். அதிகமாக காலை 11 மணிக்கு — ஒவ்வொரு வாரமும் அல்லது இரண்டு வாரத்திற்கொருமுறை தலைவலி — பலஹீனம் — உச்சந்தலையில் எரிச்சல், உள்ளங்காலில் சில்லிப்பு.

வயிற்றில் பலஹீனப்படுத்தும், மயக்கமுண்டாக்கும் சங்கடம்; காலையில் 10—11 மணிக்கு — சாப்பாட்டிற்காக காத்திருக்கமுடியாது. பகலில் அடிக்கடி பலஹீனம் உண்டாக்கும் மயக்கம்.

பாதி இரவிற்குப்பிறகு பேதி, வலியிருக்காது. காலையில் படுக்கையைவிட்டு எழுந்து ஓடவேண்டும். மலத்தை அடக்கமுடியாது.

மலச்சிக்கல் — கெட்டியான முடிச்சு முடிச்சான மலம், சுட்ட மாதிரி வரண்டிருக்கும். பெரிதாகவும், வலியுடனும் கூடி இருக்கும். வலியிருப்பதினால் குழந்தை வெளிக்குப் போக பயப்படும்; பேதியுடன் மாறிவரும்.

மலம், மூத்திரம் பிரியும் இடமெல்லாம் எரிச்சலுடன் வலி — ஏராளமான கலரில்லாத மூத்திரம்; ஆசனவாய் சுற்றிலும் சிவப்பு; புண்ணாகியிருக்கும்; எந்த கசிவும் எங்குபட்டாலும் புண்ணாக்கிவிடும்.

கர்ப்பச்சிதைவு ஏற்பட்ட பிறகு பெரும்பாடு — அமாவாசையன்று ஒரு டோஸ் ரொம்ப ஹை போடன்சியில் கொடுக்கவும்.



மாதவிடாய்—துரிதமாகவும், ஏராளமாகவும், நீடித்துமிருக்கும்.

வரட்டு வேதாந்தி — எந்தக்கந்தையோ, எதுவாயிருந்தாலும் அழகாகத்தோன்றும்.

வயிற்றில் குழந்தை அசைவதுபோல் தோற்றம்.

ஆனந்தமயமான சொப்பனங்கள், பாடிக்கொண்டே எழுந்திருப்பர்.

இரவில் மூச்சுத்திணறும் — கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவைக்கவேண்டும்; திடீரென்று இரவில் விழித்தெழுவர்; மத்தியானம் மாலை வரையில் தூக்கக் கலக்கம், இரவு முழுவதும் விழிப்பு.

வெகுநாட் குடிகாரன் — குடிகாரனுக்கு ஏற்படும் மகோதரம் முதலியன; குடி விட்டுவிட வேண்டுமென்று முயற்சிப்பர்—அடிக்கடி பழக்கம் வந்துவிடும்.

மூளை, பிளுரா, நுரையீரல், மூட்டுகள் முதலிய இடங்களில் உள்ள நீர் சுரப்பை பிரியோனியா, கேலிமூர் முதலியன கொடுத்தும் பிரயோசனப்படாவிட்டால் இந்த ஸல்பர் சௌகரியப்படுத்திவிடும்.

## (184) ஸிம்பிடம்

அடி முதலிய காயங்கள் — சிராய்ப்பு, கண் விழிகளில் அடிபடுதல்.

கண் விழியில் முஷ்டி முதலிய மொக்கையான வஸ்துக்களினால் ஏற்பட்ட அடி அதனால் வலி.

எலும்பு முறிவினால் வலி — முறிந்த இடத்தில் காயம் ஆறின பிறகும் வலி.

முறிந்த எலும்புகளை சீக்கிரம் ஒட்ட வைக்கும்; தந்த வலியைக் குறைக்கும்; நரம்பு ஸ்தானங்கள் தாக்கப்பட்டாலும் இது சிறந்த மருந்து.

---

## (185) ஸிபிலினம்

ஸிபிலிஸ் தேகவாகினால் ஏற்படும் கோளாறுகள். இரவு முழுவதும் விடிகிறவரைக்கும் வலிகள்.

வலி படிப்படியாக அதிகமாகி படிப்படியாகக் குறையும்; அடிக்கடி இடம்விட்டு மாறுவதினால் மாறி மாறிப் படுக்க வேண்டும்.

எல்லாக் குறிகளும் இரவில் அதிகம்.

உடம்பு முழுவதும் ஒரே இளைப்பு.

உடம்பு முழுவதும் சிவந்த செம்பு நிறமான தடிப்புகள்; குளிர்ந்த காலத்தில் நீல நிறமாகிவிடும்.

ஹிருதயத்தில் மேல் பாகத்திலிருந்து கீழ்ப்புறம் நோக்கி குத்தும் வலிகள்.

மறதி — புஸ்தகத்தின் பேர்கூட மறந்துவிடும்; ஆட்கள், இடங்கள் இவைகளின் பெயர்கூட மறந்துவிடும்; கணக்கு போடுவது ரொம்ப சிரமம்.

இரவைக்கண்டு மிக்க பயம் — ஏனென்றால் விழித்துக் கொண்டதும் மனதிலும், உடம்பிலும் அவ்வளவு அசதி; அதைத்தாளமுடியாது, செத்துவிட்டால் தேவலைபோலத் தோன்றும்.



பயித்தியம் பிடித்துவிடும் மாதிரி தோற்றம்; வாதம் பிடிக்கும்போல பீதி, ஒன்றிலும் பிடித்தமில்லாமை.

ஏராளமான வெள்ளைபடுதல். துணிகளை நனைத்துக் கொண்டு ஒழுகும்; குதியங்கால்வரை வழிந்துவரும்.

வருஷக்கணக்கான கடும் மலச்சிக்கல்; ஆசனவாய் தையல்போட்டமாதிரி குறுகித்தோன்றும். எனிமா வைத்தால், மலம் வரும் பாதை பிரசவ வலியைவிட அதிகமாயிருக்கும்.

ஆசன வாயிலும், உட்புறத்திலும் வெடிப்புகள்; ஸிபிலிஸ் உள்ளவர்களுக்கு நாட்பட்டது.

சாராயம் எப்படியாவது குடிக்கவேண்டும்; பரம்பரையாக சாராயக்குடியில் இச்சை.

நரம்புத் தலைவலி; தூக்கமின்மை; இரவில் ஜன்னி, சாயங்காலம் 4 மணியிலிருந்து ஆரம்பித்து 10–11 மணியில் கடுமையாகி பகலில் குறைந்துவிடும். தலைமயிர் உதிர்தல்.

கண் பார்வையில் ஒன்றிற்கு கீழ் மற்றொன்று தெரியும்.

கண் மேலிமைகளின் வாதம்.

கண் வலி — இமைகள் வீங்கி தூக்கத்தில் ஒட்டிக்கொள்ளும்; இரவில் அதிக வலி — காலை 2—5 மணி வரையில் கடுமை; ஏராளமான சீழ்; குளிர்ந்த ஜலத்தில் குளித்தால் சாதகம்.

பற்கள் நுனியிலும், ஓரத்திலும் கெட்டுவிடும்; உதிர்ந்துவிடும்; ஓரங்களில் பள்ளம் பள்ளமாகவிருக்கும் பற்கள் சிறுத்து நுனியில் கூராக இருக்கும்.

தோள்பட்டையில் வாயு வலி — கையை பக்கவாட்டில் தூக்கினால் அதிக வலி.

ஸிபிலிஸ் உள்ள தேகவாகிகளுக்கு எந்த வியாதியிலும் சரியான மருந்து கொடுத்தும் பலனேற்படாவிட்டால் இதைக்கொடுக்கவும்.

எலும்பிற்குள் சீழ் — முள்ளந்தண்டு சீழ்பிடித்துவிடும்.

---

## (186) டபாகம்

கடல் வாந்தி — தாங்கமுடியாத குமட்டல், முகம் வெளுத்து, சில்லிப்பு — சற்று அசைந்தாலும் அதிகரிக்கும். மேற்தட்டில், குளிர்ந்த திறந்த காற்றில் சாதகம். வயிற்றில் ரொம்பத் தாங்கமுடியாத மயக்கத்துடன் சங்கடம்.

ஓயாத குமட்டல், ரொம்ப மயக்கம். குமட்டலுடன் வயிறு தளர்ந்திருப்பதுமாதிரி தோற்றம்.

குழந்தை வயிற்றை திறந்திருக்கப் பிரியப்படும் — அப்படியிருந்தால் குமட்டலும் வாந்தியும் சாதகம்; வயிற்றில் சில்லிப்பு.

மூளை நரம்புக் கோளாறினால் வியாதிகள்.

எல்லாத்தசைகளும் ரொம்ப அசதி. ரொம்ப ரொம்ப மனச்சலிப்பு — சோர்வு.

உடம்பு முழுவதும் ஐஸ் மாதிரி சில்லிப்பு; ரொம்ப சில்லிப்பான வியர்வை.

கன்னங்களும், முதுகும் ஒட்டிவிடும்.

அஜீரணத்தினால் ரொம்ப மனத்தளர்ச்சி, சலிப்பு, படபடப்பு, விட்டுவிட்டு அடிக்கும் நாடித்துடிப்பு.



மயக்கம் — பிணம்மாதிரி வெறுப்பு; நினைவின்மை ஏற்படலாம்; வாந்தி எடுத்தாலும் திறந்த காற்றிலும் சாதகம்; எழுந்திருந்து முன்னோக்கி பார்த்தாலும் — கண்களைத் திறந்தாலும் மயக்கம்.

காலையில் வரும் தலைவலி; மத்தியானம் கடுமை; தாளாத குமட்டல், கடுமையான வாந்தி, சத்தம், வெளிச்சம் இவைகளினால் அதிகரித்தல்; ஒரு நாள் அல்லது இரண்டு நாள் நீடிக்கும்; கணக்குப்பிரகாரம் முறையாக வரும்.

திடீரென சுத்தியினாலோ அல்லது கதையினாலோ மண்டையில் அடித்தமாதிரி வலதுபுறத்தில் வலி.

கண் பார்வை மங்கல் — புகை வழியாய் பார்ப்பது போலிருக்கும். மூளைக்கோளாறினால் ஓரக்கண்.

கண் நரம்பு கெட்டுப்போவதினால் கண்பார்வை கெடும்.

பேதி — திடீரென, மஞ்சளாக, பச்சையாய், சீதக்கட்டுடன், அவசரமாக, தண்ணியாய், குமட்டல், வாந்தி, பலவீனம், சில்லிட்ட வியர்வை; ரொம்ப மயக்கம், அதிக புகையிலை குடிப்பதினால்.

காலரா — முகம் நீலம்பூத்து, வெளுத்து, குழிந்து, களையிழந்து, சில்லிட்ட வியர்வையுடனிருக்கும்.

ஆசனவாய் வாதத்தினால் மலச்சிக்கல்; வருஷக்கணக்காக — ஆசனவாய் வெளித்தள்ளும், ஆசனவாய் அக்கி.

மூத்திரக்காய் வலி — சிறுநீர்க்குழாய் வழியில் வலி — இடதுபுறம் — ரொம்பக்கடுமையான குமட்டல் — வியர்வை — சில்லிட்ட வியர்வை.

கைகள் ஐஸ்மாதிரி சில்லிப்பு; உடம்பு சூடு — கால்கள் சில்லிப்பு, முழங்காலின்கீழ் — நடுக்கல் — உதறல்.

படபடப்பு; இடதுபுறம் படுத்துக்கொண்டால் அதிகம்; வலதுபுறம் திரும்பிக்கொண்டால் சாதகம்.

நாடி, துரிதமாகவும், சிறியதாகவும், விட்டுவிட்டும்; ரொம்ப மெதுவாகவும், பார்க்கக்கூட முடியாது. புகையிலையைவிட இச்சிப்பவர்களுக்கு இதை 1000 வீரியத்தில் கொடுத்துவந்தால் விருப்பம் நீங்கும்.

---

## (187) டாரன்டுலா

ரொம்ப நரம்பு உணர்ச்சியுடையவர்கள்; வலது கை, இடது கால் தாக்கப்படும்.

அடிக்கடி கால்கள், கைகள், உடல் முதலியன அசைந்து கொண்டேயிருக்கும், தசைகள் துடிக்கும்.

அமைதியின்மை — ஒரு நிலையிலும் படுக்கமுடியாது, ஒரு நிலையிலும் சும்மாயிருக்கமுடியாது; சதா நடந்து கொண்டேயிருக்கும். இருந்தாலும் நடந்துகொண்டேயிருந்தால் எல்லாக் குறிகளும் அதிகரிக்கும்.

கட்டிகள், சிரங்குகள், விரற்சுற்றிகள், கவுட்டிக்கட்டிகள் முதலியன எல்லாம் சீழ் கோத்துக்கொண்டு நீலம் பூத்துவிடும்; தாளாத எரிச்சலுடன் வலி; விரற்சுற்றியின் வலி தாங்காமல் இரா முழுவதும் நடந்துகொண்டேயிருக்க வேண்டும்.

ராஜப்பிளவை, அழுகல் புண் முதலிய கடுமையான புண்கள்.

சிறிது தொட்டாலும் ஸ்பரிச உணர்ச்சி அதிகமாகி விடுகிறது; ரொம்பவும் மனக்கவலை அதிகரிக்கும், நுனி விரல்களின் ஸ்பரிச உணர்ச்சி அதிகமாகியிருக்கும்.



முள்ளந்தண்டில் தொட்டாலும் உடனே மார்பிலும், ஹிருதய ஸ்தானத்திலும் வலி ஏற்பட்டுவிடும்.

தலைவலி தாங்கமுடியாது — ஆயிரம் ஊசிகள் மூளையில் குத்துவதுபோல் இருக்கும்.

தலைவலி — நரம்புத் தலைவலி சத்தத்தினாலும், ஸ்பரிசத்தினாலும், அதிக வெளிச்சத்தினாலும் அதிகரித்துவிடும். தலையை தலைகாணியில் தேய்த்தால் சாதகம்.

குறிகள் கணக்குப்பிரகாரம் முறையாக வரும்.

மாதவிடாயின்போது, அதிகமாய் தூங்கும்போது தொண்டை, வாய், நாக்கு முதலியன ரொம்ப வறண்டிருக்கும்.

காம இச்சை மிக அதிகம். பைத்தியமே பிடித்தது போலிருக்கும். யோனியின் அரிப்பு தாங்கமுடியாது.

---

## (188) டாராக்சகம்

நாக்கு வெள்ளை வெளேரென்று மாசுபடர்ந்திருக்கும்; அது பட்டைபட்டையாய் உரியும்; உரிந்தபிறகு கருஞ்சிவப்பாக திட்டுகள் தென்படும்; நாக்கில் படம் போட்டமாதிரி இருக்கும்.

நரம்புகளின் உணர்ச்சி மிகைப்பட்டிருக்கும்; பேப்பரை கசக்கும் சத்தம் அல்லது துணியை சுரண்டும் சத்தமுங்கூட தாங்கமுடியாது.

---

## (189) டெரிபிந்தினை

மூத்திரம் பிரியும்போது எரிச்சலும், கடுப்பும், மூத்திரம் கருஞ்சிவப்பாகவும், கருப்பாகவும் அல்லது புகை படர்ந்த மாதிரியுமிருக்கும்.

மூத்திரக்காய், மூத்திரக்குழாய் இவைகளில் கடுமையான எரிச்சலும், வலியும்.

அடிவயிறு தொடமுடியாது. மூத்திரப்பை வீக்கம், மூத்திரப்பை பலவீனத்தினால் மூத்திரம் பிரியாது.

மூத்திரத்தில் ஏராளமான அல்புமன்சத்தும், ரத்தமும் இருக்கும். ஆனால் மூத்திரக்காய் ஜவ்வு தென்படாது; ஈரநைப்புள்ள இடங்களில் வசித்தால் அதிகப்படும்.

மூத்திர அடைப்பு.

வயிறு — தொடமுடியாதபடி வலி — உப்புசம், காற்று. நாக்கு பளபளவென்று, வழவழப்பாய், சிவப்பாயிருக்கும்.

நாக்கு பளபளப்பாய், வழவழப்பாய், சிவப்பாய் — நுனிமொட்டுகள் பெருத்து, நாக்கின் மாசு பட்டை பட்டையாய் உரியும்; உரிந்த பிறகு நாக்கு சிவந்து வரண்டு சிவப்பாய், நுனி எரிச்சலுடனிருக்கும் — டைபாயிட்.

குடலிலிருந்து ரத்தப்பெருக்கு; புண்; கருப்பாய் கரிந்துகொண்டிருக்கும்.

உடம்பில் அனேக (பர்பூரா) சதைக்கடியில் ரத்தக் கசிவுகள்.

மூத்திரம் ரத்தமாக வரும்; காப்பிப்பொடி மாதிரி மாசு படிந்திருக்கும் — புகைமாதிரி, அல்புமன் நிறைந்து, ஏராளமாய் கருப்பாய் வலியில்லாமலும் வெளிப்படும்.

மகோதரம், உடம்பு ஊதல், மூத்திரக்காய் வியாதிகளில் — ஸ்கார்லடினா சுரத்திற்குப்பிறகு பாண்டுவீக்கம்.

மூத்திரக்காய், மூத்திரக்குழாய் வியாதிகளில் எந்த துவாரத்திலிருந்தும் ரத்தப்பெருக்கு.



பேதி — மலம் தண்ணீர் மாதிரியாக பச்சையாகவும், சீதக்கட்டு கலந்தும்; அடிக்கடி, பெரும்படியாக துர்நாற்றத்துடன், இரத்தங் கலந்தும் ஆசனவாயில் எரிச்சலுடன் மயக்கம், கிறுகிறுப்பு, பலவீனம் இருக்கும்.

வயிற்றில் பூச்சிகள், துர்நாற்றம், தொண்டை அடைப்பு; வரட்டு குலுக்கும் இருமல்; ஆசனவாயில் அரிப்பு, எல்லா வித பூச்சிகளும்.

மலேரியா சுரத்திற்கு வராமல் தடுக்க முன்னடியே கொடுக்கவும்.

---

## (190) தெரிடியான்

மயக்கம் — குமட்டல் கண்ணை மூடினாலும், சற்று சத்த மேற்பட்டாலும்.

காலம் வெகு துரிதமாகச் செல்லும்.

குமட்டல் — வேகமாக வண்டியில் சென்றாலும் ஏற்படும், கண்ணை மூடினாலும்.

ஒவ்வொரு சத்தமும் உடம்பில் ஊடுருவிச்செல்லும் — குமட்டலும், மயக்கமும் ஏற்படும்.

நடக்க ஆரம்பித்ததும் தலைவலி — கண்களுக்கு பின்னால் கனம் அமுக்குவதுபோலிருக்கும்; மூளையில் ரொம்ப ஆழத்தில் கடும் வலி; படுத்துக்கொண்டால் அதிகரிக்கும், தலையை சற்று அசைத்தாலும், மற்றவர்கள் தரையில் நடக்கும் சப்தம் கேட்டாலும் அதிகரிக்கும்.

நரம்புகளின் மிகைப்பட்ட ஸ்பரிச உணர்ச்சி, துணியைச் சுரண்டும் சப்தமும், பேப்பர் கசக்கும் சப்தமும் பொறுக்காது.

பல் வலி — சிறு சத்தமும்கூட பல்லில் ஊடுருவும்.

உடம்பில் எலும்புகள் பூராவும் உடைந்துவிட்டமாதிரி வலி.

மார்பின் இடது மேல் புறத்தில் வலி — தோள்பட்டை வரைக்கும் பாயும் — கழுத்துவரைக்கும் பரவும்.

முள்ளந்தண்டு எலும்புகளில் அதிக உணர்ச்சி. நாற்காலியில் முதுகுபுறமாகச் சாயாமல், ஒரு பக்கமாக உட்காரவேண்டும். தரையில் நடக்கும் காலடிச்சத்தத்தினால் கூட அதிகரிக்கும்.

நாள்பட்ட மூக்குச்சளி, மஞ்சளாக தடித்த, பச்சையான, துர்நாற்றமடிக்கும் சளி.

ஸ்திரீகளுக்கு கடல் வாந்தி — கப்பலின் அசைவை நிறுத்துவதற்காக கண்களை மூடிக்கொள்ளுவர்— ஆனால் குமட்டல் மிகவுமதிகரிக்கும்.

புஷ்பவதியாகும்போதும், கர்ப்பகாலத்திலும், மாதவிடாய் நிற்கும் காலத்திலும் ஏற்படும் மிகைப்பட்ட நரம்பு உணர்ச்சி.

க்ஷயரோகம், அழுகல், எலும்பு கெடுதல், எலும்பு வளர்ச்சியின்மை இவைகளில் வியாதியின் அடிவேர்வரைக்கும் சென்று மூலகாரணத்தை சௌகரியப்படுத்தும்.

---

## (191) த்ளாப்ஸி

உடம்பின் சகல துவாரங்களிலிருந்தும் ரத்தப்பெருக்கு — ரத்தம் கறுப்பாகவும் கட்டி தட்டியுமிருக்கும்.



கர்ப்பப்பை புற்று, கர்ப்பச்சிதைவு, பிரசவத்திற்குப் பிறகு மாதவிடாய் நிற்கும் காலம் — ரத்த சோகை இவைகளில் கர்ப்பப்பையில் கடும் வலியுடன் அதிக பெரும்பாடு.

மாதவிடாய் ரொம்ப சீக்கிரமாகவும், ரொம்ப நீடித்தும் முதல் நாள் கொஞ்சமாகக்காணும், மறுநாள் சற்று அதிகம், வலி, வாந்தி, கட்டிகட்டியாக வரும், ஒவ்வொரு இரண்டாவது மாதவிடாயிலும் ரத்தப்பெருக்கு அதிகம்.

வெள்ளை — ரத்தம் கலந்தும், கட்டி தட்டியும், துர்நாற்றமுடையதாகவும் மாதவிடாய்க்கு முந்தியும் பிந்தியும் சிறிது நாள் நீடிக்கும்.

கர்ப்பப்பையின் சோர்வினால் மாதவிடாய் நாட்பட்டு அல்லது ரத்தப் பெருக்காக வரும்; ரொம்ப பலவீனப்படுத்திவிடும்; ஒரு மாதவிடாயிலிருந்து தேறினதும் மறு மாதவிடாய் ஏற்பட்டு இதே தொந்திரவு.

---

## (192) தூஜா

ஹானிமானின் 'சைகோஸிஸ்' என்ற தேகவாகிற்கு சரியான மருந்து.

மியூகஸ் சதைகளிலும், தோலிலும் ஏற்படும் அல்லது வளரும் பாலுண்ணிகள், மரு முதலியன.

நிணநீர்க்கோளங்கள், நிணநீர்க்குழாய்கள், தாக்கப்பட்டிருக்கும் சரீரங்களிலும், ரொம்ப ஊளைச்சதை பெருத்த சரீரங்களிலும், கருத்த நிறம். வியாதியுற்ற சருமமுடையவர்களுக்கும் சிறந்தது.

அமுக்கப்பட்ட அல்லது சரிவர சௌகரியம் பண்ணப்படாத வெட்டையினால் ஏற்படும் வியாதிகளுக்குச் சிறந்தது.

அம்மை வைப்பதனால் ஏற்படும் கெடுதல்களுக்கும், அம்மை வைத்த பிறகு உடம்பே தேறாமல் இருப்பவர்களுக்கும் சிறந்தது — பாம்பு கடித்த பிறகு சதா வியாதியாயிருப்பவர்களுக்கும் உகந்தது.

வெட்டையை அடக்கினதினால் ஏற்படும் மூட்டு வாயு, நபும்ஸகத்துவம், பாலுண்ணிபோன்ற சதை வளர்ச்சிகள் முதலியன.

பாம்புக்கடியில் ஆர்சனிக்கிற்குப் பிறகு கொடுக்க வேண்டும்.

மனதில் ஒரே நினைப்பு — ஏதோ ஒரு புதிய மனிதன் தன் பக்கத்திலிருப்பதுபோலவும், தன் ஆத்மாவும் சரீரமும் பிரிக்கப்பட்டிருப்பதுபோலவும், வயிற்றில் ஒரு உயிருள்ள ஜந்து இருப்பதுபோலவும், ஒரு பிசாசோ, பூதமோ தன்னை வசப்படுத்தியிருப்பதுபோலவும் இம்மாதிரியாக.

தலைவலி — நெற்றி எலும்பில் ஒரு ஆணி அறைந்தாற்போல — அல்லது ஒரு உருண்டை சாமானை வைத்து அழுத்திக்கொண்டிருப்பதுபோல — அதிக தேத்தண்ணீர் சாப்பிடுவதாலும், அமித போகத்தாலும், அதிக உஷ்ணத்தாலும், நாட்பட்டு கிரானிக்காக இருக்கும் தலைவலி.

மயக்கம் — கண்களை மூடினால் வரும்.

தலையில் வெள்ளைப்பொடுகு; தலைமயிர் வரண்டு உதிரும்.

கண்களில் வலி — சைகோஸிஸ் அல்லது ஸிபிலிஸ்வாகினால்; பெரும் பாலுண்ணிகள் அல்லது கொப்புளங்கள், சூடாக போர்த்திக்கொண்டால் சாதகம்; திறந்து வைத்தால் சில்லென்ற காற்று அதிலிருந்து புறப்பட்டு வீசுவதுபோலத் தோன்றும்.



கண்ணிமைகள் இரவில் ஒட்டிக்கொள்ளும்; இமைகளில் கிரிக்கட்டிகள்; சிறு கரளைக்கட்டிகள்.

தடிப்பான முடிச்சுகள்; ஸ்டாபிஸேகிரியா சரியானபடி சௌகரியம் பண்ணாவிட்டால்.

நாள்பட்ட காது சீழ் — துர்நாற்றமடிக்கும், காதில் சதை வளருதல், முதலியன — ரத்தம்கூட வடியும்.

மூக்கிலும் சதை வளருதல் — நாள்பட்ட சளி, தடிப்பாக பச்சையாய், ரத்தம், சீழ் கலந்த சளி.

பல்வலி — அதிக டீ குடிப்பதினால் பற்கள் அடியில் சொத்தையாகி, மஞ்சள் நிறமாகி நொறுங்கும்.

இடது சினைப்பை இருக்கும் பக்கத்தில் வலி — எரிச்சல் — நடந்தால் அல்லது சவாரி செய்தால் அதிகரிக்கும்; உட்கார அல்லது படுக்கவேண்டும்.

மூலம் வீங்கி — உட்காரும்போது கடுமையான வலி.

மலச்சிக்கலில் முக்கும்போது கடும் வலி — மலம் பாதி தூரம் வந்து உள்சென்றுவிடும்.

அதிகாலையில் பேதி — அதிகமான வாயு — தண்ணீர் குடம் மாதிரி களகளவென்ற சத்தம்; காலை ஆகாரம், காபி, கொழுப்பான ஆகாரம், அம்மைவைத்தல், வெங்காயம் இவைகளினால் பேதி அதிகரிக்கும்.

ஆசனவாய் வெடிப்புகள்; தொடமுடியாது, அதைச் சுற்றி பாலுண்ணிகள், நைப்புடனிருக்கும்.

யோனிக்குழாய் வலியினால் சம்போகம் செய்யமுடியாது.

வியர்வை போர்த்துக்கொள்ளாத பாகத்தில் மாத்திரம் தான்; அல்லது தலையைத்தவிர மற்றெங்கும் தூங்கி

ஞல் வந்துவிடும், விழித்துக்கொண்டால் நின்றுவிடும்; ஏராளமாக, புளிப்பான வாசனையுடன், துர்நாற்றமாய், இரவிலிருக்கும்.

வியர்வை தேன் மாதிரி மர்ம ஸ்தானத்தில் வாசனை அடிக்கும்.

தோல் அழுக்கேறின கருஞ்சிவப்பு நிறமாகயிருக்கும்; பெரும் தேமல் மாதிரி திட்டுகள்; இங்கும் அங்கும், பெரிய, தொங்கும் பாலுண்ணிகள்; போர்த்துக்கொண்ட பாகங்களில் மட்டும் சினப்புகள், சொரிந்தால் எரியும்.

எலும்புகளிலிருந்து சதையை அடித்துப்போட்ட மாதிரி வலி.

மூத்திரக்குழாய் வீக்கம் — மூத்திர தாரை பிளவுபட்டு பிரியும், பிரிந்த பிறகு வெட்டும் வலி — தடிப்பான நீர்க் கசிவு; மூத்திரம் குழாயில் சொட்டுவது மாதிரி தோற்றம்.

துடைகளிலிருந்து குளிர் ஆரம்பிக்கும்.

நடக்கும்போது கால்கள் மரத்தால் செய்ததுபோலிருக்கும்; அல்லது உடைந்துபோனதும் கண்ணாடியால் செய்தது போலிருக்கும்.

நகங்கள் உருமாறி, பிளவுபட்டு வளரும்.

சில்லென்ற, ஈர காற்றிலும், அமைக்குப்பிறகும், அதிக தாகம்.

தேத்தண்ணீர் குடிப்பதாலும், கால்களை நீட்டுவதாலும் அதிகரிக்கும் குறிகள்; கால்களை மடக்கிக்கொண்டால் சாதகம்.

---



## (193) டிரில்லியம்

உண்மையான ரத்தப் பெருக்கைத் தடுக்கும் மருந்து. ரத்தம் செக்கச் செவேலென்றும், ஓயாமல் கசிந்துகொண்டும் அல்லது கடுமையாக வெளிப்பட்டுக்கொண்டுமிருக்கும். நாசி, நுரையீரல், மூத்திரக்காய், கர்ப்பப்பை எங்கிருந்தும் புறப்படும்.

பல் பிடுங்கினபிறகு ஏராளமான ரத்தப்பெருக்கு.

15 நாளைக்கு ஒரு தரம் மாதவிடாய். ஒரு வாரம் அல்லது அதிக நாள் நீடிக்கும்; ரொம்ப வேலை செய்வதாலும், அதிக சவாரி செய்வதாலும் ஏற்படும்.

ரத்தப்பெருக்குடன் மயக்கம்.

பெரும்பாடு — உதிரம் சிவப்பாகவும், ஏராளமாகவும், சற்று அசைந்தாலும் அதிகப்பட்டுக்கொண்டும், இரண்டு வாரத்திற்கொருமுறையும், கருப்பாகவும், கட்டிதட்டிக் கொண்டும் வெளிப்படும்.

மாதவிடாய் நிற்கும் காலத்தில் உதிரப்பெருக்கு — மயக்கம், கண்ணிருட்டல், படபடப்பு, காதுகளில் அடைப்பும் சப்தமும், வயிற்றில் சங்கடமும் இருக்கும்.

ரத்தப்பெருக்கின் பின் இடுப்புகள் தளர்ந்துவிட்டது போலிருக்கும், இடுப்பு ஓடிந்து துண்டாக விழுவதுபோலிருக்கும், இறுக்கிக்கட்டிக்கொள்ளவேண்டும்; இடுப்பு எலும்புகள் ஓடிந்தனபோலிருக்கும்.

ஆரம்ப க்ஷயத்தில் ரத்தம் கக்குவர்; கோழையில் ரத்தம்; முற்றின் கேசுகளில் சீழுடன் கலந்த கோழை, தொந்திரவு கொடுக்கும் இருமல்.

## (194) டியூபர்குலினம்

மனது ஒரு நிலையில் இராது; ஒரு இடத்திலும் அதிக நேரம் இருக்கமுடியாது. அடிக்கடி பிரயாணம் செய்து கொண்டிருப்பர், ஒரு டாக்டரைவிட்டு இன்னொரு டாக்டரிடம் மாறிக்கொண்டிருப்பர் இம்மாதிரி.

குடும்பத்தில் யாருக்காவது க்ஷயம் இருந்தாலும், அப்படியிருந்து வேறு சரியான மருந்து கொடுத்து வியாதி சரிவரப்படியாவிட்டாலும் இம்மருந்தைக் கொடுக்க வேண்டும்.

குறிகள் சதா மாறிக்கொண்டேயிருக்கும். திடீரென்று ஆரம்பித்து திடீரென்று மறையும்.

வியாதிகள் ஒவ்வொரு அவயவத்தையும் மாறிமாறித் தாக்கும்—மூளை, ஈரல், வயிறு, குடல், நுரையீரல், மூத்திரக் காய், நரம்புகள் இப்படி மாறி மாறி தாக்கும்.

கால்களிலும், மூட்டுகளிலும் ஓடும் வலிகள், நடக்க ஆரம்பிக்கும்போது பிடிப்பு, நின்றுகொண்டிருந்தால் அதிகம், நடந்துகொண்டிருந்தால் சாதகம்.

திறந்த காற்று வேண்டியிருக்கும்; கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவைப்பார்; அல்லது திறந்த காற்றில் செல்லவேண்டும்.

ஆனால் ஒவ்வொருதரம் திறந்த காற்றில் சென்றதும் ஜலதோஷம் பிடித்துவிடும்; எப்படி வந்தது என்றுகூடத் தெரியாது; ஒன்று வந்து ஓய்வதற்கு முன் இன்னொருதரம் வந்துவிடும்.

உடம்பு இளைப்பு — மிகவும் துரிதமான இளைப்பு; நன்ருக சாப்பிட்டும் இளைப்பு.



ரொம்பப் பசியினுல் இரவில் அடிக்கடி எழுந்து சாப்பிட வேண்டும்.

துக்கம், வருத்தம், சலிப்பு, ஆத்திரம், பொறுமையின்மை; சாதாரணமாக இனிமையான சுபாவமுடையவள் இன்று பைத்தியம் பிடித்துவிட்டதுபோல்.

அறைக்குள் இருப்பது சகலமும் புதியதாகவும், அறையே புதியதாகவும் தோற்றம் — பைத்தியம்.

நாள்பட்ட நீடித்த தலைவலி, க்ஷயம் சம்பந்தப்பட்டது; வலது கண்ணிலிருந்து பின் தலைவரையிலும் வெட்டும், கடுமையான வலி; தலையைச்சுற்றி ஒரு இரும்பு வளையம் போட்ட மாதிரி — சரியான மருந்து கொடுத்தும் சாதகப் படாமலிருந்தால்.

பள்ளி மாணவிகளுக்கு வரும் தலைவலி — சற்றே படித்தாலும் அதிகரிக்கும் — கண்களை ஊன்றி படிப்பதாலும் கண்ணுடிகள் போட்டும் சௌகரியப்படாவிட்டாலும், க்ஷயம் பரம்பரையில் இருந்திருந்தாலும்.

மெனிங்கைடிஸ்; இரவில் பயங்கரத்தோற்றங்கள்; தூக்கத்தில் பயந்து விழித்துக்கொள்வர், கீச்சிடுதல்.

பேதி — காலையில் திடீரென்று — நன்ருக சாப்பிட்டும் உடம்பு இளைப்பு; மலம் கருஞ்சிவப்பாக நாற்றத்துடன், தண்ணீர் மாதிரியாகவும், ரொம்ப பலவீனம், ஏராளமான இரா வியர்வையுடனும் கூடியிருக்கும்.

மாதவிடாய் — அதிசீக்கிரமாகவும், ஏராளமாகவும், நாட்பட நீடித்தும், ஆரம்பத்தில் மெதுவாகவும், வலி தாங்க முடியாமலும் க்ஷயம் பரம்பரையிலிருந்தாலும் இது நல்லது.

இடதுபுறத்து மேல்பக்கத்து நுரையீரலில் முதுகு வரையில் பாயும் வலி — க்ஷயம் அவ்விடத்தில் ஆரம்பிக்கும்.

உடம்பு முழுவதும் வலியுள்ள சிறு கட்டிகள்; குப்பல் குப்பலாக கிளம்பும், மூக்கிலும் — பச்சையான நாற்றமுடைய சீழ்.

கரப்பான் - உடம்பு முழுவதும் - தாங்கமுடியாத அரிப்பு — இரவில் துணியை விலக்கும்போதும், குளித்தாலும், அதிகரிக்கும் அரிப்பு; வெள்ளை செதில் போன்றது அதிகம் உதிரும் — காதின் பின் பக்கத்தில் அரிப்புடன் கரப்பான் நீர் — சதைகளின் மடிப்புகளிலும் கரப்பான் — கடி — படை.

க்ஷயம் சம்பந்தப்பட்ட ஆஸ்த்மா, இயோசினியோபிலியா முதலியன.

---

## (195) அஸ்டிலேகோ

இடது பக்கத்து ஸ்தனத்தினுள் கடுமையான வலி.

பெரும்பாடு அல்லது அதிக உதிரப்பெருக்கு — வலி — கருப்பாகவும், கம்பிபோன்றும், கட்டிதட்டியும் இருக்கும்.

பெரும்பாலும் இடதுபுறத்து சினைப்பையில் வலி, எரிச்சலுடன் — நடந்தாலும், சவாரி செய்தாலும் வலி — உட்கார்ந்துகொள்ளவேண்டும்.

மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படும் மேற்சொன்ன குறிக்கு — சிறந்தது.

பிரசவ வலி குறைவாகவும், கடுமையில்லாமலும், இசிவு மாதிரியும், சங்கடமாயும் இருக்கும். கர்ப்பப்பை வாய் சீக்கிரம் மலராது — அதிக அளவில் கொடுத்துவிட்டால் கர்ப்பச்சிதைவு ஏற்பட்டுவிடும்.



இந்திரிய ஸ்கலிதம், ஏராளமாக; பலஹீனப்படுத்தும் — சம்போகத்திற்குப் பிந்தி — மறுபடியும் இச்சை ஏற்படும் — ஒரே இரவில் அனேக தடவை சம்போகம் — வருத்தம் தோய்ந்து, சௌகரியமாகாது என்ற கவலை — சதா ஹஸ்தப் பிரயோகம் செய்யவேண்டியிருக்கும்.

---

## (196) வெலரியானு

பொதுவான நரம்புத் தளர்ச்சி, ஹிஸ்டிரியா — ஒரு இடத்தில் பேசாமலிருக்க முடியாது; அனேக இடங்களில் கிழிக்கும் வலிகள்.

புத்தி தீவிரமாகயிருக்கும்; புத்தி அடிக்கடி மாறும்.

காற்றில் பறப்பதுபோல் தோற்றம்.

எல்லா இந்திரியங்களின் உணர்ச்சியும் மிகைப்பட்டிருக்கும்.

தலையில் ஏதோ சில்லிப்பான உணர்ச்சி.

தொண்டையில் நூல் தொங்கிக்கொண்டிருப்பது போலுணர்ச்சி.

சிவப்பு பாகங்கள் வெளுத்துக்காணும்.

ஸியாடிகா நிற்கும்போதும் காலை தரையில் பதிய வைக்கும்போதும் அதிகப்படும் — காலை நீட்டினாலும், தேக பரிசிரமத்துக்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொண்டாலும் வலி அதிகரிக்கும்; நடந்துகொண்டிருந்தால் சாதகம்.

குழந்தை கட்டிதட்டின பாலை அப்படியே வாந்தியெடுக்கும்; மலமும் அப்படியே; தாயாருக்கு கோபம் ஏற்பட்டு அப்பொழுது பால் குடித்ததினால் வாந்தி.

குதிகாலில் வலி.

---

## (197) வாரியோலினம்

இதை 200-க்கு குறையாமல் 3 டோஸ் கொடுத்தால் பெரிய அம்மை வராமல் தடுக்கலாம்.

அம்மை போட்டின பிறகு ஏற்படும் நரம்புத்தளர்ச்சி முதலியன.

எல்லாவித பெரிய அம்மைக்கும் பாக்கி மருந்துகள் கொடுக்குபோதே இதையும் நடு நடுவே கொடுத்துவரவும்.

---

## (198) விராட்ரம் ஆல்பம்

அக்யூட் வியாதிகளில் திடீரென நாடி — சக்தி சட்டென்று குறைந்துவிடுதல் — ரொம்ப பலவீனம்.

உடல் முழுவதும் சில்லிப்பு — சில்லிட்ட வியர்வை நெற்றியில்.

குழந்தைகளுக்கும், கிழவர்களுக்கும், பெரும்பாலும் தேகத்தில் சூடு குறைந்தவர்களுக்கும் சிறந்தது.

முகம், வெளுத்து, நீலம்பூத்து தொங்கி, வதங்கி, படுத்திருந்தால் சற்று சிவப்பாகவும், எழுந்திருந்தால் வெளுத்தும் காணப்படும்.



முகம், மூக்கு, கால், கை எங்கும் ஐஸ் மாதிரி சில்லிப்பு.

வயிற்றினுள் சில்லிப்பு.

ஏராளமான பேதியுடன் கடும் வாந்தி.

அதிக குமட்டல், ரொம்ப பலவீனத்துடன் வாந்தி — பருகினாலும் சற்று அசைந்தாலும் அதிகப்படும் வாந்திக்குப் பிறகு ரொம்ப அசதி.

புளிப்பான வஸ்து சாப்பிட வேண்டியிருக்கும்.

காலரா — தண்ணீர், கஞ்சிமாதிரி, ஏராளமாகவும், வயிற்றில் கத்தியினால் வெட்டுவதுபோன்ற வலியுடனும், பல ஹீனப்படுத்திக்கொண்டும், கண்டைக்கால்களில் கண்டை ஏறுதலும், சில்லிப்புமிருக்கும். பயத்திற்கு பிறகு — அடிக்கடி பச்சையான, தண்ணீர் மாதிரி, வேகமாக பீச்சும் மலமாகவும், வயிற்றுவலியுடனும், கால் கைகளிலிருந்து பரவும் இசிவுடனும் — நெற்றியில் சில்லிப்பான வியர்வையுடனும், சற்று அசைந்தாலும் அதிகரிக்கும் வாந்தியுடனும் கூடிய பேதி.

மலச்சிக்கல்—போவதற்கு உணர்ச்சியிராது; மலம் பெரிதாகவும், கெட்டியாகவும், உருண்டைகளாகவும், வயிற்றில் சங்கடத்துடனும் — குழந்தைகளுக்கும், சிசுக்களுக்கும் மலச்சிக்கல்.

கடும் தாகம் — தணிக்க முடியாத தாகம் — நிறைய தண்ணீரும், புளிப்பாகவும் பருகவேண்டும், எல்லாம் குளிர்ந்ததாகயிருக்கவேண்டும்.

சித்தபிரமை; வஸ்துக்களை கிழிக்கவும், வெட்டவும் இச்சை.

கொச்சையான, ஆபாசமான பேச்சுகள்; மதப்பற்றுன பேச்சுகள்.

தனியாக இருக்கப்பிரியமில்லை, ஆனாலும் யாரோடும் பேசமாட்டார். பைத்தியம் அல்லது ஆரம்ப உன்மத்தம்.

தான் கர்ப்பமாயிருப்பதாகவும், சீக்கிரம் பிரசவமாகி விடலாமென்றும் நினைப்பு.

சற்று வேலை செய்தாலும் ஒரே மயக்கம் கிறுகிறுப்பு; ரொம்ப பலவீனம்.

சதா மௌனம்; ஆனால் தொந்திரவு செய்தால் பைத்தியம் திரும்பும், வைது, மற்றவர்களின் குற்றத்தைப்பற்றி சொல்லுவர்.

ரத்தப் பெருக்கின்போது சக்தியிழப்பதுபோலுணர்ச்சி.

மாதவிடாயில் வலி - வாந்தி, பேதி, சில்லிட்ட வியர்வை, இரண்டு நாளைக்குக்கூட தாங்கமுடியாதபடி அவ்வளவு பலவீனம்.

உச்சந்தலையில் ஐஸ் வைத்தமாதிரி சில்லிப்பு — உள்ளூர நடுக்கல்; தலையில் சூடும், குளிரும் சேர்ந்தாப்போலிருப்பது போலுணர்ச்சி மூளை துண்டுதுண்டாய் கிழித்துப் போட்டதுபோல தோற்றம்.

வாயு வலிகள் — கால்களில் கைகளில் — ஈர காலத்தில் படுக்கையின் சூட்டினால் அதிகம்; படுக்கையைவிட்டு எழுந்து நடக்கவேண்டும்.

கடுமையான முறைக் காய்ச்சலில் ரொம்ப சில்லிப்பும், தாகம், முகம் சில்லிட்டு, களையிழந்தும், தோல் சில்லிட்டும்; ரொம்ப அசதியும்; நெற்றியில் சில்லிட்ட வியர்வையுமிருக்கும்.



அபின், புகையிலை இவைகளின் கெடுதல்களை நீக்கும். அதிக சாராயம் குடிப்பதின் கெடுதல்களையும் போக்கும்.

---

## (199) விராட் — விரைட்

அதிக சுரம் — வலிப்புகளும், இசிவுகளும் சகஜம்.

மூளைக்கும், மார்பு முள்ளந்தண்டு வயிறு இங்கெங்லாம் அதிக ரத்த ஓட்டம்.

விக்கங்களுடன் கடும் வலிகள்.

நாடி திடீரென்று அதிகரித்து திடீரென சாதாரணத்திற்கும் குறைவாகிவிடும்; மெதுவாகவும், மிருதுவாகவும், பலஹீனமாகவும், விட்டுவிட்டுமிருக்கும்.

நாக்கின் நடுவில் ஒரு சிவந்த கோடு, நாக்கு வெள்ளை அல்லது மஞ்சள் நிறம்; வரண்டு, நைப்புடன், நெருப்பு பட்டமாதிரி இருக்கும்.

அக்யூட் வாயு சுரம்; கடும் சுரம் — துரிதமான, கடுமையான நிரம்பிய நாடித்துடிப்பு; மூட்டுகளிலும், தசைகளிலும் கடும் வலி. மூத்திரம் குறைந்தும், சிவந்தும் காணப்படும்.

சூரிய உஷ்ண ஜன்னி; தலையின் ரத்த தமனிகள் துடிக்கும்; சிறு சத்தம்கூட தாளாது; இரட்டையான அல்லது பின்னமான பார்வை.

மூளை, முள்ளந்தண்டு வியாதிகளில் வலிப்புகள், பாப்பா விரிந்து, இசிவுகள், முதுகு பின்புறம் வளைந்து இசிக்கும்; சில்லிட்ட பிசுபிசுப்பான வியர்வை.

வலிப்புகளில் பார்வை மங்கல் மெனிங்கைடிஸ் தலை பின்புறம் வளைந்து இருக்கும்.

அபாப்ளக்சி; தலை சூடாகவும், கண்கள் சிவந்தும், பேச்சு தடித்தும், மெதுவான நிறைந்த நாடியும் இரும்பு மாதிரி கெட்டியான நாடியுமிருக்கும்.

நிமோனியாவின் ஆரம்பத்தில் சிறந்தது.

வலிப்பு இசிவுகளில் குழந்தை நடுங்கும், உதறும், தலையை சதா ஆட்டி அசைத்துக்கொண்டிருக்கும்.

நரம்புத் தலைவலி, மாதவிடாய் நின்றிருப்பதினால், கடுமையான குமட்டல் வாந்தியுடன் மிக்க உபத்திரவமான ரத்தக் கொதிப்புபோன்ற தலைவலி

---

## (200) சிங்கம்

நரம்பு சக்தியின்மை — ஜீவசக்திக் குறைவு — மூளையின் பலவீனம் — மாதவிடாயின் உதிரத்தை வெளிப்படுத்துவதற்கும், மூத்திரம், மலம், கோழை இவைகளை வெளிப்படுத்துவதற்கும், யோசனைசெய்யவும், ஞாபகப்படுத்திக்கொள்ளவும், புரிந்துகொள்ளவும்கூட சக்தியின்மை.

கால்கள் சதா ஆடிக்கொண்டேயிருக்கும் — சதா அவைகளை அசைத்துக்கொண்டேயிருக்கவேண்டும்.

பிராந்தி, காபி முதலிய உற்சாகமூட்டும் பானங்கள் ஒவ்வாது.

மாதவிடாய் வெளிப்பட்டால் அவள் நோய் குறையும்; ஆனால் மாதவிடாய் நின்றவுடன் மறுபடியும் கோளாறுகள் வந்துவிடும்.

உடம்பு முழுவதும் தனித்தனி தசைகள் துடிக்கும்.



கால் கைகள் பலஹீனத்துடன் நடுங்கும்; எழுதும் போது கைகள் நடுங்கும்; மாதவிடாயின்போதும்.

ரொம்ப நடுக்கலால் படுக்கைகூட அசையும்; நரம்புத் தளர்வினால் — படுத்த பிறகு மணிக்கணக்கில் தூங்கின பிற்பாடும்கூட கால் அசைந்துகொண்டிருக்கும். பிடரியில் பலஹீனமும் சோர்வும்; தலையை ரொம்ப நேரம் நிமிர்த்தி வைத்துக்கொண்டிருந்தால் அதிகரிக்கும்; உட்கார்ந்திருந்தால் முதுகு வலி அதிகரிக்கும் — நடந்துகொண்டிருந்தால் சாதகம்.

முதுகைத் தொடமுடியாது.

முள்ளந்தண்டு முழுவதும் எரிச்சல்; முதுகுவலி.

கால்கள் வியர்த்தும், கால் விரல்களுக்கிடையில் புண்; நாற்றமடிக்கும் கால் வியர்வை; ரொம்ப நரம்புத்தளர்ச்சி.

குழந்தை தலையை போட்டு பக்கத்துப்பக்கம் உருட்டும்; தூக்கத்தில் கத்தும்; முகம் சிவந்தும், வெளுத்தும் காணும். சூடு இராது.

தன்னிடம் சொன்னதை குழந்தை திருப்பி திருப்பிச் சொல்லும்.

பல் முளைக்கும்போது வலிப்புகள்; கண்களை உருட்டிக் கொண்டு பல்லை நறநறவென்று கடிக்கும்.

கைகளும், தலையும் தானாகவே ஆடும். அல்லது ஒரு கையும் தலையும் ஆடும்.

பயத்தினால் ஏற்படும் தசைத்துடிப்புகள்.

பசி—அகோரப்பசி, 11 முதல் 12 மணி வரை பசி; சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே ரொம்ப பேராசை; வேகமாகச் சாப்பிடமுடியாது—ஆரம்ப மூளை வியாதி.

பிறந்த சிசுவிற்கு மலச்சிக்கல்.

வியர்வையின்போது போர்த்திக்கொள்ள முடியாது.

நாள்பட்ட தலைவலி. மயக்கம்; அசதி, சோர்வு.

நீடித்த வாந்தி — வயிற்றில் காற்று, புளிப்பு, கடும் மலச்சிக்கல், கெட்டியான மலம்.

மூத்திரத்தில் பாஸ்பேட்ஸ்; ஏராளமான மூத்திரம், சிறிது மஷ்டு.

## (201) செட்ரான்

கடியாரம்மாதிரி ஒரே டயத்தில் ஏற்படக்கூடிய குறிகள்.

மலேரியா சுரம் - சதுப்பான நிலங்களில் சகஜமாக வரும் முறைக்காய்ச்சல்.

ஒரே குளிர் நடுக்கல்-சூடு, வியர்வை ஒன்றுமிருக்காது.

வலிப்புகள்—டயப்பிரகாரம் வரும் இசிவுகள்.

## (202) எக்கினேஷியா

ரத்தத்தில் விஷம் கலத்தல், ஸெப்டிக் வியாதிகள், டைபாயிட், பிரசவ ஜன்னி முதலியவற்றிற்கு.

சதை அழுகல்-புண் நாற்றமுடையது-ஆறாது-மேலுக்கும் போடவேண்டியது அவசியம்.

புற்றில் முற்றின காலம்—வலி தாங்காது.

அப்பெண்டிசைடிஸ்—மெனின்கைடிஸ்—சுரங்கள்.



மூத்திர விஷம் ரத்தத்தில் கலந்து ஏற்படும் விஷ சுரங்களுக்கு — சிறு நீர் குறைந்து, அல்புமன் சத்து நிறைந்து.

பாம்புக்கடிக்குச் சிறந்தது — மதர்டிஞ்சர் 10 சொட்டு வீதம் ஜலத்தில் கலந்து அடிக்கடி கொடுக்கவும்.

டிப்திரியா, வாய்ப்புண், நாற்றமுடைய மூக்குச்சளி முதலியவைகளுக்கு மேலுக்கும் உள்ளுக்கும்.

தேள்கடிக்கும் உள்ளுக்கும் 10 சொட்டு வீதம் கொடுக்கலாம்.

## (203) ஐரிஸ்வெர்ஸ்

ரொம்ப குமட்டலும், வாந்தியும், குழந்தைகளின் காலரா — புளிப்பான வாந்தி.

வாய், நாக்கு, தொண்டை, வயிறு, முழுவதும் எரிச்சல் — பேதியில் ஆசனவாய் எரிச்சலுமிருக்கும்.

வாந்தி — கம்பி மாதிரி, நீண்ட, கோழை — கீழே பாத்திரத்தில் விழும் வரைக்கும் கம்பி மாதிரி தொங்கும்.

வாந்தியுடன் ஏராளமான உமிழ் நீர் — வாயிலிருந்து கொட்டும் — பித்தத்தலைவலி — கண்கள் இருட்டும், புளிப்பான அல்லது கசப்பான வாந்தி.

சியாடிகா வலி.

## (204) கால்மியா

வாயுவினால் தாக்கப்பட்ட இருதயம்.

முகத்தில் நரம்பு வலி — வலது கண்ணிலும், குழியிலும் கடுமையான குத்தும் வலி — தசைகளில் விறைப்பு;

கண்களை திருப்பினால் அதிகரிக்கும், சூரிய உதயத்தில் ஆரம்பித்து, மத்தியானம் அதிகரித்து, மாலையில் விட்டு விடும்.

பிற்புறம் நோக்கிச் செல்லும், குத்தும், அறுக்கும், பாயும், ஓடும் வலிகள். தாக்கப்பட்ட அவயவத்தில் மரப்புமிருக்கும்.

ஹிருதயத்துடிப்பு நன்றாகத்தெரியும், ரொம்ப படபடப்பு ஆனால் நாடி மெதுவாக இருக்கும்.

வாயு வலிகள்; தாங்க முடியாத வலி — அடிக்கடி இடம் மாறும், மூட்டுக்கு மூட்டு பாயும், மூட்டு சிவந்து, உஷ்ணமாகி வீங்கி சற்று அசைந்தாலும் வலி தாங்கமுடியாமலிருக்கும்.

நரம்பு வலியுடன் பலவீனம்.

தலையை குனிந்தால் கிறுகிறுப்பு.

நாடி மிக மெது — தெரியக்கூடத்தெரியாது — நிமிஷத்திற்கு 35 அல்லது 40. முகம் வெளுத்து, சில்லிட்ட கால்கள், கைகள்.

---

## (205) மாஸ்கஸ்

சிறு பெண்கள் அடக்கம் என்னவென்பதே தெரியாது வளர்ந்த பெண்களாகி ஹிஸ்டிரியாவினால் அவஸ்தைப் படுபவர்களுக்குச் சிறந்தது.

பிடிவாதம், தன்னலம், தன்னிச்சைப்படி நடப்பார். கபடஸ்தர், இம்மாதிரி பெண்களுக்கு அனேகவிதமான கற்பனைக் குறிகள் — சிறிய ஜலதோஷம் பிடித்துவிட்டாலும் இன்னும் பல கற்பனைக் குறிகளைக் கூட்டிச் சொல்லுவார்கள்.



ஒரு கன்னம் சிவந்தும், சில்லென்றும், மற்றது வெளுத்தும் உஷ்ணமாகவுமிருக்கும்.

ஜலதோஷம் சீக்கிரமாகப் பிடிக்கும்.

அடிக்கடி கடுங்கோபமும், அதனால் வலிப்புகளும், முகம் நீலம் பூத்து, மயக்கமடைவர்.

கடுமையான வியாதியில்லாத காலத்தில் சாவைப் பற்றியே பேசுவர், சாவைப்பற்றி பயம்.

நெற்றியில் அமுக்கும் தலைவலி—குமட்டல். அசைந்தால் அதிகம்; திறந்த காற்றில் சாதகம்.

ஆண்களுக்கு ரொம்ப காம இச்சை; விறைப்பில்லாமலேயே இந்திரிய ஸ்கலிதம்.

பெண்களுக்கு அதிக காம இச்சை; மாதவிடாய் ரொம்ப சீக்கிரமாகவும், அமிதமாகவும், வலியுடனும், மயக்கத்துடனும் இருக்கும்.

தொண்டையில் பந்து அடைப்பதுபோல் உணர்ச்சி. குரல்வளை இறுகிவிட்டதுபோலுணர்ச்சி.

மூச்சுத்திணறலும், மார்பில் வலியும்; நரம்புக்கோளாறினால் ஆஸ்த்மா.

ஹிஸ்டிரியா பெண்களுக்கு படபடப்பு; ஏராளமான கலரில்லாத மூத்திரம்; ஹிருதயம் துடிதுடிக்கும்.

சில்லிட்டதோல் நடுக்கம், மயக்கம்.

---

# ஹோமியோபதி மருந்துகளின் முக்கியமான சத்துரு மித்துருவும் அவைகளின் வேலைசெய்யும்

## — கால வரையும் —

ஹோமியோபதி மருந்துகளின் விசேஷ குணம் என்னவென்றால் அவைகள் கிரானிக் வியாதிகளில் ஒரு வேளை கொடுத்தாலும் போதும். நீண்ட காலம் நீடித்து வேலை செய்கிறது.

உதாரணமாக ஆர்சனிக்கை எடுத்துக்கொள்ளுவோம்.

ஒரு காலரா கேஸிலும், ஒரு ஆஸ்த்மா கேஸிலும் 'ஆர்சனிக்' மருந்து என்று ஏற்பட்டுவிடுகிறதானால் இரண்டிற்கும் ஆர்சனிக் 10 M வீரியத்தில் கொடுப்போம்.

காலரா கேஸில் ஆர்சனிக் 10 M மருந்தை 15 நிமிஷம் அல்லது 30 நிமிஷத்திற்கொருதரம் கொடுக்கவேண்டியிருக்கலாம். ஆனால் ஆஸ்த்மா கேஸிலோ இதே ஆர்சனிக் 10 M இரண்டு வாரத்திற்கொருமுறையோ அல்லது மூன்று வாரத்திற்கொருமுறையோதான் கொடுக்கவேண்டிவரும்.

ஆகவே, மருந்துகளின் வேலைசெய்யும் காலவரை வியாதிக்கு வியாதி வித்தியாசப்படும்—கிரானிக் வியாதிகளிலும் சரி. அக்யூட் வியாதிகளிலும் சரி, நோயாளியின் தேக வாகைப்பொறுத்தும், வியாதியின் நிலைமையைப் பொறுத்தும் மாறுபடும்.

இருந்தாலும் உதாரணமாக ஹெபர் ஸல்பர் சுமார் 8 வாரம் வேலைசெய்யுமென்று சொன்னால் கிட்டத்தட்ட அந்தக்காலவரைக்கு முந்தி பிந்தி இரண்டாவது தரம்



அதைக் கொடுப்பதுதான் நல்லது. வேறு காரணங்களால் மருந்தை மாற்றும்படியான கட்டம் ஏற்பட்டுவிட்டால் இந்த சட்டம் உபயோகப்படாது.

---

**ஆசிட் அசிடிக் :-**

சத்துரு:- போரக்ஸ், காஸ்டி. நக்ஸ்வா; சரஸபரில்லா.
மித்துரு:- சைனா (ரத்தப்பெருக்கில்)

**ஆசிட் மூரியாடிக் :-**

கால வரை:- 5 வாரங்கள்.

**ஆசிட் நைட்ரிக் :-**

காலம்:- 40 நாள்
ச:- லாசெசிஸ்
மி:- கலாடியம்
'கேலி' மருந்துகளுக்குப்பிறகு நன்றாய் வேலைசெய்யும்.

**ஆசிட் பாஸ்பாரிக் :-**

காலம்:- 40 நாள்
ச:- காம்பர், காபியா.

**ஆசிட் ஸல்ப் :-**

கா:- 4 வாரம்
ச:- பல்ஸ்
மி:- பல்ஸ்

**அகோனைட் :-**

கா:- 6—48 மணி
ச:- ஆசிட் அசிடிக்
மி:- ஆர்னிகா, ஸல்பர் (ஹைபோடன்சி), காபியா.

**அகாரிகஸ் :-**

கா:- 40 நாள்
ச:- காபி, சாராயம், பல்ஸ், ரஸ்டாக்ஸ்.

**ஆக்னஸ் :-**
8—14 நாள்
ச:- காம்பர், நேட்-மூர்.

**அலோஸ் :-**
ச:- ஸல்பர், லைகோ, நக்ஸ்வா, காம்பர்.

**அலுமினு :-**
40 நாள்
ச:- பிரியோ, காம்பர், இபிகாக்.
மி:- பிரியோ

**ஆப்பிரா :-**
3—5 வாரம்
ச:- காபியா, நக்ஸ், பல்ஸ், ஸ்டாபி.

**அம்மோ-கார்ப் :-**
36 நாள்
ச:- ஆர்னிகா, காம்பர்.

**அம்மோ-மூர்:-**
6 வாரம்
ச:- காம்பர், காபியா, நக்ஸ்.

**அனகார்டியம் :-**
30 நாள்
ச:- காபியா

**ஆண்டி-க்ரூட் :-**
4 வாரம்
ச:- கால்-கார்ப், ஹிபர், மெர்குரி.
மி:- ஸில்லா

**ஆண்டிம் டார்ட் :-**
2 வாரம்
ச:- அஸபீடா, சைனு, இபிகாக், ஓபியம், பல்ஸ்.

**ஏபிஸ் மெல் :-**
ச:- ரஸ்டாக்ஸ், நேட்மூர், இபிகாக்.
மி:- நேட்மூர்



**அர்ஜெண்ட்-மெட் :-**
2—3 வாரம்
ச:- மெர், பல்ஸ்.

**அர்ஜெ-நைட் :-**
ச:- நேட்மூர், ஆர்ஸ், பல்ஸ், லைகோ; மெர், ஸிலிசியா, ரஸ்டாக்ஸ், பாஸ், ஸல்பர்.

**ஆர்னிகா :-**
2—6 நாள்
ச:- காம்பர், இபிகாக், அகோனைட், ஆர்ஸ், சைனு, இக்னேஷியா.

**ஆர்சனிக் :-**
36 நாள்
ச:- காம்பர், சைனு, பெர்ரம், ஹிபர், அயோட், இபிகாக், டபாகம், வெராட்ரம்.

**அஸபீடிடா :-**
4—6 வாரம்
ச:- காம்பர், காஸ்டிகம், மெர்கு, வாலரியன்.

**அஸாரம் :-**
8—14 நாள்
ச:- காம்பர்

**ஆரம் மெட் :-**
6 வாரம்
ச:- பெல், சைனு, குப்ரம், மெர்.

**பரைடா கார்ப் :-**
40—50 நாள்
ச:- ஆண்ட்-டார்ட், பெல்ல, காம்பர், சின்கம்.

**பெல்லடோனு :-**
5 வாரம்
ச:- காபியா, ஹியா, ஹெபர், ஓபியம்.
மி:- கால்-கார்ப்.

**பெர் பெரிஸ் :-**
ச:- காம்பர்.

**பிஸ்மத் :-**
5—7 வாரம்
ச:- காமோமில்லா, காபியா.

**பொவிஸ்டா :-**
50 நாள்
ச:- காம்பர்

**பிரியோனியா :-**
2—3 வாரம்
ச:- அகோ, காம்பர், காபியா, இக்னேஷி, நக்ஸ், பல்ஸ், ரஸ்டாக்ஸ்.

**கலாடியம் :-**
6—8 வாரம்
ச:- காம்பர்
மி:- நைட் ஆசிட்.

**கால் கார்ப் :-**
50 நாள்
ச:- காம்பர், நக்ஸ், ஸல்பர்
மி:- பெல்ல.

**காம்பர் :-**
5—15 நிமிஷம்
ச:- ஓபியம்.

**கானபிஸ் ஸடைவா :-**
2—3 வாரம்
ச:- காம்பர்.

**காந்தரிஸ் :-**
3 வாரம்
ச:- அகோ, காம்பர், காபியா.



**காப்சிகம் :-**
4—8 நாள்
ச:- காம்பர், கலாடியம், ஸல்பர்.

**கார்போ அனி :-**
36 நாள்
ச:- ஆர்ச், காம்பர், நக்ஸ்.

**கார்போ-வெஜி:-**
36 நாள்
ச:- ஆர்ச், காம்பர், காபியா.

**காஸ்டிகம்:-**
50 நாள்.
ச:- அஸபீடிடா, காபியா, நக்ஸ்வா, பாஸ்பரஸ்.
மி:- பாஸ், பல்ஸ், ஸரஸபரில்லா.

**காமோமில்லா:-**
அனேக நாள்.
ச:- அகோ, பொரக்ஸ், காம்பர், காபியா, இக்னே, நக்ஸ், பல்ஸ்.
மி:- மெக்னீஷியா.

**செலிடோனியம்:-**
14 நாள்
மி:- லீடத்திற்குப்பிறகு
ச:- அகோ, காம்பர்.

**சைனு:-**
2—3 வாரம்
ச:- அரானியா, ஆர்சனிக், பெல்ல, நக்ஸ்வா, பல்ஸ், ஸல்பர், இபிகாக்.
மி:- பெர்ரம்.

**சிகூடா:-**
5—6 வாரம்.
ச:- ஆர்னி.

சிமிசிபியூகா:-
ச:- அகோ, ஜெல்ஸ், பல்ஸ்

சீனு:-
2—3 வாரம்
ச:- காம்பர், சைனு, இபிகாக்

காக்குலஸ்:- 8—14 நாள்.
ச:- காம்பர், காமோமில்லா, இக்னே, மெர், நக்ஸ்-வா—காபியா.

காபியா:- 1—2 நாள்.
ச:- காந்தா, காஸ்டிகம், காக்குலஸ்.

கால்சிகம்:- 3—4 வாரம்.

கோலோசிந்திஸ்:- 30—40 நாள்.
ச:- காபியா.

க்ரோகஸ்:- 8 நாள்
ச:- அகோ, பெல், ஓபியம்.

குப்ரம் மெட்:- 2—3 வாரம்
ச:- பெல்ல, மெர், நக்ஸ், சைனு
மி:- கால்-கார்ப்.

டிஜிடாலிஸ்:- 6 வாரம்
ச:- நக்ஸ், ஓபியம்.

ட்ராசிரா:- 2—3 வாரம்
ச:- காம்பர்.
மி:- நக்ஸ்வா

டல்காமரா:- 30—40 நாள்
ச:- காம்பர், குப்ர, மெர், பெல்
மி:- பரைடா கார்ப்.

யூபரேஷியா:- 3—4 வாரம்
ச:- காம்பர், பல்ஸ்.

பெர்ரம்-மெட்:- 4—6 வாரம்
ச:- ஆர்ச், சைனு, இபிகாக், பல்ஸ், வெராட்.
மி:- ஆலம், சைனு.

ஜெல்சமியம்:-
ச:- சைனு, காபியா, நேட்மூர்.



க்ராபைடிஸ்:- 40—50 நாள்
ச:- அகோ, ஆர்ச், நக்ஸ்.
மி:- ஆர்ச், காஸ்டி, ஹிபர்.

ஹமமலிஸ்:-
ச:- பல்ஸ்.
மி:- பெர்ரம்.

ஹிபர்சல்ப்:- 8 வாரம்
ச:- பெல், காமோ, ஸிலிசியா.

ஹையாசயாமஸ்:- 8—14 நாள்
ச:- பெல், சைனு.

ஹைபரிகம்:-
ச:- ஆர்ச், காமோ, ஸல்ப்.

இக்னேஷி:- 5—9 நாள்
ச:- ஆர்னி, காம்பர், காக்குலஸ், நக்ஸ், பல்ஸ். காபியா.

அயோடம்:- 6 வாரம்
ச:- ஆர்ச், பெல்ல, சைனு, காபியா, ஹிபர், ஓபியம், பாஸ்.
மி:- லைகோ.

இபிகாக்:- 12—24 மணி
ச:- ஆர்னி, ஆர்ச், சைனு, நக்ஸ், டபாகம்.
மி:- குப்ரம்.

கேலி-பைக்:-
ச:- ஆர்ச், லாசெசிஸ், பல்ஸ்.

கேலி-கார்ப்:- 6 வாரம்
ச:- காம்பர், காபியா.
மி:- கார்போவெஜி.

லாசெசிஸ் :- 4—5 வாரம்
ச:- ஆர்ஸ், பெல், மெர்.
மி:- லைகோ.

லீடம்:- 3—4 வாரம்
ச:- காம்பர்.

லைகோ :- 40—50 நாள்
ச:- அகோ, காம்பர், காபியா, கிராபை, பல்ஸ்.
மி:- அயோடம்.

மாக்-கார்ப் :- 40—50 நாள்
ச:- காமோ, ரியூம்.
மி:- காமோ.

மெர்குரி :- 2—3 வாரம்
ச:- ஹிபர், கேலி-அயோட், ஆசிட்நைட், ஆரம், மெஜி, ஸல்ப், பெர்ர, லாசெசிஸ், கால்-கார்.

மெர்கார் :-
ச:- ஸிலிசியா.

மெஜிரியம் :- 45—50 நாள்
ச:- கால்கார்ப், மெர்குரி, காம்பர்.

நேட்-மூர் :- 40—50 நாள்
ச:- ஆர்ச், பார்.
மி:- ஏபிஸ்.

நக்ஸ்-மாஸ்ச் :- 6—8 நாள்
ச:- ஜெல்ச், நக்ஸ்.

நக்ஸ்வாமிகா :- 10—12 நாள்
ச:- அகோ, காம்பர், காமோ, காபியா, பல்ஸ், சின்க்.
மி:- ஸல்பர்.

ஓபியம் :- சில மணி நேரம்.
ச:- பெல், இபிகாக், நக்ஸ்-வா.



பெட்ரோலியம் :- 40—50 நாள்
ச:- நக்ஸ் வாமி

பாஸ்பரஸ்:- 40 நாள்
ச:- நக்ஸ், காபியா, காம்பர், காஸ்டிகம்
மி:- சீபா, ஆர்ச்

பினாடினு:- 5—6 வாரம்
ச:- பல்ஸ்

ப்ளம்பம்:- 3—4 வாரம்
ச:- அலுமன், ஒபியம், நக்ஸ், ஆண்டிம்-க்ரூட.

பல்ஸாடில்லா:- 8—14 நாள்
ச:- காமோ, காபியா, இக்னே, நக்ஸ்.
மி:- பல்ஸ், லைகோ, ஆசிட்ஸல்ப்.

ரியூம்:- 2-3 நாள்
ச:- காம்பர், காமோ, கோலோ, மெர், நக்ஸ், பல்ஸ்.
மி:- மாக் கார்ப்.

ரஸ்டாக்ஸ்:- 3—6 வாரம்
ச:- பெல்ல, பிரியோ, காம்பர், காபியா, ஸல்ப், ஏபிஸ்,
மி:- பிரியோ.

ரூடா:- 8—14 நாள்

சாபினு:- 3—4 வாரம்
ச:- பல்ஸ்

சரஸபரில்லா:- 5 வாரம்
ச:- பெல்ல, மெர்

சிகேல்:- 2—3 வாரம்

ஸெலினியம்:- 5—6 வாரம்
ச:- இக்னே, பல்ஸ்.

ஸெபியா:- 40—50 நாள்
ச:- ஆண்டிம்-க்ரூட், அகோ, லாசெசிஸ்.

ஸிலிசியா:- 40—50 நாள்

ச:- ஹிபர், காம்பர்.

மி:- தூஜா

ஸ்பைஜிலியா:- 3—4 வாரம்

ச:- ஆரம், பல்ஸ், கலீம்பார்.

ஸ்பான்ஜியா:- 3—4 வாரம்

ச:- காம்பர்

10160
EGMORE, MADRAS

ஸ்டானம்:- 5—வாரம்

ச:- பல்ஸ்

மி:- பல்ஸ்

ஸ்ட்ராமோனியம்:- 1—1½ நாள்

ச:- பெல், ஹையா, நக்ஸ்-வா.

ஸல்பர்:- 40—50 நாள்

ச:- அகோ, காம்பர், சைனு, பல்ஸ், ரஸ்டாக்ஸ், ஸெபியா.

மி:- அலோஸ்

தூஜா:- 3 வாரம்

ச:- காமோ, காம்பர், மெர், பல்ஸ், ஸல்ப்.

வாலரியானு:- 8—10 நாள்

ச:- காம்பர், காபியா, பல்ஸ்.

விராட் ஆல்ப்:- 5—8 நாள்

ச:- அகோ, காம்பர், சைனு, காபியா.

ஜிங்கம்:- 30—40 நாள்

ச:- ஹிபர், இக்னே, காம்பர், காமோ, நக்ஸ்.